# மே17 இயக்கக் குரல்

www.may17iyakkam.com

தமிழின புவிசார் அரசியல் செய்தி இதழ்

குரல்: 03 முழக்கம்: 03 திருவள்ளுவராண்டு 2051 பங்குனி–சித்திரை / ஏப்ரல் 2020 திங்களிதழ் (தனிச்சுற்றுக்கு) பக்கங்கள் 88 நன்கொடை ரூ. 20

## மின்னிதழ் வடிவம்

ஏப்ரல் 2020

# பொருளடக்கம்


03 கருத்துப்படம்

04 தமிழின உரிமை மீது தொடுக்கப்படும் போர்

07 'இடுக்கண் களை'
தற்சார்பு சிந்தனைகளை ஊக்குவிக்கும்
முகநூல் தளம்

08 பெருங்காமநல்லூர் படுகொலையின்
100ஆம் ஆண்டு நினைவு
வரலாற்றில் தமிழ் குடியானவர்களின் கிளர்ச்சி

24 பெருங்காமநல்லூர் 100-ஆம் ஆண்டு
வீரவணக்க நாள்

25 ஆனந்தபுரம் 11-ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

26 குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கொடுமைகள்
தமிழினக் குடியானவர்களை சிதறடித்த கொடூரச் சட்டம்

31 பெருங்காமநல்லூர் 100ஆம் ஆண்டு
ஏகாதிபத்தியத்தை  எதிர்த்த வீர வரலாறு

42 பில் கேட்ஸும், கொரோனா தொற்றும்
தடுப்பூசியின் பேரில் ஆக்கரமிக்கும் தொழில்நுட்பங்கள்

48 கொரோனா நெருக்கடி அம்பலப்படுத்திய
முதலாளித்துவ லாபவெறி
மனித குலத்திற்கு கொள்ளிவைக்கும் தனியார்மயக் கொள்ளை

57 தொற்றுநோய் எனும் எதிர்த்தாக்குதல்

66 கொரோனா பேரிடர்
நிவாரணப் பணியில் மே 17 இயக்கம்

68 வசூலாகும் "அக்கறை"கள்


71 'நெறிக்கப்படும் மனித உரிமை'
பீமா கொரேகன் கலவரமும் மனித உரிமை
செயற்பாட்டாளார்களின் கைதும்

79 அன்னை பூபதியின் 32ம் ஆண்டு
வீரவணக்க நாள்

82 காவிரி உரிமைப் பறிப்பும்,
தமிழினத்தை சூழும் வஞ்சகமும்


84 ஓவியத்தின் வழியே எதிர்ப்புக் குரல்



# ‘கொரோனா ஒழிப்பு’

## (மத்திய–மாநில அரசுகளின் கொரோனா ஒழிப்பு வழிமுறைகள்)



தலையங்கம்

# தமிழின உரிமை மீது தொடுக்கப்படும் போர்

ஊரடங்கு அறிவிக்கப்பட்டு 40 நாள்களைக் கடந்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு. எனினும், பரிசோதனை என்பது இன்னும் முழுவீச்சில் மேற்கொள்ளப்படவில்லை. மருத்துவ பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவலர்கள் என களப்பணி செய்து கொண்டிருப்பவர்களுக்குக் கூட போதுமான பாதுகாப்புக் கருவிகள் அளிக்கப்படாத செய்திகள் அன்றாடம் வந்துகொண்டிருக்கிறது. பரிசோதனைக் கருவிகளைக் கொள்முதல் செய்வதற்கானப் பொறுப்பை இந்திய அரசே மேற்கொள்கிறது. இதே காலத்தில் மின்சாரச் சட்டத்திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தி இருக்கிறது மோடி அரசு.

இச்சட்டத்திருத்தம் மின்சார மானியம் கொடுக்கும் உரிமையை மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசு எடுத்துக் கொள்வதை அப்பட்டமாக வரையறைச் செய்கிறது. மின்சார விநியோகமும் மானியமும் அந்தந்த மாநிலங்களின் பொருளாதார-சமூக நிலைகளுக்கு ஏற்பவே மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் கொள்கை வடிவமைப்பைப் பெறுகிறது. இதை மோடி அரசின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்ல இம்மசோதா பரிந்துரை செய்கிறது. மேலும், மின்சார விநியோகத்திற்கான விலை நிர்ணயம் மற்றும் மின்சாரக் கொள்முதல் கட்டுப்பாடுகளை உருவாக்கும் மாநில மின்துறை ஒழுங்காற்று ஆணையத்திற்கானப் பொறுப்பாளர்களை நியமனம் செய்யும் பொறுப்பினை மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் மோடி அரசு கொண்டு செல்கிறது.

இதுபோலவே, கல்வித் துறையில் பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வினை பொறியியல் மற்றும் கலைத்துறைக்கும் கட்டாயமாக்கும் முறையை மோடி அரசு கொண்டு வந்திருக்கிறது. மருத்துவக் கல்லூரிகளில் நீட் தேர்வு முறை மூலம் மாநில அரசுகள் மற்றும் மக்களின் தேசிய இன உரிமையைப் பிடுங்கியதைப் போன்று, பிற துறைகளிலும் நுழைவுத் தேர்வின் மூலமாக தன் கட்டுப்பாட்டை மாநிலத்திற்குள் திணிக்கிறது. இந்த நெருக்கடிக் காலத்தில் காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசின் நீர்வளத்துறையின் கீழ் கொண்டு சென்றிருக்கிறது. இதன்படி மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் காவிரி மேலாண்மை வாரியம் கொண்டு செல்லப்பட்டு அதன் இறையாண்மை முற்றிலும் பறிக்கப்படுகிறது. இம்முயற்சிகளின் மூலமாக மாநிலங்களின் உரிமைகளை முற்றிலுமாக தன் கையில் எடுத்துக் கொண்டு இறையாண்மையற்ற நிர்வாக அலகுகளாக மாநிலங்களை மாற்றிக்கொண்டிருக்கிறது இந்துத்துவ அரசு.


இந்தக் கொரொனோ நெருக்கடியின் பொழுது தமிழ்நாடு கேட்டிருந்த நிவாரணத்தொகையை மோடி அரசு இதுவரை ஒதுக்கவில்லை. மேலும், ஜி.எஸ்.டி நிலுவையும் வந்து சேரவில்லை. இது குறித்து தமிழ்நாட்டின் முதல்வர் பிரதமருடனான சந்திப்பில் பேசிய பின்னரும் கூட இது நிறைவேறாத நிலையைத்தான் காண்கிறோம். ஒரு மாநிலத்தின் வரிவருவாய் வழிமுறையை அடைத்துவிட்ட நிலையில், அம்மாநிலத்தின் வருவாய் பங்கைப் பகிர்ந்தளிக்க மறுப்பது சனநாயக விரோத செயலாகும். தமக்குரிய நிதிப்பங்கை ஒரு மாநிலம் பெற்றால் ஒழிய, அது தன்னுடைய மக்களுக்கான நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலாது. இந்தியாவின் கட்டமைப்பில் மாநிலங்கள் தான் நிர்வாகக்கட்டமைப்புகளாக இருக்கின்றன. மத்திய அரசு என்பது கொள்கைத் திட்டங்களை வடிவமைக்கும் அமைப்பாகவே இயங்கும் வடிவில் அரசியல் சாசனம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் நிதித்தேவையை நிறைவேற்றாமல் தவிர்ப்பதற்கான காரணம் தமிழின விரோதம் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

மாநில நிதி உரிமையை மறுத்துவரும் நிலையில், இந்திய அரசு சுங்கச்சாவடிகளை திறந்திருக்கிறது. தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ளத் தேசிய இனமக்களின் நிலத்தின் மீதமைந்த சாலையில் நிறுவி இருக்கும் சுங்கச்சாவடியின் மூலமாகத் தனது வரிச்சுரண்டலை துவக்கி இருக்கிறது. கொரொனோ ஊரடங்கின் காரணமாக முடக்கப்பட்ட வாழ்வியல் நெருக்கடியிலிருந்து மீளும் வகையில் உதவிகளைச் செய்யாமல், மேலும் மேலும் மக்களைச் சுரண்டும் வெள்ளையர் காலத்திய காலனிய மனநிலையையே இது பிரதிபலிக்கிறது.

தமிழர்களைச் சுரண்டிக்கொண்டிருக்கும் இதே சூழலில் தான், இந்திய அரசின் ரிசர்வ் வங்கி, பெருமுதலாளிகளின் கடன்

# வீழ்ச்சியுறு தமிழகத்தில்
# எழுச்சி வேண்டும்
# விசை ஒழிந்த தேகத்தில்
# வன்மை வேண்டும்

**புரட்சி கவிஞர் பாரதிதாசன்**



நிலுவைத் தொகையான 68,700 கோடி ரூபாயை தள்ளுபடி செய்த செய்தி வெளியாகி இருக்கிறது. இந்தப் பெருமுதலாளிகளில் பெரும்பாலோனோர் பனியா சமூகத்தவர். இவர்களில் பலர் வழக்குகளிலிருந்தும், கைதுகளிலிருந்தும் தப்புவதற்காக இந்தியாவிலிருந்து வெளியேறி நாடு கடந்து வாழக்கூடியவர்கள். இப்படிப்பட்டக் குற்றவாளிகள், மக்களின் பணத்தைக் கையாடல் செய்தவர்களுடைய கடனை தள்ளுபடி செய்ய 2019 செப்டம்பர் மாதமே ரிசர்வ் வங்கி ஒப்புதல் கொடுத்திருக்கிறது. இது பற்றி 2020 பிப்ரவரியில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய பொழுது நிர்மலா சீதாராமன் பதிலளிக்க மறுத்திருக்கிறார்.

இச்செய்திகளைக் கவனிக்கும் பொழுது நமக்கு ஒரு உண்மை புலனாகிறது. இந்தியாவின் செல்வ வளத்தினை, நிதி ஆதாரங்களைக் குசராத்தி-ராசஸ்தானி மார்வாடி-பனியா கூட்டத்திடம் குவிக்கும் பணியை வெகு வேகமாக இந்தப் பாரதிய சனதா கட்சியின் வழியாக ஆர்.எஸ்.எஸ் செய்துவருகிறது. அதிகார மட்டங்களில் பார்ப்பனர்களைக் குவித்து வைத்து, அவர்கள் வழியாக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பனியாக்களின் செல்வத்தைக் குவிப்பது இந்துத்துவ ஆட்சியின் கொள்கையாகவே இருந்து வருகிறது.

**மருத்துவக் கல்லூரிகளில் நீட் தேர்வு முறை மூலம் மாநில அரசுகள் மற்றும் மக்களின் தேசிய இன உரிமையைப் பிடுங்கியதைப் போன்று, பிற துறைகளிலும் நுழைவுத் தேர்வின் மூலமாக தன் கட்டுப்பாட்டை மாநிலத்திற்குள் திணிக்கிறது.**

பனியாக்களிடத்தில் நிதியைக் குவிக்கவும், அவர்களது நிறுவனங்களை அமைக்கவும், பனியாக்களின் பொருள்களை விற்பதற்குரிய சந்தையாகவும் தேசிய இனங்கள் இரையாக்கப்படுகின்றன. இந்தியக் கட்டமைப்பில் நிலம், கனிம வளங்கள், மக்கள் வளம் என்பது மாநிலங்களுக்குரிய சொத்துக்களாகும். இந்த வளங்களை எல்லாம் பனியா-மார்வாடிக் கூட்டங்களுக்குத் தாரை வார்க்க இந்திய அரசின் அதிகார மட்டங்களில் குவிந்து கிடக்கும் பார்ப்பனக் கூட்டங்கள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகின்றன. இந்த முயற்சி பெருவெற்றி பெறவேண்டுமெனில், மாநில உரிமைகளைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று பார்ப்பன-பனியா கூட்டமைப்பு நம்புகிறது. ஏனெனில், மாநில ஆட்சிகள், மாநிலக் கட்சிகள் என்பது பெரும்பாலும் அம்மாநிலத்தின் தேசிய இனமக்களின் நலனைக் குறைந்த பட்சமேனும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, ஒடிசா, மேற்கு வங்கம், பஞ்சாப், மராத்தியம் என இருக்கும் மாநிலங்களின் ஆட்சிப்பரப்புகளில் அம்மாநிலத்தின் மொழிவழி தேசிய இனங்களின் நலனைப் பேண வேண்டிய நெருக்கடி இருக்கிறது. ஆனால், இந்தியா எனும் மத்திய அரசிற்கு அப்படியான நெருக்கடிகள் வாய்ப்பதில்லை. ஏனெனில், இந்தியாவில் மத்திய அரசிற்கென்று தனித்த நிலப்பரப்போ, தனித்த தேசிய இனமோ கிடையாது. மேலும், இந்திய அரசின் நிர்வாக, நிதி, நீதி, இராணுவக் கட்டமைப்பைக் கட்டுப்படுத்தும் சமூகங்களாக இந்து மதத்தின் உயர்சாதி பார்ப்பன-பனியா எனும் ஆரியச் சமூகங்களே இருக்கின்றன. இவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பான்மை மக்களை தமக்கும் கீழானவர்களாகச் சூத்திரர்களாகவே கருதுகின்றனர். சூத்திர மக்களின் சொத்துக்களை, வளங்களை, செல்வங்களை அவர்களது அனுமதியின்றி எடுத்துக் கொள்வது வேத மரபின் அடிப்படையில், ஸ்மிருதிகளின் அடிப்படையில் இவர்களுக்கு ஏற்புடையது. அதுவே இந்துத்துவ தர்மம் என நம்பும் கூட்டமே இந்தியத் துணைக்கண்டத்தினை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்த சுரண்டல் அரசியலுக்காகவே மாநில உரிமைகள் பறிபோகின்ற சூழலை நாம் காண்கிறோம்.

மேலும், தமிழ்த்தேசியத்தின் எழுச்சியை முடக்குவதற்காகவும், திசை திருப்பவும் இந்துத்துவ அமைப்புகள் திட்டமிட்டு மதவெறிப் பிரச்சாரத்தைச் செய்து வருகின்றன. கொரொனோ தொற்று நெருக்கடிக் காலத்திலும்கூட,



தமிழர்களின் ஒற்றுமையைக் குலைக்கவும், தமது வேத வெறியை வளர்த்துவிடவும் முஸ்லீம்களுக்கு எதிரான பிரச்சாரத்தை ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளால் வளர்த்துவிடப்பட்ட இந்துத்துவச் சில்லறைக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் செய்துவருகின்றன. தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் இப்பிரச்சாரத்தை வெற்றிகரமாகக் கொண்டு சேர்க்க அதிமுகவின் எடப்பாடி அரசு அனைத்து உதவிகளையும் செய்திருக்கிறது.

சுகாதாரத்துறைச் செயலராக இருக்கும் திருமதி. பீலா ராஜேஸ் தனது பத்திரிக்கையாளர் சந்திப்புகளில் இசுலாமியர்கள் மீதான வெறுப்புப் பிரச்சாரத்திற்கான அடிப்படையை முன்மொழியும் வகையிலேயே பதிவு செய்துகொண்டிருந்தார் எனும் குற்றச்சாட்டு வெளிப்படையாகவே எழுந்தது. இவருடைய இந்த மதவெறுப்புத் தன்மையை எதிர்த்துக் கேள்வி எழுப்பியவர்கள் மீது வழக்குகள் பதிவாகின. பச்சைத்தமிழகம் கட்சியின் தலைவர் தோழர். சுப. உதயகுமார் மீதான வழக்குப் பதிவு இந்த எதேச்சதிகாரத்தை அம்பலப்படுத்துகிறது. இந்த இசுலாமிய எதிர்ப்பு – மதவெறுப்பு பிரச்சாரங்களைக் கிராமம் தோறும் ஆர்.எஸ். எஸ் செய்வதை மே பதினேழு இயக்கத் தோழர்கள் நேரில் கண்டதை, மே பதினேழு இயக்கம் பொதுவெளியில் பதிவு செய்தது.

**பனியாக்களிடத்தில் நிதியைக் குவிக்கவும், அவர்களது நிறுவனங்களை அமைக்கவும், பனியாக்களின் பொருள்களை விற்பதற்குரிய சந்தையாகவும் தேசிய இனங்கள் இரையாக்கப்படுகின்றன. இந்தியக் கட்டமைப்பில் நிலம், கனிம வளங்கள், மக்கள் வளம் என்பது மாநிலங்களுக்குரிய சொத்துக்களாகும்.**

இந்துத்துவ அமைப்புகள் மக்களிடத்தில் வெறுப்புப் பிரச்சாரத்தைச் செய்வதை அதிமுக அரசு பாதுகாத்தது. பொதுமக்களுக்கு உதவி செய்யும் அமைப்புகள், தன்னார்வலர்கள் ஆகியன தடுத்து நிறுத்தப்பட்டு அவ்வுதவிகளை அரசு நிர்வாகங்களின் வழியே ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் மேற்கொண்டன. இப்படி தமிழ்நாட்டில் நிலவும் கொரொனோ நெருக்கடி சூழலைப் பயன்படுத்திக் கொண்டு இந்துத்துவ அமைப்புகள் தங்களுடைய ஆதிக்கத்தை விரிவு செய்திருக்கின்றன. இப்படியான வெறுப்பு அரசியல் பரவுவதை இயக்கங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டன. அதிமுகவின் இந்தத் தமிழின விரோதப் போக்கிற்கும், இசுலாமியர் விரோத பிரச்சாரத்திற்கும் எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் எழுந்து நிற்க வேண்டிய காலமிது. தமிழ்த்தேசிய இனமக்களை சாதி அடிப்படையிலும், மத அடிப்படையிலும் இந்துத்துவ ஆரிய ஆற்றல்கள் உடைத்துக் கொண்டிருக்கின்றன. இதைத் துணிச்சலோடும், அர்ப்பணிப்புணர்வோடும் எதிர்த்து விரட்டுகின்ற தமிழ் இளைஞர்கள் எழவேண்டும். தமிழின விரோத ஆற்றல்களை விரட்டும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதை அறிவிப்போம். துணிந்து செயலாற்றுவோம். தமிழர் துயர் துடைப்போம். ஆயிரம் ஆண்டு அடிமை விலங்கொடித்து தமிழர் கொடி உயரப்பறக்கச் செய்ய எழு தமிழா.

●



# ’இடுக்கண் களை’

## தற்சார்பு சிந்தனைகளை ஊக்குவிக்கும் விதமாக மே17 இயக்கம் தொடங்கிய முகநூல் தளம்

***வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்***
***உள்ளத்தின் உள்ளக் கெடும்.***

வெள்ளமாகப் பெருகி வருகின்ற துன்பங்களும், அறிவு உடையவன் தன் உள்ளத்திலே நினைத்தபோது, அவனைவிட்டு மறைந்து போய்விடும்.தமிழர்களுக்கும், மாந்த இனத்திற்கும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த பேரிடரை எதிர்கொள்ளும் விதமாக நீங்கள் மேற்கொள்ள விரும்பும் புதிய யோசனைகள், சிந்தனைகள், வழிகாட்டுதல்கள், தகவல்கள் ஆகியவற்றை மக்களுக்கு பயன்படும் விதமாக அனைவரிடத்திலும் கொண்டு செல்ல மே17 இயக்கம் விரும்புகிறது. இந்த இக்கட்டான காலத்தில் தனியார்மயம் நம் மக்களுக்கான பேருதவியாய் அமையாது என்பது அறிந்த பின்னர், நமக்கான கட்டமைப்பு சிந்தனைகளை வலுப்படுத்துவோம்.

லாபநோக்கமின்றி, மக்கள் நலனை முன்னிறுத்தி முன்மொழியப்படும் அறிவியல், சமூக சிந்தனைகள், யோசனைகள், வழிகாட்டுதல்களை நீங்கள் எமக்கு தெரியப்படுத்துங்கள். அவசியமேற்படின் உரிய நபர்களிடத்தில் அவற்றைக் கொண்டு சேர்த்து அனைவரும் பயன்பெற முயல்வோம். இந்த யோசனைகள் மருத்துவத்துறையினரால் ஏற்கப்படுவதாகவும், அறிவியல்பூர்வமானதாகவும் அமைய வேண்டுமென அன்புடன் வேண்டுகிறோம்.

### உங்கள் சிந்தனைகள், வழிகாட்டுதல்கள் கீழ்கண்ட எந்த வகையிலும் அமையலாம்

- கிருமி தடுப்பு, நோய் தவிர்ப்பு
- மருத்துவ உபகரணங்கள்
- மருந்து தொடர்பான ஆய்வுகள்-தரவுகள்
- உணவு / உற்பத்தி சங்கிலியை வலுப்படுத்துவது
- பசியாற்றுதல்
- அன்றாட தேவை சார்ந்த பொருட்கள் (பல்பொடி, சோப்பு முதல்)
- நெருக்கடி காலத்திற்கு தேவையான
- உணவு முறை உள்ளிட்ட தற்சார்பு சிந்தனைகள்.

தொடர்பு கொள்ளும் முறை: உங்கள் யோசனைகளின் விவரங்களோடு உங்கள் தொடர்பு எண் அனுப்பவும். உங்கள் பரிந்துரைகள், யோசனைகள் குறித்து விவாதிக்க தொடர்பு எண் தேவைப்படுகிறது. உங்கள் அனுமதியின்றி உங்கள் தகவல்கள் பொதுவெளியில் பதிவு செய்யப்படாது.

| தொடர்பு / வாட்ஸப் எண் | மின்னஞ்சல் |
| --- | --- |
| **+91 89392 56289** | **tnrespond@gmail.com** |

## மே பதினேழு இயக்கம்

**02 ஏப்ரல் 2020**



பெருங்காமநல்லூர் படுகொலையின்
100ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு,

# வரலாற்றில் தமிழ் குடியானவர்களின் கிளர்ச்சி

15ஆம் நூற்றாண்டில் வெளிப்படையாக ஆரம்பித்த உழவர் கிளர்ச்சியும், 18ஆம் நூற்றாண்டில் வெடித்த புரட்சியும் இன்றுவரை தொடரும் போராட்ட களத்தின் பின்னணி வரலாறாகக் கொள்ளலாம். இது பற்றிய ஒரு சுருக்கமான பார்வை.

**'வழுதிலம் பட்டு உசாவடியில்
வலங்கை தொண்ணூற்றெட்டும்,
இடங்கை தொண்ணூற்றெட்டும்
நிறைவர நிறைந்து, குறைவரக் கூடி இருந்து'
கல்வெட்டின்படி...**

கி.பி.1429 சித்திரை மாதத்தில் வலங்கையின் 98
சாதிகள்—இடங்கையின் 98 சாதிகள் ஒன்றுகூடி அரசிற்கு
எதிராக நிறைவேற்றிய ஒற்றுமைத் தீர்மானம்

**'ஐரோப்பியர்களின் அதிகாரம்
வீழும் நாளில் நிலையான கண்ணீரற்ற
மகிழ்ச்சியை பெறுவோம்'**

திருச்சிக் கோட்டை சுவரில் 1801இல்
மருது சகோதரர்கள் வெளியிட்ட புரட்சிக்கான அழைப்பு.

**'தற்சமயம் பல நாட்டு மக்கள்
ஒன்றுபட்டு எழுந்து போராடினால்
ஆங்கிலேயர் அழிக்கப்படுவர்'**

செவத்தையா, தஞ்சை அரசருக்கு
1801இல் எழுதிய கடிதம்

அரசிற்கும் குடியானவர்களுக்குமான போராட்டம் இன்று துவங்கப்பட்டதல்ல. இதற்கென்ற ஒரு வரலாற்று தொடர்ச்சி இருந்திருக்கிறது. சமூகத்தின் பல்வேறு படிநிலைகளில் இருக்கும் மக்கள் சுரண்டப்படுவதும், அச்சுரண்டலுக்கு எதிராக சாமானிய மக்கள் கலகம் செய்வதும் வரலாறாகவே ஆவணமாக பதிவாகி இருக்கிறது.

இது போன்ற ஒரு போராட்ட வரலாறு தமிழ்நாட்டிலும் இருந்து வந்துள்ளதை வரலாற்றாசிரியர்கள், தொல்லியல் அறிஞர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இப்போராட்டம் உச்சத்தை அடைந்ததை பாளையக்காரர்களின் புரட்சியில் நாம் பார்க்கிறோம். இப்புரட்சிக்குப் பின்புலமாக இயங்கிய எளிய மக்களின் திரட்சி இந்த போராட்ட வரலாற்றை நமக்கு சொல்லுகிறது. இந்த மக்கள் திரட்சி வெள்ளையர்கள் வருவதற்கு முன்பிருந்தே கூர்மைப்பட்ட ஒரு போராட்ட நிலையாக தமிழ்நாட்டில் இருப்பதை நாம் காணமுடிகிறது. சோழர்கள் காலத்திலும் அதற்கு பின்புமான காலத்திலும் மக்கள் திரண்டு தமக்கான உரிமையை பெற்றுக்கொள்வது தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது. ஆரிய வேதமரபினை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் குடியானவர்கள் பல்வேறு சாதிகளாக பிரிக்கப்பட்டனர். குடிகள் சாதிகளாக மாற்றம் பெற்று சாதிய மேலாண்மையின் அடிப்படையிலான பிராந்திய நாடுகள் உருவாக்கப்பட்டன. இப்படியான பிளவுகள் உருவான போதிலும், இந்நாடுகள் கடந்த பொது அமைப்புகள் குடியானவர்கள் இடையே ஏற்பட்டதை கல்வெட்டு ஆவணங்கள் நமக்குச் சொல்கின்றன. இந்த அணி சேர்க்கை பிற்காலத்தில் போராட்டத்தினை ஒருங்கிணைக்கவும் உதவியிருக்கிறது.

ஆங்கிலேயர் நம்மை காலனியாக்கியப் பின்பு இந்த பிராந்தியக் நாடு எனும் கட்டமைப்புகள் சிதைவுற்ற நிலையிலும், குடியானவர்கள் காலனியத்திற்கு எதிராக திரண்டனர். காலனிய காலத்தில் நடந்தேறிய அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பாக வெடித்துக் கிளம்பிய வெகுமக்களின் புரட்சிகர செயல்பாட்டினை மருது சகோதரர்களின் ஜம்பு தீபகற்ப பிரகடனத்தில் நாம் ஆவணமாகக் காணமுடிகிறது.

பேரரசுகள் தமிழ்நாட்டில் உருவான காலத்தில் ஏற்பட்ட சமூக, அரசியல் மாற்றங்கள் இப்போராட்டங்களில் பிரதிபளிக்கின்றன. குடியானவர்களின் போராட்டங்கள் அதிகப்படியான வரிச் சுரண்டலை எதிர்ப்பது என்பதிலிருந்து சமுகரீதியான மதிப்பை உயர்த்துதல், சமய மதிப்பைக் கோருதல் என்கிற கோரிக்கை வரை நீண்டிருக்கிறது. அதாவது வரியை நீக்குதல், உழவு உற்பத்தி மீதான அரசுக் கட்டுப்பாடுகளை நீக்குதல் என்பதிலிருந்து, தங்களது சாதிக்கு சமூக மதிப்பளிக்கும் சம்பிரதாயங்களை அதிகாரப்பூர்வமாக பெருதல், சமூக மதிப்பை உயர்த்தும் வழிமுறையை கோருதல் என பல்வேறு கோரிக்கைகளுக்கு போராட்டம் நடந்திருக்கிறது. தமிழ்ச் சமூகத்தின் அடித்தள மக்களாகிய குடியானவர்கள் பல்வேறு சாதிகளாக பிரித்து வைக்கப்பட்டிருந்தாலும், சுரண்டுதலுக்கு எதிராக போராடும் பொழுது போர்க்குணத்தையும், சமூக ஒற்றுமையையும் பேணி காத்து வந்திருக்கிறார்கள்.

## பல்லவர்-சோழர் காலத்திய சமூக அமைப்புகளும், சுரண்டல்களும்:

கங்கை வெளியிலும், தக்காண பீடபூமியிலும் பார்ப்பனர்களுக்கு நிலம் வழங்கும் முறை இருந்தது. இது பல்லவர்கள் காலத்தில் தென்னகத்திற்கும் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. குப்தர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட இம்முறையை பல்லவர்களும், அவர்களுக்கு பின் வந்த சோழர்களும் பின்பற்றினர். பார்ப்பனர்களுக்கு வழங்கிய கிராம நிலங்களை/ தானங்களை பிறச் சமூக மக்கள் மீட்டெடுக்க இயலாத வண்ணம் வேத மரபுகள் மக்களிடத்தில் திணிக்கப்பட்டன. பல்லவ அரசரான இரண்டாம் நரசிம்மவர்மனின் ரேயூருச் செப்பேடு பின்வரும் தகவலைக் கொடுப்பதாக அறிஞர்கள் நொபுரு கராசிமா-சுப்பராயலு அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அச்செப்பேடு (83-86 (88)) என்பது, "பிராமணன் சொத்து கொடிய விசம், வேறு எந்த விசமும் விசமாகாது. விசம் ஒருவனைக் கொல்லும். பிரம்ம சொத்தோ புத்திர பௌத்திரர்களையும்(கொல்லும்). தான் அளித்தது பிற அளித்தது எதுவாயினும் பூமியை அபகரிக்கும் ஒருவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் புழுவாகப் பிறந்து உழல்வான்" என்கிறது. இதையே முதலாம் இராசராசன் காலத்து கல்வெட்டு 'பிராமணர்களின் ஊரில் பிறர்(பிற சமூகத்தினர் தங்களுடைய) நிலத்தை விற்றுவிட வேண்டுமென்று' ஆணை பிறப்பிக்கிறார். தம்முடைய சாதிய படிநிலையை மீறுகிறவர்களுக்கு 'பல்வேறு தண்டனைகள் பாவமாக வந்து சேரும்' எனும் பழிச்சொல் மக்களிடத்தில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்படுகிறது. இந்த வழிமுறை ஆரிய அடிமையாக மக்கள் சுரண்டப்பட்டதை காட்டுகிறது. இவ்வாறு கடுமையான சூழலில் மக்கள் வாழ்ந்த பொழுதிலும், அடக்குமுறைக்கு எதிராக மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். எனவே தான் இந்த சாதிய வரையரையை/கட்டுப்பாட்டை/முடிவுகளை மீறுகிறவர்களுக்கு 'பாவம்' எனும் தண்டனை கிடைக்கும் என்று பல்லவர்கள் காலத்தில் 7ஆம் நூற்றாண்டில் சொல்லப்பட்டது. இந்த தண்டனைகள் என்பது சோழர் காலமான 11,12 ஆம் நூற்றாண்டில் மாறுபாடு கொள்கிறது. அதாவது பேரரசுகள் உருவான பின்னர் இந்த 'பாவம்' எனும் தண்டனை 'ராச துரோகமாக', 'தேச துரோகமாக' வரையரை செய்யப்படுகிறது. இது மக்களிடத்தில் இருந்த கட்டுப்பாட்டினை மீறும் போக்கினை தடுக்கும் வகையில் தீவிரமாக்கப்பட்டதை காணமுடியும். இந்தக் கட்டுப்பாடுகள் மூலமாக பிராந்திய நாடுகளாக 'சதி-குலவழி' நாடுகளை பாதுகாக்கும் முறையாக இருந்திருக்கின்றன. மேலும்

> "பிராமணன் சொத்து கொடிய விசம், வேறு எந்த விசமும் விசமாகாது. விசம் ஒருவனைக் கொல்லும். பிரம்ம சொத்தோ புத்திர பௌத்திரர்களையும்(கொல்லும்). தான் அளித்தது பிற அளித்தது எதுவாயினும் பூமியை அபகரிக்கும் ஒருவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் புழுவாகப் பிறந்து உழல்வான்"

இந்த சாதிய இறுக்கத்தினை பாதுகாக்க இது பயன்பட்டது, என்றாலும் அடிப்படையில் இந்தக் கட்டுப்பாடுகள் என்பது உயர்சாதிகளின் சுரண்டலுக்கான பாதுகாப்பாகவே உருவாக்கப்பட்டன, என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். அரசாட்சியை நிலைநிறுத்த மிகுந்த கட்டுப்பாடுகள் நிறைந்த சூழலையும், வளர்ந்து வந்த இறுக்கத்தையும் இந்தப் போக்குகள் காட்டுகிறது.

## சோழர், விஜயநகர ஆட்சி காலத்தில் நடைபெற்ற குடியானவர் எதிர்ப்புகளும், கலகங்களும்:

குடியானவர்கள் பல சமூகங்களாக/சாதிகளாக பிரிக்கப்பட்டு படிநிலையில் வைக்கப்பட்ட போதிலும், தங்களது உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்தனர். குடியானவர்களின் எதிர்ப்பு, அல்லது உரிமைக்கோரல் என்பது இரண்டு வகைப்பட்டதாக இருந்தது. ஒருபுறம் சமயச்சடங்குகளில் மேல்நிலையாக்கம் பெற உரிமை கோருதல். அதாவது சாதிய நிலையில் தமக்கு உயர் நிலை வேண்டுமென்பதற்காகவோ, சடங்குகளைச் செய்ய உரிமை கோருவதாகவோ, அல்லது கோவில் பண்டிகைகளில் முன்னுரிமை, சிறப்புரிமை கோருவதாகவோ அமைந்திருந்தது. இந்த போக்குகள் அன்றிலிருந்து இன்று வரை சாதிச்சண்டைகளுக்கே வழிகோலி இருக்கின்றன. இந்த சடங்கு-சமய உரிமைகளை வழங்குவது, பறிப்பதன் மூலம் சமூகத்தில் ஏற்றத்தாழ்வினை அரசர்களும், நில உடமையாளர்களான பார்ப்பனர்களும், வெள்ளாளர்களும் நிலைபெறச் செய்தனர். இந்த சடங்கு-சமய உரிமைகளை வைத்து இச்சாதிகளுக்கிடையே ஓயாது சச்சரவுகள் இருந்து வந்திருக்கின்றன. இது குறித்து ஏராளமான ஆவணங்கள் நமக்கு காணக்கிடைக்கின்றன. இதே சமயத்தில் அரசின் வரிவிதிப்புகள், நில உடமையாளர்களின் கடுமையான சுரண்டல்கள், ஊழல்கள் எதிராக குடியானவர்களின் போராட்டமும் ஆவணங்களாக கிடைத்திருப்பதை ஆய்வாளர் சுப்பராயலுவும், நொபுருகராசிமாவும் பதிவு செய்திருக்கிறார்கள். சுரண்டலுக்கு எதிரான இந்த குடியானவர்களின் போராட்டங்களில் மக்கள் சாதிகடந்தும், தமக்கிடையேயான பூசல்களைக் கடந்தும் ஒன்றிணைந்து போராடி இருக்கிறார்கள் என்பதையும் நாம் காணலாம்.

> 'பிராமணருக்குக் கீழ்ப்பட்ட ஜாதிகளில் உள்ளோர் தங்கள் காணிகளை(நிலங்களை) விற்றுவிட வேண்டும்' என்கிற அரசாணை முதல் இராசராசன் கல்வெட்டில் ஆணையாக இருக்கிறது.(தென்னிந்திய கல்வெட்டு - நொபுருகராசிமா-சுப்பராயலு 5:1409)

> நில உடைமையாளர்கள் மற்றும் பார்ப்பனர்களும் தங்களிடம் மேலதிகமாக வரி வசூலிப்பதால் மேற்குறிப்பிடப்பட்டவர்களுக்கு தங்குமிடம் கொடுப்பதில்லை என விருத்தாச்சலம் பகுதியில் வாழ்ந்த சிறுவிவசாயிகள், கைவினைஞர்கள் ஒன்று திரண்டு முடிவெடுத்தனர்.

முதலாம் குலோத்துங்கன் காலமான கிபி1070 காலத்தில் கம்மாளருக்கு பல்வேறு சடங்கு உரிமைகளைப் பெற்ற திருச்சி உய்யங்கொண்டான் திருமலைக்கல்வெட்டு சொல்கிறது. இவ்வாறான உரிமைகள் என்பது செருப்பு அணிந்து கொள்வது, தம் வீடுகளுக்கு சுண்ணாம்பினால் வெள்ளையடிப்பது, திருமணச் சடங்குகளில் இரட்டைக் கொம்பு முழங்கிக் கொள்ளுதல் எனும் சடங்குகளுக்கான உரிமைகள். இவ்வாறு சமயச் சடங்குகளில் உரிமையை பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு சாதிகள் உரிமைக்கோரிக்கை வைத்த வரலாறு ஆங்கிலேய ஆட்சிகாலம் வரை நீடித்த ஒன்றாகும். இன்று வரை நிகழும் சாதிச் சச்சரவுகளில் இந்த சடங்குவகைப்பட்ட உரிமைகள் மீது நிகழும் சச்சரவுகள் முக்கியத்துவம் பெற்றிருப்பதை நாம் காணமுடியும்.

பல்லவர் காலகட்டத்தில் விவசாய சமூகம் விரிவுபடுத்தப்படுகிறது. பின்னர் பிற்கால சோழர்கள் காலத்தில் மேல்லாதிக்க விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்த விவசாய உற்பத்தி வளர்ச்சியே சோழர்களின் எழுச்சிக்கும், வளத்திற்கும் காரணமாக அமைந்தது. சோழர்காலத்தில் மக்கள் நிலைபெற்று வாழும் வகையிலான 'வட்டார நாடுகள்' உருவாக்கப்பட்டன. வேணாடு, கங்கநாடு, எயில்நாடு போன்றவை பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டனர். பின்னர் சோழர் காலத்தில் வட்டார அளவிலான சாதி நாடுகளாக இவை மாற்றப்பட்டன. கைவினைஞர்கள், மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டவர்கள் இந்த 'ஊர்'வாழ்க்கையை மேற்கொண்டார்கள். அரசரின் நாட்டிற்குள், இந்த 'சமூகரீதியான-நாடுகள்' கிட்டதட்ட இரட்டை ஆட்சி முறை போல செயல்பட்டன. அரசரின் ஆட்சி மாறினாலும் இந்த சமூக-ரீதியான-நாடுகள் மாறவில்லை. இவை ஒரு வருவாய் அலகுகளாக தொடர்ந்து இயங்கின.

கிபி 1000ஆம் நூற்றாண்டு வாலிக்கண்டபுரம் கல்வெட்டில் வலங்கை, இடங்கை சாதிப்பிரிவுகள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. அதாவது சோழர் காலத்தில் சாதிகள் இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. நிலத்தை வைத்திருந்த நில உடமையாளர் சாதிகள் தங்களோடு இணைத்துக் கொண்ட சாதிகள் வலங்கை சாதிகளாக அறியப்பட்டன. வணிகர்கள், கைவினைஞர்கள் உள்ளிட்டவர்கள் இடங்கை சாதிகள் என்று அறியப்பட்டனர் என்று அறிஞர்.வானமாமலை கூறுவார். உழவர்கள் அணிகளாக தமக்கான அமைப்பினை உருவாக்கி இருந்தது 12ஆம் நூற்றாண்டில் தென்படுகிறது. இவ்வமைப்பு 'சித்திரமேழி பெரிய நாடு' என்று அழைக்கப்பட்டது. இது தவிர ஐந்நூற்றுவர் எனும் வணிகர் அமைப்புகள், வலங்கை-இடங்கை அமைப்புகள் இருந்தன.

அக்காலத்தில் பார்ப்பனர்களும், வெள்ளாளர்களும் வேளாண் உற்பத்தியையும், வருவாயையும் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். பார்ப்பனர்கள் அதிக உரிமைப் பெற்றவர்களாக இருந்தனர். மறுபுறத்தில் நிலமற்றவர்களாக உரிமையற்று பெரும்பாலான குடியான மக்கள் வாழ்ந்தார்கள்.

இதில் வைதீக(ஆரிய) சடங்குகள் செய்பவர்கள் என்கிற காரணத்தினால் பார்ப்பனர்கள் மேலதிக உரிமைப்பெற்றவர்களாக இருந்தனர். பிராமண ஊர்களில் 'பிராமணருக்குக் கீழ்ப்பட்ட ஜாதிகளில் உள்ளோர் தங்கள் காணிகளை(நிலங்களை) விற்றுவிட வேண்டும்' என்கிற அரசாணை முதல் இராசராசன் கல்வெட்டில் ஆணையாக இருக்கிறது (தென்னிந்திய கல்வெட்டு – நொபுருகராசிமா– சுப்பராயலு 5:1409). இப்படியான நிலத்தின் மீதான ஆதிக்கத்தினை செலுத்தியவர்களை எதிர்த்து நடந்த போராட்டங்கள் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக வரலாற்றை நிரப்பி உள்ளது. நிலங்கள் மீதான வரிகள் பெரும் சுமையாக இந்த நிலவுடமையாளர்கள் விதித்த பொழுது எல்லாம் எதிர்த்துப் போராடி இருக்கிறது தமிழ்ச் சமூகத்தின் குடியானவர்கள். இந்நிலை விஜயநகரப் பேராரசின் காலத்திலும் தொடர்கிறது. ஆதிக்க ஆற்றல்களை எதிர்த்து கிளர்ச்சிகள் நடந்திருகிறது. அடக்குமுறைக்கு எதிராக, பல ஊர்களில் குடியான மக்கள் ஊரை விட்டு வெளியேறிச் சென்றிருக்கின்றனர்.

## 15ஆம் நூற்றாண்டில் உழவர்களின் கலகம்:

விவசாயிகள், வணிகர்கள், கைவினைஞர்கள் மீதான வரியை எதிர்த்து மக்கள் திரண்ட வரலாறை 1429 ஆம் ஆண்டின் தஞ்சை குறுக்கைப் பகுதி கல்வெட்டு சொல்கிறது. அநியாயமான வரியை எதிர்த்து வரி செலுத்துவதில்லை என குடியானவர்கள் முடிவெடுத்து கிளர்ச்சி செய்ததை சொல்கிறது. அதே போல கள்ளக்குறிச்சிக்கு அருகே இருக்கும் குகையூர், திருக்கோவிலூர் பகுதியின் கீழூர், பொன்னேரி அருகில் இருக்கும் திருப்பாலைவனம் மக்கள் வரிவிதிப்பை எதிர்த்து விஜயநகர அரசரின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வை பெற்றிருக்கின்றனர். எதிர்காலத்தில் இவ்வகையான வரிவிதிப்பை தவிர்க்கும்படி குறுநில மன்னர்கள், பாளையக்காரர்களுக்கு அரசர் உத்தரவிட்டிருக்கிறார் என்பதும் பதிவாகக் கிடைக்கிறது. இரண்டாம் தேவராய மன்னர் காலத்திலும் கிளர்ச்சி நடந்திருக்கிறது. இராஜன்யாக்கள் எனப்படும் அரசு அதிகாரிகளும், காணியாளர் எனும் நில உடைமையாளர்கள் மற்றும் பார்ப்பனர்களும் தங்களிடம் மேலதிகமாக வரி வசூலிப்பதால் மேற்குறிப்பிடப்பட்டவர்களுக்கு தங்குமிடம் கொடுப்பதில்லை என விருத்தாச்சலம் பகுதியில் வாழ்ந்த சிறுவிவசாயிகள், கைவினைஞர்கள் ஒன்று திரண்டு முடிவெடுத்தனர். இம்முடிவை மீறுபவர்களுக்கு மரணத் தண்டனைக்குள்ளாவார்கள் என முடிவெடுத்தனர்.

**அரசுகள் ஆரிய வேதமுறையில் மக்களைப் பிரித்தாளும் காலகட்டத்தில் குடியானவர்கள் தமக்குள் ஒற்றுமையை கட்டிக்காக்க முயன்றிருக்கிறார்கள். இச்சாதிப் பிரிவினைகள் அவர்களுக்கு வீழ்ச்சியை கொடுத்திருக்கிறது என்றும், தாங்கள் சுரண்டப்படுவதை இக்கட்டமைப்புகள் ஊக்குவிக்கின்றன என்கிற நிலை தோன்றியதாலேயே, இந்த ஒற்றுமைக்கான தேவை உண்டாக்கியிருக்கிறது.**

இந்த சுரண்டல் தொடர்ந்த பொழுது 1501 ஆம் ஆண்டில் எளவானசூர் கல்வெட்டில் ஒரு முக்கியமான தகவலைக் கொடுக்கிறது. வலங்கை, இடங்கை என தொடர்ந்து சச்சரவிட்டுக் கொண்டும், சண்டையிட்டுக்கொண்டும் இருந்த குடியான தமிழர்கள் ஒன்று கூடி தமக்குள்ளான சச்சரவுகளுக்கு முடிவு கட்டி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர். இந்த ஒற்றுமையின் விளைவாக வரிவிதிப்பை தவிர்ப்பது எப்படி என்றும் முடிவெடுத்தனர் என்பதைக் இக்கல்வெட்டு நமக்கு சொல்கிறது. இதன்படி பார்ப்பனர்களும், வெள்ளாளர்களும் தம் மீது விதிக்கும் 'வாரவரி'யை நிறுத்த வேண்டும் முதலான தீர்மானத்தை நிறைவேற்றினர். (வாரவரி என்பது நிலத்தில் உழைக்கும் மக்கள் கட்ட வேண்டிய வரி). நிலம் என்பது தமக்கு சொந்தமாகாத வண்ணம் தம்மை சுரண்டிக்கொண்டிருந்த ஆரிய– வேத முறையை எதிர்க்க வழி இல்லாத வண்ணம் இம்மக்கள் சுரண்டப்பட்டுக்கொண்டிருந்தனர். இந்த ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் தமக்குள்ளாக ஒற்றுமையை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்த வரலாறு சோழர் காலத்திற்கு பின் பாண்டியர் ஆட்சி ஏற்பட்ட சமயத்திலும் நடந்திருப்பதை பாண்டியர் நாட்டுப்பகுதியில் கிடைத்த கல்வெட்டுகள் நமக்கு தருகின்றன.

மதுரையை அடுத்த திருமங்கலத்தில் கண்டறியப்பட்ட 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் இடங்கை ,வலங்கை சாதிகள் தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டதைப் பற்றிய தகவல் நமக்குக் கிடைக்கிறது. இக்கல்வெட்டின் காலகட்டம் மதுரை கோச்சடையவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவரின் பதினான்காம் ஆட்சியாண்டில் இது நிகழ்ந்தது. விருதராஜ பயங்கர வளநாட்டைச் சார்ந்த குறுக்கை நாடு, காளி நாடு, விளத்தூர் நாடு, மாந்துறை நாடு, திருமங்கலநாடு எனப்பெறும் இந்த ஐந்து நாட்டு இடங்கை ,வலங்கைப் பிரிவினராகிய சாதியினர் எல்லாம் திருமங்கலம் கோயிலில் கூடி இனி சந்திரன் – சூரியன் உள்ள அளவும் தங்களுக்குள் இடங்கை–வலங்கைப் பிரிவுகளை மேற்கொள்ள மாட்டோம் என முடிவெடுத்திருக்கின்றனர். இம்முடிவில் அவர்கள் உறுதியுடன் இருந்ததை 'இடங்கை –வலங்கை பிரிவினை யாரேனும் கொண்டாடுவார்களாயின் அவர்கள் ஐந்து நாட்டிற்கும் அநியாயம் செய்தவர்களாகக் கருதப்படுவர்' என்றும் முடிவு எடுத்து கல்வெட்டாக்கி இருக்கின்றனர். இவை நமக்குச் சொல்வதெல்லாம், அரசுகள் ஆரிய வேதமுறையில் மக்களைப் பிரித்தாளும் காலகட்டத்தில் குடியானவர்கள் தமக்குள் ஒற்றுமையை கட்டிக்காக்க முயன்றிருக்கிறார்கள். இச்சாதிப் பிரிவினைகள் அவர்களுக்கு வீழ்ச்சியை கொடுத்திருக்கிறது என்றும், தாங்கள் சுரண்டப்படுவதை இக்கட்டமைப்புகள் ஊக்குவிக்கின்றன என்கிற நிலை தோன்றியதாலேயே, இந்த ஒற்றுமைக்கான தேவை உண்டாக்கியிருக்கிறது.

இப்படியான உள்ளூர கனன்று கொண்டிருந்த நெருக்கடியும், முரணும் ஒரு பெரும் கிளர்ச்சியாக 15ஆம் நூற்றாண்டின் கி.பி1429ஆம் ஆண்டு உழவர் கிளர்ச்சியாக வெடித்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன. விஜயநகர ஆட்சியில் தென்பெண்ணைக்கும், கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இருக்கும் (இராஜ்ஜியம் என

அழைக்கப்பட்ட நிலப்பிரிவான சாவடி 'வழுதிலம்பட்டு சாவடி' பகுதியில் கிடைத்த கல்வெட்டு சொல்லுகிறது. இங்கு வலங்கை 98, இடங்கை 98 ஆகிய இருபிரிவு சாதிகளும் ஒன்றிணைந்து எடுத்த முடிவாக காணியாளர், அரச படைகள், ஆளுனரின் அடக்குமுறையை எதிர்ப்பது என இரண்டு பிரிவு மக்களும் சேர்ந்து முடிவெடுத்தனர். இந்த முடிவிற்கு எதிராக இருப்பவர்கள், அதிகார வர்க்கத்துக்கு உடந்தையாக செயல்படுபவர்கள், சமூகவிரோதிகளாக கருதப்பட்டு சமூகத்தில் இருந்து தூக்கி எறியப்படுவார்கள், என முடிவெடுத்ததாக இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கிளர்ச்சி விரிவடைந்து காவிரி சமவெளிப்பகுதியையும் சென்றடைகிறது. தஞ்சையின் காவிரிப்பகுதியில் இது பற்றி கல்வெட்டுகள் இப்போராட்ட விரிவாக்கம் பற்றி சொல்கிறது. திருவைக்காவூர், திருவையாறு கல்வெட்டுகள் இதைச் சொல்கிறது. தென்னாற்காட்டில் ஆரம்பித்த இப்போராட்டம் ஒரு ஆண்டிற்குள் தஞ்சை மாவட்டத்தின் வடபகுதியில் பரவியது. ஏறக்குறைய 5000 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவு நிலப்பகுதியில் குடிகள் கிளர்ந்தெழுந்தார்கள். இதன் அடிப்படைக் காரணம் வரிப்பளுவாகும். இப்பிரச்சனை குறித்த ஒரு கல்வெட்டில் நமக்கு கிடைக்கும் தகவல் என்பது, ஒரு பகுதிக்கு வரிவசூலிக்கும் உரிமையை 200 பொன்னுக்கு குத்தகைக்கு ஏலத்தில் எடுத்த அதிகாரிகள், பின்னர் ஒரு சில வருடத்தில் 2000 பொன்னாக உயர்த்தினர் என்கிறது நாகை மாவட்டத்தின் தேவூர் கல்வெட்டு (கிபி 1426, தெ.இ.க 17:562 - நொபுருகராசிமா-சுப்பராயலு) சொல்லுகிறது. இப்படியாக நில உடமையாளர்கள் தங்களைச் சுரண்டியதை எதிர்த்து கிளர்ச்சி செய்து கிட்டதட்ட ஓராண்டிற்கும் அதிகமாக இக்கிளர்ச்சியை வளர்த்தெடுத்து கோரிக்கைகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆயினும் இவை தற்காலிக தீர்வினையை குடியானவர்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பதை தொடர்ந்த கிளர்ச்சிகள் நமக்குச் சொல்லுகின்றன. குடியானவர்களை பிரித்து வைத்திருந்த சாதி அமைப்புகளே இவர்கள் சுரண்டப்படலுக்கு காரணமாக இருந்திருக்கின்றன.

**தரங்கம்பாடியிலிருந்து பயணம் சென்ற ஒரு பரப்புரையாளர் 05-09-1741இல் பதிவு செய்துள்ள ஆவணத்தின்படி, அவர் செல்லும் வழியில் மரத்தில் ஒரு வெட்டப்பட்ட கை தொங்கிக் கொண்டிருந்ததை கண்டிருக்கிறார். அந்த வெட்டுண்ட கை என்பது அடிமை வணிகத் தரகருடையது எனவும், அடிமை வணிகம் தஞ்சை அரசரால் தடை செய்யப்பட்டு இருந்ததையும் மீறி இதை டேனிஷ் வணிகர்கள் செய்து வந்ததை பதிவு செய்திருக்கிறார்.**

## காலனியத்தின் ஆரம்ப காலத்திய சுரண்டலும், சிதைவும்:

இப்படியான உழவை முதன்மையாகக் கொண்டிருந்த அரசர்களின் ஆட்சிமுறைக்கு முற்றிலும் மாறானதாக காலனிய வெள்ளையர்-ஐரோப்பியர் காலனியம் தமிழகத்திற்குள் 16, 17ஆம் நூற்றாண்டுகளில் அறிமுகமாகிறது. முழுவதுமாக வணிக நோக்கில் வந்த ஐரோப்பியர், குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சி முறை விரிவுபடுத்தப்பட்ட பொழுது சோழர் காலத்தில் நிலைபெற்ற 'சமூகரீதியான-நாடுகள்' பாதிப்பிற்குள்ளாகின. நிலைத்த தன்மைகொண்டதாக இருந்த இந்த நாடு-கட்டமைப்பின் உழவு, உற்பத்தி, வணிகம் என்பதை வெள்ளையர் வருகை சிதைந்தது. வெள்ளையரின் ஆட்சி விரிவாக்கம் என்பது அரசாட்சியினை ஒத்ததாக இல்லை. நிலப்பரப்பினை கைப்பற்றுவதன் பின்னனியில் வணிக லாபவெறி நோக்கம் இருந்தது. அதுவரை தமிழ்நாட்டில் இருந்த ஆட்சிவிரிவாக்க முறைக்கும், வெள்ளையர் விரிவாக்க முறைக்குமான வித்தியாசத்தை இது சொல்லுகிறது. நிலத்தை மட்டுமே கைப்பற்றி அதில் உற்பத்தியாகும் விளைபொருட்கள், உழவு பொருட்களை வருமான வாய்ப்பாக பெற்றிருந்த நில உடமை அரசர்களுக்கு முற்றிலும் வேறுபட்டது வெள்ளையர் தலையீடு. தங்களது வணிகம், வரி, சுரண்டல், கொள்ளையிடல் என்பதற்கு மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்ததாக ஐரோப்பியர் வருகை தமிழகத்திற்குள் நிகழ்ந்தது. அவர்களது முதன்மை நோக்கம் வணிகமாக இருந்ததே அன்றி, நிலைத்த அரசையும் , நீதிபரிபாலனை, வளர்ச்சிக் கட்டமைப்புகள் உருவாக்குவதான நோக்கம் கொண்டது அன்று.

## ஐரோப்பியர் மேற்கொண்ட தமிழர் அடிமை வணிகம்

ஆங்கிலேயர் உள்ளிட்ட பிற ஐரோப்பியர்களின் கட்டுப்பாடற்ற லாபவெறி கொண்ட வணிகம் தமிழர்களை அடிமைகளாக ஏற்றுமதி செய்வது வரை விரிவடைந்திருந்தது. தமிழர்கள் அடிமைகளாக வாங்கப்பட்டும், விற்கப்பட்டும், ஏற்றுமதி செய்யப்பட்டதும் தமிழகத்தின் கடற்கரை நகரங்களில் ஏகபோகமாக நடந்தது.

17ஆம் நூற்றாண்டு முழுவதும் டச்சுக்காரர்கள், போர்த்துகீசியர்களால் அடிமை வணிகம் தமிழகக் கடற்கரை முழுவதும் தீவிரமாக நடந்தது. இதில் கைவினைஞர்கள், நெசவாளிகள் போன்றோர் கூட அடிமைகளாக ஏற்றுமதி செய்யப்பட்டனர். தமிழகத்தின் ஆட்சியாளர்கள், அரசர்கள் இந்தத் தொழிலை தடைசெய்திருந்தாலும் ஐரோப்பியர்கள் சூழ்ச்சிகளால் இதை தொடர்ந்து செய்து வந்தனர். தமிழகத்தில் நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைத்தனத்தை இந்த அரசுகள் அனுமதித்த போதிலும் அடிமையாக ஏற்றுமதி செய்யப்படுவதை தமிழக மன்னர்கள் தடை செய்திருந்தனர். தமிழர்களிடம் நிலவிய வறுமை, பஞ்சங்கள் காரணமாக இது சாத்தியமானது. ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்ட விவரங்கள் ஆவணங்களாகக் கிடைக்கின்றன. 1694இல் மட்டும் ஒரு ரியால் என்கிற விலையில் 5000 தமிழர்கள் அடிமைகளாக வாங்கப்பட்டனர். 1694 டிசம்பர்லிருந்து 1696 நவம்பர் 30ம் தேதிவரை 3598 தமிழர்கள் அடிமைகளாக வாங்கப்பட்டனர் எனும் தகவல் துயரமானவை. 1618ஆம் ஆண்டு ஆவணப்படி அன்று நிகழ்ந்த பஞ்சம் காரணமாக ஒரு பகோடாவிற்கு 3 அல்லது 4 தமிழ்க் குழந்தைகளை அடிமைகளாக டச்சுக்காரர்கள் விலைக்கு வாங்கமுடிந்திருக்கிறது. இந்த அடிமை வணிகத்தை செஞ்சியை அரசாண்ட கிருட்டிணப்ப நாயக்கர் தடை செய்திருக்கிறார். இதே போல 1682-1689வரை மதுரையை ஆண்ட முத்துவீரப்ப நாயக்கர் தூத்துக்குடியிலிருந்து

நடைபெற்ற அடிமை வணிகத்தைத் தடைசெய்தார். இவரது மரணத்திற்குப் பின் டச்சுக்காரர்கள் இவ்வணிகத்தைத் தொடர்ந்தனர். 1727இல் டேனிஷ் நிறுவனங்கள் தமிழர்களை அடிமையாக ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தனர். போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள், ப்ரஞ்சுக்காரகள், ஆங்கிலேயர்கள், டேனிஷ்காரர்கள் என அனைவரும் அடிமை வணிகத்தில் ஈடுபட்டனர். இந்த வணிகம் தமிழ்ச் சமூகம் சந்தித்த நெருக்கடியை அப்பட்டமாக நமக்கு காட்டுகிறது. நாகப்பட்டினத்தைச் சார்ந்த தாயொருத்தி வறுமைக்காரணமாக தனது 10 வயது மகளை டச்சுக்கம்பெனிக்கு விற்கிறார். சின்னத்தாய் எனும் அச்சிறுமி மூன்று கைகள் மாறி ரோசா எனும் கிருத்துவப் பெயர் மாற்றம்பெற்று 1763இல் தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனுக்கு அனுப்பப்படுகிறாள். பின்னர் அதற்கும் அப்பாலில் இருந்த குரூட் கான்ஸ்டான்சியா எனும் ஒயின் கம்பெனியில் 1763ல் சேர்க்கப்படுகிறார்ள். இக்குழந்தையின் வாழ்க்கை அன்றய ஐரோப்பிய வணிகமயமாக்கலில் சீரழிந்த தமிழ்ச் சமூகத்தை நமக்குக் காட்டுகிறது. வறுமைமட்டுமல்லாமல், பெரும்பாலன சமயத்தில் கடத்தப்பட்டும் தமிழர்கள் அடிமைகளாக விற்கப்பட்டிருந்தனர்.

தமிழ்நாட்டில் பலகாலமாக இந்த அடிமைத் தொழில் முறை இருந்த போதிலும், அடிமைகளாக்கபட்டவர்கள் ஏற்றுமதிப் பண்டமாக மாற்றபட்டது ஐரோப்பியர்களின் வருகைக்கு பின்பே உண்டானது. தமிழ்நாட்டில் இருந்த மன்னர்கள் ஐரோப்பியரின் இந்த அடிமை விற்பனை முறையை எதிர்த்த பொழுதிலும் இக்கடத்தலை முழுமையாக தடுக்க இயலவில்லை. அடிமை வணிகத்தில் ஈடுபட்டதரகர்களை தஞ்சை மன்னர்கள் கடுமையாக தண்டித்ததைப் பற்றிய ஆவணங்கள் காணக்கிடைக்கின்றன.

குறிப்பாக பதினெட்டாம் நூற்றாண்டில் இது போன்ற ஏராளமான ஆவணங்கள் கிடைத்திருக்கின்றன. தரங்கம்பாடியிலிருந்து பயணம் சென்ற ஒரு பரப்புரையாளர் 05-09-1741இல் பதிவு செய்துள்ள ஆவணத்தின்படி, அவர் செல்லும் வழியில் மரத்தில் ஒரு வெட்டப்பட்ட கை தொங்கிக் கொண்டிருந்ததை கண்டிருக்கிறார். அந்த வெட்டுண்ட கை என்பது அடிமை வணிகத் தரகருடையது எனவும், அடிமை வணிகம் தஞ்சை அரசரால் தடை செய்யப்பட்டு இருந்ததையும் மீறி இதை டேனிஷ் வணிகர்கள் செய்து வந்ததை பதிவு செய்திருக்கிறார். தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு சாதிகள் இவ்வாறு அடிமைகளாக ஏற்றுமதி செய்யப்பட்டனர் என்கிற விவரங்களும் ஆவணங்களில் புலப்படுகிறது. இவ்வாறான சீரழிவு நிலையிலேயே ஐரோப்பியர் எதிர்ப்பும், குறிப்பாக வெள்ளையர் எதிர்ப்பும் தமிழகத்தில் முனைப்பு பெருகின்றன.

இவ்வாறான ஐரோப்பியரின் வணிக ஆக்கிரமிப்பினால் சீரழிந்த நிலையிலேயே தமிழ்க்குடியானவர்கள் எழுச்சி கூர்மை பெறுகிறது.

பல ஐரோப்பிய காலனியரின் போட்டியில் வெற்றிபெற்ற ஆங்கில வெள்ளையரின் ஆதிக்கம் என்பது இங்கிலாந்தின் ஆட்சியை தமிழகத்தில் நிறுவுவது அல்ல. மாறாக அது ஒரு (கார்ப்பரேட்)வகைப்பட்ட கம்பெனியின் (கிழக்கிந்திய கம்பெனி)



கான் சாகிபு

சுரண்டலையும், கொள்ளையடிப்பதையுமே முன்னிலைப்படுத்தி இருந்தது. இது குடியான மக்களின் வாழ்வியலை பெரிதும் சிதைத்தது. வட்டார அளவிலான சமூக-நாடுகள் கட்டமைப்பு சிதைந்து ஒற்றைத்தன்மை கொண்ட ஆட்சி அமைப்பினை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி உருவாக்கியது. தமிழ்நாட்டின் அரச-உற்பத்தி கட்டமைப்பை சிதைத்த ஆங்கிலேயரின் செயல்பாடு இருவகைப்பட்டது. ஒன்று கடுமையான வணிக

நோக்குடன் வரி/கடன் வசூல் நடவடிக்கைகள் மற்றது பேரழிவையும், கொள்ளையிடலையும் கொண்டு வந்த படையெடுப்புகள். இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் சொல்லவேண்டுமெனில் வெள்ளையர் தலையீடு என்பது முழுக்கொள்ளையடிப்பு நிகழ்வாகவே 17ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து 18ஆம் நூற்றாண்டில் தீவிரம் பெற்று, 19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

## வெள்ளையரின் படையெடுப்பும், அழிவுகளும்:

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தினால் முதன்முதலில் பெரும் பாதிப்பிற்குள்ளானவர்கள் குறிஞ்சி, முல்லை நில வாழ்க்கையை கொண்டவர்கள். தமது ஆடுமாடுகளை மேய்க்கும் கிராமத்து எல்லைக்குள் இருந்த மேய்ச்சல் நிலங்கள் மீதான உரிமையை இழந்தார்கள். இந்த மேய்ச்சல் நில பாதுகாப்பினை முன்னர் இருந்த 'சமூக-ரீதியான' நாடுகள் உறுதி செய்தன. இது வெள்ளையர் காலத்தில் இந்த மேய்ச்சல் உரிமைப் பறிபோனது. நிலத்தை ஆங்கிலேயர் காலத்தில் தனிஉடமையாக்கி அதன் மீது வரிவிதிப்பினை செய்ய ஆரம்பித்தனர். இதற்கு முன்பிருந்த ஆட்சிமுறையின் தொடர்ச்சியில் கடுமையான வரிவிதிப்புகளை மேற்கொண்டனர்.

இக்காலகட்டத்தில் நடந்த வரிவிதிப்பினைப் பற்றிய ஆவணங்களை கவனித்தால் இக்கொடுமைகள் நமக்கு எளிதில் விளங்கும். கிராமங்கள் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் சென்ற பகுதியில் கடுமையான மேலதிக வரியையும் எதிர்கொண்டார்கள். உதாரணமாக, தோமா மன்றோ எனப்படும் ஆங்கிலேய கலெக்டர் (சென்னையில் இவருக்கு சிலை உண்டு) கடுமையாக வரியை உயர்த்தினார். ஹர்திஸ் எனப்படும் திண்டுக்கல் கலெக்டர் கூடலூரில் 96 சதவீதம் உயர்த்தினார், கம்பத்தில் 11 சதம் உயர்த்தினார் பழனியில் 17.5 சதம் உயர்த்தினார். மைசூர், கன்னடா பகுதிகளில் தாமஸ் மன்றோ நிலவரியை 96 சதம் உயர்த்தினார். சேலம் பகுதியில், நொய்யல் ஆற்றுப்பகுதியில் 93 சதம் உயர்த்தினர். கோவைப்பகுதியில் நிலவரி 118 சதம் உயர்த்தப்பட்டது. திருநெல்வேலிப்பகுதியில் 117 சதம் உயர்த்தப்பட்டது. இவை அனைத்தும் 1790களில் நடந்தது. இதே நிலையே செங்கல்பட்டிலும், ராமநாதபுரத்திலும் நடந்தது. இந்த வரிக்கொள்ளையை புரிந்து கொள்ளவேண்டுமெனில், ஒரு கிராமத்தின் மொத்த வருமானம் 3000 பகோடாக்கள் (அன்றைய பண மதிப்பு) எனில், அக்கிராம மக்கள் வெள்ளையர்களுக்கு 4500 பகோடாக்களை வரியாக கொடுக்க வேண்டி இருந்தது. 1797இல் ராமநாதபுரத்தில் இருந்த 739 கிராமங்களின் மொத்த உற்பத்தியும் 53,500 பகோடாக்களாக இருந்தது. ஆனால் அவர்கள் 71, 629 பகோடாக்கள் என்று மதிப்பிட்டு வரியாக வசூலித்தனர். மொத்த விளைச்சலையுமே வரியாக வெள்ளையருக்கு கொடுக்க வேண்டி இருந்தது. இது அவர்களது ஒரு வருடத்திற்கு தேவையான உணவாக இருந்தது என்பது பெரும் துயரம். இதோடு வெள்ளையர் கொள்ளை நிற்கவில்லை. மக்களிடம் எஞ்சி இருந்த கால்நடைகளையும், பொருட்களையும் வாரிசுருட்டிச் சென்றனர். இதே நிலையைத் தான் தென்னிந்தியா முழுவதும் மக்கள் எதிர்கொண்டார்கள்

இதில் முதன்முதலாக பாதிக்கப்பட்டது தமிழகத்தின் வடக்கு, மேற்கு பகுதி மக்கள். கிழக்கிந்தியக் கம்பெனி இரண்டு வகையில் சுரண்டியது. ஒரு புறத்தில் ஆட்சியாளர்களாக இருந்த அரசர்கள்/நவாபுகள் மற்றும் வட்டாரத் தலைவர்கள் அல்லது பாளைய பொறுப்பாளர்கள் மீது அதிகமான வரிச்சுமை/கடன் சுமையை சுமத்தியது. இதே போன்று குடியானவர்கள்/விவசாயிகளின் மீது கொடுமையான வரியை விதித்தது. வெள்ளையர்கள் நிலவரியை பண்டமாக இல்லாமல், பணமாக வசூலித்ததால், கிராமப்பொருளாதாரம் முடங்கியது. இது கிராமப்புற கட்டமைப்பை சிதைக்கத்



புலித்தேவன்

தொடங்கியது. இப்படியான வரிக்கொடுமையில் நிலைபெற்று இருந்த வட்டார ‘சமூக–ரீதியான நாடுகள்’ அழிந்து போனது.

இப்படியான கடுமையான சுரண்டல் காரணமாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் கடும் பஞ்சம் தலைவிரித்தாடியது. பெருமளவில் மக்கள் பசியால் மாண்டார்கள். கொடிய நோய்கள் அதிகரித்தது (காலனியமும், தொற்று நோய்களும் மே17 இயக்கக் குரல் கட்டுரை மார்ச் 2020) இதுவரை வாழ்ந்து வந்த பாதுகாப்பான வாழ்க்கையை இழந்தனர். பஞ்சமும், தொற்று நோய்கள் இருந்தும் வெள்ளையர்கள் வரிவசூலிப்பில் தீவிரமாக இருந்தார்கள். ரெவென்யூ அதிகாரிகள், காவல் அதிகாரிகளின் அராஜகம் தலைவிரித்தாடியது. வரி வசூல் செய்யும் பொழுது ஏழை எளியவர்களை கடுமையாக சித்திரவதை செய்தார்கள். சாட்டையால அடிப்பது, மாட்டின் வாலில் தலைமுடியை கட்டிவிடுவது, விரல்களை நசுக்குவது என சித்திரவதைகள் தொடர்ந்தன. இது மட்டுமல்லாமல் தமிழகத்தின் நிலங்களை ஆக்கிரமிக்க போர் நடத்தும் பொழுதெல்லாம் வெள்ளையர்கள் கொடூரமான கொள்ளையை நிகழ்த்தினார்கள். மக்கள் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கிராமங்கள் அழிக்கப்பட்டன. பல ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த கொடுமையான வரிவிதிப்பு, சுரண்டல், கொள்ளை, கொலைகளால் சமூகங்கள் சிதைந்தன. பின்னர் 1790இல் ஆரம்பித்த மூன்றாவது மைசூர் போர் முழுமையான விடுதலைப் போராக வெடித்தது.

ஆங்கிலேயர் தென் தமிழகம் நோக்கி படையெடுப்புகளை தொடர்ந்து நடத்தினர். ஆற்காடு நவாபிற்கு துணையாக இப்படையெடுப்புகளை அவர்கள் மேற்கொண்டனர் என்றாலும், தமிழ் குடியானவர்கள் இப்படையெடுப்புகளால் சிதைக்கப்பட்டனர். 1750களில் துவங்கிய இப்படையெடுப்புகள் அடுத்த ஐம்பது ஆண்டுகள் நடந்து வேலூர் கலகத்தில் நிறைவு பெற்று மொத்த தமிழ்நாடும் ஆங்கிலேயர் கைகளுக்கு வந்து சேர்ந்தது.

கிபி 1751 முதல் தொடர்ந்து 1805 வரை போர்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்தன. 1751இல் காப்டன் கோப் தலைமையில் வந்த ராணுவம் வெற்றிகிட்டாமல் திரும்பியது. பின்னர் 1755இல் கர்னல் அலக்சாந்தர் பிகோட் என்பவர் தலைமையில் பெரும்படை தெற்கு நோக்கி சென்றது. இவர் மணப்பாறை பாளையத்தின் மீது கொடுமையான கொலைகளை நடத்தினார். இதன் பின்னர் இருந்த நத்தம் நோக்கி படையெடுத்தவர் அங்கிருந்த கோவில்குடியை தாக்கினார். இப்பகுதியானது, திருச்சி, மதுரை, தஞ்சைக்கு இடைப்பட்ட பகுதி கள்ளர் நாடு எனப்படும் பகுதி. தமிழ்நாட்டில் இவ்வாறு எட்டு நாடுகள் இருந்ததாக ஆங்கிலேயர் கணக்கிட்டனர். மொத்த தமிழ்நாட்டையும் கைகளுக்கு கொண்டு வருவதற்கு தமிழகத்தின் மையத்தில் இருந்த கள்ளர் நாட்டை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டிய நெருக்கடி வெள்ளையருக்கு இருந்தது.

இந்நாட்டு குடிகள் உள்ளூர் பாளையங்கள், அரசர்களுக்கு நெருக்கமாகவும், உதவிகரமாகவும் இருந்து யுத்தம் புரிந்தனர். முதலில் முரண்பட்ட போதிலும் பின்னர் கான்சாகிப் படைகளுக்கு ஆதரவாக நின்றனர், பின்னர் தொடர்ந்து நடந்த வெள்ளையர் படையெடுப்புகளை தடுத்து நிறுத்தவும் செய்தனர். வெள்ளையருக்கு எதிராக கிட்டதட்ட ஐந்து பெரும் யுத்தங்களை செய்திருந்தனர். இவர்களைக் கடந்து செல்வது என்பது கடுமையான போருக்கு பின்னரே சாத்தியமாகவும் அமைந்தது. இப்படி இருந்த நத்தம்



தீரன் சின்னமலை


பகுதிக்குள் வெற்றிகரமாகச் சென்ற கர்னல்.ஹெரான் கள்ளர்களை வீழ்த்தி அவர்களது கோவில் சிலைகளை திருடிச் சென்றார். இப்படையெடுப்பில் வெள்ளையர் படைகள் பெரும் கொலைகளைச் செய்தது. பல்லாயிரக்கணக்கான கள்ளர் மக்களை படுகொலை செய்து அவர்களிடத்தில் அச்சத்தை மூட்ட முனைந்தது. வெள்ளையர் படை பயங்கரவாதத்தை

வழிமுறையாகக் கொண்டு நாட்டுக்கோட்டையில் இதே போன்ற படுகொலைகளை செய்தனர். இவ்வாறான வழிமுறைகளில் பாளையங்களை சரணடைய வைத்தனர். இவர்களை

பாஞ்சலக்குறிச்சியும், நெற்கட்டும் சேவல் பாளையமும் பலவீனமாக்கின, இதிலிருந்து திரும்பும் வழியில் நத்தம் பகுதியில் கள்ளர் நாடு தாக்குதலை தொடுத்து கடுமையான இழப்புகளை ஏற்படுத்தி தமது கடவுள் சிலைகளை மீட்டனர்.

**வெள்ளையர்களின் மூர்க்கமான போரும், அதனுடன் நடந்த கொலை-கொள்ளையும், அதன் பின்னர் நடந்த கொடுமையான வரிவிதிப்புமே தமிழகத்தில் நிகழ்ந்த புரட்சிக்கான காரணம்.**

1761இல் ஜான்காலியாத் தலைமையில் ஒரு படையெடுப்பு நடந்தது. 1763-67இல் மேஜர் ப்ரஸ்டான் படையெடுத்தான். இதே சமயத்தில் காப்டன் ரம்லே மேலூர் பகுதியில் 3000 கள்ளர்களை படுகொலை செய்தான். அவனது இரண்டாவது படையெடுப்பில், அப்பகுதியில் மேலும் 2000 கள்ளர்களைப் படுகொலை செய்தான். தளபதி டொனால்ட் காம்ப்பெலின் படையெடுப்பு அரியலூரில் ஆரம்பித்து சிங்கம்பட்டிப்பாளையம், வாசுதேவநல்லூர் வரை சென்றது. 1783இல் புல்லர்ட்டனின் படையெடுப்பு நடந்தது. இவ்வாறான படையெடுப்புகளினால் 20க்கும் அதிகமான பாளையங்கள் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளாவில் சிதைக்கப்பட்டு ஆங்கிலேயர் வசமாயின.



மருது சகோதரர்கள்

இந்த தொடர் போர்கள் என்பது சாமானிய மக்களின் அரச கட்டமைப்பாக அன்று இருந்த பாளையங்கள் மீது நடந்தன. இந்தப் போரை எதிர்கொள்ள கிராம மக்கள் பாளையக்காரர்களுக்கு உதவும் நிலை உண்டானது. தம் கிராமங்களுக்கு வெள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பிற்காக பாளையத்தினருக்கு நிதி உதவி செய்யும் பொறுப்பும், மறுபுறத்தில் வரிகட்ட வேண்டிய நெருக்கடியும் இம்மக்களுக்கு வந்து சேர்ந்தது. இப்படியான போர்களின் பொழுது கிராமங்களை அழித்தொழிக்கும் வேலையையும், கொள்ளையடித்தலையும் வெள்ளையர்கள் செய்தனர். இதுவே நிலைபெற்ற 'பிராந்திய நாடு' கட்டமைப்பினை முற்றிலும் சிதைத்தது. மறுபுறத்தில் உழவும், உற்பத்தியும் சிதைந்தது.

அரசர்கள் மீது விதிக்கப்பட்ட கடுமையான கடன், வட்டியினால் நவாப்புகள் சிதைந்தனர். கொடுமையான வரிவிதிப்பினால் பாளையங்கள் கடுமையான நிதிச்சுமைக்குள்ளாகின. இந்த இரண்டு சுமைகளுக்காக குடியானவர்கள் கடுமையான சுரண்டலுக்கு உள்ளாகினர். வெள்ளையரின் வரிவிதிப்பை மக்களிடம் அமுல்படுத்தி வசூலிக்காத பாளையங்கள் வெள்ளையரால் வேட்டையாடப்பட்டன. இதுமட்டுமல்லாமல் வெள்ளையர் அதிகாரிகளின் ஊழல்கள், கொடுமையான வரிவிதிப்பும் தாங்க இயலாத நிலைக்கு மக்களைத் தள்ளியதால் கிளர்ச்சிக்கு தயாரானர்கள். இதே போன்றதொரு நெருக்கடிக்குள்ளாகியதால் பாளைய தலைவர்களும் கிளர்ந்தெழுந்தனர். இதுவே பெரும் பாளையக்காரர் புரட்சிக்கு வித்திட்டது. இதைப்பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர்.இராசய்யன், " இவ்வாறு ஆங்கிலேய கம்பெனியார் பாளையங்களை ஒடுக்கியது, பாளையங்களின் ஆட்சியாளரோடு முடிந்துவிட்ட பிரச்சனை அல்ல. கிராமமட்டத்தில் சட்ட ஒழுங்குக்கட்டமைப்பான 'தேசக்காவல்முறையை' பாதித்தது. அதை நம்பிப் பிழைத்தவர்கள் வேலையிழந்தனர். பாளையங்கள் பாழாக்கப்பட்ட போது மேலை நாட்டினர் நமது கிராம சமூதாயத்தினருடன் ஒரு மோதலை ஏற்படுத்தினர். இது ஆங்கிலோ-சாக்சானிய மேலைக்கலாச்சாரம், திராவிடக் கீழைக்கலாச்சாரம் ஆகிய இரு வேறுபட்ட பண்பாட்டு முறைகளின் மோதலில் முடிந்ததுஞ்" என்கிறார்.


அரசர்-பாளையக்காரர்-கிராமம் என இருந்த கட்டமைப்பில் கிராமத்தின் பாதுகாப்பும், உறவும் பாளையக்காரர்களுடன் நெருக்கமாக இருந்தது. அரசுகள் மாறினாலும், இந்த உறவுகள் மாறவில்லை. கிராமங்களுக்கான



ஜம்பு தீபகற்ப பிரகடனம்

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு
இங்கு உற்பத்தியான நெசவுத் தொழில் சிவகங்கைச்
சீமை, சேதுச்சீமை, மதுரை, புதுக்கோட்டை,
தஞ்சை ஆகிய இடங்களில் வளர்ந்த தொழில்.
தூத்துக்குடியில் வேளாண்கருவி உற்பத்தியும்,
உப்புத்தொழிலும், படகு கட்டுதலும் நடந்தது.
தொண்டியிலும் படகுக் கட்டப்பட்டது.இதையெல்லாம்
வெள்ளையர் முடக்கினர். இதனாலேயே
மருதுபாண்டியரின் ஜம்பு தீபகற்ப பிரகடனத்தில்
“இந்நாட்டுக் கிராமங்களின் பொருளாதாரம்
ஆங்கிலேயரின் சுரண்டலால் எவ்வளவு பயங்கரமாக
பாதிக்கப்பட்டுள்ளது’ என்று அறிவுறுத்துகின்றனர்.

பாதுகாப்பை பாளையக்காரர்கள் வழங்கினார்கள். அரசர்களுடைய ஒடுக்குமுறையிலிருந்து கிராமங்களை பாதுகாப்பவர்களாக பாளையங்கள் விளங்கியதாக பேராசிரியர்.ராஜய்யன் குறிப்பிடுவார். கிராமங்களின் 'காவல்/ கண்காணிப்பு' என்பது உள்ளூர் போலீஸ் எனப்படும் வகையிலாக அமைந்திருந்தது. இந்த பிணைப்பு நீண்டகாலமாக வழங்கி வரும் கட்டமைப்பாகும். ஆங்கிலேயரின் வருகையால் இக்கட்டமைப்பு சிதையத் தொடங்கியது. கிராமத்தின் காவல் என்பது சிதைந்ததை அடுத்து, கிராமங்களுக்கு பாளையங்கள் நேரடியாக காவல் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இந்தக் காவல்முறை 'தேசக்காவல்' எனப்பட்டது. இந்த நெருங்கிய பிணைப்பே பாளையக்காரர்களின் எழுச்சியில் மக்களின் பங்களிப்பாக மாறியது.



குயிலி ஆயுத கிடங்கு தகர்ப்பு

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இங்கு உற்பத்தியான நெசவுத் தொழில் சிவகங்கைச் சீமை, சேதுச்சீமை, மதுரை, புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய இடங்களில் வளர்ந்த தொழில். தூத்துக்குடியில் வேளாண்கருவி உற்பத்தியும், உப்புத்தொழிலும் , படகுகட்டுதலும் நடந்தது. தொண்டியிலும் படகுக் கட்டப்பட்டது. இதையெல்லாம் வெள்ளையர் முடக்கினர். இதனாலேயே மருதுபாண்டியரின் ஜம்பு தீபகற்ப பிரகடனத்தில் "இந்நாட்டுக் கிராமங்களின் பொருளாதாரம் ஆங்கிலேயரின் சுரண்டலால் எவ்வளவு பயங்கரமாக பாதிக்கப்பட்டுள்ளது' என்று அறிவுறுத்துகின்றனர்.

சாதிகடந்து மக்கள் கிளர்ச்சி 15ஆம் நூற்றாண்டின் வழியில் பாளையத் தலைவர்கள் பின்னால் அணி திரண்டார்கள். எளிய படையணிகளோடும், குறைந்த நிதி வசதிகளுடன் சாமானியர்களில் இருந்து தலைவர்களாக, தளபதிகளாக உயர்ந்தவர்கள் இப்புரட்சிக்கு தலைமை தாங்கினார்கள் என்பதே தமிழகத்தின் முதல் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்.

## ஆங்கில கம்பெனியாருக்கு எதிரான கலகங்கள்

கொடுமையான ஆங்கில கம்பெனியாருக்கு எதிராக உழவர்கள் போர்க்கொடி உயர்த்தினார்கள். 1796ல் தமிழ்நாட்டில் பச்சைமலை, முனியூர், அஞ்சியூர் ஆகிய இடங்களில் கலகம் வெடித்தது. இவர்கள் மலைவாழ் மக்கள். இவர்கள் மீது விதிக்கப்பட்ட வரியை எதிர்த்து போராடினார்கள். 1800இல் சேலத்தில் கலகம் நடந்தது. 1802இல் தர்மபுரியில் இருக்கும் பாரம்கல், பாலக்கோடு, ஒசூர், தேன்கனிக்கோட்டை பகுதியில் உழவர்கள் எழுச்சி நடந்தது.

சமூகத்தின் அடித்தளத்தில் எழுந்த கலக மனநிலை பாளையக்காரர்களின் எழுச்சிக்கு பக்கபலமாக இருந்தது. வெள்ளையர்களின் மூர்க்கமான போரும், அதனுடன் நடந்த கொலை–கொள்ளையும், அதன் பின்னர் நடந்த கொடுமையான வரிவிதிப்புமே தமிழகத்தில் நிகழ்ந்த புரட்சிக்கான காரணம். இந்தப் பின்னனியிலேயே மருது சகோதரர்கள், கட்டபொம்மன், விருப்பாச்சி கோபால்நாயக்கர், தீரன்.சின்னமலை போன்றோரின் போராட்டத்தையும், பிரமலைக்கள்ளர்கள், வலையர், ஒட்டர்கள், குறவர்கள் உள்ளிட்ட சமூகங்கள் மீது கொடுமையான முறையில் விதிக்கப்பட்ட குற்றப்பரம்பரை ஒடுக்குமுறையையும் புரிந்துகொள்ள முடியும். இந்த எழுச்சியை நிகழ்த்தியதன் பின்னனியில் அனைத்து சாதி–சமூகங்களின் ஒருங்கிணைப்பையும் காணமுடியும். இப்போராட்டத்தின் வழியிலேயே பல சமூகங்களைச் சேர்ந்த பூலித்தேவன், ஒண்டிவீரன், அழகுமுத்துக்கோன் போன்ற முதல்கட்ட வீரர்களும், பின்னர் எழுந்த எழுச்சியில் சுந்தரலிங்கம், வெள்ளையன், கந்தன் பகடை, முத்தன் பகடை , முத்துராமலிங்க சேதுபதி (சேதுசீமை), கருப்பையா சேர்வை(ஓடாநிலை), கட்டன கருப்பணன்(நெல்லை), அப்பாஜிராவ் (சேலம்), கான்–இ–ஜஹான்(கோவை), முத்துக்கருப்பத்தேவர்(ராமநாதபுரம்), ஞானமுத்து (தஞ்சை) முகம்மது ஹசம் (தாராபுரம்), மேலப்பன் (ராமநாதபுரம்), தானாபதி பிள்ளை(பாஞ்சாலங்குறிச்சி) எனப்பலரும் வெள்ளையரின் கொடுமையை எதிர்த்து கலகம் புரிந்தனர்.

இந்த பாளையக்காரர்கள் கிளர்ச்சியில் பலவேறு குடியானவர் சாதிகளும் பங்கெடுத்ததைப் போல பெண்களும் முன்னனியில் செயலாற்றினார்கள். சிவகங்கைச் சீமையின் வேலுநாச்சியாரும், குயிலியும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக நாம் சொல்ல முடியும். இவ்வாறு தமிழகம் ஒற்றுமையுடன் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராக திரண்டெழுந்தது.

இந்த குடியானவர்களின் ஒன்றிணைவு என்பது கிட்டதட்ட ஆயிரம் வருட வரலாறை சுமந்து வருகிறது. பல்லவர் காலத்தில் ஆரிய வேத பார்ப்பனிய முறையில் சுரண்டல் ஆரம்பித்து சோழர் காலத்தில் அது விரிவடைந்து, விசயநகர ஆட்சியில்

கூர்மையானது. இந்த தொடர் சுரண்டல் முறைக்கு எதிராக திரண்டெழுந்த குடியானவர் ஒன்றிணைவு ஆங்கிலேய கம்பெனியாரின் கொடுமையான சுரண்டல் காலத்தில் வெடித்துக்கிளம்பியது. அரசருக்கும் குடியானவர்களுக்கும் இடையில் இருந்த நில உடமையாளர்களான பார்ப்பன–வெள்ளாளர்கள்–படையாட்கள் இந்த கலகத்தை முதலில் எதிர்கொண்டார்கள். 15ஆம் நூற்றாண்டில் இக்கிளர்ச்சி கூர்மையடைந்து பல பகுதிகளுக்கு விரிவடைந்ததும், இந்த நில உடமையாளர்கள் குடியானவர்களுடன் சமரசம் செய்தார்கள். வாய்ப்புள்ள இடங்களில் குடியானவர்களுடன் இணைந்தார்கள். இதே போன்றதொரு ஒருங்கிணைவில் குடியானவர்களுடன் பாளையத் தலைவர்கள் இணைந்தனர். கடந்த காலத்தில் கொடுமையான வரிவிதிப்பிற்கு எதிராக அரசர்களுக்கு எதிரான இக்கலக மனநிலை ஆங்கிலேய கம்பெனியார்களின் காலத்தில் மேலும் கூர்மையடைந்தது. ஆங்கிலக் கம்பெனியின் சுரண்டலுக்கு இடங்கொடுக்க இயலாத படையாட்களாக இருந்த பாளையக்காரர்களும், வரிக்கொடுமை தாங்க இயலாத குடியானவர்களும் சாதி, மத நம்பிக்கைகளைக் கடந்து ஒன்றிணைந்தனர். பாளையக்காரர்களின் வெள்ளையருக்கு எதிரானப் போருக்கு குடியானவர்கள் ஒத்துழைத்தனர். நிதி பங்களிப்பு மற்றும் படையணிகளாக மாறி உதவினர். பாளையக்காரர்களாக எழுந்த போராளிகளில் கிட்டதட்ட பெரும்பாலோனோர் எளிய குடியானவர்களாக இருந்தவர்கள். மருது சகோதரர்களோ, தீரன் சின்னமலையோ, ஹைதர்அலியோ கூட பரம்பரை ஆளும் வர்க்க குடும்பத்தில் தோன்றியவர்கள் அல்ல.

## பாளையக்காரர் எழுச்சி– பாளையங்கள் வழியாக தமிழ்க்குடியானவர்களின் போர்

இப்படியான தொடர் போர்களினால் தமிழர்களின் பல பகுதி மக்கள் எண்ணற்ற /சொல்லிலடங்கா கொடுமைகளுக்கு ஆளாயினர். வெள்ளையர்களின் கொடுமையான வரிவிதிப்பும், வாழ்வியலை சிதைத்த யுத்தங்களும் குடியானவர்கள் ஒன்றுதிரளும் சூழலை உருவாக்கியது. வெள்ளையர்களின் ஆதிக்கத்தை தென் தமிழகம் நோக்கியும், மேற்கு தமிழகம் நோக்கியும் நகர்த்த விரும்பியதை எதிர்த்து நின்றனர். திருச்சிக்கு தெற்கே மதுரை ராமநாதபுரம், திருநெல்வேலி வரையிலும், மேற்கே சேலம், கோவை, கேரளா வரையிலும் இந்த அணிசேர்க்கை விரிவடைந்தது. இப்பகுதி குடியானவர்கள் இப்புரட்சிக்கான அடித்தளத்தை அமைத்து புரட்சியாளர்களை பாதுகாத்தனர். இக்குடியானவர்களே பாளையங்களின் பெரும்படையாக மாறினர்.

அரசர்களிடத்திலேயே பெரிய போர்ப் படையிருந்து வந்த நிலையில் அரசர்களும், நிஜாம்களும், நவாப்புகளும் வெள்ளையரோடு சமரசம் செய்து கொண்ட நிலையில் திப்பு, மருது, கட்டபொம்மன், தீரன் சின்னமலை போன்ற போராளிகளோடு அணி சேர்ந்தவர்கள் ஏழை எளிய குடியானவர்களே. வெள்ளையரின் தேர்ந்த பயிற்சியளிக்கப்பட்ட படையின் முன்னர் இப்படைகள் தோல்வியைத் தழுவிய போதிலும் எந்த யுத்தத்திலும் சமரசம் செய்யாமல் வீரமரணத்தை தழுவினார்கள். இந்த தென் தமிழக ஒருங்கிணைப்பிற்கு தெற்கு–மேற்கு–கிழக்குப் பகுதி மக்கள் பெரும் பக்கபலமாக நின்றனர் என்பதை வரலாற்று சம்பவங்கள் நமக்கு சொல்லுகின்றன. கொங்குமண்டலமும், கள்ளர் நாடும் தெற்கத்திய சீமைகளும், நவாபின் படைகளிலிருந்து வெளியேறிய இசுலாமியர்களும் சாதி–மதம் கடந்து ஒன்றாக எழுந்தன எனும் பெரும் வரலாற்றுக் சொந்தமாக பதினெட்டாம் நூற்றாண்டு விளங்குகிறது.



ஊமைத்துரை

தமிழகத்தின் மத்தியப் பகுதியில் இருந்த திண்டுக்கல்–திருச்சி–மதுரை–தஞ்சைப் பகுதியில் இருந்த நத்தம் காட்டுப்பகுதி கள்ளர் நாடு வெள்ளையருக்கு எதிரான யுத்தம் புரியும் பாளையங்களுக்கு துணையாக நின்றது. கான் சாகிப்பிற்கும்,ஹைதர் அலிக்கும், பின்னர் மருது சகோதரர்களுக்கும், விருப்பாச்சி கோபால் நாயக்கருக்கும் பின்னனி படையணியாக நின்றனர். இவர்களது பகுதியில் கிடைத்த பாதுகாப்பில் மருது சகோதரர்களும், விருப்பாச்சி

கோபால் நாயக்கரும் தென்னிந்திய புரட்சி கூட்டமைப்பை உருவாக்கினர். இந்த பகுதியே தீரன் சின்னமலைக்கும், திப்புவின் படையினருக்குமான பாதுகாப்பு பகுதியாக மாறிப்போனது. மருது சகோதரர்களின் வெள்ளையருக்கு எதிரான கொரில்லா யுத்தத்திற்கு இப்பகுதியே களமாகிப் போனது. இது போன்றே தமிழ்நாடு முழுவதும் உள்ள குடியான மக்கள் வெள்ளையருக்கு எதிரான புரட்சியை செய்த போராட்டக்காரர்களுக்கு துணையாக நின்றனர். மேற்கு மண்டலத்தில் வெள்ளையர்கள் கடுமையான கண்காணிப்பை செய்துக்கொண்டிருந்தனர். ஏனெனில் வடக்குப் பகுதியில் இருந்த மைசூரின் திப்புவிற்கும், தெற்கில் போராடிக்கொண்டிருந்த பாளையங்களுக்கும் இடையேயான பகுதியாக தமிழகத்தின் கொங்குப்பகுதி இருந்தது. மதுரைக்கு தெற்கே, கிழக்கே இருந்த திருநெல்வேலிப்பகுதி பாளையங்களும், ராமநாதபுர பகுதி பாளையங்களும் மதுரை–திண்டுக்கல் பகுதி வழியாக திரண்டு, கொங்குப்பகுதியின் வழியாக வடக்குப்பகுதியில் போராடியவர்களுடன் உறவுகளை மேற்கொள்ள இப்பகுதி குடியான தமிழ் மக்கள் பெரும் துணை செய்தனர்.

**18-ஆம் நூற்றாண்டில் திரண்டெழுந்த தமிழர்களின் எழுச்சி என்பது சாதி கடந்த எளியகுடியானவர்கள் எழுச்சி. 15-ஆம் நூற்றாண்டில் நடந்த உழவர் கிளர்ச்சிக்குப் பின்னர் அனைத்து தரப்பினரும் சாதிகடந்து எழுந்த எழுச்சியே பாளையக்காரர் எழுச்சி.**

கட்டபொம்மன், சேது சீமை போராளிகள், தஞ்சைப் பகுதி போராளிகள் எனப் பலரை ஒருங்கிணைத்து மருது சகோதரர்கள் வலிவான புரட்சிக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். இப்புரட்சியாளர்களுக்கான சந்திக்கும் தளத்தையும், பயிற்சி தளத்தையும் விருப்பாச்சி கோபால் நாயக்கர் செய்தார். இந்தக் கூட்டமைப்புடன் மேற்கு மண்டலத்தில் வெள்ளையரை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த தீரன்.சின்னமலை, அப்பாஜிராவ், கான் இ–ஜகான் ஆகியோர் இணைந்தனர். இப்படியான கூட்டமைப்பில் கேரளப்பகுதியில் வெள்ளையரை எதிர்த்து போராடிய பழசி நாட்டின் கேரளவர்மனும் இணைப்பினை ஏற்படுத்தினார். இந்தக் கூட்டமைப்பினை மருது சகோதரர்கள் வடக்குப் பகுதியில் போராடிக்கொண்டிருந்த போராளிகளுடன் இணைக்க விரும்பினார். வட கர்நாடகத்தில் தூந்தாஜிவாக் பெரும் படையுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தார். திப்புவின் வீழ்ச்சிக்குப் பின்னர் இந்தப் படை ஆங்கிலேயரை திணரடித்துக் கொண்டிருந்தது. இச்சமயத்தில் வெள்ளையரின் கடுமையான வரி விதிப்பிற்கு எதிராக கொங்கன், மலபார் பகுதியில் போராடிய போராளிகள் இவர்களோடு ஒன்றிணைந்தனர். முதலில் ஹைதர் அலியையோ, திப்புவையோ எதிர்த்துக் கொண்டிருந்த பாளையக்காரர்கள், சிற்றரசர்களான இவர்கள், வெள்ளையரின் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்து, திப்புவின் படைகளுடன் ஒன்றாக திரண்டனர். இவ்வாறே தீரன்.சின்னமலையும், கேரளவர்மனும் வெள்ளையருக்கு எதிரான அணி சேர்க்கையில் ஈடுபட்டனர். இவர்கள் இருவருமே அரசர் பரம்பரையில் வந்தவர்கள் அல்ல.

**பெருங்காமநல்லூர் களம் நூற்றாண்டு இடைவெளியில் ஸ்டெர்லைட் களமாக உயிர்த்தெழுந்தது. மருதுவின் வெள்ளையருக்கு எதிரான கொரில்லாப் போராட்டத்தில் கள்ளர் நாட்டின் பங்களிப்பு என்பது 300 ஆண்டுகளுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளின் கொரில்லா யுத்தத்திற்காக தமிழகத்தை பயிற்சிக்களமாக மாற்றிய திராவிட இயக்கத்தின் ஈகமாக மீண்டெழுந்தது. 15-ஆம் நூற்றாண்டின் வலங்கை-இடங்கை சாதிகளின் ஒன்றிணைந்த எழுச்சியைப் போல சாதிகடந்து காவிரிச் சமவெளி ஒன்றிணைந்து எழும் பொழுது ஹைட்ரோகார்பன் விரட்டியடிக்கப்பட்டிருக்கும்.**

சிவகங்கை–விருப்பாச்சி–திண்டுக்கல் பகுதியில் ஏற்பட்ட கூட்டமைப்பை வடபகுதி தூந்தாஜிவாக்குடன் தொடர்பு ஏற்படுத்தி கூட்டமைப்பை விரிவு செய்யும் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கொங்குப்பகுதியில் வலுவாக இருந்த வெள்ளையர் கண்காணிப்பை மீறி தூந்தாஜியிடன் தொடர்பேற்படுத்தும் பெரும் முயற்சியை மருது சகோதரர்கள் மேற்கொண்டார்கள். இப்பெரும் பொறுப்பினை மேற்கொண்டு தூந்தாஜியை சென்று சந்தித்து ஆதரவைப் பெரும் முயற்சியின் முதல் பயணத்தை தீரன்.சின்னமலை மேற்கொண்டார். இந்தப் பயணத்தை பாதுகாப்பாகவும், வெள்ளையரின் கண்காணிப்பில் இருந்து பாதுகாப்பாகவும் மேற்கொள்ள கொங்குப்பகுதி உழவர்கள் உதவி செய்தனர். இப்பகுதி மக்களின் துணை இல்லாமல் இந்தப் பயணங்கள் சாத்தியமாகி இருக்காது. இவர்களே ரகசிய தூதர்களை பாதுகாத்தனர், இடம் அளித்தனர். தூந்தாஜியின் தூதர்கள் இக்கூட்டமைப்புடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி ரகசிய பரிவர்த்தனைகளைச் செய்ய விருப்பாச்சி தொடர்பிற்கான இடமாக மாறியது. இவர்களுக்கான பாதுகாப்பினை இப்பகுதியே வழங்கியது. மதுரைக்கு தெற்கே இருந்த பாளையங்களுக்கு அனைத்து சமூக மக்களின் ஒத்துழைப்பும், திரட்சியும் பெரும் வலிமையைக் கொடுத்தது. சிவகிரி பாளையம், பாஞ்சாலங்குறிச்சி பாளையம், நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை பாளையங்கள் என பல பாளையங்கள் வெள்ளையருக்கு எதிராக ஒன்று திரளக்காரணம் அடித்தட்டு மக்கள் சாதிகடந்து வெள்ளையருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியதே. சாதிகடந்து ஒன்றிணைந்த வரலாற்றிற்கு எடுத்துக்காட்டாய் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் படையணியிலிருந்த கட்டபொம்மனும், வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும், தானாபதி பிள்ளையும், சௌந்தர பாண்டியனும், ஊமைத்துரையும், சிவத்தையாவும் நமக்கு சொல்லிச் செல்கிறார்கள். ஆக வெள்ளையருக்கு எதிராக 18ஆம் நூற்றாண்டில் திரண்டெழுந்த தமிழர்களின் எழுச்சி என்பது சாதி கடந்த எளியகுடியானவர்கள் எழுச்சி. 15 ஆம் நூற்றாண்டில் நடந்த உழவர் கிளர்ச்சிக்குப் பின்னர் அனைத்து தரப்பினரும் சாதிகடந்து எழுந்த எழுச்சியே பாளையக்காரர் எழுச்சி.

## குற்றப்பரம்பரைச் சட்ட ஒடுக்குமுறையும், பெருங்காமநல்லூர் படுகொலையும்

இந்த எழுச்சிகளின் பின்புலமாக இயங்கிய சமூகங்கள் குறிவைத்து சிதைக்கப்பட்ட வரலாறே 19ஆம் நூற்றாண்டின் நெடுக நாம் பார்க்க இயலும். இந்த ஒடுக்குமுறை 20ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. வெள்ளையர் இம்மக்களை தமது கொடுமையான சட்டங்களின் வழியாக குற்றப்பரம்பரையாக மாற்றினர். வெள்ளையரின் ஆட்சி, போர் ஆகியவற்றினால் சிதைந்த தமது வாழ்வியலை பாதுகாக்க போர்க்குணத்துடன் போராடியச் சமூகங்களின் வாழ்வியல் ஒரு புறம் சிதைக்கப்பட்டது, நிலைத்த வாழ்க்கை கொண்டிராமல் சமூகங்களுடன் இயங்கிக் கொண்டிருந்த மக்கள் சட்டங்கள் ஊடாக கடுமையான ஒடுக்குமுறை செய்தனர். உழவர் சமூகங்களும், கைவினைஞர் சமூகங்களும் வெள்ளையர்களின் வரிவிதிப்பினால் சிதைந்து போயினர். இதைத் தவிர வணிகங்கள், மேய்ச்சல், வேட்டையாடுதல், காவல்காத்தல் என பணிகளைச் செய்த சமூகங்கள் கொடூரமாக ஒடுக்கப்பட்டன. குறிப்பாக பழங்குடிகளாக இருந்தவர்கள், போர்க்குணத்துடன் எதிர்த்தவர்கள், வெள்ளையர் வணிகத்திற்கு தடையாக இருந்தவர் என பலதரப்பாக அடையாளம் காணப்பட்டு சிதைக்கப்பட்டனர். இவ்வாறான கடுமையான ஒடுக்குமுறைக்காக 1781ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டதே குற்றப்பரம்பரைச் சட்டம் போன்ற கொடுமையான சட்டங்கள். இச்சட்டங்கள் ஆங்கில ஆட்சியின் இறுதி வரை தொடர்ந்தது.



கட்டபொம்மன்

கிட்டதட்ட 18ஆம் நூற்றாண்டிலிருந்தே குடியானவர்கள், பழங்குடி மக்களை ஒடுக்கமுனைந்தது வெள்ளையர் அரசு. மருது சகோதரர்களின் வீழ்ச்சிக்கு பின்னர், பாளையங்கள் ஒடுக்கப்பட்ட பின்னர், இம்மக்களை ஒருங்கிணைக்கும் பெரும் போராட்ட ஆற்றல் தமிழகத்தில் இல்லாது போயிற்று. இந்நிலையில் பாளைய புரட்சியாளர்களுக்கு பின்புலமாக விளங்கிய மக்களைப் பிரித்து சிதைக்கும் சூழ்ச்சியை ஆங்கில அரசு 1805க்குப் பின் தமிழகம் அவர்களது கைகளுக்கு வந்த 19ஆம் நூற்றாண்டு முழுவதும் செய்தது. இதில் கள்ளர்நாட்டு மக்கள் புரட்சிக்குழுக்களுடன் தொடர்ந்து இயங்கியவர்களாக இருந்தது மட்டுமல்லாமல், பாளையங்களின் வீழ்ச்சிக்குப் பின்னரும் ஆங்கில அரச கட்டமைப்பு கிராமங்களுக்குள் ஊடுறுவுவதில் பெரும் தடையாக இருந்தனர். இவர்களது உள்ளூர் காவல் கண்காணிப்பு என்பது வெள்ளையர் அதிகாரத்தின் விரிவாக்கலுக்கு அச்சுறுத்தலாக 19ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. இவ்வாறு எதிர்வினை செய்து கொண்டிருந்த இம்மக்களை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சக சமூகமக்களுடன் இருந்த உறவினை துண்டித்து தனிமைப்படுத்தினர். ஒன்றாகப் போராடிய மக்களை பிரித்து சச்சரவுகள் வளர்க்கப்பட்டு, இவர்கள் பிரிக்கப்பட்டனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களை, வெள்ளையரின் விரிவாதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தவர்களை குற்றப்பரம்பரையினராக மாற்றும் சட்டத்தினை 1781ஆம் ஆண்டே முன்மொழிந்தது கிழக்கிந்தியக் கம்பெனி. இந்தக் குற்றப்பரம்பரைச் சட்டம் வளர்த்தெடுக்கப்பட்டு 20 ஆம் நூற்றாண்டில் அமுல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் பல சமூக மக்களை இப்பட்டியலில் திணித்தது. இதில் பிறமலைக் கள்ளர்கள், வலையர், ஒட்டர், குறவர், உப்புக்குறவர் உள்ளிட்ட பழங்குடிகளை குற்றப்பரம்பரையினராக சித்தரித்து கொடுமை செய்தது. இந்த தொடர் ஒடுக்குமுறையின் வெளிப்பாடே 1920இல் நடந்த பெருங்காமநல்லூர் படுகொலை. வெள்ளையர் அரசின் கொடுமையான குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கீழ் மதுரை-உசிலம்பட்டி-திருமங்கலம்-தேனிக்கு இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த பிறமலைக்கள்ளர் மீதான இந்த இழிவுசெய்யும் ஒடுக்குமுறைக்கு எதிராக பெருங்காமநல்லூர் பகுதியில் மக்கள் திரண்டார்கள். இச்சமூகத்தின் ஆண்கள் வயது வித்தியாசமின்றி அனைவரும் வெள்ளையர் காவல் அதிகாரிகள் முன்பு தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்றது இந்த சட்டம்.

இரவு முழுவதும் காவல்துறை அலுவலகத்தின் முன்பு திறந்தவெளியில் படுத்திருக்கவேண்டுமென்றும், வெளியூர் செல்வதெனில் காவலதிகாரிகளிடம் ஒப்புதல் ரசீது பெற்றுச் செல்லவேண்டுமென்றும் சட்டம் கொடுமையான விதிகளை விதித்தது. மிகச்சிறிய குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஆடுகள் இரண்டு திருடு போன குற்றத்திற்காக 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது போதாதென்று நாடுகடத்தல் உத்தரவைப் பெற ஆங்கில அரசு முனைந்தது. இவ்வாறான கடும் ஒடுக்குமுறையை இம்மக்கள் மீது ஏவுவதற்கு காலனியாதிக்கப் போர்களின் பொழுதில் இம்மக்கள் காட்டிய எதிர்ப்பும் மிக முக்கிய காரணம். இவ்வாறான கடும் அடக்குமுறை குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அனைத்து மக்களின் மீதும் திணிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் அடித்தளம் என்பதே அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக குரல் எழுப்புபவர்களை ஒடுக்கும் நோக்கமாகும். இச்சட்டம் என்பது தேசத்துரோகமாக விரிவடைந்து வெள்ளையரை எதிர்த்து நின்று போராடிய போராளிகளை தேசத்துரோகிகளாக சித்தரித்து ஒடுக்கியது.

இந்த அடக்குமுறைச் சட்டங்களின் வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே இன்றளவும் தேசத்துரோகச் சட்டம் ஏவப்படுகிறது. பல்வேறுச் சமூக பின்னனியில், சமூக-அரசியல் காரணத்திற்காக கிளர்ந்தெழும் மக்களை இச்சட்டங்களைக் கொண்டு இன்றளவும் அரசு ஒடுக்கி வருகிறது. கடந்த நூற்றாண்டுகளில் சாதி கடந்து ஒன்றுபட்டு போராடிய தமிழ் இனத்தை சாதியாக பிரித்து நிறுத்துவதன் மூலம் ஒடுக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியில் பெருந்திரளான மக்கள் பங்கு பெருவதென்பது தடுத்து நிறுத்தும் முயற்சிகளை அரசு செய்து வருவதை பார்க்க முடியும். தமிழக மக்கள் தன்னெழுச்சியாக திரண்டு போராடிய சமயங்களில் சாதிகடந்து ஒன்றாகி இருக்கின்றனர். இச்சமயங்களில் எல்லாம் போராடும் மக்களை சாதியாக பிரித்து, போராட்டத்தை உடைக்கும் யுக்தியை கடந்த காலத்தின் அனுபவத்திலிருந்து அரசு பெற்றுக்கொள்கிறது. சமீபத்தில் நடந்த போராட்டங்களான முல்லைப்பெரியார் போராட்டம், ஈழ விடுதலை ஆதரவுப் போராட்டம், கூடன்குளம் எதிர்ப்புப் போராட்டம், சல்லிக்கட்டுப் போராட்டம், மீத்தேன் எதிர்ப்புப் போராட்டம், ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டம், கெயில் குழாய் எதிர்ப்புப் போராட்டம் என விரியும் போராட்ட களங்கள் சாதிகடந்து மக்கள் ஒன்றாய் திரளும் கடந்த கால அனுபவத்தில் தமிழர்கள் வலுவான போராடும் படையாக எழுந்தார்கள். இந்தப் போராட்டங்கள் அனைத்தும் 15, 18 ஆம் நூற்றாண்டு எழுச்சியைப் போல சாமானிய குடியானவர்கள் அரசு ஒடுக்குமுறைக்கு எதிராக நடத்திய எழுச்சிப் போராட்டங்களாகும்.

இந்தப் போராட்டங்களில் மருது சகோதரர்களும், தீரன்.சின்னமலையும், அப்பாஜிராவும், பொட்டிவீரன் பகடையும், சுந்தரலிங்கமும், ஒண்டிவீரனும், பூலித்தேவனும், கட்டபொம்மனும், சௌந்திரபாண்டியனும், கான் -இ ஜஹானும், கோபால் நாயக்கரும் தானபதி பிள்ளையும் உயிர்த்தெழுந்தார்கள் எனலாம். பெருங்காமநல்லூர் களம் நூற்றாண்டு இடைவெளியில் ஸ்டெர்லைட் களமாக உயிர்த்தெழுந்தது. மருதுவின் வெள்ளையருக்கு எதிரான கொரில்லாப் போராட்டத்தில் கள்ளர் நாட்டின் பங்களிப்பு என்பது 300 ஆண்டுகளுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளின் கொரில்லா யுத்தத்திற்காக தமிழகத்தை பயிற்சிக்களமாக மாற்றிய திராவிட இயக்கத்தின் ஈகமாக மீண்டெழுந்தது. 15 ஆம் நூற்றாண்டின் வலங்கை-இடங்கை சாதிகளின் ஒன்றிணைந்த எழுச்சியைப் போல சாதிகடந்து காவிரிச் சமவெளி ஒன்றிணைந்து எழும் பொழுது ஹைட்ரோகார்பன் விரட்டியடிக்கப்பட்டிருக்கும்.

வரி கொடாமல் தூக்கிலேறிய கட்டபொம்மனும், அடிபணியாமல் ஜம்பு தீபகற்ப பிரகடனத்தைச் செய்த மருது சகோதரர்களும், புரட்சியாளர்கள் ஒன்றிணையவும் பயிற்சியும் பெறவும் தம் குடும்பத்தோடு பலியாகிய கிழச்சிங்கம் கோபால்நாயக்கரும், சமரசமில்லாமல் உழைக்கும் மக்களுக்காய் அடங்கா நெருப்பாய் போராடி காட்டிக்கொடுக்கப்பட்ட தீரன் சின்னமலையும், வெள்ளையனின் கேந்திர முக்கியத்துவமான கோவை கோட்டையை மீட்டெடுக்கும் போரில் கொல்லப்பட்ட அப்பாஜிராவும், கோவை முற்றுகை போராட்டத்தை வழிநடத்தி, வெள்ளையரிடத்தில் சிறைப்பட்ட பொழுது தீரன் சின்னமலை உள்ளிட்டவர்களை காட்டிக்கொடுக்காமல் தன் கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்த முகம்மது ஹாசும், வெள்ளையர் ஆயுதக்கிடங்கை தற்கொலைப்படையாக அழித்த குயிலியும், வெள்ளையர் படைக்கு அடிபணியாமல் தலைநிமிர்த்தி தூக்கிலேறிய சுந்தரலிங்கமும்-தானபதிபிள்ளையும் என சாதிகடந்து ஈகம் செய்தது இம்மண்ணை அந்நியரின் ஆக்கிரமிப்பில் இருந்து காக்கவே என்பதை நினைவில் கொள்வோம். பெருங்காமநல்லூர் படுகொலை நடந்து நூறு ஆண்டுகள் நிறைவு பெரும் இந்த வருடத்தில் இந்த ஈகங்களையும், வரலாற்றினையும் நினைவிலேந்தி தமிழர்களின் உரிமை மீட்க உறுதி பூணுவோம். ●

*ஓவியங்கள்:*

**நன்றி டிராட்ஸ்கி மருது**


*நூல்பட்டியல்:*

***தமிழகத்தில் சாதி உருவாக்கமும், சமூகமாற்றமும்***
நொபுரு கராசிமா, சுப்பராயலு

***South Indian Rebellion***
*Dr.K.Rajayyan*

***காலனியத் தொடக்கக் காலம்***
*ஜெயசீல ஸ்டீபன்*

***மருதுபாண்டியர்கள்***
*மீ.மனோகரன்*

***கூலித்தமிழ் காட்டும் சமுதாயம்***
ஆ.சிவசுப்பிரமணியன்

***குற்றப்பரம்பரை அரசியல்***
தொகுப்பாசிரியர் - முகில்நிலவன்

***தமிழகத்தின் பொருளாதார வரலாறு***
தேவ.பேரின்பன்

***BBC.com***

## பெருங்காமநல்லூரில் வெள்ளையனின் கைரேகைச் சட்டத்திற்கு எதிராக போராடி உயிர்நீத்த ஈகியர்களுக்கு

## 100-ஆம் ஆண்டு

# வீரவணக்க நாள்

வரலாறு நெடுகிலும் நீதிக்கான நெடும் போராட்டங்கள் நடந்து வந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக தமிழர்கள் நடந்திய போராட்டங்கள் சொல்லி மாளாது. அப்படிப்பட்ட போராட்டங்களில் ஒன்று தான் பெருங்காமநல்லூர் போராட்டம். 1870களில் இந்தியாவில் குற்றச்செயல்களை குறைக்க எண்ணிய ஆங்கிலேய அரசு 'குற்றப்பரம்பரையினர் சட்டம் 1871' என்ற சட்டத்தை கொண்டு வந்தது. இந்த சட்டம் தான் பின்னாளில் ஆங்கிலயே அரசுக்கு எதிராக யாரெல்லாம் காங்கிரசோடு சேர்ந்து போராடுவார்கள் என்று ஆங்கில அரசு நினைத்ததோ அவர்களை எல்லாம் 'பிறவிக்குற்றவாளியாக்கும்' படி இந்த சட்டத்தை ஏவியது.

இந்தசட்டம் பலதடவை மிகமோசமாக திருத்தப்பட்டு 1911இல் சென்னை இராஜதானி தவிர்த்து அனைத்து இடங்களிலும் அமுல்படுத்தப்பட்டது. இறுதியாக 1913 இல் சென்னை இராஜதானியிலும் அமுல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் நாடெங்கிலும் 213சாதிகளை குற்றப்பரம்பரையினர் என்று ஆங்கிலேயே அரசு அறிவித்தது. தமிழ்நாட்டில் 89சாதிகள் இப்பட்டியலில் இடம்பெற்றது.

இந்த சட்டத்தின் படி இந்தபட்டியலிலுள்ள சாதியில் பிறந்தவர்கள் அனைவரும் பிறவிக்குற்றவாளிகள். மேலும் அந்தசாதியிலுள்ள 18வயதுக்கு மேலுள்ள அனைவரும் தங்களது பெயர் முகவரி கைரேகை உள்ளிட்ட அனைத்தையும் காவல்நிலையத்தில் பதிவு செய்யவேண்டும். இரவில் ஆண்கள் யாரும் வீட்டில் தூங்கக்கூடாது காவலர்கள் கண்காணிப்பில் தான் தூங்கவேண்டும். இதை மீறுபவர்கள் அல்லது சந்தேகத்துக்குரியவர்கள் என்று அதிகாரிகள் நினைத்தால் அவர்களுக்கு கேள்விகேட்பாரின்றி 6 மாதத்திலிருந்து 3ஆண்டு வரை சிறைதண்டனை உள்ளிட்ட மிகக்கொடுமையாக இந்தசட்டம் இருந்தது.

இதனை மதுரையை சுற்றியுள்ள பிரமளைகள்ளர்கள் மிகக்கடுமையாக எதிர்த்தனர். குற்றவாளிகளை தண்டிப்பதைவிட்டுவிட்டு இந்தசமூகத்தில் பிறந்தவர்கள் அனைவரையும் குற்றவாளிகள் என்பது சுயமரியாதை உள்ள யாரும் ஏற்கமாட்டோமென்று அரசிற்கு பலமுறை கடிதம் வாயிலாகவும், பிரதிநிதிகள் வாயிலாகவும் சொல்லிப்பார்த்தனர். ஆனால் அரசு விடாபிடியாக கைரேகைச்சட்டத்தை அமல்படுத்தியே தீருவதென்று இருந்தது, இதனால் வேறுவழியின்றி பெருங்காமநல்லூர் மற்றும் அதனை சுற்றியுள்ள மக்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் உகந்த சட்டங்களுக்கு நாங்கள் கட்டுப்படுவோம் சமூக நீதிக்கு எதிரான சட்டத்திற்கு ஒருநாளும் கட்டுப்படமாட்டோமென்று அறிவித்தனர்.

இந்நிலையில் 3 ஏப்ரல் 1920 அன்று இச்சட்டத்தின் படி பெருங்காமநல்லூர் பிறமளைகள்ளர்கள் தங்களது கைரேகையை பதிவு செய்யவேண்டுமென்று ஆங்கிலயே அரசு அறிவித்து பெரும்படையுடன் பெருங்காமநல்லூரில் முகாமிட்டது. பெருங்காமநல்லூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டனர், இதனால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயே அரசு மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் சம்பவ இடத்திலேயே மாயாக்காள் என்ற ஒரு பெண் உட்பட 16பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் மிகப்பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. கள்ளர் சமுதாயத்திற்கென்று தனித்துறையை உருவாக்கி அவர்களுக்கு வேண்டிய நலத்திட்டங்களை செய்யச்சொல்லி இங்கிலாந்து பாராளுமன்றம் உத்தரவிட்டது. இதனை அந்த மக்கள் ஏற்க மறுத்துவிட்டனர். உரிமைக்காகவே போராடி உயிரை விட்டிருக்கிறோம். ஆகவே அந்தசட்டத்தை நீக்குங்கள் என்று கேட்டனர்.

ஆனாலும் ஆங்கிலேயே அரசு விடாபடியாக இந்த சட்டத்தை அமுல்படுத்துவதிலேயே குறியாக இருந்தது. ஆயினும் மக்களின் கோபத்தை குறைக்க மாறுதல் செய்திருக்கின்றோமென்று சொல்லி மேலும் கொடுமையானதாக இந்த சட்டத்தை மாற்றி குற்றப்பரம்பரை (சென்னை திருத்தச் சட்டம்) 1924இல் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

இந்த சட்டத்தின் கொடுமையை 1926ஆம் ஆண்டு வந்த தீர்ப்பு நமக்கு உணர்த்தும். அதாவது 03-09-1926ஆம் ஆண்டு மாயாண்டித்தேவன் என்பவர் இரவில் ஒரு வீட்டின் கதவை உடைத்து ஒரு ஆட்டினை திருடியதான ஒரு குற்றச்சாட்டிற்காக அவருக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்ற தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இத்தண்டனை மிகக்குறைவானது எனவும், இவர் மூன்று முறை குற்றங்களைச் செய்திருக்கிறதை கணக்கில் எடுத்து நாடுகடத்தும் ஆயுள் தண்டனை கொடுக்கவேண்டுமெனவும் கூறி அரசு மேல்முறையீடு செய்தது.

1911ஆம் ஆண்டுவாக்கில் உசிலம்பட்டிப் பகுதியில் வசித்த இம்மக்களின் பலநூறு குடும்பங்களை சென்னையின் பம்மல், ஓட்டேறி பகுதியில் மற்றும் விருதாச்சலத்தில் குடியமர்த்தினார்கள். இது செட்டில்மெண்ட் முகாம் என அழைக்கப்பட்டது. மிகக்கொடுமையான முறையில் கிட்டதட்ட 40 ஆண்டுகள் வெளியுலகத் தொடர்பின்றி வாழ்ந்தார்கள் இம்மக்கள். ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகள் வேறு முகாமுக்கும், பெற்றோர்கள் வேறு முகாமுக்கும் என பிரித்து அனுப்பி ஆங்கில அரசு கொடூரமாக இம்மக்களை ஒடுக்கியது.

இந்நிலையில் 1933இல் இந்திய அரசியல் சட்டசீர்திருத்தக்குழு முன்னிலையில் இந்த சட்டம் குறித்து நடந்த விசாரணையில் பேசிய அண்ணல் அம்பேத்கர். இந்த சட்டத்தின் தீமையை விளக்கினார். இதனால் இந்த சட்டம் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் அந்தந்த மாநில அரசுக்கே உண்டு என்று சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இதன் விளைவாக சென்னை இராஜதானியில் ஆட்சிக்கு வந்த நீதிகட்சி வந்தவுடனேயே இந்த சட்டத்தை மாற்றியமைத்தது. முதல் கட்டமாக ஆப்பநாட்டு மறவர்களை இந்த சட்டதிலிருந்து நீக்கியது. படிப்படியாக இந்த சட்டத்தையே இரத்து செய்ய நடவடிக்கை எடுத்துவந்தது. 1947 ஜீன் 5ஆம் தேதி சுயமரியாதை இயக்கத்தலைவரும் அப்போதைய சென்னை மாகாண உள்துறை தலைவருமான சுப்பராயன் இந்த சட்டத்தை முற்றிலும் ஒழித்தார்.

இந்த சட்டத்தை ஒழிக்க உயிர்தியாகம் செய்த 16பேரின் நினைவாக பெருங்காமநல்லூரில் நினைவுத்தூண் வைத்து அந்த ஈகியர்களுக்கு வருடந்தோறும் ஏப்ரல் 3ஆம் நாள் வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.

## மே பதினேழு இயக்கம்

03 ஏப்ரல் 2020

## ஆனந்தபுரம் போரில் உயிர்நீத்த ஈகியருக்கு

## 11-ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



பிரிகேடியர்
**தீபன்**


பிரிகேடியர்
**விதுசா**


பிரிகேடியர்
**துர்கா**


பிரிகேடியர்
**மணிவண்ணன்**


பிரிகேடியர்
**கடாபி**


கேணல்
**தமிழ்ச்செல்வி**


கேணல்
**நாகேஸ்**


கேணல்
**அமுதா**

உலகெங்கும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் இனங்கள் அதிலிருந்து மீண்டு சுதந்திர காற்றை சுவாசிக்க விடுதலை போராட்டங்களை முன்னெடுக்கிறது. அப்படித்தான் தமிழீழ மக்களும் சிங்கள இனவெறி அரசால் தங்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்து விடுதலை போராட்டத்தை முன்னெடுத்தனர். தமிழர்களின் 60 ஆண்டுகால இந்த போராட்டம் 2009 இல் மிக மோசமான பின்னடைவை சந்தித்தது. இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இனவெறி இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் செய்ததால் தமிழர்கள் கொத்து கொத்தாக இனப்படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த போரில் இதே ஏப்ரல் 04ஆம் தேதி 2009 அன்று (04.04.2009) புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் இலங்கை அரசு அறிவித்த பாதுகாப்பு வளையத்தில் தமிழர்கள் கூட்டமாக இருப்பதை இந்தியா கொடுத்த ரேடார் வழியாக அறிந்த இனப்படுகொலை இலங்கை அரசு. அங்கு உலகம் தடை செய்த இராசாயண குண்டுகளை முதன்முதலில் தமிழர்கள் மீது போட்டது. இந்த இராசாயண குண்டின் வீரியம் தாக்கமுடியாமல் தமிழர்கள் சில நிமிடங்களில் பல்லாயிரம் பேர் கருகி செத்தார்கள். இந்நிலைமை தடுக்கவும், இலங்கை இனவெறி இராணுவம் மேலும் முன்னேறி வந்துவிடாமல் இருக்கவும் சாவு வரும் என்பதை அறிந்தே தமிழர்களின் இராணுவமான விடுதலை புலிகள் இனப்படுகொலை இலங்கை அரசை எதிர்த்து பாதுகாப்பு வளையத்திற்கு வெளியில் அரணமைத்து போரிட்டார்கள்.

தமிழர்களை காக்கும் இந்த போரில் தான் விடுதலை புலிகளின் மிகமுக்கியமான தளபதிகளான ஓயாத அலைகள் 2, ஓயாத அலைகள் 3 போன்ற நடவடிக்கையின் போது இலங்கை அரசை பின்னங்கால் பிடறியில் அடிபட ஓடவைத்த பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் ஆதவன் என்ற கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன் போன்றோரும். தமிழீழப்பெண்களின் வீரத்தை உலகத்திற்குக் காட்டிய விடுதலை புலிகளின் மகளிர் படையணிகளின் மூத்த தளபதிகளான 2ஆம் லெப்டினல் மாலதி படையணியின் சிறப்புத் தளபதியான பிரிகேடியர் விதுசா, மேஜர் துர்கா போன்றோரும் வீரமரணம் அடைந்தனர்.

இந்த போரே இறுதி கட்ட போரின் திசைவழியை மாற்றியது. விடுதலை புலிகளின் மிகமுக்கிய தளபதிகள் பலரும், தமிழீழ மக்களும் உலகம் தடை செய்த இராசாயண குண்டுகளால் கொடூரமாக இலங்கை அரசால் இனப்படுகொலை செய்யப்பட்ட ஆனந்தபுரம் தாக்குதல் நிகழ்ந்த நாள் இன்று. இந்த போரில் தமிழீழநாட்டிற்காக தன்னுயிரை ஈந்த ஈகியருக்காக 11 ஆம் ஆண்டு வீரவணக்கத்தை செலுத்தும் இதேவேளையில் அவர்களின் நோக்கமான தமிழீழ விடுதலையை வென்றெடுப்போம் என்ற உறுதிமொழியை ஏற்போம். அதுவே அவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான வீரவணக்கமாகும்.

**’தமிழரின் தாகம், தமிழீழத் தாயகம்’**

## மே பதினேழு இயக்கம்

**04 ஏப்ரல் 2020**



குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கொடுமைகள்

# தமிழினக் குடியானவர்களை சிதறடித்த கொடூரச் சட்டம்

குற்றப்பரம்பரைச் சட்டத்தைக் கொண்டு குடும்பங்களை சிதைத்து, வதைத்த வெள்ளையர் அரசு

## இங்கிலாந்தில் குற்றப்பரம்பரையாக

ஆங்கிலேயர் அரசு தன்னை நிலைநிறுத்திக் கொண்டு ஆட்சி அமைப்புமுறையைக் கொண்டு சுரண்டல் முறையை நிலைப்படுத்த முனைந்தது, இதற்கேற்ப சட்டங்களை வடிவமைத்தது. தனது ஏகாதிபத்தியத்திற்கு தடையாக இருந்த குடிகள் மீது கடுமையான அடக்குமுறையை ஏவியது. இந்த அடக்குமுறை என்பது அம்மக்களின் வாழ்வாதாரத்தை சிதைப்பதில் ஆரம்பித்து அவர்களை சட்டவிரோத மக்களாக தனிமைப்படுத்தி சிறைப்படுத்தல், நாடுகடத்தல் என விரிவடைந்த ஒடுக்குமுறையை ஏவியது. இச்சட்டம் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கூர்மைப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டம் தமிழ்நாட்டில் நடத்திய அடக்குமுறைக்கு எதிராக எழுந்த மக்கள் எழுச்சியினை பெருங்காமநல்லூரில் ஏகாதிபத்தியம் 1920இல் எதிர்கொண்டது. இந்த எழுச்சி கடுமையாக ஒடுக்கப்பட்டாலும், அது மக்களின் ஒட்டுமொத்த திரட்சிக்கு பின்னனியானது. இந்த எழுச்சியின் நூறாவது ஆண்டின் நினைவையொட்டி இந்த எழுச்சியின் காரணிகளையும், அரசியலையும் நினைவுகூர்வது அவசியமாகிறது. ஏனெனில் இதே ஒடுக்குமுறை நிலையை இன்றைய இந்திய அரசு பல்வேறு அடக்குமுறைச்சட்டங்கள் வழியாக நம் மீது திணித்து வருகிறது. இவ்வகையில் ஒரு ஒடுக்குமுறைச்சட்டத்திற்கு எதிராக திரண்ட மக்களின் எழுச்சியை இக்காலத்தில் விவாதிப்பது மிகப்பொருத்தமானது.

**அந்த நபர் எங்கு, எதற்காக, யாரைச் சந்திக்கச் செல்கிறார், அங்கு சென்றுவர எவ்வளவு நேரம் ஆகும், உத்தேசமாக எத்தனை மணிக்குத் திரும்புவார் போன்ற விபரங்களைத் தெரிவிக்க வேண்டும். அதேபோல் எந்த ஊருக்குச் செல்கிறாரோ, அந்த ஊரில் இதற்கென நியமிக்கப்பட்ட உரிய அதிகாரியிடம் முன்னிலையாகி விபரத்தைத் தெரிவித்து, அதேபோல் திரும்பும்போது அவரிடம் பாசில் அனுமதி பெற்றுத் திரும்பிவரவேண்டும்.**

### குற்றப்பரம்பரைச் சட்ட விளக்கம்:

இங்கிலாந்தில் குற்றப்பரம்பரையாக முத்திரை குத்தப்பட்ட நாடோடிகளை ('ஜிப்ஸிகள்' போன்றவர்களை) ஒடுக்குவதற்காக இயற்றப்பட்ட சட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு, இந்தியாவில் முதன் முதலில் தனிநபர்களை ஒடுக்கும் விதமாக 'போக்கிரிகள் தடைச்சட்டம் (1836)' அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு ஒட்டுமொத்த இனத்தையே குற்றவாளிகளாக அறிவிக்கும் குற்றப்பரம்பரைச் சட்டம் (1871) கொண்டு வரப்பட்டது.

இச்சட்டத்தின் வரலாறு, அதற்கு எதிராக நடைபெற்ற மக்கள் திரள் போராட்டம் பற்றிய விரிவான தொகுப்பு அடுத்த கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. முதலில் இந்தச் சட்டம் எந்த அளவிற்கு அடிப்படை மனித உரிமைகளுக்கெதிராக இருந்தது என்பதைப் புரிந்துகொள்ள, இச்சட்டத்தின் கீழ் பின்பற்றப்பட்ட விதிமுறைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

இந்தச் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் எந்த ஒரு சாதியையும் குற்றவாளி-நிரபராதி என்ற பாகுபாடு இல்லாமல் குற்றப்பரம்பரையாக அறிவிக்கலாம். அப்படி அறிவிக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த அனைவருமே பிறவிக் குற்றவாளிகளாகவே அந்தச் சட்டம் பாவித்தது. அதனை நீதிமன்றம் கேள்விகேட்க முடியாது.

இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சமூகத்தினருக்குச் சொந்தமான இடத்தில் தேடுதல் நடத்துவதற்கோ அல்லது அவர்களைக் கைது செய்வதற்கோ எந்தவித பிடியாணையும் காவல்துறைக்கு தேவையில்லை.


பட்டியலில் இடம்பெற்றுள்ள ஜாதியினைச் சேர்ந்த 16 வயதுக்கு மேற்பட்ட (சில இடங்களில் வரம்பு 11 வயதாக இருந்தது) அனைவரும் தங்கள் பெயர், முகவரி மற்றும் கைரேகையை காவல்நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும். சில இடங்களில் கட்டை விரல் மட்டுமல்லாமல் எல்லா விரல்களின் ரேகையும் எடுக்கப்பட்டது.

சூரியன் மறைந்த பின்பும் சூரிய உதயத்திற்கு முன்பும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது. மாலை ஆறு மணிக்குமேல் எந்த நேரத்திலும் ஒரு அரிக்கேன் விளக்குடன் ஒரு ஏட்டும் போலிஸும் வந்து விசிலடிப்பார்கள். அப்போது, கிராமத்திலிருக்கும் ஆண்கள் எல்லோரும் ஒரு மைய இடத்தில் திரள வேண்டும். பெயரைக் கூப்பிடும்போது 'ஆஜர் ஏட்டையா' என்று கூறவேண்டும். அப்படி வராமல், தூங்கிவிட்டாலோ சம்பந்தப்பட்டவர் அங்கு இல்லை என்றாலோ அதற்கும் தண்டனை உண்டு. ஒரு மாதமோ இரண்டு மாதமோ காவல் நிலையத்தில் காவலுக்கு படுக்க வேண்டும். இது ஏட்டையாவின் சட்டம். இங்கு வழக்காடுபவர், நீதிபதி எல்லாமே ஏட்டையா தான்.

சூரியன் தோன்றி மறையும் வரை வீட்டிலிருந்து வேறு எங்காவது ஊர்களுக்குப் போய்விட்டு வர வேண்டுமானால் கூட சட்டப்பிரிவு 10-ன் படி அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். ராதாரிச் சீட்டில் (G-பாஸ்) அந்த ஊரின் குற்றப்பரம்பரைச் சட்டப்படி நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் அனுமதி கையெழுத்து பெற்றுத்தான் வெளியூறுக்குச் செல்லவேண்டும். அரசு கொடுத்த 'ராதாரிச் சீட்டு' (ராத்திரிச் சீட்டு) என்ற அனுமதி அட்டையை எப்போதும் தங்களுடன் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சீட்டை மறந்து வந்தால் அந்தக் காரணம் ஒன்றே கைது செய்யப்படப் போதுமானது. கட்டுப்பாட்டு எல்லைக்கு வெளியே வந்தால் தலையாரிகூட அவரைக் கைது செய்யலாம்.

அவ்வாறு செல்லும்போது அந்த நபர் எங்கு, எதற்காக, யாரைச் சந்திக்கச் செல்கிறார், அங்கு சென்றுவர எவ்வளவு நேரம் ஆகும், உத்தேசமாக எத்தனை மணிக்குத் திரும்புவார் போன்ற விபரங்களைத் தெரிவிக்க வேண்டும். அதேபோல் எந்த ஊருக்குச் செல்கிறாரோ, அந்த ஊரில் இதற்கென நியமிக்கப்பட்ட உரிய அதிகாரியிடம் முன்னிலையாகி விபரத்தைத் தெரிவித்து, அதேபோல் திரும்பும்போது அவரிடம் பாசில் அனுமதி பெற்றுத் திரும்பிவரவேண்டும். சில இடங்களில் மூன்று பாஸ்கள் வழங்கப்பட்டன. ஒன்று அந்தப் பகுதியினைச் சேர்ந்த காவல்நிலையத்திற்கும் இன்னொன்று அந்த நபர் செல்லவிருக்கும் பகுதியினைச் சேர்ந்த காவல்நிலையத்திற்கும் மற்றொன்று அந்த நபருக்கும் தரப்பட்டது.

சில ஊர்களில் காவலர்களுக்குப் பதிலாக உள்ளூர் பெரிய மனிதர்கள் அடங்கிய குழுக்கள் ராதாரிச் சீட்டு



1911–ல் மதுரையைச் சுற்றியுள்ள பிறைமலைகள்ளர் வகுப்பினர் குற்றங்களில் ஈடுபட்டனர் என 400 கி.மீ , தூரம் கால்நடையாகச்சென்று விருத்தாச்சலம் அருகே குடியமர்த்தப்பட்டனர்

வழங்குதல், கைநாட்டு வாங்குதல் பணியினைச் செய்தன. கள்ளர் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் இந்தக் குழுக்கள் 'கள்ளர் பஞ்சாயத்துகள்' என்று அழைக்கப்பட்டன. விவசாய நிலம் வைத்திருந்த விவசாயிகள், நிலவரி கட்டுபவர்கள், நிரந்தரத் தொழில் செய்வோர், அரசு அலுவலர், நிரந்தரமாக ஒரே இடத்தில் வசிப்போர் – ஆகியோர் பலர் இச்சட்டத்திலிருந்து விலக்கு பெற்றனர். ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவர்களுக்கே இந்த விலக்குகள் அளிக்கப்பட்டன.

ராதாரிச் சீட்டு விதிகளை மீறினால் 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும். சந்தேகம் வரும்படி ஒருவர் நடந்துகொண்டால்கூட அவருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை உண்டு. இந்த சட்டத்தின்கீழ் ஒரு தீப்பெட்டியும் கத்தரிக்கோலும் கையில் இருந்தது என்பதற்காக ஒருவர்மீது குற்றவழக்குப் பதிவு செய்யப்பட்டது. இப்படி ஏராளமான அடக்குமுறை பிரிவுகள் அந்தச் சட்டத்தில் இருந்தன.

இச்சட்டத்தினால் காவல்துறையின் அடக்குமுறை அத்துமீறி இருந்தது. ராதாரிச் சீட்டு வாங்க அதிகாரிகளுக்கு லஞ்சம் தரவேண்டி இருந்தது. அந்த மக்கள் இந்த லஞ் சப்பணத்தைக் கொடுக்க கோழி போன்ற உடைமைகளை விற்றுதான் சமாளிக்க வேண்டியிருந்தது. இந்த அடக்குமுறையால் விவசாய வேலை கெட்டுப்போனது; வறுமை வளர்ந்தது; பொய் வழக்குகளால் நீதிமன்றங்களுக்கு அலைந்து சொற்ப நிலங்களையும் இழந்தனர்.

சில கிராமங்களில் குற்றப்பரம்பரை எனப் பட்டியலிடப்பட்ட மக்களைப் பதிவு செய்ய இரண்டு விதமான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டன. முதலாவது பதிவேட்டில் கண்காணிப்பின் கீழ் உள்ளோர் தினமும் காவல்நிலையத்தில் இரவு 11 மணியில் இருந்து காலை 5 மணிக்குள் கைநாட்டு வைக்கவேண்டும். இதனால், மக்கள்தொகை அதிகமாக இருந்த ஊர்களில் கைநாட்டு வைப்பதற்காக முதல் நாள் மாலை முதலே விடிய விடிய மக்கள் வரிசைகளில் நின்றனர்.

இரண்டாவது பதிவேடு நீதிமன்றத்தால் 'குற்றவாளி' என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கானது. இவர்களின் நிலை இன்னும் மோசம். இவர்கள் மாலை 7 மணிமுதல் காவல் நிலையத்திற்கு எதிரே இருக்கும் திறந்த வெளியில்தான் இருக்கவேண்டும். குளிரோ, மழையோ அங்கே தான் தூங்க வேண்டும். இதற்கிடையே இரவில் 4 முறை அனைவரையும் இருக்கிறார்களா என்று முன்னிலையாக்கி சரிபார்ப்பார்கள். அநேகமாக இரவு முழுவதும் தூங்க முடியாது. வயதானவர், புதிதாக திருமணமானவர்கள், வீட்டில் குழந்தை, தாய், நோய்வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தால் கூட விதிவிலக்கு கிடையாது. மனைவியின் பிரசவ நாளில் கூட அவர்களுக்கு விலக்குகள் அளிக்கப்படவில்லை.

**இரண்டாவது பதிவேடு நீதிமன்றத்தால் 'குற்றவாளி' என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கானது. இவர்களின் நிலை இன்னும் மோசம். இவர்கள் மாலை 7 மணிமுதல் காவல் நிலையத்திற்கு எதிரே இருக்கும் திறந்த வெளியில்தான் இருக்கவேண்டும். குளிரோ, மழையோ அங்கே தான் தூங்க வேண்டும். இதற்கிடையே இரவில் 4 முறை அனைவரையும் இருக்கிறார்களா என்று முன்னிலையாக்கி சரிபார்ப்பார்கள்**

ஒரு ஊரில் எந்தத் திருட்டு நடந்தாலும் உரிய குற்றவாளி கண்டுபிடிக்கப்படும் வரையில் இரண்டாவது பதிவேட்டில் உள்ளவர்களே அந்தக் குற்றத்தைச் செய்தவர்களாகக் கருதப்பட்டனர். முன்னர் அவர்கள் மீது இருந்த குற்றச்சாட்டு எதுவானாலும் உடன் இதுவும் ஒரு குற்றமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதனால் காவல்துறை நிம்மதியாக இருக்க, ஊர்ப்பெரிய மனிதர்கள், குற்றவாளி பட்டியலில் இணைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காக உண்மையான குற்றவாளிகளைத்தேடி அலைந்தனர்.

பல ஊர்களில் இந்த வித்தியாசம் இல்லாமல் ஒரே பதிவேடு பயன்படுத்தப்பட்டது. அந்த இடங்களில் எல்லோருமே காவல்நிலையத்திலோ அல்லது ஏதேனும் ஒரு மந்தையிலோ படுக்கவேண்டும்.

## சட்ட நடைமுறையின் கொடுமை:

குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் ஒரு குற்றவாளி ஒரு கிராமத்தில் நடமாடினார் என்றால் அந்த கிராமத்தில் உள்ள அனைத்து ஆண்களுமே விசாரணைக்கு ஆளாக்கப்பட்டனர். இப்படியாக கண்காணிக்கப்படும் கிராமங்களின் பட்டியல் நீண்டுகொண்டே சென்றது. இதனால் சில காலத்திலேயே மதுரையில் கிட்டத்தட்ட அனைத்து கிராமங்களும் அரசால் கண்காணிக்கப்படும் கிராமங்களாயின. இதற்கென தனித்த ஒரு அமைப்பையே ஆங்கிலேய அரசு உருவாக்கியது. இப்படி அரசின் அடக்குமுறைகள் உச்சத்தை அடைந்தன.

**மாயாண்டித்தேவர் என்பவர் மீது இரவு நேரத்தில் ஒரு வீட்டிற்குள் கதவை உடைத்து நுழைந்து ஆட்டினைத் திருடினார் என்று கூறி வழக்குப் பதிவு செய்யப்பட்டு அதற்கு 'ஏழு ஆண்டுகள் கடுங்காவல்' தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. இது பத்தாது என்று, பிரிட்டிஷ் அரசானது இவர் குற்றப்பரம்பரை நபர் என்பதாலும் மூன்றாவதாகப் பெற்ற தண்டனை என்பதாலும் ஏன் ஆயுள் தண்டனையோ?, நாடு கடத்தும் ஆயுள் தண்டனையோ வழங்கக்கூடாது? என்று மேல்முறையீட்டில் கூறியிருந்தது!**

இந்த அடக்குமுறையின் தீவிரத்தன்மையை மாயாண்டித்தேவர் வழக்கினைப் பற்றி பார்த்தாலே உணரமுடியும். மாயாண்டித்தேவர் என்பவர் மீது இரவு நேரத்தில் ஒரு வீட்டிற்குள் கதவை உடைத்து நுழைந்து ஆட்டினைத் திருடினார் என்று கூறி வழக்குப் பதிவு செய்யப்பட்டு அதற்கு 'ஏழு ஆண்டுகள் கடுங்காவல்' தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. இது பத்தாது என்று, பிரிட்டிஷ் அரசானது இவர் குற்றப்பரம்பரை நபர் என்பதாலும் மூன்றாவதாகப் பெற்ற தண்டனை என்பதாலும் ஏன் ஆயுள் தண்டனையோ?, நாடு கடத்தும் ஆயுள் தண்டனையோ வழங்கக்கூடாது? என்று மேல்முறையீட்டில் கூறியிருந்தது! அதாவது ஒரு ஆடு திருட்டு வழக்கு போன்ற அற்பமான குற்றங்களுக்கும், முறையாக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளுக்கும் கூட குற்றவாளி குற்றப்பரம்பரைப் பட்டியலில் இருக்கும் சாதினை சேர்ந்தவர் என்பதற்காக (நாடு கடத்துதல், ஆயுள் தண்டனை போன்ற) கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

குற்றப்பரம்பரைச் சட்டம் பல்வேறு கொடூரமான பிரிவுகளை உள்ளடக்கியதாக இருந்தது. அதில் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று பிரிவு 24. இந்தப் பிரிவின்படி, குற்றப்பரம்பரையின் கீழ் பட்டியலிடப்பட்ட ஒரு நபர் ஒரு இடத்தில் ஒன்றும் செய்யாமல் நின்றால் கூட குற்றம் செய்வதற்காகத்தான் நின்றிருக்கிறார் என்று கருதி தண்டனை வழங்கினர்.

உதாரணமாக, குற்றப்பரம்பரைப் பட்டியலில் இருக்கும் ஒரு சாதியினைச் சேர்ந்த நபர், எதேச்சையாக ஒரு தெருவில் நின்று கொண்டிருக்கிறார். அவர் 'வழிப்பறியோ, திருட்டோ, குற்றச்செயல் செய்வதற்காகத்தான் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கிறார்' என்று நீதிமன்றம் திருப்தி அடைந்தால், அந்த நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் வழங்கப் பிரிவு 24 அதிகாரம் வழங்கியிருந்தது.

குற்றப்பரம்பரையைச் சேர்ந்த நபராகப் பதிவு செய்த நபர்களை 'செட்டில்மெண்ட்' என்னும் சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பும் அதிகாரதைக் குற்றப்பரம்பரைச் சட்டப் பிரிவு 16 வழங்கியது. செட்டில்மெண்ட், மறுசீரமைப்பு செட்டில்மெண்ட், சிறப்பு செட்டில்மெண்ட் என்று வெவ்வேறு படிநிலைகளில் சித்திரவதை முகாம்களை உருவாக்கவும், செட்டில்மெண்டில் உள்ளவர்களை அதே பகுதியிலோ, வேறுபகுதிக்கோ, வேறு மாவட்டத்திற்கோ வேறு மாநிலத்திற்கோ கூட மாற்றி செட்டில்மெண்ட் பகுதி உருவாக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது.

மாகாண அரசு குற்றப்பரம்பரையினரில் ஒரு பகுதியினரைக் கடுமையாகக் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் என்று கருதினால் அவர்களைச் சிறப்பு செட்டில்மெண்டுக்கு மாற்றலாம். ஒரு குற்றப்பரம்பரை சமூகக் குழுவை வேறொரு சமூக இனக்குழுவோடு இணைத்து 'செட்டில்மெண்ட்' உருவாக்கலாம். பெற்றோர்களையும், குழந்தைகளையும் தனித்தனியாகப் பிரித்து தனித்தனி செட்டில்மெண்டிற்கும்கூட அனுப்பலாம்.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை செட்டில்மெண்ட் ஏரியா என அறிவித்து அதில் இம்மக்களைக் குடியேற்றலாம். மேலும் இம்மக்கள், ஆலை, தொழிற்சாலை, சுரங்கம், கல்குவாரி, தேயிலை/காபி தோட்டம், பெரிய விவசாயப் பண்ணை போன்ற இடங்களுக்கு வேலைக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டார்கள். மலேசியா, இலங்கை, பினாங்கு, இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு வேலைக்காகப் பலவந்தமாக அனுப்பப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குற்றப்பரம்பரையினர் தான். குற்றப்பரம்பரைச் சட்டம் அமலில் இருக்கும் தொழிற்சாலை, தேயிலைத் தோட்டம் போன்ற இடங்களில் தொழிலாளர் சட்டம் செல்லாது. சிறுசிறு குற்றங்களுக்குக் கூட இவ்வாறு நாடுகடத்தப்பட்டு இந்தத் தோட்டங்களில் அரை அடிமைகளாகச் சுரண்டப்பட்டனர். இவர்களுக்குத் தொழிலாளர்களுக்குரிய எந்த உரிமையும், கூலியும் கொடுக்கப்படாமல் கடுமையாகச் சுரண்டப்பட்டனர். ஆப்பிரிக்க, ஆஸ்திரேலிய பழங்குடிகள் மீது விதிக்கப்பட்ட கடுமையான இனவெறி உழைப்புச் சுரண்டல் இங்கே இச்சட்டத்தின் அடிப்படையில் இம்மக்கள் மீது திணிக்கப்பட்டது.

இன்றைய ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் ஸ்டூவர்ட்புரம் அப்படியான ஒரு சிறப்பு செட்டில்மெண்ட் பகுதிக்கு எடுத்துக்காட்டு. அது ஏருகுலாஸ் என்று அழைக்கப்படும் ஏருகுல ஆதிவாசிகளுக்காக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் செட்டில்மெண்டுகளை தீவிரமாகப் பின்பற்றி உருவாக்கி நடத்திய 'ஹரால்ட் ஸ்டூவர்ட்' என்பவரின் பெயரிலேயே அந்த செட்டில்மெண்ட் 'ஸ்டூவர்ட்புரம்' என்று பெயரிடப்பட்டது. அதில் மட்டும் 6000 ஏருகுல ஆதிவாசிகள் இருந்தார்கள்.

அதேபோல குற்றப்பழங்குடி மக்களின் நடமாட்டத்தை முடக்கிக் கட்டுப்படுத்த 'சால்வேசன் ஆர்மி' என்ற அமைப்பை உருவாக்கி இருந்தனர். செட்டில்மெண்டுக்குள் உள்ள விவகாரங்களை இது கவனிக்கும். இதனுடைய ஊழியர்கள் ராணுவ உடையுடன் இருப்பார்கள். இதன் தலைவரை 'ஜெனரல் பூத்' என்று அழைத்தனர். இதனை ஈவிரக்கமற்ற நிழல் ஏகாதிபத்திய அமைப்பு என்பார்கள்.

இந்த சால்வேசன் ஆர்மி துப்பாக்கி போன்ற ஆயுதங்களையும் பயன்படுத்தித் தாக்குதல்கள் நடத்துவார்கள். ஒரு குறிப்பிட்ட பகுதியை திடீரென்று ஆக்கிரமித்துப் போர் போன்ற சூழலை உருவாக்கி செட்டில்மெண்டை உருவாக்குவார்கள். இந்தக் குற்றப்பரம்பரைச் சட்டம் இவர்களுக்கு இவ்வளவு அதிகாரத்தினை வழங்கியிருந்தது.

ஒரு நாளைக்கு ஒன்று முதல் 4 முறை வரை குற்றப்பரம்பரையினர் நபர்களை முன்னிலையாக்கி சரி பார்ப்பார்கள். சரிபார்க்கும் போது இல்லாவிட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும். ஒழுக்கம், கட்டுப்பாடு என்ற பெயரில் கடுமையான அடக்குமுறைகளை ஏவினார்கள். யாராக இருந்தாலும் செட்டில்மெண்டுக்கு உள்ளே வரவோ, வெளியே செல்லவோ அனுமதி பெறவேண்டும்.

இந்த சால்வேசன் ஆர்மி இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான செட்டில்மெண்ட் முகாம்களை ஆரம்பித்தது. கூட்டம் கூட்டமாகக் குழுக்களாக இனக்குழுவாக வாழ்பவர்களை இந்த சால்வேசன் ஆர்மி முதலில் குடும்பங்களாகத் தனியே பிரித்து, பின்பு அந்தக் குடும்பத்தையே தனியாகப் பிரிக்கும். கூட்டு வாழ்க்கை வாழ்ந்தவர்களை அவர்களின் இயற்கையில் இருந்து மாற்றினார்கள்.

இவர்களைப் பயன்படுத்தவேண்டும் என்பதற்காக வறண்ட நிலங்களை ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு எனத்தனியே பிரித்துக் கொடுத்து விவசாயம் செய்ய வைத்தார்கள். சாகுபடி செய்து விளைச்சலை அதிகப்படுத்தாவிட்டால் தண்டனையும் வழங்கப்பட்டது. இப்படி, நாடோடியாக வாழ்ந்தவர்களை நிரந்தரமாக ஓரிடத்தில் வசிக்க வைத்தார்கள். விவசாயம் செய்து பழக்கமில்லாதவர்களை விவசாயம் செய்யச்சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள்.

உசிலம்பட்டி பகுதிகளில் இருந்து 1917 ஆம் ஆண்டு 19 பிறமலை கள்ளர் இனக் குடும்பங்களை அழைத்துச் சென்று தேனி மாவட்டம் கூடலூர் மலைப்பகுதியில் 'குள்ளப்பக்கவுண்டன்பட்டி'யில் செட்டில்மெண்ட் அமைக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு மலேரியா மற்றும் கடுமையான தொற்றுநோய் வந்ததால் செட்டில்மெண்ட் திட்டம் நிறுத்தப்பட்டது.

மேலும், பிறமலை கள்ளர் சமூகத்திலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சொந்த மண்ணிலிருந்து அகற்றி சென்னைக்கு அருகில் உள்ள பம்மல், ஓட்டேரி பிரிஸ்லி நகர் மற்றும் விருதாசலத்துக்கு அருகில் உள்ள அஜிஸ் நகர் பகுதிகளில் மிகமோசமான செட்டில்மெண்ட் முகாம் அமைத்து அவர்களைக் கடுமையாக கண்காணிப்புக்குட்படுத்தினார்கள். கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு மேல் 1947 வரை அந்த முகாம்களுக்குள் என்ன நடக்கிறது என்ற விவரம் வெளியுலகத்திற்குத் தெரியாமலேயே இருந்தது.

இப்படியாக மிக மோசமான பல மனித உரிமைக்கெதிரானப் பிரிவுகளை அந்தச் சட்டம் கொண்டிருந்தது. இந்தச் சட்டத்திற்கெதிராக பல்வேறு மக்கள் திரள் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இறுதியாக, சென்னை மாகாண சட்டமன்றத்தில் குற்றப்பரம்பரைச் சட்டத்தை முற்றிலும் ரத்து செய்கின்ற தீர்மானம் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேறியது. பிறகு, ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, 1947 ஜூன் 5 ஆம் தேதி குற்றப்பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது. ●


***தகவல் உதவி:*** *குற்றப்பரம்பரைச் சட்டம் ஒரு மீளாய்வு*
*– வழ. பாலதண்டாயுதம்*

# கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் 48 ஆவது நினைவு நாள்

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் என்பது பல்வேறு தரப்பினரின் தியாகத்தால் உருவானது. அப்படி இந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும், இந்தியாவை ஜனநாயக படுத்தும் வேலையான இந்திய அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராகவும் இருந்தவர் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள்.

இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்தியாவின் தேசிய மொழியாக எது இருக்க வேண்டுமென்கிற விவாதம் நடைபெறுகையில், இந்தியாவில் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்றால் அந்த தகுதி தமிழுக்கு மட்டுமே உண்டு என்று உரக்க முழங்கிய கொள்கை வீரர் காயிதே மில்லத் அவர்கள். மொழிவாரி மாநிலங்களாக இந்தியா பிரிக்கப்படும் பொழுது தமிழகத்திற்கு சொந்தமான தேவிகுளம், பீர்மேடு பகுதி கேரளாவிற்கு கொடுப்பதை மிகக்கடுமையாக எதிர்த்தார். இந்த இரண்டு பகுதியும் தமிழகத்தோடு தான் இருக்க வேண்டும் அதுவே நியாயம் என்று முழங்கியவர் காயிதேமில்லத். பார்ப்பனர் அல்லாத மக்களின் சமூக நீதிக்காகவும், இஸ்லாமியர்களின் மேம்பாட்டிற்காகவும் வாழ்நாளெல்லாம் உழைத்தவர் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள்.

05 ஏப்ரல் அன்று அவரின் 48 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரின் கொள்கையை நினைவில் நிறுத்துவோம்.



**மே பதினேழு இயக்கம்**
**04 ஏப்ரல் 2020**



# பெருங்காமநல்லூர் படுகொலையின் 100 ஆண்டுகள்

# ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீர வரலாறு

## வரலாறு என்ற சொல்லுக்கு

அகராதி, 'ஆய்வின் மூலம் பெறப்பட்ட அறிவு, கடந்தகால நிகழ்வுகள், நினைவுகள், சேகரிப்புகள், அமைப்புகள், அன்பளிப்புகள், நிகழ்வுகள் பற்றிய தகவல்கள்' என்று பொருள் கூறுகிறது. அதை நாம் 'கடந்துவந்த பாதை' என்று பொருள் எடுத்துக்கொள்வோம். 'வந்தவழி தெரியாதவர்களுக்கு போகும்வழி புரியாது' என்று சொல்வார்கள். நாம் வரலாற்றை நினைவுகூறக் காரணம் கடந்தகால தியாகங்களை எண்ணிக் கண்ணீர் விடுவதற்கும் நிகழ்ந்தவற்றைச் சொல்லி பெருமை பேசுவதற்கும் மட்டுமல்ல. அந்த தியாகமும் வீரமும் அடுத்த தலைமுறைக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காகவும் தான்.



1920 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் தேதி உசிலம்பட்டி அருகே உள்ள பெருங்காமநல்லூர் என்ற கிராமத்தில் வெள்ளையரின் அடக்குமுறைச் சட்டத்திற்கெதிராக மாபெரும் மக்கள் திரள் போராட்டம் நடந்தது. அந்த போராட்டத்தை அடக்குவதற்காக ஆங்கிலேய அரசு நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 'மாயக்காள்' என்ற ஒரு பெண் உள்பட 17 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தமிழர்கள் நடத்திய போராட்டத்தின் வலி மிகுந்த வடுவான இந்நிகழ்வு நடந்து இந்த ஆண்டோடு 100 ஆண்டுகளாகின்றன.

எளிய மக்கள் நீதிக்காகப் போராடிய வரலாற்றுப் பதிவுகளை நாம் இலக்கியங்களில் பார்த்திருக்கிறோம். அத்தகைய மக்கள் வரலாற்றில் கடந்த நூற்றாண்டின் ஒரு முக்கியப்பதிவுதான் தென்னக ஜாலியன் வாலாபாக் என்று அழைக்கப்படும் மதுரை மாவட்டம் பெருங்காமநல்லூரில் நடந்த அந்தக் கொடூரச் சம்பவம். உரிமைக்காக 17 பேர் குண்டடிபட்டு உயிரிழந்த தியாக வரலாறு!

இந்தப் போராட்டம் உலக வரலாற்றில் இயற்றப்பட்ட சட்டங்களில் மிகவும் கொடூரமான குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு எதிராக நடைபெற்றது. ஒருவரைப் பிறப்பின் அடிப்படையில் குற்றவாளி என்றும் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தைக் கொடூரமானவர்கள் என்றும் அடையாளப்படுத்தி அவரது செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பது ஐரோப்பிய சூழலில் இருந்து உருவாகிய கருத்தாக்கம்.


பிரெஞ்சுப் புரட்சிக்கு நாடோடி குடிகளைச் சேர்ந்தவர்கள் முக்கிய பங்காற்றினர் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். புரட்சிக் காலத்தில் பிரான்சு கடும் பொருளாதார நெருக்கடியைக் கண்டது; விளைச்சல் தொடர்ந்து பாதிக்கப்பட்டு உணவுப் பொருள்களின் விலை எகிறியது; இதனைக் காரணம் காட்டி தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்; அவர்கள் வேலைத்தேடி நாடெங்கும் திரிந்தனர்; கிராம மக்கள் நகரங்களை நோக்கி புலம்பெயர்ந்தனர்; குறிப்பாக ஆயிரக்கணக்கான மக்கள் பாரிஸ் நகரத்தை நோக்கி இடம்பெயர்ந்தனர். 1778, 1784 ,1789 போன்ற வருடங்களில் புரட்சிக்காக நடைபெற்ற பெருவாரியான கலகங்கள் இந்த விலையேற்றத்தின் விளைவாகவே நடைபெற்றன. உணவு மற்றும் உணவுப்பொருள்களின் விலையினைக் குறைக்கவேண்டிய சூழ்நிலைகளை இந்தப் போராட்டங்கள் ஏற்படுத்தின என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேநேரம் பாரிசிலும் போராட்டங்கள் நடைபெற்றன. இந்தக் காலகட்டத்தில் சட்ட சீர்குலைவுடன் பொருளாதார நெருக்கடியும் பிரான்சில் உருவாகியது. வீடு இல்லாதவர்களது எண்ணிக்கை அதிகரித்தது; வேலையில்லா திண்டாட்டமும் விலை உயர்வும் பெருவாரியான மக்களை உணவுக்குக் கையேந்தும் நிலைக்கும் திருடி வாழும் நிலைக்கும் தள்ளியது. இந்நிலைக்கெதிராக மக்கள் வீதிக்கு வந்து போராடியபோது, ஆளும் வர்க்கம் அவர்கள்மீது அடக்குமுறையை ஏவிவிட்டது. மக்கள் அதற்குப் பதிலடி கொடுக்க முயற்சிக்கும் போது அவர்களை வன்முறையாளர்கள் என்றும் அபாயகரமான வகுப்பினர் என்றும் முத்திரை குத்தியது. அதில் பிச்சைக்காரர்கள், வீடு இல்லாதவர்கள், நாடோடிகள் போன்ற ஏற்கனவே நெருக்கடியில் இருந்தவர்களைக் கொடூரமானவர்கள் என்று அறிவித்து, அவர்களின் பெயர்களைப் பதிவு செய்தது. அவர்களின் எண்ணிக்கை மற்றும் இயல்புகளைக் கண்டறிந்து, அவர்களது செயல்பாடுகளை அரசு தொடர்ந்து கண்காணித்து வந்தது.

பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் நடந்த போராட்டங்களில் ஈடுபட்டிருந்த வீடு இல்லாதோர், நாடோடிகள் போன்றவர்களைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்க 1824 இல் "லாக்ரன்சி சிஸ்டம்" என்ற கொடூரச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் அரசு அதிகாரத்திற்கு எதிராகவும் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்துபோன தனிநபர் சொத்துகளுக்கெதிராகவும் மக்கள் கிளர்ந்தெழாமல் இருக்க அவர்களை அபாயகரமான வகுப்பினர் என வகைப்படுத்தி ஒடுக்கினர்.

மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் குற்றவாளிகளை, உடல் அமைப்பை வைத்து வகைப்படுத்தும் சூழலும் உருவாகத்தொடங்கின. சொல்லப்போனால் தட்டையான மூக்கு, இறுகிய தாடை, சின்ன தலை, ஒற்றைக்கண், படர்ந்த பெரிய கண்ணிமைகள், பெரிய காது இப்படியான அமைப்பை உடையவர் அனைவரும் பெரும்பாலும் உளவியல் ரீதியாக 'குற்ற நோக்கம்' உடையவர்களாக இருப்பர் எனக்கருதப்பட்டது. ஒருவரது உடலமைப்பு பிறப்பின் அடிப்படையில் அமைவதால், இந்த சிந்தனைகள் குற்றவாளிகளின் பிறப்பின் அடிப்படையில் உருவாகின்றன என்ற கருத்தாக்கமும் மறைமுகமாக உருவாக்கப்பட்டது.

ஒருவருடைய உடல் அமைப்பிற்கும் அவரது குற்றச் செயல்களுக்கும் எந்த தொடர்புமில்லை; அவ்வாறு கருதுவது அறிவியல் பூர்வமற்றவை; என்பது தற்கால அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுபோன்ற அறிவியல் பூர்வமற்ற ஐரோப்பிய கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டுதான் 'குற்றப்பரம்பரை' என்ற கருத்தாக்கம் பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களால் இந்தியாவில் உருவாக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் தற்போது இருக்கும் இந்திய ஒன்றியத்திற்குள் முதலில் நுழைந்தபோது இந்த பெரும் நிலப்பரப்பு பல்வேறு சிற்றரசுகள் மற்றும் பேரரசுகளால் ஆளப்பட்டு வந்தது. வெள்ளையர்கள் அந்த அரசுகளுடன் சண்டையிட்டும் ஏமாற்றியும் வெற்றிகொண்டு அந்த நிலப்பரப்புகளை எல்லாம் இணைத்துத்தான் தங்களது காலனி ஆதிக்கத்தை நிறுவினர். அவ்வாறு அரசுகளை வென்று, தனது ராஜ்ஜியத்தை உருவாக்கும்போது அந்த தேசங்களில் பல சுதந்திரமான இனக்குழுக்கள் இருந்துவந்தன. அவை, பெரும்பாலும் அப்போது இருந்த அரசுகளுக்குக் கட்டுப்படாமல் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொண்டு சுயாட்சி பெற்ற தன்னரசு குழுக்களாக இருந்து வந்தன. பிரிட்டிஷாரால் இந்த சுதந்திரமான இனக்குழுக்களை முழுமையாகத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர இயலவில்லை. அவர்களைக் கட்டுப்படுத்த முயலும்போது, பிரிட்டிஷாருடன் மிகவும் மூர்க்கத்தனமாக மோதினர். ஆங்கிலேயர் ராணுவ பலத்தால் அவர்களை அடக்கிவிட்ட போதிலும், அவர்களை நிரந்தரமாக தங்களின் நிர்வாகச் சட்டங்களின்கீழ் கொண்டுவர இயலவில்லை. அவ்வாறு கொண்டு வருவதற்கு சில கடுமையான சட்டங்கள் தேவைப்படுவதாகக் கருதினர். அதனுடைய உச்சக்கட்ட வடிவமே குற்றப்பரம்பரைச் சட்டம். இதன்கீழ் நாடோடி இனக்குழுக்களும், சில மலைவாழ் இனக்குழுக்களும், சில சமவெளி குடிநிலை சாதிகளும் கொண்டுவரப்பட்டன.



भिकू रामजी इदाते (दादा)
Bhiku Ramji Idate (Dada)
अध्यक्ष
Chairman

भारत सरकार
विमुक्त, घुमंतू तथा अर्ध घुमंतू
समुदायों के लिए विकास एवं कल्याण बोर्ड
सामाजिक न्याय और अधिकारिता मंत्रालय
Government of India
Development and Welfare Board for De-notified
Nomadic and Semi Nomadic Communities
Ministry of Social Justice and Empowerment

दिनांक- 03-04-2020

**Nation Salute To The DNT Martyrs Of Tamilnadu**

It is a proud moment for more than 15 Crores DNT/SNT/NT peoples of India, on this day 100th years ago, our ancestors' waged war against the British for unjust imposition of draconian Criminal Tribe Act at Perungamanallur, Madurai District, Of Tamilnadu. The very conception of Criminal Tribe is ingenious evil design of Colonial Forces to uproot the martial indigenous people who had been proved to be insurmountable threat to the British Rule and for exploitation of rich forest and other natural resources of this Holy land. The highly freedom loving people of Piramalai Kallars of Madurai District understood the impending danger and its pernicious effect on the generations to come, thus, they resolved to fight against the said inhuman and black law.On the fateful day of 03.04.1920, the British Armed Police Forces shot our people who resisted the British Rule and its unjust Act at Perungamanallur.

The following 17 Martyrs made supreme sacrifice to defend the mother soil:

1. Shri C. Mayandi Thevar;
2. Shri Periyakaruppa Thevar;
3. Shri S. Virumandi Thevar;
4. Shri P. Sivankalai Thevar;
5. Shri A. Periyandi Thevar;
6. Shri S. MuthuKaruppa Thevar;
7. Shri P. Chinna Thevar;
8. Shri S. Mayandi Thevar;
9. Shri S. Mayandi Thevar;
10. Shri P. Udayaa Thevar;
11. Shri U. Chinnamaya Thevar;
12. Shri M. Periyakaruppa Thevar;
13. Shri N. Veerana Thevar;
14. Shri U. Muthaiya Thevar;
15. Shri P. Veerth Thevar;
16. Shri M. Mayandi Thevar; &
17. Smt.P. Mayakkal.

The National DNT/SNT/NT Development and Welfare Board is happy to learn that the Govt of Tamilnadu has decided to construct a 100th year commemoration memorial at Perungamanallur. The Central Government under the Prime Minister Shri Narendra Modiji has constituted a permanent DNT/SNT/NT Development and Welfare Board and planning to make all out effort to do complete justice to the hither to neglected and marginal section of our country.Let us resolve on this 100th year of commemoration of 17 Perungamanallur War martyrs,to make collective effort to completely eradicate the malice of social stigma of CT Act including the HOA 1952 and restore the rich cultural heritage of indigenous aboriginal DNT/SNT/NT communities. We will make continuous effort to get due importance to this nationally historically significant supreme Sacrifice of DNT people at Perungamanallur.

B.R.Idate (Dada)

2 तल, 2 विंग, पश्चिम ब्लॉक-8, आर.के. पुरम, नई दिल्ली-110066
दूरभाष : 011-26712573, 26109063, मो. : 9930904070, ई-मेल : dadaidate8@gmail.com
2nd Floor, 2nd Wing, West Block-8, R. K. Puram, New Delhi-110066
Tel. : 011-26712573, 26109063, Mobile : 9930904070, E-mail : dadaidate8@gmail.com

Scanned with CamScanner

பல மாறுபட்ட தேசிய மொழிகளின் கூட்டுக் கலவையாக இந்தியா திகழ்ந்ததால், அவர்களுக்குக் கண்காணிப்பு கூட குழப்பமாகத்தான் இருந்தது. பிரிட்டிஷ் காலனி அரசாங்கத்தின் நவீன பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகள் கடுமையாகச் சுரண்டிய காரணத்தால் நாடோடி மக்களும், 17 ஆம் நூற்றாண்டு முதல் பெரும்பான்மை மக்களிடமிருந்து விலகிக் காட்டுப்பகுதியில் வாழத்துவங்கினர். இவர்களின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவை சராசரி மக்களிடமிருந்து வேறுபட்டு இருந்தன. அந்த இனங்களைச் சேர்ந்த சிலர் வறுமையின் காரணத்தினால் திருட்டுத் தொழிலிலும் ஈடுபட்டார்கள். பிரிட்டிஷ் அரசு திருட்டை ஒழிப்பதற்குப் பதிலாக, ஒட்டுமொத்த இனத்தையே குற்றவாளிகளாக அறிவித்துத் துன்புறுத்தத் தொடங்கியது. முதலில் வங்காளம் பகுதியைச் சுற்றியிருந்த தக்கி இன மக்கள்தான் ஒரு குறிப்பிட்ட இனத்தையே குற்றவாளிகளாக அறிவித்துத் துன்புறுத்தும் கொடூரச்சட்டத்தால் பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான 'தக்கி' இனத்தவர்களைத் தூக்கிலிட்டும் நாடு கடத்தியும் வாழ்நாள் சிறைத் தண்டனை விதித்தும் வேட்டையாடினர். குறிப்பாக 1835 முதல் 1850 ஆம் ஆண்டு வரை இந்த வேட்டை நடந்தது. இதனை அரசுக்கு எதிரான போராட்டங்களையும் ஒடுக்கப் பயன்படுத்தலாம் என்று நினைத்த பிரிட்டிஷ் அரசு, இந்த வேட்டையை நாடு முழுவதும் நடத்துவது என முடிவு செய்தது.

ஆங்கில அரசு 1861 ஆம் ஆண்டு இந்தியக் காவல் சட்டத்தை உருவாக்கியது. அதன்படி ஐரோப்பியப் பாணியிலான காவல் அமைப்பு பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்டது. அது ஏற்கனவே இருந்து வந்த பாரம்பரிய காவல் அமைப்பைச் சட்டவிரோதம் ஆக்கியது. அந்த வகையில்தான், தென்தமிழகத்தில் பாரம்பரிய அமைப்பின்படி திசை காவலாளிகள் ஆகவும், ஸ்தலக் காவலாளிகள் ஆகவும் இருந்துவந்த கள்ளர், மறவர், வலையர் போன்ற சாதியினர் தங்கள் தொழில்களை இழக்க நேரிட்டது. அவர்களுக்குக் காவல் மானியமாக ஒதுக்கப்பட்டிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டதோடு, அதுவரை அவர்கள் பெற்றுவந்த காவல் கூலியும் சட்டவிரோதமாக்கப்பட்டது. இதனால் அவர்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டனர். அதனை ஒட்டி போராட்டங்கள் வெடித்தது. அதனையே காரணம் காட்டி அவர்களையும் குற்றப்பரம்பரையாக பிரிட்டிஷார் அடையாளப்படுத்தினர்.

**ஆங்கில அரசு யாரைக்கண்டு எல்லாம் அச்சப்பட்டதோ, யார் தங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்களோ, அவர்கள் எல்லோருக்கும் எதிராக இச்சட்டத்தைப் பயன்படுத்தியது. இந்தச் சட்டம் படிப்படியாக இந்தியா முழுவதிலும் விரிவாக்கப்பட்டது. சுமார் 213 சாதிகளைக் குற்றப்பரம்பரையினர் பட்டியலில் ஆங்கிலேய அரசு இணைத்தது**

பிரிட்டிஷ் காலனிய அரசாங்கத்தின் அரசியல் கொள்கைகள் மற்றும் நவீன பொருளாதாரம் இந்தியச் சமூகத்தில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. குறிப்பாகப் பல பழமையான சமூகங்களின் பாரம்பரிய தொழில்கள் ஒழித்துக்கட்டப்பட்டன. இதனால் ஊர்சுற்றி வணிகம் செய்யும் சில நாடோடி இனக்குழுக்கள் தங்கள் அன்றாட வருமானத்தை இழக்கத் தொடங்கினர். மேலும், இவர்கள் பிரிட்டிஷாரின் நவீன சந்தைப்படுத்தல் கொள்கைக்கு எதிரிகளாக இருந்தனர். அவர்கள் ஊர் ஊராக மக்களது வாழ்விடங்களுக்குச் சென்று நேரடியாகப் பொருள்களைப்

பண்டமாற்று முறையில் விற்றனர். இது ஒரு இடத்தில் கூடி பொருள்களை விற்கின்ற நவீன சந்தை முறைக்கு எதிராக இருந்தது. எனவே, இந்த நாடோடி வணிகர்களைக் கட்டுப்படுத்தி ஒரு இடத்தில் நிலையாக வைக்க வேண்டிய அவசியம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டது. இதனால் நாடோடி வணிகர்களும் சந்தை வணிகர்களும் பல இடங்களில் மோதிக்கொண்டனர். தங்களது பாரம்பரிய தொழில் நசிந்துபோவதை எண்ணி ஆத்திரமடைந்த நாடோடி வணிகர்கள், சந்தை வணிகர்களின் அங்காடிகளையும் கிழங்குகளையும் பொருள்களையும் கைப்பற்றும் நடவடிக்கைகளில் இறங்கினர். அதனாலேயே அவர்கள் கொள்ளையிடும் சமூகமாக அடையாளப்படுத்தப்பட்டனர். இதில் குறிப்பாக பஞ்சாரக்காரர்கள், லம்பாடிகள், குறவர்கள் போன்ற இனக்குழுக்கள் பாரம்பரியமாக உப்பு வணிகமும் அவற்றோடு சேர்த்து சில தானிய வகைகளையும் கால்நடைகள் மூலம் ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்து வந்தனர். ஆங்கிலேய அரசு 1880-களில் உப்பு உற்பத்தியைத் தன் வசப்படுத்தியது. மேலும், உற்பத்தி முழுக்க தானே மேற்கொள்ள முடிவு செய்தது. இதனால் ஊர் சுற்றும் வணிகர்கள் உப்பினை அரசிடமிருந்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தாங்கள் நெடுங்காலமாகக் கால்நடைகளைக் கொண்டு எடுத்துச்சென்ற பொருள்களை, அரசாங்கம் ரயில் மூலம் எடுத்துச் செல்வதைப்பார்த்து ஆத்திரமடைந்த அவர்கள், எதிர் நடவடிக்கைகளில் இறங்கினர். இதனைக் காரணம் காட்டி இவர்கள் ரயில் கொள்ளையர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

**குற்றப்பரம்பரைச் சட்டம் (Criminal Tribes Act) திருத்தங்களுக்குப் பிறகு 1911-ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, அதில் மேலும் சில சாதிகளையும் பழங்குடிகளையும் குற்ற மரபினராக அறிவித்து, அவற்றைப் பதிவுசெய்யத் துவங்கினர்**

மேற்கூறியச் சூழ்நிலைகளை மையமாகக் கொண்டுதான் இந்தியாவில் குற்றப்பரம்பரைச் சட்டம் இயற்றப்பட்டது. இறுதியில் வட இந்தியாவில் கள்ள நாணயம் தயாரிப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்த கூட்டத்தாரைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிதான் குற்றப்பரம்பரைச் சட்டம் என வடிவத்தைப் பெற்றது. முதலில் கைது ஆணை இல்லாமல் கைது செய்யவும், ஜாமீனில் வெளியே வர முடியாதபடிக்கும் சில சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இறுதியில் இவற்றையெல்லாம் தொகுத்துக் குற்றத்தொழில் செய்பவர் எனக் கருதப்படுகின்ற இனக்குழுக்களை வகைப்படுத்தி, அவர்களது செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து, அவர்களை ஒரு இடத்திற்குள் கட்டுப்படுத்தி வைக்கின்ற வகையில் 1871 ஆம் ஆண்டு குற்றப்பரம்பரைச் சட்டம் இயற்றப்பட்டது.

**சேலம் மாவட்டத்தில் 1923-ல் உப்புக்குறவர்களும், 1924-ல் சக்கரப்பள்ளிக் குறவர்களும், மொண்டக் குறவர்களும், 1934-ல் சுரமறை ஒட்டர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1918-ல் வலையர்களும் 1922-ல் தொட்டிய நாயக்கர்களும் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.**

1871 ஆம் ஆண்டு குற்றப்பரம்பரைச் சட்டம் (Criminal Tribes Act) வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு எல்லைப் பகுதிகள் மற்றும் பஞ்சாப் ஆகிய வட இந்தியப் பகுதிகளில் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதை மற்ற பகுதிகளுக்கும் அமுல் செய்வதில் நடைமுறைச் சிக்கல் இருந்தது. எனவே, 1896-ல் இந்தச் சட்டம் திருத்தப்பட்டது. 1896-ல் செய்யப்பட்ட திருத்தங்கள் மேலும் கூர்மையாக்கப்பட்டு 1911 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

இதற்கிடையில், ஆங்கிலேய காலனி அரசு 1880-ல் புதிய வனப் பாதுகாப்பு சட்டத்தினை இயற்றியது. அதுவரை அந்தக் காடுகளையே தங்களது சொந்தமாகக் கருதி வாழ்ந்துவந்த மலைவாழ் மக்களின் வேட்டையாடும் தொழில் முற்றிலும் சட்டவிரோதமாக்கப்பட்டது. ஆனால், அவர்கள் தங்கள் வாழ்வியல் தேவைக்காகத் தொடர்ந்து வேட்டையாடியும் வனங்களில் கிடைக்கின்ற அபூர்வ பொருள்களை எடுத்துச் சென்று வணிகம் செய்தும் வந்தனர். அதனையே காரணம் காட்டி அவர்கள் தொடர்ந்து சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் என்று கூறி அவர்களும் குற்ற மரபினராக அறிவிக்கப்பட்டனர். அந்த வரிசையில் 'ஏனாதி' கள் உள்பட மலைவாழ் குடிகள் குற்றப்பரம்பரையாகக் கருதப்பட்டனர்.

குற்றப்பரம்பரைச் சட்டம் (Criminal Tribes Act) திருத்தங்களுக்குப் பிறகு 1911-ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, அதில் மேலும் சில சாதிகளையும் பழங்குடிகளையும் குற்ற மரபினராக அறிவித்து, அவற்றைப் பதிவுசெய்யத் துவங்கினர். அதன்படி, சென்னை மாகாணம் முழுவதும் மொத்தம் 14 லட்சம் மக்கள் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

குறிப்பாகச் சொல்லப்போனால், ஆங்கில அரசு யாரைக்கண்டு எல்லாம் அச்சப்பட்டதோ, யார் தங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்களோ, அவர்கள் எல்லோருக்கும் எதிராக இச்சட்டத்தைப் பயன்படுத்தியது. இந்தச் சட்டம் படிப்படியாக இந்தியா முழுவதிலும் விரிவாக்கப்பட்டது. சுமார் 213 சாதிகளைக் குற்றப்பரம்பரையினர் பட்டியலில் ஆங்கிலேய அரசு இணைத்தது. 1911-ல் இயற்றப்பட்ட குற்றப்பரம்பரைச் சட்டம் சென்னை மாகாணத்திற்கு விரிவுபடுத்தப்பட்ட போதிலும், அச்சட்டத்தை அமல்படுத்துவதற்கான இறுதி வரையறைகள் 1913 மே மாதத்தில் தான் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் 89 சாதிகள் இந்த பட்டியலில் இடம்பெற்றன.

மாநிலங்கள் மற்றும் மாவட்டவாரியாகக் குற்றப்பரம்பரைகளாக அறிவிக்கப்பட்டவர்களின் பட்டியல்:

முதலில் சென்னை இராஜதானியில் இருந்த தெலுங்கு மாவட்டங்களில் குற்றப்பரம்பரைகளாக அறிவிக்கப்பட்டவர்களைப் பார்க்கலாம்.

- **கன்ஜம் மாவட்டத்தில்** 1917-ல் தெலுசு, பாமுலாஸ் பழங்குடிகளும்,1923-ல் யுன்தாஸிஸ் என்ற பழங்குடியும் குற்றப்பரம்பரையாக அறிவிக்கப்பட்டன.

- **விசாகப்பட்டினம் மாவட்டத்தில்** 1914-ல் கொண்ட பாட்டூஸ் என்ற சாதியும், 1915-ல் ரோஸிஸ் என்ற பழங்குடியும், 1916-ல் கிண்டாலி என்ற பழங்குடியும், 1921-ல் சாலுங்காஸ் என்ற பழங்குடியும் குற்றப்பரம்பரையாக அறிவிக்கப்பட்டன.

- **கோதாவரி மாவட்டத்தில்** 1913-ல் டொங்க தாசாரிகளும், 1915-ல் நக்கலார்களும், 1925-ல் அணிப்பால் மாலாக்களும், எஜென்ஜி மாவட்டத்தில் 1926-ல் ஒரிய டொம்பர்களும் குற்றப்பரம்பரையாக அறிவிக்கப்பட்டன.

- **கிருஷ்ணா மாவட்டத்தில்** 1913-ல் டொங்க எரக்குலக்களும், டொங்க ஒட்டர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **குண்டூர் மாவட்டத்தில்** 1923-ல் ஜாகிர் பள்ளி மாதியாக்களும்,

- **நெல்லூர் மாவட்டத்தில்** 1913-ல் டொமராக்களும், கர்னூல் மாவட்டத்தில் 1918-ல் போயர்களும், 1923-ல் சுகாலிகளும் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **பெல்லாரி மாவட்டத்தில்** 1913-ல் டொங்க எறக்குலர்களும், 1923-ல் டொங்க தாசாரிகளும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **அனந்தப்பூர் மாவட்டத்தில்** 1923-ல் டொங்கஊர் குறவர்கள் இதன்கீழ் கொண்டு வரப்பட்டனர்.

- **கடப்பா மாவட்டத்தில்** 1923-ல் தோகை மலைக் குறவர்களும், கேப்மாரிகளும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **சித்தூர் மாவட்டத்தில்** 1924-ல் ஏனாதிகளும், இருளர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

இனி, தமிழ்நாட்டில் எந்தெந்த இனக்குழுக்கள்/சாதிகள் குற்றப்பரம்பரையாக அறிவிக்கப்பட்டன என்பதைப் பார்ப்போம்.

**ராதாரிச் சீட்டு வாங்க அதிகாரிகளுக்கு இரண்டு இடங்களில் லஞ்சம் தரவேண்டி இருந்தது. இந்த லஞ்சப்பணத்திற்காக அம்மக்கள் ஒரு கோழியை விற்றுதான் சமாளிக்க வேண்டியிருந்தது எனில் அடக்குமுறையைப் புரிந்து கொள்ளலாம்**

- **வட ஆற்காடு மாவட்டத்தில்** 1913-ல் தோகைமலை குறவர்களும், சேலம் மேல்நாடு குறவர்களும், 1914-ல் வாகனூர் பறையர்களும், ஜோகிகளும், 1916-ல் சக்கரப்பள்ளிக்குறவர்களும், 1922-ல் தொட்டிய நாயக்கர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **செங்கல்பட்டு மாவட்டத்தில்** 1913-ல் வேப்பூர் பறையர்களும், 1914-ல் ஜோகிகளும், 1923-ல் கல்ஒட்டர்களும் குற்றப்பரம்பரைகளாக அறிவிக்கப்பட்டனர்.

- **தென்னாற்காடு மாவட்டத்தில்** 1913-ல் ஆத்தூர் கீழ்நாடு குறவர்களும், 1914-ல் வெள்ளிக்குப்பம் படையாட்சிகளும் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **சேலம் மாவட்டத்தில்** 1923-ல் உப்புக்குறவர்களும், 1924-ல் சக்கரப்பள்ளிக் குறவர்களும், மொண்டக் குறவர்களும், 1934-ல் சுரமறை ஒட்டர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **கோயம்புத்தூர் மாவட்டத்தில்** 1918-ல் வலையர்களும் 1922-ல் தொட்டிய நாயக்கர்களும் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **சென்னை நகரத்திற்குள்** வாழ்கின்ற குறவர்கள் 1924-ல் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **திருச்சி - தஞ்சை மாவட்டங்களில்** 1913-ல் கந்தர்வகோட்டைக் குறவர்களும், 1915-ல் கூத்தாப்பல் கள்ளர்களும், 1917-ல் ஊராளிக்கவுண்டர்களும், 1923-ல் பெரிய சூரியூர் கள்ளர்களும், 1924-ல் வேட்டுவக்கவுண்டர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **மதுரை மாவட்டத்தில்** 1918-ல் பிறமலை கள்ளர்களும், 1915-ல் செட்டிநாட்டு வலையர்களும், 1923-ல் மற்ற வலையர்களும், 1922-ல் தொட்டிய நாயக்கர்களும் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **இராமநாதபுரம் மாவட்டத்தில்** 1915-ல் உப்புக்குறவர்களும், 1916-ல் வடுவார்பட்டிக் குறவர்களும், கரும்பவரர்களும், 1923-ல் செம்பநாட்டு மறவர்களும், 1932-ல் காலாடி என்ற பள்ளர் பிரிவினரும், 1933-ல் ஆப்பநாடு கொண்டையன் கோட்டை மறவர்களும், 1934-ல் கல்ஒட்டர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- **திருநெல்வேலி மாவட்டத்தில்** 1919-ல் பூலம் மறவர்களும், 1932-ல் கோயில்பட்டி உப்புக்குறவர்களும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

இந்தச் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் எந்த ஒரு சாதியையும் குற்றப்பரம்பரையாக அறிவிக்கலாம்; அதை நீதிமன்றம் கேள்விகேட்க முடியாது; குற்றவாளி-நிரபராதி என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது; ஒரு சாதியில் பிறந்த அனைவரும் பிறவி குற்றவாளிகள்தான் என்றது அந்தச் சட்டம். பட்டியலில் இடம்பெற்றுள்ள ஜாதியைச் சேர்ந்த 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்கள் பெயர், முகவரி மற்றும் கைரேகையைக் காவல்நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும். இரவில் ஆண்கள் யாரும் தங்கள் வீட்டில் தூங்கக்கூடாது. காவலர் கண்காணிப்பில் பொது மந்தை அல்லது காவல் நிலையத்தில்தான் தூங்கவேண்டும். வயதானவர் மற்றும் புதிதாகத் திருமணமானவர்கள்கூட விதிவிலக்கு கிடையாது. சூரியன் தோன்றி மறையும் வரை அவர்கள் வீட்டிலிருந்து வேறு எங்காவது ஊர்களுக்குப் போய்விட்டு வர வேண்டுமென்றால் கூட ராதாரிச் சீட்டு (கிராம தலைவர்களால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டு) வாங்க வேண்டும். இந்த விதிகளை மீறினால் 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும். கட்டுப்பாட்டு எல்லைக்கு வெளியே வந்தால் தலையாரிகூட அவரைக் கைது செய்யலாம். சந்தேகம் வரும்படி ஒருவர் நடந்துகொண்டால்கூட அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை உண்டு. இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு தீப்பெட்டியும் கத்தரிக்கோலும் கையில் இருந்தது என்பதற்காக ஒருவர்மீது குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இப்படி ஏராளமான அடக்குமுறைப் பிரிவுகள் அந்த சட்டத்தில் இருந்தன.

இச்சட்டத்தினால் காவல்துறையின் அடக்குமுறை அத்துமீறி இருந்தது. ராதாரிச் சீட்டு வாங்க அதிகாரிகளுக்கு இரண்டு இடங்களில் லஞ்சம் தரவேண்டி இருந்தது. இந்த லஞ்சப்பணத்திற்காக அம்மக்கள் ஒரு கோழியை விற்றுதான் சமாளிக்க வேண்டியிருந்தது எனில் அடக்குமுறையைப்

புரிந்து கொள்ளலாம். இந்த அடக்குமுறையால் விவசாய வேலை கெட்டுப்போனது, வறுமை வளர்ந்தது, பொய் வழக்குகளால் நீதிமன்றங்களுக்கு அலைந்து சொற்ப நிலங்களையும் அம்மக்கள் இழந்தனர்.

தமிழகத்தில் கைரேகைச் சட்டத்தில் யாரையெல்லாம் சேர்க்க வேண்டும் என்ற பட்டியலைத் தயாரித்து அனுப்ப மாவட்ட போலீசாருக்கு 1914-ல் மதராஸ் போலீஸ் தலைமை உத்தரவிட்டது. 4.5.1914 -ல் மதுரை கீழக்குயில்குடி பகுதியில்தான் தமிழ்நாட்டில் முதன்முதலில் இச்சட்டத்தை ஆங்கிலேயர் காவல்துறை அறிமுகப்படுத்தியது.

**ஆயுதங்களைக் கொண்டு நம்மை அடிபணிய வைக்க ஆங்கில அரசு நினைக்கிறது. நிரபராதிகளைக் குற்றவாளிகளாகச் சித்தரித்து, காவல் நிலையத்தில் கைரேகைப் பதியச்சொல்வது நமக்குப் பெரிய அவமானம். உயிரினும் மானம் பெரிது. இதற்கு அடிபணியாமல் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துப் போராடுவோம்' என்று முடிவு செய்தனர்.**

மதுரை மாவட்ட உரிமையியல் நீதிபதி அந்த பட்டியலில் கள்ளர்கள் பதிவு செய்யப்படுவதை ஆரம்பித்து வைத்தார். முதற்கட்டமாக இந்த சட்டத்தின்கீழ் 320 ஆண்களில் 70 பேர் தண்டிக்கப்பட்டார்கள். நீதிபதியுடைய பரிந்துரையினை ஏற்றுக்கொண்டு குற்றப்பரம்பரையாகப் பிரகடனம் செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டார்கள். அதன் காரணமாக 16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு பதிவு செய்துகொண்டவர்கள் தங்கள் இருப்பிடம் மற்றும் வெளியூர் செல்லுதல் குறித்த தகவல்களைக் குற்றப்பரம்பரையினர் சட்டப்பிரிவு 10-ன் படி அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

கைரேகைச்சட்டத்தின்படி பதிவு செய்யும் வேலை மதுரை திருமங்கலம் தாலுகாவில் தொடங்கியது. காளப்பட்டி, போத்தம்பட்டி, பெருங்காமநல்லூர், தும்மக்குண்டு, குமரன் பட்டி ஆகிய ஊர்கள் முதல் கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டன. பதிவுசெய்தல் வேகமாக நடந்துவந்தது என்றாலும், அது அவ்வளவு எளிதானதாக இல்லை.

பதிவுசெய்து முடிப்பதற்கு, மாவட்ட உரிமையியல் நீதிபதியாக இருந்த ரெய்லி 1920 ஜனவரி முதல் தேதிவரை காலக்கெடு விதித்திருந்தார். ஆனால், தேர்வு செய்யப்பட்டிருந்த 158 கிராமங்களில் 11 கிராமங்களில் மட்டுமே பதிவுசெய்யும் பணி முடிக்கப்பட்டு இருந்தது.

**துப்பாக்கிச் சூட்டின் போது போராடிய மக்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்து உதவியதற்காக 'மாயாக்காள்' என்ற வீரப்பெண்மணியை காவலர்கள் தாக்கி, துப்பாக்கியின் கத்தியினால் குத்திக் கொலை செய்தனர்**

கள்ளர் மக்கள் தொகை சுமார் 60,000 ஆக இருந்தபோதும் 3000 பேர் மட்டுமே பதிவு செய்தனர். மேலும், ஆயிரம் பேர் மட்டுமே பதிவு செய்வதற்கு வந்துள்ளனர் என்ற தகவல் அறிந்து அதிகாரிகள் கோபம் கொண்டனர். அதிக எண்ணிக்கையில் கள்ளர்களைப் பதிவு செய்யவேண்டியது அவசியமானது என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தொடர்ந்து கூறிவந்தார். அதுமட்டுமல்லாமல் குற்றப்பரம்பரையாகப் பதிவு செய்த ஒவ்வொருவரும் தன் இருப்பிடத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள புறக்காவல் நிலையத்தில் பகல் 11 மணியில் இருந்து மாலை 4 மணிக்குள் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அரசின் குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு அப்பாவி மக்களிடம்கூட எதிர்ப்பு கிளம்பியது. நாடெங்கிலும் இச்சமூக மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கினர். அதேநேரத்தில் அந்த சமுதாயத்தில் செல்வாக்குடனும் வசதியுடனும் இருக்கும் நபர்கள்மீது போலீசாரால் குற்றம்சாட்ட முடியவில்லை. மதுரை மாவட்டம் பிறமலை கள்ளர்கள் அதிகம் வாழும் பகுதியில் அதிகாரிகள் இந்தச் சட்டத்தை வேகமாக அமல்படுத்தி வருகையில், இறுதிக்கட்டமாக பெருங்காமநல்லூர் கிராமத்திற்கு வந்தனர். அந்தச் சட்டத்திற்கு அடிபணிய அந்தக் கிராம மக்கள் மறுத்தனர். சத்தியத்துக்கும் நீதிக்கும் உகந்த சட்டங்களுக்குத்தான் நாங்கள் கட்டுப்படுவோம் என்றும் சமூகநீதிக்கு எதிரான சட்டத்திற்கு தாங்கள் கட்டுப்பட முடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். சட்டத்தை அங்கே அமல்படுத்தியே ஆகவேண்டும் என்பதில் மதுரை மாவட்ட ஆட்சியர் தீவிரமாக இருந்தார்.

அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்கள் என்று எண்ணிய ஆங்கிலேய அரசு, அங்கே குதிரைப்படை மற்றும் ஆயுதப் படையோடு வந்து அம்மக்களை அச்சுறுத்தியது. குற்றவாளி - அப்பாவி எனப் பேதமில்லாமல் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் குற்றவாளி எனச் சட்டம் போட்டது தவறு என்று அந்த மக்கள் எடுத்துரைத்த போதிலும், அதை வெள்ளையரசு கேட்க மறுத்தது. பலமுறை இந்த வாக்குவாதத்தை அதிகாரிகளிடம் அம்மக்கள் நடத்தினர்.

நாள்களும் நகர்ந்து கொண்டிருந்தன. அதிகாரிகள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். 2 மார்ச் 1920 அன்று கிராமங்களின் அருகில் ரேகைப்பதிவு அதிகாரிகளுடன் போலீசார் முகாமிடத் தொடங்கினர். கிராமங்களுக்குச் செல்வதற்குமுன் கிராமத்துப் பெரிய ஆள்களும் செல்வாக்கான நபர்களும் போலீசாரை அணுகி, 'இது பெரிய அநியாயம்; கள்ளர்கள் விவசாயிகள்; காட்டுமிராண்டிகள் அல்ல. எனவே, நீங்கள் எங்கள் கிராமத்துக்கு வந்து ரேகை எடுத்தால் அதை ஏற்க மாட்டோம்' என எதிர்ப்புக்குரல் எழுப்பினர். அத்தோடு, 'நாங்கள் மதுரைக்குச் சென்று கலெக்டரைப் பார்த்துப் பேசிக்கொள்கிறோம்' என்றனர். அதையடுத்து அதிகாரிகள் தங்கள் நடவடிக்கையினைத் தள்ளிவைத்தனர். பின்னர் அங்கிருக்கும் பெரியவர்கள் மதுரை சென்று கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

இதனிடையே பெருங்காமநல்லூரில் வசிக்கின்ற ஏழு வயதுக்கு மேற்பட்ட கள்ளர் சாதியைச் சேர்ந்தவர்கள் 1920 ஏப்ரல் 2 மற்றும் 3 ஆம் தேதி காலை 11 மணிக்குப் பதிவு செய்வதற்காக தனித்துணை ஆட்சியர் முன் ஆஜராக

வேண்டும் என மதுரை மாவட்ட உரிமையியல் நீதிபதி 29 மார்ச் 1920 அன்று உத்தரவிட்டார்.

இந்நிலையில், 1 ஏப்ரல் 1920 அன்று பெருங்காமநல்லூர் மற்றும் பிற கிராமங்களைச் சேர்ந்த அம்மக்கள் கோயிலில் கூடினர். 'ஆயுதங்களைக் கொண்டு நம்மை அடிபணிய வைக்க ஆங்கில அரசு நினைக்கிறது. நிரபராதிகளைக் குற்றவாளிகளாகச் சித்தரித்து, காவல் நிலையத்தில் கைரேகைப் பதியச்சொல்வது நமக்குப் பெரிய அவமானம். உயிரினும் மானம் பெரிது. இதற்கு அடிபணியாமல் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துப் போராடுவோம்' என்று முடிவு செய்தனர்.

**குற்றம்சாட்டப்பட்ட கள்ளர் மக்களிடத்தில் அதிகாரம் செய்ய பிற சாதி நபர்களையே வெள்ளையர் அரசு பயன்படுத்தியது. இது பிறமலை கள்ளர்கள் பிற சாதியினர் முரண்பாடு வளரக் காரணமாயிருந்தது.**



குற்றப்பரம்பரை சட்டத்திற்கு எதிரான பரப்புரையில் திரு.முத்துராமலிங்கத் தேவர் மற்றும் திரு. ரதராஜுலு நாயுடு பங்கேற்ற போது

பெருங்காமநல்லூர் கிராமத்தின் அருகில் காவல்துறையினர் முகாமிட்டனர். போலீஸ் படையினர் வருவதைக்கண்டு மக்கள் உரிமைக்காகக் குரலெழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'கிராமத்தினுள் போலீசை நுழைய விடமாட்டோம்; வெளியேறுங்கள்!' என்று முழக்கமிட்டனர். அந்த நேரத்தில் தலைவர்களுக்கும் போலீசாருக்கும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அது பயனற்றுப்போகவே மக்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். போலீசார் போராட்டத்திற்குச் செவிசாய்க்காமல் மக்களை நோக்கி முன்நகர்ந்தனர். மக்களுடைய போர்க்குரலை அடக்கத் துணை கலெக்டர் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த ஆணையிடுமாறு உரிமையியல் நீதிபதிக்கு ஆலோசனைக் கூறினார். அவரது ஆலோசனைப்படி ஆணை கொடுக்கப்பட்டது. துப்பாக்கிச் சப்தத்தைக்கேட்ட இளைஞர்கள் சிலர் விரைந்து பிரிட்டிஷ் போலீஸ் படையை எதிர்கொண்டனர்.

**மதுரை, பாளையங்கோட்டை, கோவை சிறைகளில் 'குற்றப்பரம்பரைச் சட்டத்தினால்' தண்டிக்கப்பட்டவர்கள் சாதிப்பட்டியலைத் திரட்டினோம். சிறையில் சகலசாதியினரும் இச்சட்டத்தினால் தண்டிக்கப்பட்டதைக் கண்டறிந்தோம்.**

பிரிட்டிஷாரின் துப்பாக்கி 17 பேரின் உயிரைக் காவுவாங்கியது. வீரமரணம் அடைந்த 17 பேரின் உடல்களையும் கட்டை வண்டியில் ஏற்றி, உசிலம்பட்டிக்கு அருகிலுள்ள ஆற்றங்கரையில் ஒரே குழியில் புதைத்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டின் போது போராடிய மக்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்து உதவியதற்காக 'மாயாக்காள்' என்ற வீரப்பெண்மணியை காவலர்கள் தாக்கி, துப்பாக்கியின் கத்தியினால் குத்திக் கொலை செய்தனர். இவ்வாறான காட்டுமிராண்டி துப்பாக்கிச்சூட்டில் நிலைகுலைந்து சிதறியோடிய மக்களில் சுமார் 200 பேரைப் பிடித்து, கையை ஒரு காலுடன் இணைக்கும் நெடிய சங்கிலியால் விலங்கிட்டு ஆடு மாடுகளைப் போல் நடைப்பயணமாக சுமார் 20 கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருமங்கலத்திலிருக்கும் நீதிமன்றத்தில் ரிமாண்ட் செய்தனர் அதிகாரிகள்.

## பெருங்காமநல்லூர் படுகொலைக்கு எதிரான போராட்டம்

இவ்வாறு சிறைப்பட்ட மக்களுக்காக வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் ரிமாண்ட் நீதிமன்றத்தில் வழக்காடினார். இவரது பங்களிப்பினால் இந்தப் போராளிகளுக்கு விடுதலை கிடைத்தது. தனது வழக்காடுதலுக்காக எவ்வித பணத்தையும் பெற்றுக்கொள்ளாமல் இப்போராளிகளுக்காகத் தொண்டாற்றினார்.

வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் ஒரு மலையாளி. மதுரையில் தங்கி வக்கீல் தொழில் செய்துவந்தார். இவர்தான் முதல்முறையாகக் கைரேகைச் சட்டத்தினை சட்டப்பூர்வமாக எதிர்கொள்வதற்கு அம்மக்களுக்கு உதவி செய்துவந்தவர். அவரது இத்தகைய முயற்சி 1915-ல் இருந்து தொடங்கியது. பெருங்காமநல்லூரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுக்குப் பிறகு கிட்டத்தட்ட 200-கும் மேற்பட்ட கிராம மக்களை ஒருங்கிணைத்து மதுரையில் மிகப்பெரிய மக்கள் போராட்டத்தை முதலில் நடத்தினார். பெருங்காமநல்லூர் படுகொலையை போலீசார் விசாரிக்கக்கூடாது என்றும் ஒரு நீதிபதி தலைமையிலான விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்றும் போராட்டம் நடத்தினார். வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப்பின் மீது இம்மக்கள் கொண்ட அன்பின் காரணமாக அப்பகுதி கள்ளர் மக்கள் அவரை 'ரோசாப்பூ துரை' என்றே அழைத்தனர். அவரது நினைவாக இன்றுவரை குழந்தைகளுக்கு ரோசாப்பூ என்று பெயர் சூட்டும் வழக்கம் இருக்கிறது.

பெருங்காமநல்லூர் அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. எழுத்தறிவற்ற ஏழை அப்பாவி விவசாயிகள் மீது துப்பாக்கிச்சூடு நடந்தது ஏற்க இயலாதது என்றும் அந்தப் பகுதி மக்களின் கல்வி சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கி நிவாரணம் வழங்கிட வேண்டும் என்றும் பாராளுமன்றம் அறிவுறுத்தியது. கள்ளர் சமுதாய சீரமைப்புக்காகத் தனியே ஒரு துறையை உருவாக்கி நலத்திட்டங்கள் நிறைவேற்ற இந்தியாவில் இருந்த ஆங்கில அரசு நடவடிக்கை எடுத்தது.

> **1937-ல் தேர்தலில் வெற்றிபெற்றால் ரத்து செய்வோம் என்று காங்கிரஸ் பிரச்சாரம் செய்து வாக்குறுதி கொடுத்தது. காங்கிரஸின் இந்த வாக்குறுதியை நம்பிய திரு.முத்துராமலிங்கத் தேவர் காங்கிரஸிற்கு ஆதரவாகப் பிரச்சாரமும் செய்தார் ஆனால், ஆட்சிக்கு வந்த பின் பல மாதங்கள் ஆகியும் இராசாசி இச்சட்டத்தை ரத்து செய்ய முன்வரவில்லை**

## குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கோபாலசாமி ரெகுநாத ராஜாளியார் என்பவர் தஞ்சை திருச்சி மாவட்ட கள்ளர்களைக் குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்க 1911 லியே ஐந்தாம் ஜார்ஜ் மன்னரை நேரில் சந்தித்துப் பேசிக் குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து தஞ்சை பகுதி ஈச நாட்டுக் கள்ளர்களை மீட்டிருக்கிறார்.

அதேபோல, செய்யூர் ஆதிதிராவிடர் பேரவை, வன்னியகுல சத்திரிய சபா ஆகிய அமைப்புகள் போராடி அந்தந்த ஜாதிகளைப் பட்டியலில் இருந்து விடுவித்தன.

வழக்கறிஞர் ஜோசப்பிற்கு பிறகு இடதுசாரி தோழர்கள் இச்சட்டத்திற்கு எதிரான பிரச்சாரங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தனர். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அவர்களது போராட்டத்தின் அடிப்படையில் இக்கொடுமைக்கு முடிவுகட்டப் போராடினர்.

இத்தனை எதிர்ப்பிற்குப் பின்பும் தொடர்ந்து நடந்து வந்த இந்தக் கொடுமையை எதிர்த்து வெகுமக்கள் திரள் போராட்டத்தின் தேவையைப் பற்றி திரு.முத்துராமலிங்கத்தேவர், மதுரையில் தோழர். ஜீவானந்தத்திடம் பேசி பிரச்சாரத்திற்கு ஒருங்கிணைத்தார். பின்னர் தோழர்.ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியின் பிற தோழர்களான தோழர் ராமமூர்த்தி, தோழர். சானகி அம்மாள் ஆகியோருடன் சேர்ந்து திரு.முத்துராமலிங்கத் தேவரும் மக்களைத் திரட்டி, குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு எதிரான தொடர் பிரச்சாரங்களை, போராட்டங்களை நடத்தினார்கள். உசிலம்பட்டிக்கு அருகே இருந்த கிராமங்களில் இவர்கள் மூவரும் பிரச்சாரம் மேற்கொண்டதாகத் தோழர். ஜீவா தன்னிடம் தெரிவித்திருந்ததை மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் தோழர். தா. பாண்டியன் தனது, 'ஜீவாவும் நானும்' புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். இப்பிரச்சாரங்களால் அம்மக்கள் திரண்டெழுந்தார்கள். இவர்கள் திரள அரசின் கடுமையான ஒடுக்குமுறையும், அதனால் ஏற்பட்ட மோசமான வறுமையும் காரணம்.

> **ஆப்பநாடு மறவர் சமூக மக்கள் திரு.முத்துராமலிங்க தேவர் தலைமையில் திரண்டனர். 'ரேகைச்சட்டம் எதிர்ப்பு கமிட்டி' அப்போதுதான் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கமிட்டி பிரபல காங்கிரஸ் தலைவர் திரு. வரதராஜலு நாயுடு தலைமையிலான மாநாட்டை 1934இல் மே மாதம் 12-ஆம் தேதி கமுதி அருகே உள்ள அபிராமம் என்ற ஊரில் கூட்டியது**

'குற்றப்பரம்பரைச் சட்டம் குறிப்பாக செக்கானூரணி முதல் கூடலூர் வரையிலான பிறமலை கள்ளர் சமூக மக்களைத் திரட்டுவதற்கானப் பிரச்சாரங்களை ஊர் ஊராகச் சென்று திரு.முத்துராமலிங்க தேவர் தோழர். ஜீவா மற்றும் தோழர். ராமமூர்த்தி ஆகிய மூவரும் மேற்கொண்டனர். அந்த காலத்தில் கார் பயணம் என்பது அபூர்வமானது என்பதால் மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் சாலையே இல்லாத வரப்புகளில் நடந்து சென்றும் பிரச்சாரங்களை மேற்கொண்டு இருக்கின்றனர். பிரச்சாரம் செய்யச் சென்ற அவர்களுக்கு ஏழ்மையின் பிடியில் இருந்த மக்கள், கயிற்றுக் கட்டிலில் அமர வைத்து மோர் - கூழ் மற்றும் கடித்துக்கொள்ள வெங்காயம் - கருவாடு ஆகியவற்றைக் கொடுத்து அன்பினை வெளிப்படுத்தினார்கள்' என்று அப்புத்தகத்தில் பதிவு செய்கிறார். குற்றப்பரம்பரை நிகழ்வைப் பற்றிய பதிவில்," குற்றச்சாட்டப்பட்ட கள்ளர் மக்களிடத்தில் அதிகாரம் செய்ய பிற சாதி நபர்களையே வெள்ளையர் அரசு பயன்படுத்தியது. இது பிறமலை கள்ளர்கள் -பிற சாதியினர் முரண்பாடு வளரக்காரணமாயிருந்தது. சில சமயங்களில், தவறுகளைத் தண்டிக்கிறோம் என்கிற பெயரில் ஊரின் முக்கியமான நபரின் முதுகில் தாழ்த்தப்பட்ட இளைஞனை ஏற்றிச் சுமக்க வைப்பார்கள். ஏற மறுத்தால் தாழ்த்தப்பட்ட இளைஞனை அடிப்பார்கள். ஏறினால் அடுத்த நாள் என்னவாகும் என்று சொல்ல இயலாதுஞ்" இவ்வாறு சமூகங்களிடையே முரண்பாட்டை வெள்ளையருக்கு ஏவல் புரிந்த காவல்துறை விதைத்துக் கூர்மைப்படுத்தியது. இந்த சச்சரவு இன்றளவும் தொடர்கதையாவதற்கு காவல்துறை இந்த சூழ்ச்சிகளை இன்றும் பின்பற்றுவதே காரணம் எனத் தோழர். தா. பாண்டியன் தனது குறிப்பில் தெரிவிக்கிறார்.

தோழர்.ஜீவா இச்சட்டத்தின் பாதிப்பு குறித்து மிகமுக்கியத் தகவலைப் பதிகிறார். "..இந்தச் சட்டத்திற்கு எதிராகப் பாதிரியார்களையும் திரட்ட முடிந்தது. மேலும் மதுரை, பாளையங்கோட்டை, கோவை சிறைகளில் 'குற்றப்பரம்பரைச் சட்டத்தினால்' தண்டிக்கப்பட்டவர்கள் சாதிப்பட்டியலைத் திரட்டினோம். சிறையில் சகலசாதியினரும் இச்சட்டத்தினால் தண்டிக்கப்பட்டதைக் கண்டறிந்தோம். (அந்த எண்ணிக்கையில்) இந்தக் கள்ளர் சாதியினர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. பெரும்பாலும், ஆடு-கோழி திருடிய வழக்காகத்தான் இருந்தது" என்கிறார். இந்தத் தகவலைக் கூர்ந்து நோக்கும் போது, வெள்ளையரசு மதுரை-திருச்சி-

தஞ்சை–கோவை பகுதிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் நடந்த பாளையக்காரர்கள் எழுச்சிக்குப் பின்புலமாக இருந்த பெரும்பாலான குடியான மக்களை ஒடுக்குவதும், இவர்களைப் பிரித்தாள்வதற்கும் இச்சட்டங்களைப் பயன்படுத்தி இருப்பதை நாம் உணரமுடியும்.

இச்சட்டங்களை 1937-ல் தேர்தலில் வெற்றிபெற்றால் ரத்து செய்வோம் என்று காங்கிரஸ் பிரச்சாரம் செய்து வாக்குறுதி கொடுத்தது. காங்கிரஸின் இந்த வாக்குறுதியை நம்பிய திரு.முத்துராமலிங்கத் தேவர் காங்கிரஸிற்கு ஆதரவாகப் பிரச்சாரமும் செய்தார். ஆனால், ஆட்சிக்கு வந்த பின் பல மாதங்கள் ஆகியும் இராசாசி இச்சட்டத்தை ரத்து செய்ய முன்வரவில்லை. எனவே இதை எதிர்த்து அவர் போராடி கைதானார். காங்கிரஸின் ஆட்சியில் கைதான முதல் காங்கிரஸ் தலைவராக திரு.முத்துராமலிங்கத்தேவர் ஆனார். இவரை விடுதலைச் செய்யச் சொல்லி தோழர். ஜீவாவும், தோழர். ராமமூர்த்தியும் தொடர்ந்து போராடினார்கள். ஒருபுறம் 'இந்தியை' திணித்து தமிழர்கள் உரிமையை மறுத்து ஆட்சி நடத்திய பார்ப்பன ஆட்சி மறுபுறத்தில் ஆங்கிலேய அரசின் அடக்குமுறைச் சட்டங்களை நீக்க மறுத்தது. இந்தியை எதிர்த்த தமிழ் அறிஞர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்த பார்ப்பன அரசு குடியானவர்கள் வாழ்வைச் சிதைக்கும் சட்டத்தினைத் தொடர்ந்து அமல்படுத்தி வந்தது. பார்ப்பனர்களின் இந்த துரோகத்தின் பின்பு குற்றப்பரம்பரை எதிர்ப்புப் போராட்டத் தலைமைகள் காங்கிரஸில் நம்பிக்கை இழந்து வெளியேறுகிறார்கள்.

> **குற்றப்பரம்பரைச் சட்ட ஒழிப்புக்கு எதிராக இத்தலைமைகளின் கீழ் பெரும்பட்டாளம் திரண்டது. அதில், திரு. முத்துராமலிங்க தேவர், தோழர்கள் ஜீவானந்தம், இராமமூர்த்தி, ஜானகி அம்மாள், சசிவர்ணத்தேவர், ஆர். வி சுவாமிநாதன், தினகர் சாமி தேவர் ஆகியோரும் அக்கால பிரபல நாடக நடிகர் விஸ்வநாததாஸ் போன்றோரும் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் மேற்கொண்டனர்**

## குற்றப்பரம்பரைச் சட்டமும் இந்திய அளவிலான எதிர்ப்பும்.

ஒருபுறத்தில் மக்கள் திரள் போராட்டம் களத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது போல, மறுபுறத்தில் தேசிய அளவில் இதற்கான எதிர்ப்பும் முனைப்பு பெற ஆரம்பித்தது. 1933-ல் இந்திய அரசியல் சட்ட சீர்திருத்தக்குழு முன்னிலையில் நடந்த விசாரணையில் இந்த சட்டத்தின் கொடுமைகளையும் தீர்க்கும் வழிமுறைகளையும் குறித்து டாக்டர் அம்பேத்கர் பேசினார். "குற்றப் பரம்பரையினர் எனப்படுவோரின் மோசமான நிலையை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். குற்றப்பரம்பரையினர் நாட்டு மக்களிடையே சிதறிக்கிடக்கின்றனர். பம்பாயில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து பேசுகிறேன். இந்த மக்களின் நடமாட்டத்தை ஒழுங்குபடுத்தவும் நலன்களைப் பாதுகாக்கவும் அந்தச் சட்டத்தில் ஆளுநருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தில் பத்தி 108-ன் கீழ் ஆளுநர் சில ஆணைகளைப் பிறப்பிக்கலாம். அதன் மூலம் நாடு முழுவதும் சிதறிக் கிடக்கின்ற அந்த மக்களின் நலனைப் பாதுகாக்கவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க முடியாதா என்ன? ஒருவர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்று ஆளுநருக்குத் தெரிந்தவுடன் அவர்களது நலனுக்கு சில சட்டங்கள் இயற்றலாம் அல்லவா? அவர்கள் ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்தால் என்ன? மக்களிடையே வசித்தால் என்ன? பிரிட்டிஷார் இயற்றிய இந்தச் சட்டம் அந்த குறிப்பிட்ட இன மக்கள் எங்கே இருந்தாலும் அவர்களுக்குப் பாதகமாகவே இருக்கிறது" என்று பேசினார்.

அந்த விசாரணையில்தான் குற்றப்பரம்பரைச் சட்டத்தில் திருத்தம் செய்யவும் குற்றப்பரம்பரைப் பட்டியலில் சேர்க்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கவும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்திய அரசின் ஆளுநரைவிட அந்தந்த மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்பதை இந்திய அரசே பதிவுசெய்யக் காரணமானார், டாக்டர் அம்பேத்கர்.

> **நீதிக்கட்சி அரசு, குற்றப்பரம்பரைச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து, கள்ளர்களில் பெரும்பான்மையான மக்களை அந்த சட்டத்தின் பிடியிலிருந்து விடுவித்தது. கள்ளர் சீரமைப்புக்கு என்று தனியாக ஒரு ஐ.சி.எஸ் அலுவலரை 'லேபர் கமிஷனர்' என்ற பெயரில் நியமித்தது**

இச்சட்டத்திற்கு எதிராக மக்கள் திரள் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இச்சட்டத்தால் பாதிக்கப்படாத மக்களையும் இப்போராட்டத்திற்காக ஒன்றிணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மறவர்களோடு சேர்த்து வடுகப்பட்டி உழவர்களையும் குற்றப்பரம்பரை எதிர்ப்பு அணியின்கீழ் திரட்டினார்கள். அப்போது இச்சட்டத்தை எதிர்த்து ஆப்பநாடு மறவர் சமூக மக்கள் திரு.முத்துராமலிங்க தேவர் தலைமையில் திரண்டனர். 'ரேகைச்சட்டம் எதிர்ப்பு கமிட்டி' அப்போதுதான் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கமிட்டி பிரபல காங்கிரஸ் தலைவர் திரு. வரதராஜுலு நாயுடு தலைமையிலான மாநாட்டை 1934 இல் மே மாதம் 12 ஆம் தேதி கமுதி அருகே உள்ள அபிராமம் என்ற ஊரில் கூட்டியது. இவர்தான் பெரியாருடன் சேரன்மாதேவி குருகுல கிளர்ச்சியில் இணைந்து போராடியவர். மாநாட்டுக்கு 6 மாதத்திற்கு முன்புதான் தந்தை பெரியார் இன்றைய ஆட்சிமுறை ஒழிய வேண்டும் ஏன்? என்ற கட்டுரையை எழுதியதற்காக ராஜ துரோக வழக்கில் கைது செய்யப்பட்டு ராஜா மகேந்திரம் சிறையில் கடுங்காவல் தண்டனையில் இருந்தார். அவரை திரு. வரதராஜுலு நாயுடு நேரில் சந்தித்தார். அதற்குப் பிறகுதான் குற்றப் பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டுக்கு வருகிறார். அதில்தான் குற்றப்பரம்பரைச் சட்டத்தை அடியோடு நீக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மாட்டில், பல்வேறு சாதியப் பிரிவுகளைச் சேர்ந்த, இச்சட்டத்தால் நேரடியாக பாதிப்பிற்குஉள்ளாகாத மக்களும்கூட திரண்டனர். இம்மாநாட்டிற்குப் பிறகு, பிறமலை கள்ளர் மக்களும் போராட்டத்தில் பங்குபெற்றனர்.

அச்சமயத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த சோஷியலிஸ்ட் சிந்தனையாளர்கள் எல்லாம் ஒன்றுகூடி காங்கிரஸ் சோஷியலிஸ்ட் கட்சி என்ற அமைப்பை உருவாக்கினர். குற்றப்பரம்பரைச் சட்டம் ஒழிப்பு என்பது காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் அரசியல் அஜெண்டாக்களில் ஒன்றாக இணைக்கப்பட்டது. குற்றப்பரம்பரைச் சட்ட ஒழிப்புக்கு எதிராக இத்தலைமைகளின் கீழ் பெரும்பட்டாளம் திரண்டது. அதில், திரு.முத்துராமலிங்க தேவர், தோழர்கள் ஜீவானந்தம், இராமமூர்த்தி, ஜானகி அம்மாள், சசிவர்ணத்தேவர், ஆர். வி சுவாமிநாதன், தினகர் சாமி தேவர் ஆகியோரும் அக்கால பிரபல நாடக நடிகர் விஸ்வநாததாஸ் போன்றோரும் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் மேற்கொண்டனர். ஜானகி அம்மாள் பாட்டுப்பாடி கூட்டம் கூடிய பின்னர் பிற தலைவர்கள் தங்களது உரையைத் துவக்கி மக்களை எழுச்சி கொள்ளச் செய்தனர்.

**குற்றப்பரம்பரைச் சட்டத்தை முற்றிலும் நீக்குவதற்கான சட்ட முன்வரைவு கொண்டுவரப்பட்டது. அதனைச் சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் பி. சுப்புராயன் முன்மொழிந்து பேசினார்.**

## குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்படுதல்

1919-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய ஒன்றியத்தில் வாழும் மக்களுக்கு படிப்படியாக அதிகாரங்களை வழங்க மக்களின் கருத்துகளை அறிய அனைத்துப் பிரிவு மக்களையும் சந்தித்தனர். அப்போது நீதிக்கட்சி, திராவிட சங்கம் ஆகியவற்றின் சார்பாக டி. எம் நாயர், கே. வி ரெட்டி, சர். ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் கருத்துக்களை முன் வைத்தனர் அச்சமயத்தில் மறவர் மகாஜன சபை என்ற அமைப்பை உருவாக்கச் சொல்லி அம்மக்கள் பிரச்சனைகளை அதன் சார்பிலும் கருத்துகளை வைக்கச் செய்தவர் டி எம் நாயர்.

பெருங்காமநல்லூர் போராட்டத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சி அரசு, குற்றப்பரம்பரைச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து, கள்ளர்களில் பெரும்பான்மையான மக்களை அந்த சட்டத்தின் பிடியிலிருந்து விடுவித்தது. கள்ளர் சீரமைப்புக்கு என்று தனியாக ஒரு ஐ.சி.எஸ் அலுவலரை 'லேபர் கமிஷனர்' என்ற பெயரில் நியமித்தது. அவரளித்த சிபாரிசுகளினடிப்படையில், நீதிக்கட்சி அரசு கள்ளர் சீரமைப்புப் பணிகளை 'கள்ளர் சீரமைப்புத் திட்டம்' என்ற பெயரில் முழுவீச்சில் செயல்படுத்தியது.

**ஆளுநர் ஒப்புதலுக்கு 1947 மே 30 ஆம் தேதி அனுப்பப்பட்டது. ஜூன் 5 ஆம் தேதி குற்றப்பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது.**

- கள்ளர்கள் தனியாக நிரந்தரத் தொழில் தொடங்க வங்கிக் கடனுதவி அளித்தது.
- கள்ளர்களுக்கு என்று இலவசக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து அவற்றை நிர்வகிக்கவும் செய்தது.
- இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்து அவர்களை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் குடியமர்த்தியது.
- மதுரை, திண்டுக்கல், உசிலம்பட்டி, சின்னாளப்பட்டி, செம்பட்டி, திருமங்கலம், தேனி ஆகிய பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட கள்ளர் பள்ளிகளை உருவாக்கியது.
- தஞ்சை மாவட்டத்தில் கள்ளர் மகாஜன சங்கத்தினால் கைவிடப்பட்ட கள்ளர் பள்ளிகளை நீதிக்கட்சி அரசு ஏற்று நடத்தியது.
- கள்ளர்கள் விவசாயம் செய்ய இலவச நிலங்களை வழங்கியது.
- பெரியாறு அணைப் பாசனத் திட்டத்தில் கள்ளர் நாட்டுப் பகுதிகளையும் இணைத்து தேனி திண்டுக்கல் மதுரை இராமநாதபுரம் மாவட்டத்தில் கள்ளர்களை விவசாயத்தில் ஈடுபடச் செய்தது.
- 1922-ல் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கள்ளர்கள் விவசாயத்திற்காக வாங்கிய கடனை கட்ட இயலாத நிலையில் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி அளித்திருந்த சென்ட்ரல் வங்கி சங்கங்களைக் கடுமையாக நெருக்கத் தொடங்கியது அப்போது திக்கற்று இருந்த 34 கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாகாண அரசே நிதி கொடுத்து சங்கங்களின் கடனை அடைத்து அடுத்த கட்ட விவசாயத்திற்கும் கடனை அளித்தது. இப்படியாகப் பல நலத்திட்ட உதவிகளை அம்மக்களுக்கு நீதிக்கட்சி ஆட்சியில் வழங்கப்பட்டது.

ஆங்கிலேய அரசின் கருப்புச் சட்டத்தைத் திருத்தும் வாய்ப்பிருந்தும் கூட பார்ப்பனிய மேலாதிக்கம் பெற்ற இராசாசியின் ஆட்சியில் இதற்குரிய முன்னெடுப்பு நடைபெறவில்லை. மாறாகத் தமிழ்நாடு முழுவதும் ஒடுக்குமுறைகள் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதைக் கண்டோம். வெள்ளையர்களின் மனம் நோகாவண்ணம் இந்த குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து எவ்வித முயற்சியையும் இராசாசி அரசு செய்யமுனையவில்லை. காங்கிரஸின் பார்ப்பனியத் தலைமையும் இந்திய அளவில் இதற்கான எதிர்ப்பை முன்னெடுக்கவில்லை. சாமானிய மக்கள் மீது ஆங்கில ஏகாதிபத்தியம் விதித்த கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகச் சாமானிய மக்களின் பிரதிநிதிகளாக விளங்கியவர்களே களத்திலும், சட்டப் போராட்டத்திலும், மக்கள் மன்றமான சட்டமன்றத்திலும் திரண்டெழுந்தனர். உயர்சாதிக் கூட்டம் குற்றப்பரம்பரைச் சட்டத்தினால் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது எவ்வகையிலும் அக்கறை காட்டாது ஏகாதிபத்தியத்தோடு கைகோர்த்துக் கொண்டதை இப்போராட்டங்கள் நமக்கு விளங்கப்படுத்தும். திரு. முத்துராமலிங்கத் தேவரும், அவரோடு இணைந்து களப்பணியாற்றிய தோழர்களின் முன்முயற்சியில் தீவிரம் பெற்ற இச்சட்ட எதிர்ப்பு இயக்கம் இந்தியாவில் 1947-ல் ஆட்சி மாற்றம் நடைபெற்ற பின்னர் தீர்வினை தருவதாக அமைகிறது. இறுதியாக, இந்தியாவின் சுதந்திரம் எனும் ஆட்சி மாற்றம் உறுதிசெய்யப்பட்ட நிலையில் 17 ஏப்ரல் 1947-ல் சென்னை மாகாண சட்டமன்றத்தில் குற்றப்பரம்பரைச் சட்டத்தை முற்றிலும் நீக்குவதற்கான சட்ட முன்வரைவு கொண்டுவரப்பட்டது. அதனைச் சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் பி. சுப்புராயன் முன்மொழிந்து பேசினார். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பாகனேரி ஆர்.வி. சுவாமிநாதன் ரேகைச் சட்டம் எவ்வளவு கொடியது என்றும்

அது ஏன் நீக்கப்படவேண்டும் என்றும் விரிவாகப் பேசினார் வெகுசிலரே குற்றப்பரம்பரைச் சட்டத்தை ஆதரித்துப் பேசினர். சட்டமன்றத்தில் காரசாரமான விவாதங்களுக்குப் பின் குற்றப்பரம்பரைச் சட்டத்தை முற்றிலும் ரத்து செய்கின்ற தீர்மானம் பெரும்பான்மை பலத்துடன் இறுதியில் நிறைவேறியது. பிறகு, ஆளுநர் ஒப்புதலுக்கு 1947 மே 30 ஆம் தேதி அனுப்பப்பட்டது. ஜூன் 5 ஆம் தேதி குற்றப்பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது.

பெருங்காமநல்லூரில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்தக் கொடூர சம்பவம், பிரிட்டிஷ் காலனிய ஆட்சிமுறைக்கு எதிரானது. அதுமட்டுமல்லாமல், தமிழ் இனத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் தமிழின உரிமைசார் போராட்டமாகவுமே அதனை நாம் பார்க்கவேண்டும். தமிழ்த்தேசியம் என்பது ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையான போரட்டத்தைச் சார்ந்திருக்கிறது. தவிர, அவர்களுக்கு இடையேயான மோதலைச் சார்ந்திருக்கவில்லை. அந்த வகையில் தமிழ்த்தேசியத்திற்கான அடையாளமாகவே பெருங்காமநல்லூரும் வரலாற்றில் நிற்கின்றது. கீழ்வெண்மனி மற்றும் பெருங்காமநல்லூர் ஆகிய இவ்விரண்டு மாபெரும் தியாகங்களிலும் போராட்டங்களிலும் நீதிக்கான பயணத்திலும் ஒரு சாதியைச் சார்ந்த மக்கள் மட்டும் போராடாமல் ஒட்டுமொத்த தமிழினமும் எழுந்து நிற்பதே அதற்குச் சாட்சி.

இப்போராட்டங்கள் தொடர்பான வரலாறுகளை அடுத்த தலைமுறைகளுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் கற்பியுங்கள். குற்றப்பரம்பரைச் சட்டத்தினை எதிர்த்தும், குடியான மக்கள் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்தும் பேசாத, எழுதாத, போராடாத காங்கிரஸின் பார்ப்பனிய–இந்துத்துவ தலைவர்களுக்கு மூவாயிரம் கோடிக்குச் சிலை வைப்பதைவிட வெள்ளையர்களை எதிர்த்துப் போராடி மாண்ட தமிழர்களுக்கு மணிமண்டபங்கள் எழுப்புவதையும், பாதிக்கப்பட்ட சமூகத்தின் அடுத்த தலைமுறைகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதையும் அரசு செய்ய வேண்டும். இன்று அதே மேற்குத் தொடர்ச்சி மலையில் தமிழின விரோத தேவாரத்தில் நியூட்ரினோ, வடபழஞ்சியில் அணுக்கழிவுக்கூடம் போன்ற பேரழிவுத்திட்டங்கள், ஏகாதிபத்தியத்திற்கு ஏவல் செய்யும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இப்படியான சூழலில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் துணிந்து நின்ற பெருங்காமநல்லூர் மக்களின் வீரவரலாற்றினை நினைவுகூர்வது மிகப்பொருத்தமாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீரஞ்செறிந்த அம்மக்களுக்கு நம் வீரவணக்கத்தை உரித்தாக்குவோம். ●

# கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

**09 ஏப்ரல், 2020**

கொரோனா பாதித்த பகுதிகளிலிருந்து வரும் சாதாரண நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க மறுக்கும் தனியார் மருத்துவமனைகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கை

கொரோனா நோயின் பரவுதலைத் தடுக்க அரசு மருத்துவமனைகள் அந்நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துவரும் நிலையில் கொரோனா பாதிக்காத நோயாளிகளைத் தனியார் மருத்துவமனைகள் புறக்கணிப்பதாக தகவல்கள் வருகின்றன. கொரோனா பாதிக்கப்பட்ட நபர் இருக்கும் பகுதியில் வசிக்கும் ஒரே காரணத்திற்காக கர்ப்பிணிகள் என்றும் பாராமல் ஒரு சில தனியார் மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்காமல் அவர்களை அலைக்கழிக்க விடுவது கண்டனத்திற்குரியது. சிறுநீரக பிரச்சினைகள், பிரசவம், இதயநோய் போன்ற உடல்நலக் குறைவிற்காக மருத்துவமனைகளை அணுகும் சாதாரண நோயாளிகள் அவர்கள் கொரோனா பாதிப்புள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதினால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவமனைகள் மறுப்பது மேலும் கோவை, திருத்தணி, இராமநாதபுரம் ஆகிய பகுதியில் தனியார் மருத்துவமனைகளில் மதவெறுப்பை வெளிபடுத்தி சிகிச்சையளிக்க மறுத்த சம்பவங்கள் புனிதமான மருத்துவ அறநெறிகளுக்கு முரணான மனிதநேயமற்ற போக்கை வெளிக்காட்டுகிறது.

மேலும் கொரோனா பிரச்சினையை பயன்படுத்திக்கொண்டு சில தனியார் மருத்துவமனைகள் மற்ற சிகிச்சை கட்டணங்களைப் பலமடங்கு உயர்த்தியுள்ளதும் கண்டனத்திற்குரியது.

நீரழிவு நோய் உட்படப் பல நோய்களுக்கான மருந்து தட்டுப்பாடு தமிழகம் முழுவதும் உள்ளது. தட்டுப்பாடு இல்லாமல் மருந்துகள் கிடைப்பதற்கும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

- பழ. நெடுமாறன்
- தொல். திருமாவளவன், MP
- கொளத்தூர் மணி
- பேராசிரியர் ஜவாஹிருல்லா
- தி. வேல்முருகன்
- தெஹ்லான் பாகவி
- திருமுருகன் காந்தி
- கே. எம். ஷரீஃப்
- இனிகோ இருதயராஜ்
- வன்னி அரசு
- நெல்லை முபாரக்
- அப்துல் சமது
- பெரியார் சரவணன்
- சுப. உதயகுமாரன்

---

கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு வாட்சப் தொடர்பு எண்கள்

**94459 10100, 98656 83735**




## பில் கேட்ஸும், கொரோனா தொற்றும்


# தடுப்பூசியின் பேரில் ஆக்கரமிக்கும் தொழில்நுட்பங்கள்

கொரோனா பெருந்தொற்றுப் பல்வேறு வணிகங்களை முடக்கிப் பொருளாதாரத்தில் தாக்கத்தை உண்டாக்கியிருந்தாலும், பல்வேறு வணிகங்களுக்கான சந்தையையும் திறந்துள்ளது. அதில் மருத்துவத் துறை முக்கியத்துவம் பெறுகிறது.

## கொரொனோ நோய்த்தொற்று

இன்று உலகின் செயல்பாட்டையே முடக்கிப்போட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வல்லரசு நாடுகளும் முன்னேறிய நாடுகள் என்று அறியப்படும் ஐரோப்பிய நாடுகளும் இப்பெருந்தொற்றினால் அதிகம் பாதிப்பைச் சந்தித்தும், கட்டுப்படுத்த முடியாமல் திணறி வருகின்றன. இது அந்நாடுகளின் பலமான பொருளாதாரத்தை அசைத்துள்ளது. அதேவேளை, பெருமுதலாளிகளைக் கொண்ட அதிகார வர்க்கத்தினால் இயக்கப்படும் இந்த முதலாளித்துவ நாடுகள், கொரொனா நோய்த்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவைச் சரிக்கட்டும் வேலைகளிலும் ஈடுபட்டுவருகின்றன.

கொரொனா பெருந்தொற்றுப் பல்வேறு வணிகங்களை முடக்கிப் பொருளாதாரத்தில் தாக்கத்தை உண்டாக்கியிருந்தாலும், பல்வேறு வணிகங்களுக்கான சந்தையையும் திறந்துள்ளது. அதில் மருத்துவத் துறை முக்கியத்துவம் பெறுகிறது. அவற்றில் முன்னிலை வகிப்பது கொரொனாவிற்கான நோய்த்தடுப்பு மருந்துகளை உருவாக்குவது. அதிலும் குறிப்பாக கொரொனாவிற்கான தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடிப்பதில் அனைத்து பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களுமே ஈடுபட்டுள்ளன. அதேவேளை, நோய்த்தொற்றின் தீவிரம் காரணமாக, வைரசுடனான நேரடி தொடர்பை துண்டிக்கும் பொருட்டும், தடுப்பூசியிடப்பட்டவர்களை தடமறியவும் சில தடுப்பூசி தொழில்நுட்பங்களும் முன்னிலை பெறுகின்றன. இந்தத் தொழில்நுட்பங்களுகளுடன் இணைந்த தடுப்பூசித் திட்டங்கள் மனித வரலாற்றில் நிரந்தர மாற்றங்களை உருவாக்கக்கூடியதும், அவை உலகின் அதிகாரம் பொருந்திய சில நபர்களிடமும் சில கார்பரேட் நிறுவனங்களிடமும் சிக்கும் போது, முதலாளி தொழிலாளி இடையேயான வர்க்க பேதத்தை அதிகரித்து முதலாளிகளுக்குத் தொழிலாளர்களை நிரந்தர அடிமையாக்கக் கூடியதாகவும் மாறிவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.



Microsoft

The American multinational technology company joined ID2020 in January 2018 as a founding partner. Members of the Microsoft team sit on ID2020's Technical and Program Delivery Advisory Committees.

**MIT News** Browse

The research was funded by the Bill and Melinda Gates Foundation and the Koch Institute Support (core) Grant from the National Cancer Institute. Other authors of the paper include Sean Severt, Mache Cruz, Morteza Sarmadi, Hapuarachchige Surangi Jayawardena, Collin Perkinson, Fridrik Larusson, Sviatlana Rose, Stephanie Tomasic, Tyler Graf, Stephany Tzeng, James Sugarman, Daniel Vlasic, Matthew Peters, Nels Peterson, Lowell Wood, Wen Tang, Jihyeon Yeom, Joe Collins, Philip Welkhoff, Ari Karchin, Megan Tse, Mingyuan Gao, and Moungi Bawendi.


கொரொனா வைரசின் தோற்றம் பற்றியான சூழ்ச்சி கோட்பாடுகள் குறித்து இங்கே பேசப்போவதில்லை. அவற்றில் துளியும் நம்பிக்கை இல்லை. ஆனால், கொரொனா வைரசிற்கான தடுப்பூசி தொழில்நுட்பங்களை முன்வைத்து எதிர்காலத்தில் சமூகத்தில் ஏற்படப்போகும் மாற்றங்கள் குறித்து கட்டாயம் பேச வேண்டும். அப்படியான மாற்றங்களை உருவாக்கக்கூடிய இரண்டு தடுப்பூசி தொழினுட்பங்கள் குறித்தான செய்தியை முதலில் பார்ப்போம்.

முதல் செய்தி, அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரை மையமாகக் கொண்ட ஒரு நிறுவனம், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட்ட தகவல். அந்த நிறுவனம் குழந்தைகளுக்கான தடுப்பூசித் திட்டங்கள் மூலம், பல்வேறு வகைப்பட்ட பயோமெட்ரிக் அடையாளத் தொழினுட்பங்களை ஆராய்ந்து, அதன் மூலம் பயோமெட்ரிக் ஐடி (Bio-ID) உருவாக்கும் நோக்கில் வெற்றிகரமான அணுகுமுறைகளைக் கையாளும் வேலைத்திட்டத்தில் இருப்பதாக அறிவித்தது. அதாவது, குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் அடிப்படையில் ஒரு மின்னிலக்க (டிஜிட்டல்) அடையாளத்தை பல்வேறு பயோமெட்ரிக் தகவல்களோடு உருவாக்குவது. அதன் மூலம் அந்தக் குழந்தைக்கு எப்போது என்னென்ன தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிவது. இந்தச் செய்தி கொரொனா தொற்றுநோய் கண்டறிவதற்கு மூன்று மாதங்கள் முன்பே வெளிவந்தது.

இரண்டாவது செய்தி, அமெரிக்காவின் பிரபலமான மாசச்சூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT), கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதன் தொழினுட்ப ஆராய்ச்சி குறித்து வெளியிட்ட தகவல். குவாண்டம் புள்ளிகள் (Quantum Dots) எனப்படும் நுண் படிமங்களைக் கொண்ட, கண்களுக்குப் புலப்படாத டாட்டூ (பச்சை குத்துதல்) போன்ற மை நம் தோலிற்குக் கீழே வைக்கப்படும். தடுப்பூசி மூலமாகச் செலுத்தப்படும் இதில், ஒவ்வொருவரின் தடுப்பூசி வரலாறு சேமிக்கப்பட்டிருக்கும். குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு அகச்சிவப்புக் கதிரை வெளியிடும்

இதனை, குறிப்பிட்ட செயலியின் மூலம் கைப்பேசியினை கொண்டு கண்டறிய முடியும். இந்தத் தொழில்நுட்பம் ஒவ்வொரு குழந்தைக்கும் அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யும் என்று MIT நிறுவனம் கூறியது.

இந்த இரண்டு செய்திகளில் சொல்லப்படும் தொழில்நுட்பங்களுக்கு அடிப்படையாக இருப்பது தடுப்பூசி. மற்றொரு ஒற்றுமை மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ். முதல் செய்தியில் சொல்லப்பட்டிருக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் பில் கேட்ஸின் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இரண்டாவது செய்தியில் சொல்லப்பட்டிருக்கும் தொழில்நுட்பத்திற்கு பில் & மெலிண்டா கேட்ஸ் நிறுவனம் பெருமளவு நிதியுதவி அளிக்கிறது. இந்தத் தொண்டு நிறுவனம் வளரும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் தடுப்பூசி திட்டங்களைப் பரிசோதனை முறையில் நடைமுறைப்படுத்துவதில் முதன்மை வகிக்கிறது. தற்போது, இந்த இரண்டு செய்திகளுக்கும் அடிப்படையான, தடுப்பூசி மற்றும் பில் கேட்ஸ் இடையேயான தொடர்பைப் புரிந்துகொள்ள முடியும்.



The Coronavirus PATENT is owned by the Pirbright Institute. #coronavirus

Coronavirus

EP3172319A1
European Patent Office

Find Prior Art    Similar

Other languages: German, English, French
Inventor: Erica Bickerton, Sarah KEEP, Paul Britton
Current Assignee : Pirbright Institute , Pirbright Inst

Worldwide applications
2014 · GB   2015 · KR EP AU CA MX JP US WO BR CN

Application EP15750093.5A events

Pirbright Institute major stakeholders - Wellcome Trust & the Bill and Melinda Gates Foundation. Surprise surprise.

Our major stakeholders are:

- Biotechnology and Biological Sciences Research Council (BBSRC)
- UK Department for the Environment, Food and Rural Affairs (Defra)
- Wellcome Trust, Medical Research Council (MRC) and other research funding agencies
- International funding and disease control agencies, such as OIE, WHO, the European Commission, Bill and Melinda Gates Foundation
- Industrial producers of veterinary vaccines and antivirals
- Farmers and livestock keepers

**(12) International Application Status Report**

**Received at International Bureau:** 05 July 2019 (05.07.2019)

**Information valid as of:** 20 April 2020 (20.04.2020)

**Report generated on:** 05 May 2020 (05.05.2020)

**(10) Publication number:** WO 2020/060606
**(43) Publication date:** 26 March 2020 (26.03.2020)
**(26) Publication language:** English (EN)

**(21) Application number:** PCT/US2019/038084
**(22) Filing date:** 20 June 2019 (20.06.2019)
**(25) Filing language:** English (EN)

**(31) Priority number(s):** 16/138,518 (US)
**(32) Priority date(s):** 21 September 2018 (21.09.2018)
**(33) Priority status:** Priority document received (in compliance with PCT Rule 17.1)

**(51) International Patent Classification:**
*G06Q 20/06* (2012.01); *G06Q 20/32* (2012.01); **H04L 9/32** (2006.01); *G06Q 30/02* (2012.01); *G06N 3/08* (2006.01)

**(71) Applicant(s):**
MICROSOFT TECHNOLOGY LICENSING, LLC [US/US]; One Microsoft Way Redmond, Washington 98052-6399 (US) *(for all designated states)*

**(72) Inventor(s):**
ABRAMSON, Dustin; Microsoft Technology Licensing, LLC One Microsoft Way Redmond, Washington 98052-6399 (US)
FU, Derrick; Microsoft Technology Licensing, LLC One Microsoft Way Redmond, Washington 98052-6399 (US)
JOHNSON, Joseph Edwin, JR.; Microsoft Technology Licensing, LLC One Microsoft Way Redmond, Washington 98052-6399 (US)

**(74) Agent(s):**
MINHAS, Sandip S.; Microsoft Technology Licensing, LLC One Microsoft Way Redmond, Washington 98052-6399 (US)

**(54) Title (EN):** CRYPTOCURRENCY SYSTEM USING BODY ACTIVITY DATA
**(54) Title (FR):** SYSTÈME DE CRYPTOMONNAIE UTILISANT DES DONNÉES D'ACTIVITÉ CORPORELLE

**(57) Abstract:**
**(EN):** Human body activity associated with a task provided to a user may be used in a mining process of a cryptocurrency system. A server may provide a task to a device of a user which is communicatively coupled to the server. A sensor communicatively coupled to or comprised in the device of the user may sense body activity of the user. Body activity data may be generated based on the sensed body activity of the user. The cryptocurrency system communicatively coupled to the device of the user may verify if the body activity data satisfies one or more conditions set by the cryptocurrency system, and award cryptocurrency to the user whose body activity data is verified.
**(FR):** L'activité du corps humain associée à une tâche fournie à un utilisateur peut être utilisée dans un processus de minage d'un système de cryptomonnaie. Un serveur peut fournir une tâche à un dispositif d'un utilisateur qui est couplé de manière à communiquer avec le serveur. Un capteur couplé de manière à communiquer avec un dispositif de l'utilisateur ou compris dans ce dernier peut détecter l'activité corporelle de l'utilisateur. Des données d'activité corporelle peuvent être générées sur la base de l'activité corporelle détectée de l'utilisateur. Le système de cryptomonnaie de la présente invention couplé de manière à communiquer avec le dispositif de l'utilisateur peut vérifier si les données d'activité corporelle satisfont une ou plusieurs conditions définies par le système de cryptomonnaie, et attribuer une cryptomonnaie à l'utilisateur dont les données d'activité corporelle sont vérifiées.

கொரொனா தொற்றுநோய் பரவலுக்குப் பிறகு உலக நாடுகள் அதற்கானத் தடுப்பூசியைக் கண்டறிவதில் அதிதீவிரமாக இறங்கியுள்ளன. இந்நிலையில், கொரொனா வைரஸ் மாதிரிகளின் தடுப்பூசிகளுக்கான காப்புரிமையை (Patent) இங்கிலாந்தின் பிர்பிரைட் நிறுவனம் (Pirbright Instituite) வைத்துள்ளது. காப்புரிமைக்கு 2015-இல் விண்ணப்பித்த இந்நிறுவனத்தின் முக்கியப் பங்குதாரர் பில் & மெலிண்டா கேட்ஸ் நிறுவனம். அதாவது, கொரொனா வைரஸ் தடுப்பூசிக்கானக் காப்புரிமை பில் கேட்ஸ் வசம் உள்ளது. தற்போது கொரொனா வைரசிற்கான தடுப்பூசிக்கும், தடுப்பூசி அடிப்படையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கும், பில் கேட்ஸிற்குமான தொடர்பை நாம் புரிந்துகொள்ள முடியும்.

> **WHO அமைப்பிற்கு மாற்றாக ஒரு அமைப்பை உருவாக்கப் போவதாக அமெரிக்க அதிபர் கூறுவதும், இரண்டாம் உலகப்போருக்கு பிறகான காலம் போன்று கொரொனாவிற்கு பிறகான காலம் இருக்கும் என்றும், அப்போது ஐ.நா. உருவாகியது போல் அறிவியல் தாண்டிய ஒரு அமைப்பு உருவாக வேண்டும் என்று பில் கேட்ஸ் கூறுவதும் தற்செயலானதாகத் தோன்றவில்லை.**


இதே கொரொனா பெருந்தொற்று காலகட்டத்தில், க்ரிப்டோகரன்ஸி (Cryptocurrency) எனப்படும் மின்னிலக்க (டிஜிட்டல்) நாணய முறையை உருவாக்குவதிலும் வல்லரசுகள் போட்டியிடுகின்றன. பேஸ்புக் நிறுவனம் லிப்ரா திட்டம் (Libra Project) என்றொரு உலகளாவிய மின்னிலக்க நாணய முறையை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்நிலையில், சீன அரசு அந்நாட்டின் நாணயமான யுவான் (Yuan) மதிப்பை அடிப்படையாகக் கொண்டு டிசிஇபி (Digital Currency Electronic Payment) என்ற மின்னிலக்க நாணயத்தை சில வாரங்களுக்கு முன்பு சில பகுதிகளில் சோதனை முறையில் புழக்கத்தில் விட்டுள்ளது. அப்படியொரு க்ரிப்டோகரன்ஸி தொழினுட்பத்திற்கு பில் கேட்ஸின் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் காப்புரிமை வைத்துள்ளது. அது என்னவெனில், உடல் செயல்பாட்டுத் தரவுகளைப் பயன்படுத்தும் க்ரிப்டோகரன்ஸி முறை (Cryptocurrency System using Body Activity Data) என்னும் தொழினுட்பம்.

பில்கேட்ஸின் இந்த க்ரிப்டோகரன்ஸி தொழில்நுட்பத்தில், மனித உடலில் இணைக்கப்பட்டுள்ள ஒரு சென்சார், உடலின் செயல்பாடுகளைக் கவனித்து அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு கருவிக்குத் தகவல்களைச் சேகரித்து அனுப்பும். அதாவது, ஒருவருக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டால், ஒரு கணினி சர்வர் அவரின் உடலின் சென்சார் இணைக்கப்பட்டுள்ள கருவிக்குத் தகவல் அனுப்பும். அந்த சென்சார், அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையை அவரின் உடல் செயல்பாடுகள் அடிப்படையில் கணித்து அதற்கான ஊதியத்தை டிஜிட்டல் பணமாக அவர் உடலில் இணைத்துள்ள க்ரிப்டோகரன்ஸி சிப்பில் (Chip) செலுத்தும். பில் கேட்சின் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் காப்புரிமை வைத்திருக்கும் இந்த தொழில்நுட்பம், மனிதனின் அடிப்படை உரிமையான தனியுரிமை மற்றும் தொழிலாளர் உரிமைக்கு முற்றிலும் எதிரானதும் தொழிலாளர்களைச் சுரண்டக்கூடிய அமைப்புக்குள்

நிரந்தரமாகத் தள்ளக்கூடியதுமாக இருக்கிறது. இவ்வாறு மனித உடலுக்குள் சிப் பொருத்தும் ஒரு தொழில்நுட்பம் தான், இதே பில் கேட்ஸ் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியில், MIT உருவாக்கும் மனிதனின் தோலுக்கு அடியில் தடுப்பூசிக்கான தகவல் சேமித்து வைக்கும் டாட்டு போன்ற மை செலுத்தும் தொழில்நுட்பம். ஒரு மனிதன் பிறக்கும் போதே தடுப்பூசி மூலம் அவனது வாழ்நாள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படவும் அதன்மூலம் கட்டுப்படுத்தப்படவும் போகின்றன என்பது எந்த அளவிற்கு ஆபத்தானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது பில் கேட்ஸ் முன்னெடுக்கும் கொரொனாவிற்கான தடுப்பூசி தொழில்நுட்பமாகக் கூட இருக்கக்கூடும்.

> **Gates:** You know, I thought we would respond a bit faster. ...what we're doing, how we're having to change the economy here in order to drop the number of cases, it's, you know, it's really unprecedented... Even the issue of once you get the cases numbers down... but what does opening up look like? You know, which activities have, like schools, have such benefit and can be done in a way that the risk of transmission is very low?
>
> **Mason:** Yeah.
>
> **Gates:** And which activities, like mass gatherings, may be— in a certain sense— more optional. And so until you're widely vaccinated, those may not come back at all.

கொரொனா வைரசிற்கு பிறகான காலம் சமூகத்தில் பல நிரந்தரமான மாற்றங்களை உருவாக்கும் எனப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதனோடு, இரண்டு வாரங்களுக்கு முன்பு CBS செய்தி நிறுவனத்திற்கு பில் கேட்ஸ் வழங்கிய நேர்காணலில், கொரொனா காலத்தில் மக்கள் ஒன்றுகூடல் என்பது இயலாத ஒன்று; கொரொனா வைரஸ் தடுப்பூசி பரந்துபட்டளவில் போடப்படாத வரை மக்கள் பெருந்திரள் நிகழ்வுகள் சாத்தியமில்லை என்று கூறியதையும் இணைத்துப் பார்ப்போம். அப்படியென்றால், கொரொனாவிற்குப் பிறகான காலத்தில், கொரொனா தடுப்பூசிக்கான காப்புரிமையை வைத்திருக்கும் நிறுவனம், மேற்சொன்ன ஆய்வுகளின் அடிப்படையில் பரந்துபட்டளவில் தடுப்பூசி திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது என்றால், சமூகத்தில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதையும் அதனால் சமூகத்தில் ஏற்படப்போகும் விளைவுகளையும் சிந்திக்க வேண்டும்.




மற்றொருபுறம், கொரொனா நோயிற்கான மருந்தையும் தடுப்பூசியையும் விரைந்து கண்டறிந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர உலக சுகாதார நிறுவனம் (WHO) ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டது. அதற்கான துவக்க விழா ஏப்ரல் 24 அன்று நடைபெற்றது. இதில் அமெரிக்கா பங்கெடுக்காது என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. WHO அமைப்பு சீனாவிற்குச் சாதகமாகச் செயல்படுவதாகக் கூறி அதற்கு அளித்து வரும் நிதியை நிறுத்தி வைப்பதாக ஏற்கனவே அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்திருந்தார். அதோடு மட்டுமல்லாமல் WHO அமைப்பிற்கு மாற்றாக ஒரு சர்வதேச அமைப்பை அமெரிக்கா உருவாக்கும் என்றும் கூறியிருந்தார்.


கொரொனா பெருந்தொற்றின் வரலாறு எழுதப்படும் போது இதுவரை நாம் பார்த்திருப்பது மூன்றில் ஒரு பாகம் தான் என்றும், இனி வரப்போவது தான் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும் பில் கேட்ஸ் எகனாமிஸ்ட்.காம் இணையதளத்திற்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அதில், நோய்த்தொற்றானது வளர்ந்த நாடுகளில் உச்சத்தை அடைந்து குறையத் துவங்கும் இந்த வேளையில், ஏழை மற்றும் வளரும் நாடுகளில், இடைவெளி கடைப்பிடிப்பது சாத்தியப்படாத நிலையில், மிக விரைவாக வைரஸ் தொற்று ஏற்படும் என்கிறார். அங்குள்ள மருத்துவக் கட்டமைப்பு அதனைச் சமாளிக்கக் கூடிய நிலையில் இருக்காது என்றும், இதனால் லட்சக்கணக்கான மக்கள் இறக்க நேரிடும் என்கிறார். இதற்கு ஒரே தீர்வு நோய்த்தடுப்பு மருந்து மட்டுமே; அதுவரை கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும் சமூகம் இப்போதுள்ளது போல தான் செயல்படும் என்கிறார்.

மேலும், வழக்கமான முறையில் தடுப்பூசி கண்டுபிடிக்க அதிக காலம் எடுத்துக்கொள்ளும் என்பதால், mRNA உயிரி-தொழில்நுட்பத்தில் மிக விரைவாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்கிறார். வழக்கமான முறை என்பது இறந்த அல்லது பலவீனமான வைரஸ் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உடலுக்குள் செலுத்தப்படுவதால் நம் உடலமைப்பு அதற்கான நோய் எதிர்ப்பாற்றலை உருவாக்கிக் கொள்ளும். mRNA முறையில், DNA மாதிரியைக் கொண்டு உருவாகும் RNA-விற்கு சில கட்டளைகளை அனுப்புவதால் வேதிமுறையில் மாற்றத்தை உண்டாக்கி உருவாகும் mRNA, நோயிற்கான எதிர்ப்பாற்றலை உருவாக்கும். மேலும், இரண்டாம் உலகப்போருக்கு பிறகான காலத்தை கொரொனாவிற்கு பிறகான காலத்தோடு ஒப்பிடும் பில் கேட்ஸ், ஐ.நா. மன்றம் உருவாகியது போல் பெருந்தொற்றைக் கையாள அறிவியலைத் தாண்டி ஒரு சர்வதேச அமைப்பு உருவாக வேண்டும் என்கிறார். பில் கேட்ஸ் கூறும் இந்த mRNA தொழில்நுட்பம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. கொரொனாவிற்கு விரைவாகத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட

வேண்டும் என்ற நெருக்கடியைப் பயன்படுத்தி, பின்விளைவுகள் பற்றி அறியாத ஒரு தொழில்நுட்ப அடிப்படையில் தடுப்பூசி தயாரிக்கப்பட வேண்டும் என்கிறார். இதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. இந்த mRNA தொழில்நுட்பத்தில் முன்னோடியாக இருப்பது ஜெர்மனியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் க்யூர்வாக் (CureVac) தடுப்பூசி ஆராய்ச்சி நிறுவனம். பில் கேட்ஸ் - மெலிண்டா பவுன்டேசன், mRNA ஆராய்ச்சிக்காக 2015-இல் இந்த க்யூர்வாக் நிறுவனத்தின் மீது ×52 மில்லியன் முதலீடு செய்துள்ளது. இதன்மூலம், பில் கேட்ஸ் mRNA தொழில்நுட்ப முறையிலான தடுப்பூசியைப் பரிந்துரைப்பதற்கானக் காரணத்தினைப் புரிந்துகொள்ளலாம்.

**தேசிய இன நலனைக் கட்டிக்காக்க விரும்பாத ஒரு அரசின் கீழ் வாழும் தமிழ்த்தேசிய மக்கள், இது போன்ற தொழினுட்ப ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வதற்குரிய தற்சார்பு சிந்தனைகளை, வழிவகைகளைக் கண்டறிந்து முன்னேறுவது அவசியம். நமது போராட்டம் நோய்க் கிருமியை நோக்கி மட்டுமல்லாமல், நோய்த்தொற்றை முன்வைத்து நம்மை அடக்க நினைக்கும் அரசின் வழிவகைகளை எதிர்கொள்வதும் ஆகிறது.**


அதே போல், இதுவரை வளர்ந்த நாடுகள் அளவிற்குப் பெரிய பாதிப்பைக் கண்டிராத வளரும் நாடுகள் மிகப்பெரிய பாதிப்பைச் சந்திக்கப்போகிறது என்று ஆருடம் கூறுகிறார். ஏனென்றால், பில் கேட்ஸ் - மெலிண்டா பவுன்டேசனின் தடுப்பூசி சோதனைக்களமாக இருப்பது இந்த வளரும் நாடுகள் தான். அதாவது mRNA முறையில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளைக் கொரொனாவினால் அதிகம் பாதித்திராத வளரும் நாடுகள் மீது பரிசோதிப்பதற்காக, அதிகம் பரவப்போகிறது என்ற அச்சத்தை உருவாக்குகிறார். அதற்கேற்றார் போல் இதன் தீவிரம் குறைய 2021 பிற்பகுதி ஆகும் என்கிறார். மேலும், WHO அமைப்பிற்கு மாற்றாக ஒரு அமைப்பை உருவாக்கப் போவதாக அமெரிக்க அதிபர் கூறுவதும், இரண்டாம் உலகப்போருக்கு பிறகான காலம் போன்று கொரொனாவிற்கு பிறகான காலம் இருக்கும் என்றும், அப்போது ஐ.நா. உருவாகியது போல் அறிவியல் தாண்டிய ஒரு அமைப்பு உருவாக வேண்டும் என்று பில் கேட்ஸ் கூறுவதும் தற்செயலானதாகத் தோன்றவில்லை.



கொரொனாவினால் ஏற்படப்போகும் முக்கியமான மாற்றம் என்றால் மக்கள் ஒன்று சேர இயலாமல் போவது. தற்போது இது 'சமூக விலக்கம்' என்ற தவறான சொற்பதம் கொண்டு அழைக்கப்படுகிறது. இங்கு நாம் கடைப்பிடிப்பது உடலளவிலான விலகல் மட்டுமே. ஒவ்வொருவரும் குறிப்பிட்ட இடைவெளியில் தள்ளி இருப்பது. சமூக விலக்கம் என்பது சமூக ஒன்றிணைதல் என்பதற்கு நேர் எதிரானது. சமூக விலக்கம் என்பது தீண்டாமை போன்றது; அது சமூகநீதிக்கு எதிரானது. சமூகநீதி என்பது போல சமூக ஒன்றிணைவு என்பது திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட வார்த்தை. இந்த ஒன்றிணைவு சமூக விரோதம் என்பது போல் மக்களிடையே கட்டமைக்கப்படுகிறது. இந்த சமூக விலக்கம், மக்கள் ஒன்றிணைவைத் தடுப்பது அல்லது ஒன்றிணைவு அனுமதியோடு நடைபெற வேண்டியது என்பதாக மாற்றப்படுகிறது.

இனிவரும் காலங்களில் சமூக ஒன்றிணைவு, மக்கள் ஒன்றுகூடல் நடக்க வேண்டுமெனில், இதுபோன்ற தோலின் கீழுள்ள டாட்டு எனும் மையை ஸ்கேன் செய்து அனுமதிப்பது என்பது எளிய வழிமுறையாக ஆக்கப்படுமெனில் பில் கேட்ஸ் வெற்றி பெற்றவராவார். அப்படி நடந்தேறினால், அதேபோல் பார்வையாளராக மக்கள் பெருமளவில் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் இந்த தொழினுட்பம் நடைமுறைப் படுத்தப்படும். அதே போன்று உரிமைக்காக மக்களால் நடத்தப்படும் போராட்டங்களில் இது தவிர்க்கப்படுமெனில் அது சட்டவிரோதமாக்கப்படும் எனும் உள்ளர்த்தத்தையும் சேர்த்தே புரிந்து கொள்ள வேண்டும்.

கொரொனா நோய்த்தொற்றுக்கான நோய்த்தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டிய இந்த இக்கட்டான சூழலில், இந்த தனிநபர் இடைவெளி என்பது மருத்துவ உலகிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இதற்குத் தீர்வாக ஆர்டீபீசியல் இன்டலிஜென்ஸ் (Artificial Intelligence (AI)) எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பம் சிறந்த தீர்வாகக் கருதப்படுகிறது. மனிதர்களின் செயல்பாடுகளினால்



தடுப்பூசி என்று முன்மொழியப்படும் பாதுகாப்பின் பின்னால் இருக்கும் வணிக, கார்ப்பரேட், அரச அடக்குமுறை வழிமுறைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது. இதைத்தான் 'சமூக விலக்கம்' எனும் மனித நேயத்திற்கு ஒவ்வாத வார்த்தைகளால் குறிப்பிடுகிறார்கள். கொரொனாவை விடக் கொடிய அரச வன்முறைக்கும், வணிக நலத்திற்கும் நாம் பலியாகி விடும் அபாயத்தையும் கணக்கில் எடுப்பது அவசியம்.

வெளிப்படும் முடிவுகளின் அடிப்படையில் பல்வேறு காலசூழ்நிலை தகவல்களைக் கொண்டு, ஒரு செயலி அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படும் ஒரு இயந்திரம் மனிதரின் உதவியில்லாமல் எப்படியாகச் செயல்பட வேண்டும் என்னும் தொழினுட்பம் தான் இந்த AI தொழினுட்பம். தடுப்பூசி நிறுவனங்கள் அனைத்துமே இன்று கிமி தொழினுட்பங்களைப் பயன்படுத்தியே ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றன. அதில் குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டுள்ளன. இதனையே தடுப்பூசி செலுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளும் அதிகளவில் உள்ளன.

தடுப்பூசி தகவல்களைச் சேமித்து வைத்து, அதனை ஸ்கேன் செய்ய AI தொழினுட்பம் பயன்படுத்தப்படுமெனில், நாம் அனைவரும் முன்வடிவமைக்கப்பட்ட ஒரு எந்திரத்தின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிடுவோம். இப்படியாக வடிவமைக்கப்பட்ட தொழினுட்பத்தை அனுமதித்ததின் மூலமாகவே, கையால் பெறாத டிஜிட்டல் பண பரிவர்த்தனையைப் போல, டிஜிட்டல் கரன்ஸியையும் கொண்டு வருவது எளிமையாகி விட்டது. அப்படியாகவே, தனிமனித நடமாட்டத்தைக் கண்காணிக்கும், கட்டுப்படுத்தும் செயலிகளும் நிரந்தமாகச் செயல்பாட்டிற்கு வரக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொழினுட்பங்கள் மக்கள் மனநிலையைச் சார்ந்திராத கிமி தொழினுட்பம் வழியாக ஒருங்கிணைக்கப்படும் பொழுது பிரம்மாண்ட வலைப்பின்னலுக்குள் நாம் சென்று விடுவோம்.

எனவே, தடுப்பூசி என்று முன்மொழியப்படும் பாதுகாப்பின் பின்னால் இருக்கும் வணிக, கார்ப்பரேட், அரசஅடக்குமுறைவழிமுறைகளைநாம்புறக்கணித்துவிட முடியாது. இதைத்தான் 'சமூக விலக்கம்' எனும் மனித நேயத்திற்கு ஒவ்வாத வார்த்தைகளால் குறிப்பிடுகிறார்கள். கொரொனாவை விடக் கொடிய அரச வன்முறைக்கும், வணிக நலத்திற்கும் நாம் பலியாகி விடும் அபாயத்தையும் கணக்கில் எடுப்பது அவசியம். பதட்டமான காலத்தில் நாம் இந்த முயற்சிகளுக்குப் பலியாகாமல் மக்கள் சார்ந்த பொதுச்சுகாதார வழிமுறைகள், மாற்றுச் சிகிச்சை வழிமுறைகள், உணவு வழிமுறைகள், லாபநோக்கமில்லாத அரசு நிறுவனம் சார்ந்த வழிவகைகளை முன்மொழிவதன் மூலம் மட்டுமே இது போன்ற கார்ப்பரேட் நலன் சார்ந்த ஏகாதிபத்திய வழிகளை எதிர்கொள்ள இயலும்.

தேசிய இன நலனைக் கட்டிக்காக்க விரும்பாத ஒரு அரசின் கீழ் வாழும் தமிழ்த்தேசிய மக்கள், இது போன்ற தொழினுட்ப ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வதற்குரிய தற்சார்பு சிந்தனைகளை, வழிவகைகளைக் கண்டறிந்து முன்னேறுவது அவசியம். நமது போராட்டம் நோய்க் கிருமியை நோக்கி மட்டுமல்லாமல், நோய்த்தொற்றை முன்வைத்து நம்மை அடக்க நினைக்கும் அரசின் வழிவகைகளை எதிர்கொள்வதும் ஆகிறது. தேசிய இன நலனைக் காக்கும் பாதுகாப்பு அரண் இல்லாமல் மக்களைப் பாதுகாக்க முடியாது. இது குறித்த சிந்தனைகள் வலுப்பெற வேண்டும். இல்லையெனில் ஆரிய வழியான மூடப்பழக்கங்கள் மற்றும் கார்ப்பரேட் வழிவகைப்பட்ட சிறைப்படுத்தலுக்குள் நாம் சிக்க நேரிடும்.

●


### கொரோனா நெருக்கடி அம்பலப்படுத்திய முதலாளித்துவ லாபவெறி

# மனித குலத்திற்கு கொள்ளிவைக்கும் தனியார்மயக் கொள்ளை

கொரோனாவினால் அம்பலமாகும் நவதாராளவாதமெனும் புதியப் பொருளாதாரக் கொள்கை



ஓவியம்
**ஜெரார்டு ஹைடரர்**




"நோய்நாடி நோய்முதல் நாடி" என்கிறார் வள்ளுவர். ஒரு நோய்க்கான மருத்துவத்தின் அடிப்படை அதன் காரணத்தைக் கண்டடைவதுதான். இன்றைக்கு கொரொனா தொற்றுநோய் உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நோய்த்தொற்று ஆரம்பத்தில் எப்படி மனிதர்களுக்குள் பரவத்தொடங்கியது என்பது இன்றுவரை உறுதியாகவில்லை. ஆனால், இப்படியான ஒரு நோய்த்தொற்று உலகம் முழுவதும் பரவும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை அறிஞர்கள் தொடர்ந்து எச்சரித்தே வந்தனர். அதுவும் கடந்த சில வருடங்களில் தொற்றுநோய் பற்றியான எச்சரிக்கைகள் அதிகரித்தன. உலக சுகாதார அமைப்பு அதனுடைய 2018-ற்கான வருடாந்திர அறிக்கையில் ஒவ்வொரு மாதமும் 7000 பொது சுகாதார அச்சுறுத்தல் சமிக்ஞைகளைப் பெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறது. 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் மட்டும் உலக சுகாதார அமைப்பின் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய நோய்ப்பட்டியலில் இருக்கும் எட்டில் ஆறு நோய்களின் பரவலை இந்த உலகம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இன்றைக்கு உலகம் கொரொனா என்கிற தொற்றுநோயில் மிக மோசமாக சிக்குண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக அமெரிக்கா! இந்த கட்டுரை எழுதும் வரையில் (21.3.2020) உலகம் முழுவதும் 50.9 லட்சம் மக்களும் அமெரிக்காவில் 15.93 லட்சம் மக்களும் கொரொனாவினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; உலகம் முழுவதும் கொரொனாவால் இறந்த 329,732 பேரில் 94,941 பேர் அமெரிக்கர்கள். அதாவது, உலகக் கொரொனோ நோயாளிகளில் 33.6% சதம் அமெரிக்கர்கள்; கொரொனாவால் இறந்தவர்களில் மூன்றில் ஒருவர் (27.4%) அமெரிக்கர்; என்றால், அமெரிக்காவின் மருத்துவக் கட்டமைப்பின் பலவீனத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம். சுதந்திர உலகம் எனப்படும் அமெரிக்காவின் உண்மையான பலத்தை இந்தக் கொரொனோ அப்பட்டமாக அம்பலப்படுத்தி இருக்கிறது.

**அமெரிக்காவில் இன்றைக்கு மருத்துவம் மிகவும் விலை உயர்ந்தது. அதாவது, பிரசவத்திற்கு மட்டும் சராசரியாக ரூபாய் 7,58,310 (10000 டாலர்கள்) செலவு செய்ய வேண்டும். உங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்று முடிவெடுத்துக் கருத்தடை செய்ய விரும்பினால் ரூ.98,580 (1300 டாலர்கள்) அளவிற்குச் செலவாகும். நோயாளிகளுக்கு அவசரத்திற்கு ஆம்புலன்சை அழைக்க ஆகும் செலவு ரூ.1,89,577 (2500 டாலர்கள்)**

## அமெரிக்காவின் பரிதாபநிலைக்கு காரணம்:

அமெரிக்கா போன்ற மிகப்பெரிய வல்லரசிற்கு ஏன் இந்தநிலை ஏற்பட்டது? இதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அமெரிக்காவின் சுகாதார ஏற்பாட்டினை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். 19 ஆம் நூற்றாண்டில் காசநோய், மஞ்சல் காமாலை போன்ற தொடர் நோய்ப்பரவலால் அமெரிக்காவின் பொதுச்சுகாதாரத்துறை அபரிமிதமாக வலிமைப்படுத்தப்பட்டது. நோய்த்தொற்றுக்கானக் காரணத்தைக் கண்டறியாவிட்டாலும் நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வலிமையினை சுகாதாரத்துறைகள் பெற்றிருந்தன. இது குழந்தைகள் மற்றும் நடுத்தர வயதினரிடம் தடுக்கக்கூடிய மரணங்களை (preventable deaths) கட்டுப்படுத்த உதவியது. மக்களின் சுகாதாரத்திற்குத் தேவையான சட்டங்கள், உணவு, நீர், காற்று மாசுகளைத் தடுக்கக்கூடிய சட்டங்கள் ஆகியவை சராசரி ஆயுள் காலத்தை 50-ல் இருந்து 80 ஆக மாற்றியது. பொதுச் சுகாதாரத்தின் மூலம் குறைவான செலவில் அரசாங்கம் பல்லாயிரம் பேரின்

உயிரைக் காப்பாற்றியது. ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக மருத்துவம் என்பது தனியார்மயப்படுத்தப்பட்டு, கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமான சட்டங்கள் அவர்கள் கொள்ளை லாபத்தினை சம்பாரிக்க வழிவகை செய்தன.

## காப்பீட்டுக் கொள்ளை:

அமெரிக்காவில் இன்றைக்கு மருத்துவம் மிகவும் விலை உயர்ந்தது. அதாவது, பிரசவத்திற்கு மட்டும் சராசரியாக ரூபாய் 7,58,310 (10000 டாலர்கள்) செலவு செய்ய வேண்டும். உங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்று முடிவெடுத்துக் கருத்தடை செய்ய விரும்பினால் ரூ.98,580 (1300 டாலர்கள்) அளவிற்குச் செலவாகும். நோயாளிகளுக்கு அவசரத்திற்கு ஆம்புலன்சை அழைக்க ஆகும் செலவு ரூ.1,89,577 (2500 டாலர்கள்). எனில், மருத்துவம் என்பது சாமானியர்களுக்கு எவ்வளவு எட்டாக்கனி என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு அமெரிக்கரின் சராசரி மாத வருமானம் ரூ.3,80,000 (5264 டாலர்கள்) என்பதை வைத்து ஒப்பிட்டால் ஒருமுறை ஆம்புலன்சை வரவழைக்க அவரது மாத சம்பளத்தில் பாதியைச் செலவழிக்க வேண்டியிருக்கும். நான்கு முறை அழைக்க நேர்ந்தால் அவரது இரண்டுமாத சம்பளத்தைத் தாரைவார்க்க வேண்டிவரும். மேலே குறிப்பிடப்பட்டவை அனைத்துமே சராசரியான விலைதான். இப்படியாக இயங்குகின்றன கார்ப்பரேட் மருத்துவமனைகள் மற்றும் மருந்து விற்பனை செய்யும் நிறுவனங்கள். இச்சூழலிலேயே அமெரிக்கர்கள் வாழ்கிறார்கள். அனைத்தையும் கார்ப்பரேட்டும், அவர்களது லாப நோக்கமுமே இயக்குகின்றன.

**கடந்த பத்து வருடங்களை மட்டும் எடுத்துக்கொண்டால், அமெரிக்கா சுகாதாரத்துறையில் 52% வரை நிதி ஒதுக்கீட்டினைக் குறைத்துள்ளது. 2008-2017 வரையான காலத்தில் சுகாதாரத்துறையில் வேலைபார்க்கும் 50,000 நபர்கள் வேலையினை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள்.**

இப்படியாக லாபவேட்டையில் இயங்கும் மருத்துவத் துறையில் காப்பீட்டு நிறுவனங்களின் (இன்சூரன்ஸ் நிறுவனம்) தலையீடு என்பது மிக முக்கியமானது. ஒரு அமெரிக்கர் வேலைப் பார்க்கும் நிறுவனமே அவரது மருத்துவக் காப்பீட்டில் 70% பகிர்ந்து கொள்கின்றன. ஆனால், இதைப் பெரிய நிறுவனங்கள் மட்டுமே செய்கின்றன. அவ்வாறு அவர் வேலை செய்யும் நிறுவனம் காப்பீடு தரவில்லையெனில் தனியே தம்முடைய வருமானத்திலேயே தனக்கானக் காப்பீட்டைப் பெறவேண்டும். இதற்கு ஒவ்வொரு மாதமும் காப்பீட்டுத் தொகையினைக் கட்டவேண்டும். சராசரியாக மாதம் ஒன்றிற்கு, ஒரு தனிநபருக்கான காப்பீடு என்பது ரூ24,341 (321 டாலர்கள்) மற்றும் குடும்பங்களுக்கு ரூ63,167.22 (833 டாலர்கள்) இருந்து தொடங்கும். அதாவது ஒரு அமெரிக்கரின் சராசரி வருமானத்தில் ஏழில் ஒரு பங்கினை இந்த காப்பீட்டிற்காக ஒதுக்கி வைக்க வேண்டிவரும். ஒரு தம்பதியினர் குழந்தைப் பெறுவதிலிருந்து அக்குடும்பத்திற்கான மருத்துவக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் வரையிலான செலவு என்பது யோசிக்க முடியாத அளவில் பெரும் சுமையாக இருக்கிறது. மேலும், காப்பீடு பெறுபவருடைய வயது, நோய் வரலாறு, வாழும் பகுதி (தங்கி இருக்கும் மாகாணம், அதன் சட்டங்கள் மற்றும் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் வேறுபடும் வரிகள்) ஆகியவற்றைப் பொறுத்துக் காப்பீட்டின் தொகை அதிகரிக்கும்.

மிகவும் குறைவான வருமானம் இருக்கும் மக்களுக்கு அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட அளவு சலுகைகளுடன் காப்பீட்டினை (medicaid) வழங்குகிறது. ஆனால், அதிலும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரை அந்தத் தனிநபர் கட்ட வேண்டும். இதைப் பல மாகாணங்கள் பின்பற்றுவதில்லை. மேலும், அரசாங்கம் அளிக்கும் சலுகைக்கு விண்ணப்பிக்கப் பல்வேறு நிபந்தனைகளுக்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும். இவைக் காப்பீடு முக்கியமாகத் தேவைப்படும், ஏழை-நடுத்தர மக்களுக்குச் சாதகமானதாக இல்லை. ஒபாமா அதிபராக இருந்த காலத்தில் Obamacare என்ற திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தினைக் கொண்டுவந்தார். இதன்கீழ்க் காப்பீடு இல்லாதவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மேல் நிறையக் குற்றச்சாட்டுக்களை வைக்கலாம் என்றாலும், அது மிகச்சிறிய அளவிலான மாற்றத்தினை ஏற்படுத்தியது. ஆனால், ட்ரம்ப் அரசாங்கம் அந்தத் திட்டத்தை நீர்த்துப் போகச்செய்தது.

இதுமட்டுமல்லாமல், வேலை இழந்தவர்களுக்காகக் குறைவான காலத்திற்கு கோப்ரா (COBRA) திட்டத்தின் கீழ் அரசாங்கம் குறைவான விலையில் காப்பீட்டினைத் தருகிறது. அதாவது, ஒரு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கானக் காப்பீட்டுத் தொகை, அரசாங்க சலுகைகள் போக 15,16,620 ரூபாய் (20000 டாலர்கள்)!

விளம்பரங்களில் முதலீடுகள் பற்றிச் சொல்லிவிட்டு, நம்மால் விளங்கமுடியாதபடி வேகமாக "முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உள்பட்டது" என்று பேசுவதைப் போலவே இந்த காப்பீடுகளும் நிபந்தனைகளுக்கு உள்பட்டது. அதாவது, இப்படிப் பல லட்சம் ரூபாயினைக் கொடுத்து மருத்துவக் காப்பீட்டினைப் பெற்றாலும், (காப்பீட்டின் நிபந்தனைகளைப் பொறுத்து) குறிப்பிட்ட அளவு பணத்தினைத் தனிநபர் செலவிட வேண்டும். மருத்துவம் விலையுயர்ந்தது என்பதற்காகப் பல்லாயிரக்கணக்கில் செலவுசெய்து காப்பீட்டினை மக்கள் வாங்குகிறார்கள். ஆனாலும், சிகிச்சைக்கான பணத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவு பங்கினை மக்கள் கொடுக்கவேண்டும்.

மக்களைக் காப்பீட்டு நிறுவனங்கள் எவ்வளவு தொகை வரை செலவு செய்ய வைக்கமுடியும் (Out of Pocket Maximum) என்று வரைமுறை இருக்கிறது. அமெரிக்க அரசின் ஆணைப்படி, மக்களை 599064 ரூபாய் (7900 டாலர்கள்) மேல் தனிநபர் காப்பீட்டிலும் 1198129 ரூபாய் (15800 டாலர்கள்) மேல் குடும்ப காப்பீட்டிலும், காப்பீட்டு நிறுவனங்கள் செலவிடக் கட்டாயப்படுத்தக்கூடாது. அதாவது, இவ்வளவு தொகையினை மக்களிடம் இருந்து காப்பீட்டு நிறுவனங்கள் உருவிக்கொள்ளலாம். இதுமட்டுமல்ல, காப்பீட்டு நிறுவனங்கள், காப்பீட்டின் தனித்தனி நிபந்தனைகள் மற்றும் அவர்களுடையச்

சட்டங்களின்படி எந்த மாதிரியான மாத்திரைகளைக் காப்பீட்டினைப் பயன்படுத்தி வாங்கலாம்-வாங்கமுடியாது என்கிற பட்டியலையும் வைத்திருக்கின்றன. அப்படியே மத்திரைகள் அவர்களது 'வாங்கக்கூடிய பட்டியலில்' இருந்தாலும், அவற்றை வாங்க ஒரு குறிப்பிட்ட சதவீத பணத்தினை (காப்பீட்டு நிபந்தனைகளைப் பொறுத்து) அந்த தனிநபர் கொடுத்தாக வேண்டும். இப்படித்தான் கார்ப்பரேட்டுகள் லாபங்கள் கொழிக்க மக்களின் ரத்தத்தைப் பிழிந்துகொண்டிருக்கின்றன.

1 பில்லியன் டாலர்கள் வேண்டும் என்ற கோரிக்கை வந்த போது 50 மில்லியன் டாலர் (கேட்ட நிதியில் 5%) மட்டுமே ஒதுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவாமல் இருந்திருந்தாலும், அமெரிக்காவின் சுகாதாரம் மிகமோசமான சரிவைக்கண்டுதான் வந்தது. குறிப்பாகத் தட்டம்மை, சிஃபிலிஸ் போன்ற நோய்களின் அளவு மிக மோசமாக அதிகரித்து வந்தன. அமெரிக்காவில் வசதியானவர்களின் ஆரோக்கியம்-ஆயுள்காலத்திற்கும், ஏழைகளின்



## சாவிலும் லாபம் தேடும் கார்ப்பரேட்டு கூட்டணி:

2018 கணக்கெடுப்பின்படி அமெரிக்காவில் வாழும் 3 கோடி மக்களிடம் மருத்துவக்காப்பீடு கிடையாது. அதில் பெரும்பாலானவர்கள் பலநூறு வருடங்களாக அடிமைகளாகச் சுரண்டப்பட்ட கருப்பினத்தைச் சேர்ந்தவர்களும், அமெரிக்காவிற்கு இடம்பெயர்ந்த ஸ்பானிய (Hispanic) பின்புலத்தைக் கொண்டவர்களும், மத்திய கிழக்கு நாடுகளில் போரிலிருந்து தப்பித்து இடம்பெயர்ந்தவர்களும்தான். அமெரிக்கப் பத்திரிக்கைகள் வெளியிடும் செய்திகளின்படி, பல பகுதிகளில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களில் கிட்டத்தட்ட 70% பேர் மேலே குறிப்பிட்டிருக்கக்கூடிய சிறுபான்மை மக்கள்தான்.

கடந்த பத்து வருடங்களை மட்டும் எடுத்துக்கொண்டால், அமெரிக்கா சுகாதாரத்துறையில் 52% வரை நிதி ஒதுக்கீட்டினைக் குறைத்துள்ளது. 2008-2017 வரையான காலத்தில் சுகாதாரத்துறையில் வேலைபார்க்கும் 50,000 நபர்கள் வேலையினை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள். 2019 ஆம் ஆண்டு நாட்டின் பொதுச் சுகாதாரக் கருவிகளை நவீனப்படுத்த

ஆரோக்கியம்-ஆயுள்காலத்திற்குமான இடைவெளி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருந்தன. ஏழைகளே அதிக அளவில் இதயநோய் போன்ற நோயினால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. 2009 ஆம் ஆண்டு American Journal of Public Health என்ற இதழில் வெளிவந்த ஆய்வு, மருத்துவக்காப்பீடு இல்லாததோடு தொடர்புடைய 45,000 மரணங்கள் ஒவ்வொரு வருடமும் நிகழ்வதாகச் சொல்கிறது.

இன்றைக்கு கொரோனா, அமெரிக்காவின் லாபத்திற்காக இயங்கும் மனிதநேயமற்ற கார்ப்பரேட்-அரசு கூட்டணியை வெளியே கொண்டுவந்திருக்கிறது. ஆனால், அதற்குப் பல்லாயிரம் அப்பாவி மக்கள் பலியாகியிருக்கிறார்கள்.

கார்ப்பரேட்டுகளுக்கு எல்லாமே லாபம் பற்றியானது தான். கொரோனா வைரசுக்கு முன்பே, அரசாங்கத்தின் கீழ் பொதுச்சுகாதாரம் வழங்கப்படவேண்டும் என்பது பற்றியான விவாதங்கள் அமெரிக்காவின் அதிபர் தேர்தல் பிரச்சாரங்களில் பெரும்பங்கினை வகித்துவந்தது. எனவே, இதற்கு எதிரான பிரச்சாரங்களில் பல்லாயிரம் மில்லியன் டாலர்களைக் கார்ப்பரேட்டுகள் செலவளித்துவருகின்றன.

எடுத்துக்காட்டாக, கொலராடோ என்கிற அமெரிக்க மாகாணத்தில், அந்த மாகாண அரசு திட்டமிட்டுவரும் ஒற்றைமுனைக் காப்பீட்டுத் திட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்திற்கு மார்ச் மாதம் மட்டும் 3 மில்லியன் டாலர்களை Partnership for America's Health Care Future என்கிற தனியார் மருத்துவமனைகள்–காப்பீட்டு நிறுவனங்கள்–மருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இணைந்து பொதுசுகாதாரக்காப்பீட்டிற்கு எதிராக இயங்கும் கார்ப்பரேட்டுகளின் கூட்டமைப்பு செலவிட்டிருக்கிறது. ஆம். கொரோனாவினால் பல்லாயிரம் மக்கள் மடிந்துவந்த நேரத்தில், தனது பெரும்லாபத்திற்கு பாதிப்பு வரக்கூடாது என்பதில்தான் பணத்தையும் நேரத்தையும் செலவிட்டுவந்திருக்கின்றன கார்ப்பரேட்டுகள்! (இதில் ஒற்றைமுனைக் காப்பீட்டுத்திட்டம் என்பது காப்பீட்டுத் திட்டங்களையும் காப்பீட்டு நிறுவனங்களையும் நிர்வாக ஒழுங்குக்காக ஒரு குறிப்பிட்ட துறையின்கீழ் கொண்டு வருவது மட்டும்தான். ஆனால், அரசாங்கத்தின் கீழ் சுகாதாரம் செல்ல வாய்ப்பிருக்கும் சிறிய புள்ளி அளவிலான வாய்ப்பினையும் இந்த நிறுவனங்கள் விரும்பவில்லை.)

அதுமட்டுமல்ல, கொரொனாவினால் ஏற்படும் நட்டத்தினை ஓரளவு ஈடுசெய்து பொருளாதாரத்தைப் பாதுகாப்பாக (floating) வைத்திருக்க அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட அவசர நிதியிலிருந்து பல மில்லியன்களைப் பெற்றிருக்கிறார்கள் இதே கார்ப்பரேட் நிறுவனங்கள்.

இந்தக் கொள்ளைகளையும் அரசாங்கத்தின் தோல்வியையும் மூடி மறைக்கத்தான், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், 'சானிடைசர்களை குடிங்க, இது கொரொனா வைரஸ் கிடையாது இதன் பெயர் சைனா வைரஸ்' என்று உளறிக்கொண்டிருக்கிறார். (இந்தியாவில் பெருநிறுவனங்களின் கடன் தள்ளுபடிகளை மூடிமறைக்க இஸ்லாமியர்களால் பரவுகிறது கொரொனோ வைரஸ், மக்களைத் திசைதிருப்பக் கைதட்டுங்கள், விளக்கேற்றுங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதுபோல ட்ரம்பும் இதே திசைதிருப்பல் யுக்திகளைப் பயன்படுத்துகிறார்)

**சோசியலிச க்யூபா, மிகச்சிறப்பாகத் தனது நாட்டில் கொரொனா வைரசைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல், கொரொனா வைரசை எதிர்கொள்ள மருந்து மற்றும் உபகரணங்களோடு 28,628 மருத்துவர்களை உலகம் முழுக்க அனுப்பி, அவர்கள் இந்த நோய்க்கு எதிராக பணிபுரிந்து வருகிறார்கள்.**

## தனியார்மயமும் கொரொனா தொற்றும்:

"ஏன் கொரொனா பிரச்சனை வந்தது? இது மிகப்பெரிய சந்தையின் தோல்வி. மிருகத்தனமான புதிய தாராளமயமாக்கத்தின் விளைவாகத் தீவிரப்படுத்தப்பட்ட ஆழ்ந்த சமூக–பொருளாதார பிரச்சனைகளால் அதிகரிக்கப்பட்ட சந்தைகளின் சாராம்சத்தின் வெளிப்பாடுதான். தொற்றுநோய்கள் உலகம் முழுவதும் பரவ வாய்ப்பிருக்கிறது என்பது பலகாலமாக அறியப்பட்டாலும், அவை குறைத்து மதிப்பிடப்பட்டன. சார்ஸ் வைரசிலிருந்து சற்றே வேறுபட்ட கொரொனா வைரஸ் போன்றதொரு தொற்றுநோய் பரவும் என்பது 15 வருடங்களுக்கு முன்பே அறியப்பட்டதுதான். அந்த நேரத்தில் [சார்ஸ் பரவியபோது] அதிலிருந்து மீண்டாயிற்று. அந்த வைரசை அடையாளம் கண்டு அதற்கான தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப்பின், உலகம் முழுக்க இருக்கும் ஆய்வகங்கள், கொரொனா வைரஸ் போன்று பரவ வாய்ப்பிருக்கும் ஒரு தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பினை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கலாம் இல்லையா? ஏன் அவர்கள் அதனைச் செய்யவில்லை? அப்போது அதற்கான சந்தை சமிக்ஞைகள் இல்லை. நாம் நமது விதியினை கார்ப்பரேஷன்கள் என்றழைக்கப்படக்கூடிய தனியார் கொடுங்கோன்மைக்குக் கொடுத்துவிட்டோம். அவர்கள் பொதுமக்களுக்குப் பதில் சொல்லத்தேவையில்லை. அவர்களுக்குப் பலரைக்கொல்ல வாய்ப்பிருக்கக்கூடியத் தொற்றுநோய்க்கு மருந்தினைக் கண்டுபிடிப்பதைவிட, உடல்களில் தடவக்கூடிய க்ரீம்களைத் தயாரிப்பது முக்கியமானதாகிவிட்டது." என்கிறார் நோம் சாம்ஸ்கி.

அமெரிக்கா மட்டுமல்லாமல், இத்தாலியும் இந்தக் கொரொனா வைரசால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணமாக தனியார்மயத்தையே அறிஞர்கள் கூறுகிறார்கள். அதாவது, இந்தக் கொரொனா மாதிரியான நோயினைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்டவர்களோடு தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காணுவது அவசியம். ஆனால், மருத்துவம் தனியார்மயப்படுத்தப்பட்டதால், அரசாங்கங்களினால் இதனைத் துரிதமாகச் செய்யமுடியவில்லை. இரண்டாவதாக மருத்துவ–சுகாதாரத் துறைகளில் வேலை செய்பவர்களை இது மாதிரியான தொற்றுநோயினை எதிர்கொள்ளத் தயார் செய்வதை அரசாங்கத்தினால் (தனியார்மயத்தின் காரணமாக) தலையிட்டுச் செய்யமுடியாமல் போனது என்கின்றன முதற்கட்ட ஆய்வுகள். (உதாரணமாக அமெரிக்காவில் அரசாங்கம் காப்பீடு நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் தலைவர்களுடனான சந்திப்பினை ஏற்படுத்தி, அவர்கள் மூலமே வேலைகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடிந்தது.) உலக சுகாதார அமைப்பும், 'சர்வதேச சமூகம் பொதுச்சுகாதாரத்தில் திறம்படச் செயல்படுவதற்குத் தயாராக இல்லை' என்று தனது அறிக்கையில் (WHO-China joint mission on Covid-19 final report) குறிப்பிடுகிறது.

தைவான் நாடு, கொரொனா தொற்றை மிகச்சிறப்பாகக் கையாண்ட நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. தைவான் அரசாங்கத்தின் தனியுரிமை குறுக்கீட்டில் நாம் எதிர்முனையில் நின்றாலும், தைவான் அரசின் செய்தித்தொடர்பாளர் "தைவானின் சுகாதாரக்காப்பீட்டினால் மக்கள் மருத்துவமனைகளுக்குச் செல்ல அஞ்சுவதில்லை. ஒருவர் தனக்கு கொரொனா இருக்கலாம் என்று சந்தேகப்பட்டால், அவர் பரிசோதனை செய்துகொள்ள ஆகும் செலவினைப் பற்றி அஞ்சத்தேவையில்லை" என்று பெருமிதமாக அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார். தைவானில் முழு மருத்துவக்காப்பீட்டினையும் அரசாங்கமே வழங்குகிறது. தைவான் மட்டுமல்லாமல், கொரொனா வைரசினை சரியாகக் கையாண்ட நாடுகளைப் பார்த்தாலே, ஏன் தனியார்மயம் என்பது உயிர்க்கொல்லி என்பது புரிந்துவிடும்.

## கொரோனாவை வென்ற பொதுச்சுகாதாரம்:


டென்மார்க்: மருத்துவமனைகள் நகராட்சிகள் மூலம் அதிகாரம் பரவலாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. மொத்த நாட்டில் 1% மருத்துவப்படுக்கைகள் மட்டுமே தனியார் வசம் உள்ளது.

ஐஸ்லாந்து: கிட்டத்தட்டத் தனியார் மருத்துவமனைகளே கிடையாது. சுகாதாரத்தை அரசு வரிகளில் வரும் வருமானத்தின் மூலம், அதிகாரத்தினை பரவலாக்கிப் பார்த்துக்கொள்கிறது.

நார்வே: அதிக அளவில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு அரசாங்கத்தினால் சுகாதாரம் பார்த்துக்கொள்ளப்படுகிறது. மிகக்குறைந்த அளவே மருத்துவமனைகள் தனியார் வசம் இருக்கின்றன.

**“69% இடப்பங்கீட்டின் வழியாகத் தமிழக கல்லூரிகளில் படித்தவர்கள் 80 சதவிகிதத்திற்கும் மேலாகத் தமிழகத்தில்தான் பணி புரிகிறார்கள். இங்கு அதிகமாகப் படிப்பவர்கள் பல்வேறு சமூகத்தில் இருந்து வருவதால் அவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குப் பணிசெய்யச் செல்வது இல்லை. இங்குள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகிறார்கள்**

கியூபா: சோசியலிச க்யூபா, மிகச்சிறப்பாகத் தனது நாட்டில் கொரொனா வைரசைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல், கொரொனா வைரசை எதிர்கொள்ள மருந்து மற்றும் உபகரணங்களோடு 28,628 மருத்துவர்களை உலகம் முழுக்க அனுப்பி, அவர்கள் இந்த நோய்க்கு எதிராக பணிபுரிந்து வருகிறார்கள்.




மேலே, குறிப்பிட்டுள்ள அனைத்து நாடுகளிலும் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. சுகாதாரம்-மருத்துவம் அரசால் வழங்கப்படுகிறது. பூஜ்ஜியத்திலிருந்து வெகுக்குறைவான அளவே மருத்துவத்துறை தனியார் வசம் உள்ளது. இவற்றில் எந்த நாடுமே இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்யும் நாடுகள் பட்டியலில் இல்லை. (மேலும், இவையனைத்துமே கியூபாவைத் தவிர தற்போது பெண்களால் நிர்வகிக்கப்படும் நாடுகள்).

2014-ல் தனியார் காப்பீட்டு நிறுவனங்களால் மருத்துவத்துறை நிர்வகிக்கப்படும் நாடுகளுக்கும் அரசால் மருத்துவத்துறை நிர்வகிக்கப்படும் நாடுகளுக்கும் இடையில் நடத்தப்பட்ட ஆய்வு, ‘தனியார் மருத்துவமனைகள் சுத்தமாகவும், மிகச்சிறப்பான முறையிலும் மருத்துவம் வழங்குகின்றன என்று நம்பப்படுவது பொய்’ என்பதை ஒப்பீட்டளவில் நிரூபிக்கிறது.

அதேபோல், 2014-ல் வெளியிடப்பட்ட The influence of (public) health expenditure on longevity என்கிற தலைப்பில் வெளியிடப்பட்ட ஆய்வு, பொதுத்துறை மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளை ஒப்பிடும்போது, பொது மருத்துவமனைகள் ஆயுள்கால அளவில் (Life Expectency) நேர்மறையான (கூட்டுவதாக) தாக்கத்தை ஏற்படுத்துவதாகச் சொல்கிறது.

உலகம் முழுவதும் மருத்துவ-சுகாதாரத் துறைகள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகளைச் சேர்த்து 2012-ல் வெளியிடப்பட்ட ஆய்வு ஒன்று மருத்துவத்துறையில் தனியார்மயம் அதிக அளவிலான ஊழலுக்கு வழிவகுப்பதாகத் தெரிவிக்கின்றது. மேலும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொது மருத்துவம், மக்களுக்குக் குறைந்த செலவில் சிறப்பான சுகாதாரத்தை வழங்குவதாகவும், காசநோய், மஞ்சல் காமாலை போன்ற நோய்களுக்கு எதிராக அரசாங்கப் பொது மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனைகளை ஒப்பிடும்போது சிறப்பாகச் செயல்படுவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இதுமட்டுமல்லாமல், மருத்துவத்தில் தனியார்மயம் மிகப்பெரிய அளவிலான ஏழை-பணக்காரர்கள் வித்தியாசத்திற்கு இட்டுச்செல்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதை நடைமுறையோடு ஒப்பிட்டுப்பார்த்தால் பொதுத்துறை சுகாதாரத்தினால் மருத்துவத்துறையில் சிறப்பான முன்னேற்றம் கண்டதில் மிக முக்கிய உதாரணம் தமிழ்நாடு.

## உயிர்காக்கும் தமிழ்நாட்டு மாடலும் தோற்றுப்போன குஜராத் மாடலும்:

மோடியின் குஜராத் மாடலை இந்தியா முழுவதும் செயல்படுத்தப்போவதாகச் சொல்லி ஆட்சியைப்பிடித்தது பாஜக அரசு. ஆனால், குஜராத் மாடல் மீண்டும் ஒருமுறை வெற்று புஸ்வானமாகியிருக்கிறது. இன்றைக்கு வரை குஜராத் மாநிலத்தில் கொரொனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 5000ஐ தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. கொரொனாவிலிருந்து மீண்டவர்களது விகிதம் (recovery rate) 17.5% ஆகவும் உயிரிழப்பின் விகிதம் (mortality rate) 10.5% ஆகவும் இருக்கிறது. அதேவேளைத் தமிழ்நாட்டில் கொரொனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2526 ஆகவும் கொரொனாவிலிருந்து மீண்டவர்களது விகிதம் 47% ஆகவும் உயிரிழந்தவர்களது விகிதம் 1.1% ஆகவும் இருக்கிறது.

உண்மையில், குஜராத்தின் நிலை இவ்வளவு மோசமாக இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. குஜராத்தில் நான்குமுறை ஆட்சியமைத்த மோடி அரசாங்கமே இதற்கானக் காரணம் என்பதைப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. குஜராத்தில் தற்போதைய நிலையின்படி ஆயிரம் பேருக்கு 0.33 மருத்துவப்படுக்கைகள் தான்

இருக்கின்றன. இது பீகார் மாநிலத்தின் ஆயிரம் பேருக்கு 0.55 மருத்துவப்படுக்கைகள் என்ற எண்ணிக்கையை ஒத்ததாகும். இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரப்படி பொதுத்துறையில் முதலீடு செய்யும் 18 பெரும் மாநிலங்களின் பட்டியலில் குஜராத் 17 ஆவது இடத்திலிருக்கிறது. குஜராத், தனது மொத்த பட்ஜெட்டில் கிட்டத்தட்ட 31.6% மட்டுமே பொதுத்துறையில் செலவிடுகிறது. குறிப்பாக சுகாதாரத்துறையில் கடந்த இரண்டு தசாப்தங்களாகவே குஜராத் செலவிடும் தொகை கிட்டத்தட்ட 1% ஜிடிபி அல்லது அதற்கும் குறைவு.

அதேவேளைத் தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டில் ஆயிரம் பேருக்கு 1.1 என்ற விகிதத்தில் மருத்துவப்படுக்கைகள் இருக்கின்றன. உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின் படி இந்தியாவிலேயே ஆயிரம் பேருக்கு 0.77 மருத்துவப்படுக்கைகள்தான் உள்ளன. (பிறந்த) குழந்தைகள் இறப்பு விகிதம் என்பது 1.9% ஆக இருக்கிறது. இது இந்தியாவின் தேசிய இறப்பு விகிதத்தை (2.7%) விட மிகக்குறைவு. தாய்வழி (பேறுகால) இறப்பு விகிதமானது தமிழ்நாட்டில் 0.062% ஆகவும் இது இந்திய அளவில் .167% ஆகவும் இருக்கிறது. இப்படி நாட்டிலேயே சிறப்பான வகையில் சுகாதாரத்துறையில் குறிப்பாக ஆரம்பச் சுகாதாரத்தில் முன்னோடியாகியிருக்கிறது தமிழ்நாடு. இதுவரை மூன்று மாநிலங்களில் மட்டும்தான் கொரொனாவிற்கான சோதனை ஒரு லட்சத்தைத் தாண்டியிருக்கிறது. அதில் தமிழ்நாடும் ஒன்று.

உயர்கல்வியில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் 7 கோடி பேருக்கு 52 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அதில் 22 பல்கலைக்கழகங்கள் மாநில அரசால் நடத்தப்படுகின்றன. குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே அதிக அளவிலான அரசு மருத்துவக்கல்லூரிகள் இருக்கின்றன. மொத்தம் 6850 இளங்கலை மருத்துவச்சீட்டுகள் தமிழ்நாட்டில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் தான் இந்தியாவிலேயே மிகச்சிறந்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். இந்தியாவிற்குச் சிகிச்சைக்காக வரும் வெளிநாட்டுப்பயணிகள் 45% பேர் சென்னைக்குத்தான் வருகிறார்கள். இந்தியாவிற்குள் வெளிமாநிலங்களுக்குச் சிகிச்சைபெறச் செல்பவர்களில் 30-40% பேர் சென்னை வருகிறார்கள். சென்னையை இந்தியாவின் Medical Hub என்றும் மருத்துவ தலைநகரம் என்றும் சொல்கிறார்கள்.




“69% இடப்பங்கீட்டின் வழியாகத் தமிழக கல்லூரிகளில் படித்தவர்கள் 80 சதவிகிதத்திற்கும் மேலாகத் தமிழகத்தில் தான் பணி புரிகிறார்கள். இங்கு அதிகமாகப் படிப்பவர்கள் பல்வேறு சமூகத்தில் இருந்து வருவதால் அவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குப் பணிசெய்யச் செல்வது இல்லை. இங்குள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகிறார்கள்; தனியாக கிளினிக் வைத்துள்ளார்கள். இதனால் தான் தமிழகத்தில் மருத்துவ திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த முடிகிறது. வட இந்தியாவில் படிப்பவர்களில் 80% சதவீதம் மேல் சாதிக்காரர்கள். மற்றவர்கள் நுழையவே முடியாது. எய்ம்ஸ் ஒரு மத்திய அரசு நிறுவனம். 550 கோடி ஒவ்வொரு ஆண்டும் அதுக்கு ஒதுக்குகிறார்கள். 1996 ஆம் ஆண்டு வரை அங்கு இட ஒதுக்கீடு கிடையாது. ஒரு ஆய்வு அறிக்கை என்ன சொல்கிறது என்றால் எய்ம்ஸில் படித்தவர்கள் 56% பேர் இந்த நாட்டில் இல்லை. அமெரிக்காவிற்கும், லண்டனுக்கும் மேல் படிப்புக்காகச் சென்று அங்கேயே பணிபுரிவதாகச் சொல்லுகிறது.” என்கிறார் மருத்துவர் எழிலன்.

தமிழகத்தின் ஆரம்பச் சுகாதாரம் என்பது வலுவானது. 1980-க்குப் பிறகு தமிழகத்தில் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட்ட சுகாதார உள்கட்டமைப்பு இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளுக்கும் முக்கியமான மாடல் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இது இங்கு நடந்த 60 ஆண்டுக்கால திராவிட சித்தாந்தப் போராட்டத்தின் மிக முக்கியமான பலன்.

மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் தமிழ்நாட்டில் நடந்த சமூகநீதி ஆட்சியானது அதிகாரப் பரவலாக்கலைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது; தமிழ்நாடு முழுவதும் பொதுத்துறைக் கட்டமைப்பு வலுவாக இருக்கிறது. லாபமற்ற அனைத்து மக்களுக்குமான வாய்ப்புகளைக் கொண்டு சேர்க்கும் சமூகநீதி திட்டங்களாலேயே தமிழ்நாடு வளர்ந்த நாடுகளுக்கு இணையான மருத்துவ சுகாதார கட்டமைப்பினைப் பெற்றிருக்கிறது.

நீட் தேர்வினை மத்திய அரசு திணிக்கும்முன் வரை, இளங்கலை மருத்துவம் முடித்த பின்னர் ஒருவருடம் கிராமப்புறங்களில் வேலை பார்க்கும் மருத்துவர்களுக்கு மேற்படிப்புகளில் சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் இருக்கும் மருத்துவர்கள், தன்னிடம் வரும் நோயாளிகளை ‘அம்மா அப்பா’ என்று அழைத்து நேரடியான கவனிப்பினை வழங்குகிறார்கள். இன்றைக்கு கொரொனாவிற்கு எதிராகத் தமிழ்நாட்டின் போரினை நடத்தி வருபவர்களும் இட ஒதுக்கீட்டில் படித்த ஏழை மக்களுக்காகப் பணிபுரிந்த அரசுத்துறை மருத்துவர்கள்தான்.

இந்திய அரசு கல்வியைப் பொது பட்டியலுக்கு மாற்றி, தற்போது நீட் தேர்வுகள் மூலம் அனிதா போன்ற தகுதிமிக்க, மக்களுக்காக மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்களின் கனவை, உயர்சாதி-பணக்கார மாணவர்களுக்கு விற்றும் அதன் லாபத்தைத் தனியாருக்கும் தாரைவார்த்திருக்கிறது. இதுவரை தமிழ்நாடு சேர்த்துவைத்ததை (பொது மருத்துவம்-சுகாதாரத்துறை வளர்ச்சி) நீட்டின் மூலம் போட்டு உடைத்திருக்கிறது இந்திய அரசு. நோயாளி பேசுவது மருத்துவருக்கும் மருத்துவர் கேட்பது நோயாளிக்கும் புரியாதநிலை, அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் எண்ணிக்கை குறைவு, குறிப்பாகக் கிராமப்புறங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலை, தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை பெருக்கம் இவற்றின் விளைவாக



சுகாதாரத்துறை அடையப்போகும் வீழ்ச்சி போன்ற நீட்டின் எதிர்விளைவுகளை இனி வரும் வருடங்களில் எதிர்நோக்கவிருக்கிறோம்.

இந்தநேரத்தில் சுகாதாரத்தையும் பொது பட்டியலுக்கு மாற்றும் வேலையை ஜனவரியிலிருந்து தீவிரப்படுத்தியிருக்கிறது மோடி அரசு. கொரொனா பரவலிலும் சுகாதாரத்தைப் பொது பட்டியலுக்கு மாற்றும் முயற்சி, பரிசோதனைக்கருவிகளை பறித்துவைத்துக்கொண்டு மத்திய அரசுதான் பிரித்துக்கொடுக்கும் என்று சொல்வது, மத்திய அரசுக்கு நெருக்கமான மாநிலங்களுக்கு அதிக நிதியைக் கொடுப்பது என்று பைத்தியக்காரத்தனங்களை ராஜதந்திரம் என்று நினைத்து மோடி அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. இவை அனைத்துமே இந்த நோயின் தீவிரத்தை இன்னும் அதிகரிக்கும். சுகாதாரத்தைப் பொருத்த அளவில் அதிகாரம் (மாநிலப்பட்டியலில் இருப்பதால்) சிறிய அளவு பரவலாக்கப்பட்டநிலையிலேயே இந்தியா கொரொனாவின் பிடியிலிருந்து தப்பிக்கமுடியாமல் தவித்துவருகிறது. சுகாதாரத்தைப் பொது பட்டியலுக்கு மாற்றி அடுத்து தனியார்வசத்தில் மொத்தமாக ஒப்படைக்கத் தொடங்குமானால், அடுத்த தொற்றுநோய் என்று ஒன்று வந்தால், ஓட்டு கேட்பதற்கு மோடியும் அமித்ஷாவும் மயானங்களுக்குத்தான் வரவேண்டும்!

கொரொனா பரவலுக்கு தனியார்மயத்தோடு அரசுகளின் நிர்வாகத் தோல்வி, இயலாமை என்று பல்வேறு சிக்கலான காரணங்கள் இருந்தாலும் உண்மையில் இந்த கொரொனா வைரஸ் அதனோடு ஒரு எச்சரிக்கை மணியையும், செய்தியையும் நமக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறது. அது தனிநபர் லாபத்தை மையமாகக் கொண்ட தாராளமயத்தின், தனியார்மயத்தின் படுபயங்கரமான தோல்வி!


அனைத்துமே தனியாரின் லாபத்திற்கான வணிகமாக மாற்றிய புதியப் பொருளாதாரக் கொள்கை இன்று ஒட்டுமொத்த மனித இனத்தைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளி இருக்கிறது. நவதாராளவாதம் எனப்படும் இந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் மையம் கொண்ட அமெரிக்காவில் அடித்தட்டு மக்கள் கொத்து கொத்தாக இறந்திருக்கிறார்கள். மருத்துவம், சுகாதாரம் என்பது மக்களுக்கானது; வணிகத்திற்கானது அல்ல; லாபத்திற்கானது அல்ல எனும் அடிப்படை சமூகநீதியான சோசலிச கொள்கைக்கு எதிரான இந்த நவதாராளவாதம் எனும் தாராளமயம், தனியார்மயம் மக்களைப் புதைகுழிக்குள் தள்ளி இருக்கிறது. இந்தக் கொள்கையால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள் மக்களைக் காக்கத் தடுமாறிக் கொண்டிருப்பதைத்தான் குஜராத் நமக்குச் சொல்கிறது. கடந்த காலத்தில் திராவிட இயக்கத்தின் சமூகநீதிக் கொள்கை சார்ந்து இயங்கியதாலேயே தமிழ்நாடும், சோசலிச வழியில் செயல்பட்ட கேரளமும் இன்று ஓரளவு வெற்றிபெறுவதற்குக் காரணம். ஆனால், இந்தக் கொள்கைகளைப் புறக்கணித்துவிட்டு தனியார்மயம், லாபமயம், தாராளமயமெனும் வேட்டையைக் கட்டவிழ்த்திருக்கும் மோடி அரசின் புதிய பொருளாதார கொள்கையின் தீவிர நடைமுறை நம்மை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும் முன்னர் சமூகநீதி காக்க அணி திரளவேண்டும். இந்தத் தாராளமயக் கொள்கைக்கு எதிராக மக்களைத் திரட்டி தமிழ்த்தேசிய சிந்தனை எனும் முற்போக்கு பெரியாரின் வழி நின்று சமூகநீதியை நிலைநாட்டுவோம். ●

## காப்பீட்டுக் கொள்ளைக்கான உதாரணம்:

காப்பீட்டில் இரண்டு வார்த்தைகள் மிகவும் முக்கியம். ஒன்று விலக்கு (deductible) மற்றொன்று இணைக்காப்பீடு (Coinsurance). இது மருத்துவமனையில் எப்படிப் பயன்படும் என்பதைப் பார்க்கலாம்.

ஒரு அமெரிக்கர் ரூ80,000 விலக்குடன் (deductible) மருத்துவக் காப்பீட்டினை வைத்திருக்கிறார். வருடத்தின் முதல் மாதம் மருத்துவரிடம் செல்கிறார்; 6000 ரூபாய் செலவாகிறது. இரண்டாவது மாதம் மீண்டும் மருத்துவமனை செல்கிறார்; 4000 ரூபாய் செலவாகிறது. இதன்பின் வருட முடிவிற்குள் ஒருநாள் அவசரமாகச் சிறிய அறுவை சிகிச்சை செய்வதற்கான தேவை வருகிறது. அறுவை சிகிச்சையுடன் மருத்துவமனைக்குக் கட்ட வேண்டிய மொத்தக்கட்டணமாக மூன்று லட்சம் தேவைப்படுகிறது.

அந்த வருடத்தில் ஏற்கனவே இரண்டு முறை மருத்துவமனை சென்றுவந்த செலவு (6000 ரூபாய் + 4000 ரூபாய்) 10,000 ரூபாய். அவருடைய மொத்த விலக்குத் தொகை 80,000 ரூபாய். இந்த நிலையில் அவர் இன்னும் அவரது விலக்குத் தொகையினை அடையவில்லை. 10,000 ரூபாய் போக, மீதம் 70,000 ரூபாய் இருக்கிறது.




மருத்துவக் காப்பீட்டினைப் பயன்படுத்துவதற்குமுன் அவர் 70,000 ரூபாயினை செலவு செய்ய வேண்டும். அதன் பிறகுதான் மருத்துவக்காப்பீட்டினைப் பயன்படுத்த முடியும். மீதம் தேவைப்படும் 2,30,000 ரூபாயில் 10%-20% - அதாவது 23000 ரூபாய் முதல் 46000 ரூபாய் வரை அவர் செலுத்தவேண்டும். மீதமிருக்கும் தொகையைக் காப்பீட்டு நிறுவனம் செலுத்தும். அதாவது கிட்டத்தட்ட 30% அல்லது மருத்துவச்செலவில் 3/1 பங்கு அந்த அமெரிக்கர் செலுத்த வேண்டும்.

# தமிழக அரசுக்கு சொந்தமான 'பாதுகாப்பு கவசங்கள் மற்றும் கிட்டுகளை' மத்திய அரசு பிடித்து வைத்து இருப்பது கண்டனத்திற்குரியது

10 ஏப்ரல் 2020 அன்று தமிழகத்தில் கொரனோ தொற்று நிலவரம் குறித்து பத்திரிக்கையாளர்களுக்கு தமிழக தலைமை செயலாளர் சண்முகம் அவர்கள் பேட்டி அளித்தார். அந்த சந்திப்பின்போது ஒரு பத்திரிக்கையாளர் நேற்று 50,000 'பாதுகாப்பு கவசங்கள் மற்றும் சோதனை கிட்டுகள்' தமிழகத்திற்கு வரும் என்று சுகாதாரத்துறை செயலர் பீலா ராஜேஷ் சொல்லியிருந்தார். அவை வந்துவிட்டதா என்று ஒரு கேள்வி எழுப்பி இருந்தார்.

அந்த கேள்விக்கு பதில் சொன்ன தலைமைச் செயலாளர் சண்முகம் அவர்கள் அந்த பாதுகாப்பு கவசங்கள் வந்துவிட்டது. மத்திய அரசிடம் இருக்கிறது மத்திய அரசு அவற்றை பிரித்துக் கொடுக்கும் என்று ஒரு பதிலை சொல்லி இருக்கிறார். அந்த பாதுகாப்பு கவசங்கள் மற்றும் சோதனை கிட்டுகளை ஆர்டர் செய்தது தமிழக அரசு. நியாயப்படி பார்த்தால் மத்திய அரசுதான் மாநிலங்களுக்கு அவற்றை கொடுத்து இருக்க வேண்டும். ஆனால் அது செய்ய தவறிய பட்சத்தில் மாநில அரசே ஆர்டர் செய்திருக்கிறது. அதையும் மத்திய அரசு தடுப்பதில் என்ன நியாயம் இருக்கிறது. சீனா ரஷ்யா போன்ற நாடுகள் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை அனுப்பும் பொழுது அதை வழியிலேயே அமெரிக்க கப்பல் படை கொள்ளை அடிப்பதற்கும் மத்திய அரசு இப்போது செய்து இருப்பதற்கும் ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா?

நியாயப்படி தமிழக அரசுக்கு கொடுக்க வேண்டிய எந்த நிதியையும் இதுவரை மத்திய அரசு கொடுக்கவில்லை.



மேலும் தமிழகத்தில் நாளுக்கு நாள் நோயின் தீவிரம் அதிகரித்துக்கொண்டே வருகிறது இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மத்திய அரசு பாதுகாப்பு கவசங்களையும் சோதனை கிட்டுகளையும் பிடித்து வைத்திருப்பது தமிழர்களின் மீதான பாஜக அரசின் வன்மத்தை காட்டுகிறது.

ஆகவே சூழ்நிலையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு மத்திய அரசு தனது வன்மத்தை விளக்கிவிட்டு தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு, பிடித்து வைத்திருக்கிற பாதுகாப்பு கவசங்களையும், சோதனை கிட்டுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று மே 17 இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

**மே பதினேழு இயக்கம்**

**10 ஏப்ரல் 2020**

# லிட்டில் அந்தமான் பகுதியில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை உடனடியாக மீட்டிடு!

**மத்திய, மாநில அரசுகளை மே 17 இயக்கம் வலியுறுத்தல் – 10 ஏப்ரல், 2020**





தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலத்தூர் தாலுகாவை சேர்ந்த 4 தமிழர்கள்

- பிரபாகரன் (34)
- செந்தில்குமார் (35)
- சுரேஷ் (31)
- சுரேஷ் (31)

மற்றும் இந்தியாவின் பிற மாநிலத்தை சேர்ந்தவர்களும் ஒப்பந்த தொழிலாளர்களாக அந்தமான் தீவுகளில் லிட்டில் அந்தமான் பகுதிக்கு வேலைக்கு சென்றிருக்கிறார்கள். தற்போது கொரனோ வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக நாடு முழுவதும் போடப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவாலும் கடல்வழி வான்வழி பயணம் தடை செய்யப்பட்டிருப்பதாலும் அவர்கள் தமிழகம் வர வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். மேலும் ஊரடங்கின் காரணமாக தற்சமயம் அங்கு வேலைகள் நடைபெறவில்லை ஆகையால் தற்போது அவர்கள் உணவுக்கும் துன்பப்படுவதாக அறிகிறோம். ஆகவே லிட்டில் அந்தமான் பகுதியில் சிக்கித் தவிக்கும் தமிழர்கள் உள்ளிட்ட ஏனையவர்களை மத்திய மாநில அரசுகள் உடனடியாக மீட்டு அவரவர் சொந்த ஊருக்கு அனுப்பிட வேண்டுமென்று மே 17 இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

அங்குள்ளவர்களை தொடர்புகொள்ள

**செந்தில்குமார் – 97860 59495**

**பிரபாகரன் – 97866 05470**



# தொற்றுநோய் எனும் எதிர்த்தாக்குதல்

**இயற்கை வனப்பகுதிகள் அழிக்கப்படுவதாலும், 'கார்ப்பரேட்' உணவு உற்பத்தி முறைகளாலும் இதுவரை கண்டிராத அளவிற்குத் தொற்றுநோய் கிருமிகள் மனிதர்களுக்கு 'தாவு'கின்றன.**

'பெட்சி'யை, (அமெரிக்காவிற்கு கடத்தி வரப்பட்ட ஆப்பிரிக்கக் குரங்கு) கள்ளச் சந்தையில் விற்க ஒருவர் முயற்சி செய்கிறார். திடீரென, அவரும் சந்தையில் இருப்பவரும் ஒரு மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்துபோகிறார்கள். அடுத்த சில நாள்களில் அந்த நகரின் மக்களில் பலரும் மர்மக் காய்ச்சலால் இறக்கிறார்கள். இப்படி, குரங்கில் இருந்து மனிதருக்குத் தாவிய 'மோடாபா' வைரசு தொற்றைப் பற்றிய விறுவிறுப்பான கதை தான் 'அவுட்பிரேக்' (Outbreak) என்ற ஆங்கிலத் திரைப்படம்.

***"பூமியின் மீதான மனிதர்களின் ஆதிக்கம் தொடர்ந்து இருப்பதற்கு அச்சுறுத்தலாக இருப்பது வைரசுகள் மட்டுமே!"*** *- முனைவர். ஜோஷுவா லெடெர்பேர்க், நோபல் பரிசு பெற்ற நுண்ணுயிரியல் ஆராய்ச்சியாளர்.*

அவுட்பிரேக் திரைப்படத்தின் முதல் காட்சி இந்த வரிகளுடன் தான் தொடங்கும்.

அண்மையில், மலையாளத்தில் வெளியான 'வைரசு' என்ற திரைப்படம் கேரளத்தில் நிபா வைரசு பரவலைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது மற்றும் அதன் தோற்றத்தைக் கண்டறிவதைக் காட்சிகளாக்கிக் காட்டும். இதுபோன்ற சில முக்கியமான படங்களை மொழிபெயர்த்து தொலைக்காட்சிகளில் திரையிட்டால் மக்கள் விழிப்புணர்வு பெறுவார்கள். இந்த தொற்றுநோய்களுக்குப் பின்னால் உள்ள அறிவியல் காரணங்களையும் அறிந்து கொள்வார்கள். கெட்ட வாய்ப்பாக, நாம் ஒரு இந்துத்துவ மதவெறி ஆட்சியின் பிடியில் சிக்கியுள்ளதால் நமக்கு காணக்கிடைப்பது எல்லாம் சமூகத்தின் மூடநம்பிக்கைகளையும் சாதி வருண வேற்றுமைகளையும் கற்பிக்கும் பிற்போக்கு கற்பனை காவியங்களே!

**"பூமியின் மீதான மனிதர்களின் ஆதிக்கம் தொடர்ந்து இருப்பதற்கு அச்சுறுத்தலாக இருப்பது வைரசுகள் மட்டுமே!"**
- முனைவர். ஜோஷுவா லெடெர்பேர்க், நோபல் பரிசு பெற்ற நுண்ணுயிரியல் ஆராய்ச்சியாளர்.

எல்லாம் வல்லவனாக மனிதன் தன் வரம்புகளை மீறும் சமயங்களில் இயற்கை அவன் வரம்புகளை அவ்வப்போது அவனுக்குக் காட்டுவதுண்டு. இயற்கையின் மீது மனிதன் நிகழ்த்தும் தாக்குதல்களுக்குப் பதிலாக வரும் எதிர்த் தாக்குதல்கள் கடுமையாகவே இருந்துள்ளன.

## தாக்குதல்

"ஆகஸ்டு 2018 தொடங்கி, 12 மாதங்களில் நியூயார்க் மாநகரத்தைப் போல 12 மடங்கு அளவிலான அமேசான் மழைக்காடுகள் அழிக்கப்பட்டுள்ளன" - நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி.

"எங்கள் வளங்களை எங்கள் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறோம். இது குறித்து வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடுகளின் அறிவுரை எங்களுக்கு வேண்டாம்" என்று பிரேசிலின் தீவிர வலதுசாரி அதிபரான அயர் போல்சோனாரோ தெரிவித்தார். பிரேசிலின் அமேசான் மழைக்காடுகள் ஆண்டு முழுவதும் எதோ ஒரு மூலையில் எரிந்து கொண்டுதான் உள்ளது.

பிரேசிலின் மழைக்காடுகளை அழித்து வளங்களைச் சூறையாடுவதற்குத் தடையாக உள்ள பூர்வகுடி செவ்விந்தியர்களை "அவர்கள் நிலத்தைவிட்டு தூக்கியெறிந்து, அங்கு அமைக்கப்படும் விவசாய பண்ணையார்களுக்குப் பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கிகளை வழங்குவேன்" என்று கூறினார்

அயர் போல்சோனாரோ. தில்லியில் நடைபெற்ற 2020 இந்தியக் குடியரசு நாள் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றவர் இவரே.

பிரேசில் அதிபரின் நெருங்கிய நண்பராகப் பெருமை பேசும் இந்திய ஒன்றிய பிரதமர் மோடி, காடுகளையும் அங்கு வாழும் பழங்குடியின மக்களையும் தூக்கியெறிவதில் போல்சோனாரோவிற்கு சளைத்தவரல்ல. மார்ச் 2019-ல் மோடி கொண்டுவந்த '1927 இந்திய வனச்சட்டம்' திருத்தத்தின்படி இந்தியா முழுவதுமுள்ள 1 கோடிக்கும் மேலான காட்டுவாழ் பழங்குடியின மக்கள் அந்த நிலத்தின் மீது சொந்தம் கொண்டாட முடியாது. காட்டு வளங்களை எடுக்கப் பழங்குடியின மக்களை இராணுவத்துணையுடன் பலவந்தமாக வெளியேற்றலாம்.



■ எரியும் அமேசான் மழைக்காடுகள்

இப்படியாக, இயற்கையின் மீதும் அதன் அரவணைப்பில் தொடர்ந்து வாழும் பழங்குடியினர் மீதும் இன்றைய அரசுகளின் அக்கறைகளை உணரலாம். தனியார் முதலாளிகளின் லாப வெறிகளுக்காக வனங்கள் அழிக்கப்படுவதால், நாம் எதிர்கொள்ளும் சூழலியல் நெருக்கடிகளை அறிந்திருப்போம். வனவிலங்குகள் அழிவது முதல் நிலம், நீர், சுற்று சூழல் மாசுபடுவது; மழை பொய்த்துப் போவது, பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேறுவது என அந்த பட்டியல் நீளும். முக்கியமாக, தற்போது நாம் கவனிக்க வேண்டியது 'அழிக்கப்படும் காடுகளில் இருந்து மனிதர்களுக்குத் தொற்றும் நுண்ணுயிர் கிருமிகளை' பற்றி. கடந்த 50 ஆண்டுகளில் அழிக்கப்பட்ட காடுகளிலிருந்து சுமார் 300 நுண்ணுயிர் கிருமிகள் மனிதர்களுக்கு 'தாவி' உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**"75 ஆண்டுகளுக்கு முன்னர் ஆந்த்ராக்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்த 'கலைமான்' (ரெயின் டீர்) உடல் சைபீரியாவின் உறைபனியில் (perma frost) பாதுகாக்கப்பட்டு இருந்துள்ளது. 2016-ல் அங்கு நிலவிய கடும் வெப்பத்தால் உறைபனி உருகி இறந்துபோன விலங்கின் உடலிலிருந்த ஆந்த்ராக்ஸ் அந்த பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த கலைமான்களுக்குப் பரவியுள்ளது. பிறகு, மான்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவியுள்ளது" என்று கண்டுபிடித்துள்ளனர்.**

வேகமாகப் பசுமை போர்வையை இழந்துவரும் பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஆர்டிக் உறைபனிகள் வேகமாகக் கரைந்து வருகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளாக உறைபனிகளில் பாதுகாக்கப்பட்டு வரும் நுண்ணுயிரிகள் பனி உருகினால் மீண்டும் உயிர்ப்படையும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். 2016-ல் சைபீரியாவில் ஒரு 12 வயது சிறுவன் 'ஆந்த்ராக்ஸ்' தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தான். அது குறித்து ஆய்வை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள், "75 ஆண்டுகளுக்கு முன்னர் ஆந்த்ராக்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்த 'கலைமான்' (ரெயின் டீர்) உடல் சைபீரியாவின் உறைபனியில் (perma frost) பாதுகாக்கப்பட்டு இருந்துள்ளது. 2016-ல் அங்கு நிலவிய கடும் வெப்பத்தால் உறைபனி உருகி இறந்துபோன விலங்கின் உடலிலிருந்த ஆந்த்ராக்ஸ் அந்த பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த கலைமான்களுக்குப் பரவியுள்ளது. பிறகு, மான்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவியுள்ளது" என்று கண்டுபிடித்துள்ளனர்.

மனித சமூகத்தைவிட்டு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் பெரியம்மை, புபோனிக் பிளேக், ஸ்பானிய காய்ச்சல் வைரசுகளும் சைபீரியாவின் உறைபனிகளில்



■ "அமேசான் காடுகளுக்கு நடுவே நெடுஞ்சாலை அமைப்பேன்" என்று கூறியபடி பிரேசில் அதிபர் காடுகளை அழித்து அமைத்து வரும் நெடுஞ்சாலை.



■ அமேசான் மழைக்காடுகள் அழிக்கப்பட்டு விவசாய நிலங்களாக்கப்படுகிறது

புதைந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். புவி வெப்பமயமாவதால் புதைந்துள்ள இந்தக் கிருமிகள் வெளியே வர வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

அதுமட்டுமல்லாமல், பொதுச்சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுவதால் அவர்கள் விளிம்பு நிலைகளுக்குத் தள்ளப்படுகின்றனர். இப்படி ஓரம்கட்டப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தேடி வனப்பகுதிக்குள் நுழைகின்றனர். வனத்தில் இருக்கும் அறியப்படாத நோய்த்தொற்றுக்கள் இவர்கள் மூலம் பொதுச் சமூகத்திற்குள் நுழைகிறது. கொரொனா வைரசு தொற்றுக்கும் இதுவே காரணமாகக் கருதப்படுகிறது.

ஒருபுறம் இயற்கை வனங்களின் அழிவு, புதிய கிருமிகளை மனித சமூகத்திற்கு அறிமுகம் செய்கிறது; மறுபுறம் இன்றைய இயற்கைக்கு விரோதமான உணவு உற்பத்தி முறைகள் பழைய கிருமிகளுக்கு மிக அதிக வீரியத்தை ஊட்டுவதுடன், புதிய கிருமிகளையும் உருவாக்கி வருகின்றன. இன்றைய உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் இந்த கிருமிகளையும் அவை ஏற்படுத்தும் தொற்றுக்களையும் உலகமயமாக்கியுள்ளது. சீனாவின் வூகான் மாகாணத்தில் ஏற்பட்ட தொற்று இன்று உலகமயம் ஆக்கப்பட்டுள்ளது.

'நோய் எதிர்ப்பு, பூச்சி எதிர்ப்பு' என்று உணவு தானிய உற்பத்தியில் தொடங்கிய மரபணு மாற்று (GM- Genetically Modified) அறிவியல் இன்று, உணவுகளின் உட்கூறு மாற்றுவது, நெடுநாள்கள் கெடாமல் இருப்பது, கவர்ச்சியான வர்ணங்களில் இருப்பது, விதையில்லாமல் இருப்பது என்று மனித மனம் போன போக்கில் பன்னாட்டு நிறுவனங்களின் வணிகத் தேவைகளுக்கு ஏற்ப உணவுகளும் ஆராய்ச்சி கூடங்களில் 'டிசைன்' (வடிவமைப்பு) செய்யப்படுகிறது.

2019-ல் ×55 பில்லியன் டாலராக உள்ள 'விதைகள்' வணிகத்தின் சர்வதேச மதிப்பு 2025-ல் ×86 பில்லியனாக வளர்ச்சி அடையவுள்ளது. இந்த வணிகத்தை வளர்ப்பதற்குத் தேவையான அடிப்படைக் கோட்பாடு 'விளைந்த உணவுப் பொருள்கள் தங்களுடைய அடுத்த தலைமுறைக்கான விதைகளாக மாறும் மரபணு



தன்மையை இழந்திருக்க வேண்டும்.’ தன்னுடைய அடுத்த தலைமுறையை உருவாக்கிடும் இயற்கையின் விதியை இழந்த அரிசி, கோதுமை, காய்கறி, பழங்களை (Seedless) உண்ணும் மனிதர்களால் மட்டும் தங்கள் அடுத்த தலைமுறைகளை இயற்கையாக எப்படி உருவாக்கிடச் சாத்தியமாகும்? ஊரெங்கும் புற்றீசலாகக் கிளம்பும் செயற்கை ’கருவுறும் மருத்துவமனைகள்’ (fertility hospitals) இதற்கு சாட்சியாக நிற்கின்றன!

2018-ல் ×1.5 பில்லியன் டாலராக இருந்த செயற்கை கருத்தரிப்பின் சர்வதேசச் சந்தை மதிப்பு 2026-க்குள் ×3 பில்லியன் டாலர்களாக உயரும் என்று கணிக்கப்படுகிறது.

2017 சல்லிக்கட்டு பண்பாட்டுப் போராட்டத்தின் பின்னணியில் பிணைந்திருந்த சர்வதேச உணவு வர்த்தக அரசியலையும் நினைவில் கொள்ளவேண்டும். வெளிநாடுகளில் இருந்து வரும் மாடுகளின் விந்துகளால் செயற்கை கருத்தரித்தல் முறையின் மூலம் நாட்டு மாடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இப்படியாகவே, நாட்டுக் கோழிகளும் அழிக்கப்பட்டு ஆய்வுக் கூடங்களில் உருவாக்கப்படும் பிராய்லர் கோழிகள் சந்தை படுத்தப்படுகின்றன. 2018-ல் ×1.66 பில்லியன் டாலராக உள்ள கால்நடைகள் செயற்கை கருத்தரித்தல் வணிகம் 2026-க்குள் சுமார் ×2.5 பில்லியன் டாலர்களாக வளர்ச்சியடையும் என்று மதிப்பிடப்படுகிறது. இந்த சந்தையைக் கட்டுப்படுத்தும் பன்னாட்டு நிறுவனங்கள் அதிக பால் கொடுக்கும் மாடுகள்; கூடுதல் எடை இறைச்சி கொடுக்கும், நோய் தாக்குதலுக்கு உள்ளாகாத கால்நடைகள் என ’டிசைனர்’ கால்நடை மரபணுக்களையும் உருவாக்குகின்றன.

இப்படி, ‘டிசைனர்’ கால்நடைகள் கருத்தரிப்பது முதல் பண்ணைகளில் மருந்துகள் மற்றும் செயற்கை உணவுகளை உட்கொள்வது வரை கால்நடை உற்பத்தி முறை முற்றிலும் இயற்கைக்கு மாறான வகையில் உள்ளது. பண்ணைகளில் முட்டை, பால் மற்றும் இறைச்சியின் மேலதிக உற்பத்திக்காகப் பின்பற்றப்படும் முறைகளால் வீரியமிக்க புதியரக நோய்க் கிருமிகளும் மரபணு பிறழ்வுகளும் பண்ணை கால்நடைகளில் நிகழ்வது வாடிக்கையாகிவிட்டது. இன்று, பண்ணை தொழில் முறை உணவு உற்பத்தியால் நாம் உண்ணும் உணவும், அதன் உற்பத்தி முறையும் நமக்கு உயிர்க்கொல்லியாக மாறியுள்ளது.

நாளொன்றுக்கு 18 கோடி கோழிகள், 40 லட்சம் பன்றிகள், 50 கோடி செம்மறி ஆடுகள், 8 லட்சம் மாடுகள் இறைச்சிக்காக உலகம் முழுவதும் கொல்லப்படுகின்றன.

சர்வதேச மாட்டு இறைச்சி சந்தை மதிப்பு ×300 பில்லியன் டாலர்கள். உலகில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா தான் மாட்டு இறைச்சியை அதிகளவில் ஏற்றுமதி செய்கிறது.

உணவு உற்பத்தித் துறையால், உணவு தானியம் மற்றும் கால்நடை வளர்ப்புக்காக, உலகின் 12% பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றப்படுகிறது. இதில், நான்கில் மூன்று பங்கு கால்நடைகள் வெளியேற்றுகின்றன. குறிப்பாக, பன்றி, கோழிகளை விட 50% குறைவாகவே மாட்டு இறைச்சி ஆண்டிற்கு உற்பத்தியாகினாலும் அவற்றைவிட மாடுகள் 4 மடங்கு கூடுதலான பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுகின்றன.

இதுமட்டுமல்ல. மாடுகள் வளர்ப்பதற்கு மிகப்பெரிய மேய்ச்சல் நிலப்பரப்பு தேவைப்படுகின்றன. உலகின் மாட்டு இறைச்சி ஏற்றுமதியில் முதலிடத்தில் இருப்பது பிரேசில். மாடுகளின் நன்னீர் தேவையும் பன்றிகளை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

தன்னுடைய அடுத்த தலைமுறையை உருவாக்கிடும் இயற்கையின் விதியை இழந்த அரிசி, கோதுமை, காய்கறி, பழங்களை (Seedless) உண்ணும் மனிதர்களால் மட்டும் தங்கள் அடுத்த தலைமுறைகளை இயற்கையாக எப்படி உருவாக்கிடச் சாத்தியமாகும்? ஊரெங்கும் புற்றீசலாகக் கிளம்பும் செயற்கை ’கருவுறும் மருத்துவமனைகள்’(fertility hospitals) இதற்கு சாட்சியாக நிற்கின்றன!

மாட்டு இறைச்சி பண்ணைகளுக்கு மேய்ச்சல் நிலங்களை உருவாக்கிடவே பிரேசில் அமேசான் மழைக்காடுகளை வேகமாக அழித்து வருகின்றது.

மனிதக்குலம் தனது தனிநபர் லாபவெறிகளுக்காக இயற்கையைச் சூறையாடி வந்ததை எதிர்த்து இயற்கையும் அவ்வப்போது எதிர்வினையாற்றி வந்துள்ளது. அண்மைக்காலமாக அந்த எதிர்வினைகள் தீவிரமடைந்துள்ளன!

## எதிர்த்தாக்குதல்

வரலாற்றில் தொற்று நோய்கள் சில பத்தாண்டு இடைவெளியில் தொடர்ந்து இருந்துள்ளதை நாம் உணர முடிகிறது. ஆனால், அண்மைக் காலமாகத் தொற்று நோய்கள் மிகக் குறுகிய கால இடைவெளியில் மிக வீரியத்துடன் மனிதர்களைத் தாக்கி வருகின்றன. வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் நோய்த் தொற்றுகள் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு 'தாவி' உள்ளது. வன விலங்குகளிடம் இருந்து HIV (மனிதக் குரங்கு), Ebola (குரங்கு, வவ்வால்), SARS (வவ்வால்), MERS (ஒட்டகம்), ZIKA (குரங்கு), NIPAH (வவ்வால்) போன்றவையில் இருந்து மனிதர்களுக்குப் பரவியது.

உலகெங்கும் நிறுவனமயமான கால்நடை பண்ணை முறையால் பாரம்பரியமாக இறைச்சி தொழில் செய்தவர்கள் சந்தையை இழந்து வருமானத்தையும் இழந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக, அவர்கள் வனவிலங்கு இறைச்சி விற்கும் தொழிலுக்குத் தள்ளப்பட்டதாக சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பல்வேறு கவர்ச்சி கதைகளின் வாயிலாக வளர்ந்து வரும் இந்த வனவிலங்கு இறைச்சி வணிகம் (Exotic animal meat) நோய்த் தொற்றுகளை அதிகரிக்கிறது.



மேலும், வரலாற்றில் இல்லாதவாறு இன்றைய தொற்று நோய்கள் வேகமாகச் சர்வதேச அளவில் பரவுகின்றன. முதன்முறையாக, கோவிட்-19 உலகம் முழுவதும் ஒரு சிலநாள்களில் பரவியுள்ளதைக் காண்கிறோம். இதற்கு, மனிதர்களின் அதிக அளவிலான சர்வதேச விமானப் பயணங்கள் முக்கிய காரணமாகவும் உள்ளது. மனிதன் சர்வதேசங்களுக்குப் பயணிப்பதைப் போல நோய்த் தொற்றுக்களும் அவனுடன் சேர்ந்து பயணிக்கின்றன. இந்தச் சமூகச் சூழலில் தொற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மருந்துகள் மட்டும் நிரந்தர தீர்வை வழங்கிடாது. நிரந்தர தீர்வு என்பது நோய் தோற்றுவித்த மூலகாரணங்களை ஆராய்வதில் உள்ளது.

## காடுகளின் எதிர்த்தாக்குதல்

இன்றைய COVID-19 கொரொனா வைரஸ் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவியது என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், COVID-19 “இயற்கையான மரபணு பிறழ்வால்” உருவாகியுள்ளது என்று மருத்துவ ஆய்வாளர்கள் நிச்சயமாகக் கூறுகின்றனர். மனிதக்குல மறுபுறம், நிறுவனமயமான கால்நடை பண்ணைகள் மிக அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. காடுகள் வேகமாக அழிக்கப்படுவதால் அங்குள்ள பறவைகள் (வவ்வால்) மனித சமூகத்துடன் தொடர்பு கொள்கின்றன என்ற மற்றொரு காரணம் சொல்லப்படுகிறது.

## பண்ணைகளின் எதிர்த்தாக்குதல்

இறைச்சி பண்ணைகளில் இருந்து பரவும் நோய்த் தொற்றுக்களும் சமீபமாக அதிகரித்து வருகிறது. 1918-ல் 'ஸ்பானிய காய்ச்சல்' பன்றி பண்ணைகளில் இருந்து பரவியது. அண்மையில், 2008-ல் பறவை காய்ச்சல் (H5N1), 2009-ல் பன்றிக் காய்ச்சல் (H1N1) பண்ணைகளில் இருந்து வந்தவையே.

விலங்குகளின் வைரசுகள் (Zoonosis) பெரும்பாலும் கோழிப் பண்ணைகளில் மரபணு பிறழ்வு ஏற்பட்டு மனிதர்களை அடைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வீரியமிக்க புது வைரசுகளை (novel virus) அறிந்திராத

மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி பல சமயங்களில் தோல்வியடைகிறது. 2018-ல் வெளியிடப்பட்ட ஒரு ஆராய்ச்சி முடிவு "சுமார், 39 சமயங்களில் பண்ணைகளில் இருந்து மனிதர்களுக்கு வைரசுகள் 'தாவி' உள்ளன. அதில் 37 சமயங்களில் பண்ணை கோழிகளில் இருந்தே வந்துள்ளது" என்று கூறுகிறது.

## கோழிப் பண்ணை

நிற்கவோ நகரவோ துளி இடமில்லாத கூண்டுகளில் அடைத்து வைக்கப்படும் கோழிகள் பல்வேறு நோய்களால் பாதிப்படைகின்றன. இந்த கோழிகளை நோய்களில் இருந்து பாதுகாக்கவும் விரைவாக இறைச்சி எடை கூட்டவும் கட்டற்ற முறையில் தடுப்பு ஊசிகளும் மருந்துகளும் செலுத்தப்படுகின்றன. ×45 பில்லியன் டாலர் நோய்த்தடுப்பு மருந்து (antibiotics) சந்தையில் விற்கப்படும் 75% மருந்துகள் கால்நடை பண்ணைகளுக்குச் செல்கின்றன. இதில் 90% இரசாயன மருந்து கால்நடை கழிவின் மூலமாக வெளியேறி நிலத்தை மாசுபடுத்துகிறது.

**உணவு தானியங்கள் காய் கனிகள் மீது அறிவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் மனிதன் தொடுத்த 'மரபணு மாற்று', 'விதைகள் அற்ற', 'இரசாயன நச்சு நிரம்பிய' வளர்ச்சிகள் காரணமாக மலட்டுத் தன்மையும், புற்று நோயும் புதிய 'சாதாரண' நோய்களாகிப் போயின.**

இந்த கடுமையான இரசாயனங்களை எதிர்கொண்டு பண்ணை கால்நடைகளினுள் பிழைத்து வாழும் நுண்ணுயிரிகள் மனிதர்களிடம் 'தாவும்' போது மிக வீரியத்துடன் தாக்குகின்றன. இப்படி உருவான ஒரு 'சூப்பர் பக்' (drug resistant) தான் திசுக்களை உண்ணும் 'MRSA: Methicillin-resistant Staphylococcus aureus' எனப்படும் பாக்டீரியா. இது, இன்று உலகின் அனைத்து மருத்துவமனைகளிலும் காணப்படுகிறதாம். இந்த வரிசைகளில் உருவாகும் தொற்று நோய்களுக்கு பெரும்பாலும் இன்றைய மருத்துவச் சிகிச்சைகள் எதுவும் பலனளிப்பதில்லை. அதனால், இன்றும் 19-ம் நூற்றாண்டின் நோய்க் கட்டுப்பாடு முறையான நோயாளிகளை 'தடம் தேடி, தனித்து வைப்பது' மூலமே தொற்று கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. COVID-19-க்கும் இந்த 19-ம் நூற்றாண்டு நோய்க் கட்டுப்பாட்டு முறை தான் பின்பற்றப்படுகிறது.

## 'கார்ப்பரேட்' லாபவெறி

பயிர் விதைகளையும், கால்நடை விந்துகளையும் வடிவமைப்பதில் துவங்கி, நோய்த் தடுப்பு மருந்து, ஊட்டச்சத்து மருந்து, கால்நடை தீவனம் உற்பத்தி, விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு என்று அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் துடிப்பதில் பணக்கார நாடுகளின் லாபவெறியைத் தாண்டி சர்வதேச பொருளாதார அரசியலும் அடங்கியுள்ளது. மான்சாண்டோ பேயர், BASF, சின்ஜெண்டா, கார்கில், டைசன், BRF போன்ற பல பன்னாட்டுப் பகாசுர நிறுவனங்கள் இந்த வணிகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றன. ஏழை நாடுகள் உணவு மற்றும் அவற்றின் உற்பத்தி தேவைகளுக்காகத் தங்களைச் சார்ந்து இருக்க வேண்டுமென்பது பணக்கார நாடுகளின் ஏகாதிபத்திய அரசியல்.

வூகானில் உள்ள இறைச்சி கசாப்புக் கடைகளில் இருந்தே கோவிட்-19 வைரஸ் பரவியது என்று செய்திகள் வெளியாகியதில் இருந்து அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் பல ஐரோப்பியத் தலைவர்களும் சீனா தனது இறைச்சி கசாப்பு சந்தைகளை (wet markets) மூடவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

"சீனாவின் இறைச்சிக் கடைகளில் ஏற்படும் மனித-விலங்கு பரிவர்த்தனைகளால் தொடர்ந்து பரவும் நோய்களைக் கருத்தில் கொண்டு அந்த இறைச்சி சந்தைகளை மூடாமல் இருப்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை" என்று அமெரிக்காவின் தலைமை தொற்றுநோய் நிபுணர் மருத்துவர் அந்தோணி ஃபவுச்சி ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். உலக ஊடகங்கள் சீனாவின் இறைச்சி சந்தையைக் குறிவைத்து செய்தி பரப்பிக் கொண்டிருக்கின்றன. அதேநேரம், உலக சுகாதார அமைப்பின் தலைவர், "இந்த சந்தைகள் அனைத்து மக்களுக்கும் எளியமுறையில் ஆரோக்கியமான இறைச்சியை உடனுக்குடன் வழங்கி வருகின்றன. இந்த சந்தைகளின் சுகாதாரத்தை அரசு கவனிக்க வேண்டும்." என்று கூறியதாகச் செய்தி வெளியானது.

## இறைச்சி ஆலையும் அமெரிக்காவும்



சீனா, இந்தியா மற்றும் பல்வேறு வளரும் நாடுகளில் உள்ள பாரம்பரிய முறை கால்நடை மற்றும் கடல் உணவு சந்தைகள் மேலை நாடுகளின் பகாசுர நிறுவனங்கள் நுழைவதற்கு பெரும் தடையாக உள்ளன. கடந்த பிப்ரவரி மாதம் ட்ரம்ப் இந்தியாவிற்கு வந்திருந்த போது அமெரிக்காவில் இருந்து கோழிகளையும், பாலையும் இறக்குமதி செய்ய இந்திய ஒன்றியம் அனுமதியளித்தது.

இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தொழில் நலிவடையும். ஒரு நாளுக்குள் அழுகக்கூடிய இறைச்சியும், பாலும் இரசாயனம் மற்றும் குளிர் பதனப்பெட்டியில் அடைத்து 14,000 கிலோமீட்டருக்கு அப்பால் இருந்து இறக்குமதி செய்து இந்தியாவில் விற்கப்படும். உலகின் ஒரு முனையில்

இருந்து மறுமுனைக்குக் கொண்டுவரப்படுவதால் வீண் போக்குவரத்துச் செலவு, சூழலியல் மாசுபாடு ஏற்படும். இந்த பேரழிவு பொருளாதார வர்த்தக கொள்கையைத் தான் உலகமயமாக்கல் என்கின்றனர்.

## சமரச உடன்படிக்கை

உணவு தானியங்கள் காய் கனிகள் மீது அறிவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் மனிதன் தொடுத்த 'மரபணு மாற்று', 'விதைகள் அற்ற', 'இரசாயன நச்சு நிரம்பிய' வளர்ச்சிகள் காரணமாக மலட்டுத் தன்மையும், புற்று நோயும் புதிய 'சாதாரண' நோய்களாகிப் போயின.

அடுத்ததாக, ஆடு, மாடு, கோழி, பன்றி என இறைச்சிக்காக வளர்க்கப்படும் முறையில் 'நோய்களைத் தடுக்க', 'எடை கூட்ட' எனக் கட்டுப்பாடின்றி பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளும், ஊட்டச்சத்து மருந்துகளும் செலுத்தப்படுவது. இந்த இறைச்சிகளை உண்பதால் ஆர்மோன் சமமின்மை (குறிப்பாகப் பெண்களுக்கு), 'சூப்பர் பக்' நுண்ணுயிர் தொற்றுகள் புதிய 'சாதாரண' நோய்களாகிப் போயின.

உணவு உற்பத்தியை 'பெருக்கி, பட்டினிச் சாவுகளைத் தடுக்கிறோம்' என்ற போர்வையில் உணவு துறையின் உள்நுழைந்த ஆராய்ச்சி நிறுவனங்களும், பண்ணை நிறுவனங்களும் இன்று 'நோய் உற்பத்தி' கூடாரங்களாகியுள்ளன. இப்படி உற்பத்தியாகும் நோய்களைப் போக்குகிறோம் என்று இவர்களே அல்லது இவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு மருந்து ஆராய்ச்சி, மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மருந்து விற்பனையில் கொடிகட்டிப் பறக்கின்றன.

இதன் அடிப்படை காரணிகளைப் புரிந்துகொள்ள வேண்டும். எனது காலில் வரும் உலர் தோல் அரிப்பிற்கு மருத்துவர் கூறிய மருந்தைத் தடவினால் சரியாகிறது. சில வாரங்கள் கழித்து மீண்டும் வருகிறது. மீண்டும் மருந்து தடவி அந்த தோல் அரிப்பை போக்கிவிடுகிறேன். இது தீர்வு ஆகுமா? நிரந்தர தீர்வு என்பது என் உடலினுள், இரத்தத்தில், உள்ள பிரச்சனையைப் பரிசோதித்துக் குணமாக்குவதில் உள்ளது. இரத்தத்தில் உள்ள குறைகளைக் குணப்படுத்தாமல் எனது உலர்த்தோல் அரிப்பு வாழ்நாள் முழுவதும் மீண்டும் வந்து கொண்டுதான் இருக்கும். இதுபோலத் தான் நாம் ஒவ்வொரு முறையும் நோய்த் தடுப்பு மருந்துகள் ஆராய்ச்சி பின் ஓடுவதும்.

இன்று மனிதன் உண்ணும் உணவே அவனுக்கு எதிரியாகி உள்ளது. அந்த உணவு உற்பத்தியாகும் முறைகள் மனிதனுக்கு மட்டுமல்லாது பிற உயிரினங்களுக்கும் இயற்கை சூழலுக்கும் பெரும் கேடாக வளர்ந்துள்ளது. 2019-ல் COVID-19 கொரொனா நோயைப் போல 2020-ல் COVID-20 என்ற புதியரக கொரொனா வைரஸ் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! அதற்கும் சேர்த்து லாப வெறி முதலாளித்துவ நிறுவனங்கள் சோதனை கருவிகளையும், தடுப்பூசிகளையும், மருத்துவ உபகரணங்களையும் உற்பத்தி செய்வதில் மும்முரமாகிவிடும். இதுவா நிரந்தர தீர்வு? மீண்டும் ஒரு ஊரடங்கை நம்மால் தாங்க முடியுமா?

ஏற்கனவே அறியப்பட்டுக் கட்டுப்படுத்தப்படாத நோய்கள் ஒருபுறம் இருக்க, புதிய தொற்று நோய்கள் மிகத் தீவிரத்துடன் வரக்கூடும் என்ற செய்திகள் மேலதிக அச்சத்தையும் கவலையையும் அளிக்கின்றன.

மனிதன் இயற்கையின் மீது நிகழ்த்திய காட்டுமிராண்டி தாக்குதல்களில் இருந்து மரபணு பிறழ்வுகளால் தங்களைத் தற்காத்துக் கொண்ட நுண்ணுயிர் கிருமிகள் இன்று சுழற்சி முறையில் மனிதன் மீது பதில் தாக்குதலைத் தொடுக்கின்றன. இதுவரை, மனிதக்குலம் நினைத்திருந்த அணு ஆயுதங்களை விட மிக மோசமான இழப்புகளை இந்த நுண்ணுயிரிகள் ஏற்படுத்தி வருகின்றன. வளர்ச்சி என்ற பெயரில் லாபவெறி பிடித்த மனிதன் தொடங்கி வைத்த இந்த சுழற்சி தாக்குதலில் இருந்து விடுபட இயற்கையுடன் சமாதானம் செய்திட வேண்டுமே ஒழிய, தொடர்ந்து தீவிரமாக இயற்கை மீதான தாக்குதலை மேற்கொண்டால் நமக்கான அழிவு நிச்சயம்.



# சமரச நடவடிக்கைகள்

## வனப்பாதுகாப்பு

பழங்குடியின மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டுமே இயற்கையிடம் இருந்து

எடுத்துக் கொள்கின்றனர். அவர்கள், "என் பிள்ளைகளுக்குத் தேவையானதை இந்த காடுகள் அவர்களுக்கு வழங்கிடும். நான் எடுத்துச் சேர்த்து வைக்க வேண்டிய தேவையில்லை!" என்கின்றனர்.

தொல்குடி மீனவர்களும், "எங்களுக்குப் பசியெடுக்கும் போது கடலுக்குச் சென்றால், இந்த கடல் எங்கள் பசியை ஆற்றிடும்" என்று கூறுகின்றனர். இப்படி இயற்கையோடு ஒன்றி இயற்கையின் ஒரு அங்கமாக வாழும் மனித சமூகம் தனது வாழ்க்கைக்குத் தேவையானதை மட்டுமே எடுத்துக்கொள்கிறது. தங்கள் அடுத்த தலைமுறையினருக்கு இயற்கை தேவையானவற்றை வழங்கிடும் என்ற நம்பிக்கையுடன் விட்டுச்செல்கின்றனர்.

தனது தேவைக்கு அதிகமாகவும், தன் அடுத்த ஏழு தலைமுறைகள் ஆடம்பரமாக இருக்க வேண்டும் என்றும் நினைக்கும் சுயநலவாதிகள் தான் 'வளர்ச்சி' போட்டாபோட்டியில் இயற்கையைச் சீரழித்து தங்கள் பிள்ளைகளுக்கு 'பணம்' சேர்க்கின்றனர். இந்த சுயநல முதலாளித்துவ எண்ணத்தை அழிப்பதே இயற்கை வனப் பாதுகாப்பதில் முதல் அடி.




## உணவு மற்றும் உற்பத்தி முறை

மரபணு மாற்றுப் பயிர்களைக் கைவிட்டு, இரசாயன மருந்துகள் பயன்படுத்துவதை முழுமையாக நிறுத்தி இயற்கை விவசாய முறைக்கு மாறிட வேண்டும். இது, இயற்கை சூழலைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் உணவை உண்பவருக்கு நோய்களை உண்டாக்காது; மேலும், விவசாயிகளைக் கடனாளிகளாக்காது.



## இயற்கை விவசாயி 'மண்புழு'

'நோய் உற்பத்தி கூடாரங்களாகிய' மேற்குலகு கால்நடை பண்ணை வளர்ப்பு முறைகளை விட்டொழித்திட வேண்டும். பாரம்பரிய முறையில் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலப்பரப்பை ஏற்படுத்தி, காடுகளை அழித்திடாமல், இயற்கையான முறையில் வளர்த்திட வேண்டும். செயற்கை இரசாயன மருந்துகள், எடை கூட்டும் தீவனங்கள் அனைத்தையும் நிறுத்தி நமது பாரம்பரிய மருத்துவ முறைகளைக் கால்நடை சிகிச்சைக்குப் பின்பற்றலாம்.



## பாரம்பரிய கோழி வளர்ப்பு முறை

இப்படி பாரம்பரிய முறையில் இயற்கை சூழலில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குச் சென்னை போன்ற பெருநகரங்களில் ஏகப்பட்ட தேவை உள்ளது.

## வர்த்தகம்

பொதுவாகவே, மேற்குலக சமூகங்கள் பெரிய இறைச்சி ஆலைகளில் கால்நடைகள் வெட்டப்பட்டு பாக்கெட்டுகளாக அடைத்து சூப்பர் மார்க்கெட் குளிர் பதன பெட்டிகளில் வைத்து விற்பதையே 'சுகாதாரமிக்க ஆரோக்கியமான' முறையாக நம்புகின்றன. ஆகவே, இந்த முறையையே மற்ற நாடுகளையும் பின்பற்ற வலியுறுத்துகின்றன.



## இறைச்சி கசாப்புக் கடை

மேற்குலக நாடுகள் வலியுறுத்தும் இறைச்சி ஆலைகள் முறை மற்ற நாடுகளில் பாரம்பரியமாக உள்ள கசாப்புக் கடைகளை விட ஆரோக்கியமான உணவு முறையல்ல என்று இத்துறை வல்லுநர்கள் பலர் வாதாடுகிறார்கள். ஏழை மற்றும் வெப்பமண்டல நாடுகளில் உள்ள கசாப்புக் கடைகளில் இறைச்சி தேவைக்கேற்ப வெட்டப்படுகின்றன. மேலும், உடனுக்குடன் வெட்டப்பட்டுச் சமைத்து உண்ணப்படுவதால் ஆரோக்கியமான முறையும் கூட.



ஏழை நாடுகளில் பெரும்பான்மை மக்களால் சூப்பர் மார்க்கெட் சென்று அதிகவிலை கொடுத்து வாரக்கணக்கில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை வாங்க இயலாது. ஆக, மேற்குலக நாடுகள் தங்கள் இறைச்சி வணிக நோக்கத்தை மனதில் கொண்டே இறைச்சி கசாப்புக் கடைகளை மூட வேண்டும் என்று சொல்லி வருகின்றன. இதை முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

## தற்சார்பு

மரபணு மாற்று உணவுகள் மற்றும் அந்த உணவு உற்பத்தி முறைகளை நாம் கைவிட்டு வெளியேறி இயற்கையான உணவுகளை, தற்சார்பு முறையில் உற்பத்தி செய்வதில் தீவிரமாக ஆராய்வதிலும் மட்டுமே நிரந்தர தீர்வு அமைந்துள்ளது. மேலும், காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திட வேண்டும். பன்னாட்டு 'கார்ப்பரேட்' உணவு உற்பத்தி முறையைத் தடை செய்வதே இந்த பாதையில் நாம் எடுத்து வைக்கும் முதல் அடி.

**இந்த, தொற்றுநோய் நுண்ணுயிரிகளின் வாயிலாக இயற்கை நமக்குப் புகட்டும் பாடத்தை உணராமல் கடந்து செல்வோமானால் "ஒரு காலத்தில் மனித இனம் வாழ்ந்தது!" என்ற வரலாற்றை வெகு விரைவில் பூமி எழுதிவிடும்!**

இயற்கையோடு ஒன்றி வாழும் பழங்குடியின மக்களைப் போல ஒட்டுமொத்த பெரும்பான்மை சமூகமும் அதன் பயன்பாட்டின் தேவைக்கான (ஏற்றுமதி செய்யாமல்) இயற்கை வளங்களை மட்டும் சூழலுக்கும் காடு மற்றும் வனவிலங்குகளுக்கும் பாதிப்பேற்படுத்தாமல் எடுத்துப் பயன்படுத்த வேண்டும். தனி நபர் செல்வ குவியலை முற்றிலும் தடுத்திட வேண்டும். தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் விளையும் உணவுகள், உள்ள நீர் நிலைகள், கால்நடைகள் மற்றும் சமூகத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு உணவையும், உணவு உற்பத்தி முறைகளையும் இயற்கைக்கு ஒத்து மாற்றி அமைத்திட வேண்டும். சென்னை வாசிகளுக்கு வாஷிங்டன் ஆப்பிள் தேவை இல்லாத ஒன்று!

விவசாயிகளையும் கிராமப்புற கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி பணியாளர்களையும் கூட்டுறவு ஏற்படுத்தி ஒன்றிணைத்திட வேண்டும். தமிழ் நாட்டிற்குத் தேவையான உணவுகளைத் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்து கொண்டாலே போதுமானது. அதேநேரம், தமிழ்நாட்டின் நிலப்பரப்பையும் நீர் நிலைகளையும் சீர்குலைத்து தேவைக்கதிகமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் பொருளாதார கொள்கையையும் கைவிட வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் உணவு உற்பத்திக்கான மூலதனத்தைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் தற்சார்பு முறையில் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இந்த, தொற்றுநோய் நுண்ணுயிரிகளின் வாயிலாக இயற்கை நமக்குப் புகட்டும் பாடத்தை உணராமல் கடந்து செல்வோமானால் "ஒரு காலத்தில் மனித இனம் வாழ்ந்தது!" என்ற வரலாற்றை வெகு விரைவில் பூமி எழுதிவிடும்! ●

**இயக்கத் தொடர்புக்கு:** +91 98840 72010
**இயக்கத்தில் இணைய:** may17iyakkam.com/join
**இயக்க செயலி:** may 17 movement
**இயக்க முகநூல்:** mayseventeenmovement
**இயக்க இணையதளம்:** www.may17iyakkam.com
**புத்தகங்களை பெற:** www.nimirbooks.com

**தமிழ் சமூகத்திற்காக தொடர்ந்து களப்பணியாற்ற நிதி உதவி தாருங்கள்**

| | | |
|---|---|---|
| Account Name | : | Susindran P |
| A/c no | : | 37936911382 |
| Branch | : | State Bank of India, Ashok Nagar branch |
| Account Type | : | Savings |
| IFSC code | : | SBIN0001857 |
| MICRCODE | : | 600003009 |

அறம் சார்ந்து ஈழத்தமிழர்களிடம் நிதி பெறுவதை தவிர்க்கிறோம். வெளிநாட்டு வாழ் தமிழர்கள் தங்களது இந்திய வங்கிக்கணக்கில் இருந்து நிதி உதவி செய்யலாம்

# கொரோனா பேரிடர்
# நிவாரணப் பணியில் மே 17 இயக்கம்



12 ஏப்ரல் 2020

ஆறு நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் மே 17 இயக்கத் தோழர்கள் இந்த கொரனோ வைரஸினால் போடப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவினால் பாதிக்கப்பட்டிருக்கும் பாதசாரிகள், அன்றாட கூலி தொழிலாளர்கள் நரிக்குறவர்கள் உள்ளிட்ட உணவுக்கு கஷ்டப்படுகிறவர்களுக்கு உணவு வழங்கி வழங்கினார்கள்.



22 ஏப்ரல் 2020

பூந்தமல்லிக்கு உட்பட்ட பகுதிகளில் இருக்கிற நரிக்குறவர்கள் இந்த ஊரடங்கினால் மிகப் பெரும் பாதிப்பை சந்தித்து இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. உடனே மே17 இயக்க தோழர்கள் அவர்களுக்கு தேவையான மளிகைப் பொருட்களை வழங்கினார்கள்.



21 ஏப்ரல் 2020

நாகப்பட்டினத்தில் தொடர்ச்சியாக கடந்த இரண்டு வாரங்களாக மே 17 இயக்க தோழர்கள் அரசினால் புறந்தள்ளப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இந்த தடை உத்தரவால் எந்த பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பதற்காக தொடர்ச்சியாக உணவை வழங்கினார்கள்.



24 ஏப்ரல் 2020

வேலூரில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டிருக்கும் ஏழை எளியவர்களுக்கு மே17 இயக்கத்தோழர்கள் உணவு பொருட்கள் வழங்கினார்கள்.



24 ஏப்ரல் 2020

நாகப்பட்டினத்தில் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பாதிக்கப்பட்ட ஏழை எளியோருக்கு மே17 இயக்கம் தொடர்ந்து உதவிகள் செய்து வருகிறது. நேற்றும் தொடர்ந்தது.



29 ஏப்ரல் 2020

கரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டிருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளிய 110 குடும்பங்களுக்கு மே 17 இயக்கத்தின் சார்பாக உதவிகள் தோழர்களால் வழங்கப்பட்டது.



24 ஏப்ரல் 2020

24 ஏப்ரல் 2020 அன்று காலை கேகேநகர் ராணி அண்ணா நகரிலிருக்கும் தோழர் ஒருவர் இயக்கத்திற்கு தொடர்பு கொண்டு தனது குடும்ப சூழலை தோழர்களிடம் தெரிவித்தார். 6பேர் கொண்ட அவர் குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களை மே17 இயக்க தோழர்கள் வழங்கினார்கள். மேலும் 6பேர் கொண்ட குடும்பம் என்பதால் அரசு ரேசனில் வழங்கிய 20கிலோ அரிசி போதுமானதாய் இருக்காது என்பதால் 10கிலோ அரிசியையும் சேர்த்து வழங்கினார்கள்.



30 ஏப்ரல் 2020

வேலூர் காட்பாடியில் நரிக்குறவர்கள் மற்றும் சாலைகளில் வசிப்பவர்கள் இந்த ஊரடங்கால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான உதவிப் பொருட்கள் மே17 இயக்கத் தோழர்களால் வழங்கப்பட்டது.


# வசூலாகும் “அக்கறை”கள்




கொரோனா சர்வதேச பரவலை அடுத்து இந்தியா முழுவதும் வேகமாக பரவி வருவதை கட்டுப்படுத்த இந்திய ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 24 முதல் ஊரடங்கு உத்தரவை அறிவித்தார். இதனையடுத்து, மார்ச் 28ம் தேதி அன்று “PM-CARES Fund: Citizen Assistance and Relief in Emergency Situations Fund” (பிரதம மந்திரியின் அக்கறை) என்ற பெயரில் ஒரு புதிய அறக்கட்டளை அமைப்பதாக அறிவித்தார். கொரோனா பரவலை கட்டுப்படுத்தவும், மருத்துவம் வழங்கிடவும், நிவாரண பணிகளை நடத்திடவும் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் நிதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்தியாவின் கொரோனாக்கு எதிரான போரில் உதவ பல தரப்பு மக்கள் முன்வந்துள்ளதாகவும், அதற்காகவே இந்த அறக்கட்டளையை உருவாக்கியுள்ளதாகவும் மோடி கூறினார்.

இந்த அறக்கட்டளைக்கு நிதி சேகரிக்க தொலைக்காட்சியில் பேசிய பிரதமர் மோடி, ”போர்க்காலங்களில் நம் தாய்மார்களும் சகோதரிகளும் தங்களுடைய நகைகளை எல்லாம் வழங்கியுள்ளனர். தற்போது, நாம் அதே போர் சூழலில் தான் உள்ளோம். பாஜகவினர் நிதி வழங்கி மற்றும் மக்கள் 40 பேரிடம் நிதி வழங்க கோர வேண்டும்” என்றுவேண்டுகோள் வைத்தார்.




## தொலைக்காட்சியில் நிதி கேட்கும் பிரதமர் மோடி.

கொரோனா மீதான போர் நடைபெறும் போது தான் பிரதமர் மோடி புதிய பாராளுமன்ற வளாகம் கட்டுவதற்காக ரூ.20,000 கோடி மக்கள் வரிப்பணத்தை ஒதுக்கி கட்டுமான பணிகளை துவங்கவுள்ளார். அந்த வரிப்பணத்தை வைத்து கொரோனாவுக்கு எதிரான போருக்கு உதவும் சுமார் 3,33,000 வென்டிலேட்டர்களை வாங்கி இருக்கலாம். ஆனால், மோடி அதை செய்யவில்லை.

> **பிரதமர் மோடி புதிய பாராளுமன்ற வளாகம் கட்டுவதற்காக ரூ.20,000 கோடி மக்கள் வரிப்பணத்தை ஒதுக்கி கட்டுமான பணிகளை துவங்கவுள்ளார். அந்த வரிப்பணத்தை வைத்து கொரோனாவுக்கு எதிரான போருக்கு உதவும் சுமார் 3,33,000 வென்டிலேட்டர்களை வாங்கி இருக்கலாம். ஆனால், மோடி அதை செய்யவில்லை.**

பிரதமர் மோடி PM-CARES அறிவித்த அடுத்த ஒரு வாரத்தில் சுமார் ரூ.6500 கோடி நன்கொடை குவிந்தது. ஒப்பீடாக, 1948ல் நேருவால் தொடங்கப்பட்ட பிரதம மந்திரி பேரிடர் நிவாரண நிதி (PMNRF) 2014-15 முதல் 2018-19 வரை நிதியாண்டில் பெற்ற நிதி ரூ.2,119 கோடி மட்டுமே. மோடியின் நெருங்கிய நண்பர்களான இந்தியாவின் பெரும் பணக்காரர்களும், பெருநிறுவனங்களும் இணைந்து ரூ.2500 கோடி வழங்கியதாக செய்திகள் வெளியாகின. மேலும், இராணுவ பாதுகாப்பு துறை ஊழியர்கள் ரூ.500 கோடி வழங்கியுள்ளனர். 339 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து மட்டும் ரூ.365 கோடி நிதி பெறப்பட்டுள்ளது.

ஏப்ரல் 17ம் தேதி அன்று நிதியமைச்சகம் தனது துறையில் பணிபுரியும் சுமார் 50,000 ஊழியர்கள் மாதம் ஒரு நாள் ஊதியத்தை மே 2020 – மார்ச் 2021 வரை வழங்குவார்கள் என அறிவித்தது. நிதி அளிக்க “விருப்பமில்லாதவர்கள்” எழுத்துபூர்வமாக கடிதம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தது. பின்னர், ஏப்ரல் 29ம் தேதி நிதி அளிக்க “விருப்பமுள்ளவர்கள்” மட்டும் ஒப்புதல் கடிதம் வழங்கும்படி மாற்றிக்கொண்டது. ஏப்ரல் 28ம் தேதி ரிசர்வ் வங்கி ஊழியர்கள் ரூ.7.3 கோடி PM-CARES நிதி வழங்குவதாக அறிவித்தனர்.

## PM-CARES அறக்கட்டளை

PM-CARES அறக்கட்டளையின் தலைவராக பிரதம மந்திரி இருப்பார். கூடுதல் அறங்காவலர்களாக பாதுகாப்பு, உள்துறை மற்றும் நிதி அமைச்சர்கள் இருப்பார்கள். குறைந்தபட்ச நிதி பங்களிப்பு ரூ.10/ முதல் இந்த அறக்கட்டளைக்கு மக்கள் செலுத்தலாம் என்று அரசு தெரிவித்துள்ளது. பெரிய கார்பொரேட் நிறுவனங்கள் தங்கள் “பெருநிறுவன சமூக பொறுப்பு”ன் (CSR - Corporate Social Responsibility) கீழ் நிதி வழங்கலாம். 2019 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த CSR தொகை ரூ.8,691 கோடி என செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த அறக்கட்டளைக்கு வழங்கப்படும் அனைத்து நிதி பங்களிப்பும் வருமான வரி விலக்கு வழங்கப்படுகிறது. அடுத்து வரும் ஆண்டுகளுக்கான CSR நிதியையும் தற்போது செலுத்தி பிறகு வரி விலக்கு கோரலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதே சமயம், CSR மூலம் மாநில முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கப்டும் பங்களிப்பிற்கு வரி விலக்கு வழங்கப்படமாட்டாது.

PM-CARES அறக்கட்டளையின் நிதி கணக்கை இந்திய அரசின் பொது தணிக்கை துறை (CAG - Comptroller and Auditor General of India) தணிக்கை செய்யாது என்றும், அறங்காவலர்கள் நியமிக்கும் தணிக்கையாளர்களே கணக்கை தணிக்கை செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதை உறுதி செய்த பொது தணிக்கை துறையினர், “அறங்காவலர்கள் கேட்டுக்கொண்டால் நாங்கள் தணிக்கை செய்வோம்” என்று தெரிவித்துள்ளனர். மக்களிடம் இருந்து நன்கொடை பெறும் “தொண்டு நிறுவனங்களின் நிதி கணக்குகளை தணிக்கை செய்யும் உரிமை எங்களுக்கு கிடையாது” என்று ஒரு சிபிஜ அதிகாரி கூறியதாக தொலைக்காட்சி செய்தியும் வெளியாகியது.

**PM-CARES அறக்கட்டளையின் நிதி கணக்கை இந்திய அரசின் பொது தணிக்கை துறை (CAG - Comptroller and Auditor General of India) தணிக்கை செய்யாது என்றும், அறங்காவலர்கள் நியமிக்கும் தணிக்கையாளர்களே கணக்கை தணிக்கை செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதை உறுதி செய்த பொது தணிக்கை துறையினர், “அறங்காவலர்கள் கேட்டுக்கொண்டால் நாங்கள் தணிக்கை செய்வோம்” என்று தெரிவித்துள்ளனர்.**

தன் மக்கள் அணிந்திருக்கும் நகை ஆபரணங்களை கழட்டி கொடுக்குமாறு உரிமையோடு கேட்டுக்கொள்ளும் பிரதமர் மோடிக்கு அந்த அறக்கட்டளையின் நிதியை பொது தணிக்கைக்கு உட்படுத்தி மக்கள் கண்களுக்கு வெளிப்படையாக காட்ட ஏனோ இவ்வளவு தயக்கம்?

## கேள்விகளும் குழப்பங்களும்

1948 முதல் பிரதம மந்திரி தேசிய பேரிடர் நிவாரண நிதி (PMNRF) உள்ளபோது புதியதாக “PM-CARES” என்ற புதிய அக்கறை எதற்கு? எந்த சட்டத்தின் கீழ், எப்போது இந்த அறக்கட்டளை அமைக்கப்பெற்றது? ஏன் பொது சமூகத்தின் பிரதிநிதியோ, எதிர்க்கட்சியின் பிரதிநிதியோ இணைக்கப்படவில்லை? என்று சரமாரியாக கேள்விகள் எழுந்தன. தங்கள் மாநில நிவாரண நிதிகள் இருக்கும் போது ஏன் ஒன்றியத்தின் நிவாரண நிதிக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென சில முதல்வர்களும் கேள்வி எழுப்பினர்.

“ஏற்கனவே, பிரதம மந்திரி நிவாரண நிதி (PMNRF) இருக்கும் போது மறுபடியும் பிரதம மந்திரியின் அக்கறை (PM-CARES) பெயரில் ஒரு நிவாரண நிதி தொடங்குவதின் நோக்கம் என்ன? தற்பெருமை பேசி விளம்பரம் தேட வேண்டுமென்றால் பழைய நிவாரண நிதியின் பெயரை மட்டும் மாற்றி வைத்து கொள்ளலாமே?” என்று வரலாற்றாசிரியர் ராமசந்திர குகா கேள்வி எழுப்பினார்.

கொரோனா போன்ற சர்வதேச தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்த புதிய அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே உள்ள பிரதமர் நிவாரண நிதி (PMNRF) இயற்கை பேரிடர் காலங்களில் பயன்படும் என்றும் அரசு அதிகாரிகள் கூறினார்கள். மேலும், இந்த அறக்கட்டளை நிதியினை “நன்கொடை”யாக பெறுவதால் பாராளுமன்ற ஒப்புதல் பெறவேண்டிய வீண் சிரமங்கள் இல்லை என்றும் தெரிவித்தார்கள்.

கொரோனா தொற்றும் ஒரு இயற்கை பேரிடர் என்று தானே ஒன்றிய அரசு அறிவித்துள்ளது? மாநிலங்களும் தங்கள் மாநில பேரிடர் நிவாரண நிதிகளை பயன்படுத்துகின்றன. PMNRFல் உள்ள ரூ.3800 கோடியை என்ன செய்ய உத்தேசம்? பாராளுமன்ற ஒப்புதல் முறைகளை வீண் என்று நினைக்கும் பிரதமர் சனநாயகத்தை பற்றி என்ன மனநிலையில் உள்ளார்?

மேலும், PM-CARES குறித்து வெளிப்படையாக சொல்லப்படாத அம்சங்கள்.

- அரசு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை PM-CARESக்கு மடைமாற்றி விடலாம்.
- அரசு வழங்கும் நிதி ஒதுக்கீட்டில் இருந்து எடுத்து PMNRFக்கு நிதி அளிக்க முடியாது. அப்படியிருக்க, பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை PM-CARESக்கு மடைமாற்றி விடுவதால் திட்டமிட்டு நிதி ஒதுக்கப்பட்ட அரசுதுறைகள் நிதிக்கு என்ன செய்யும்? பாராளுமன்ற உறுப்பினர்களின் ரூ.365 கோடி நிதியை மறுபடியும் PM-CARESக்கு எடுத்துக்கொண்டால் பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு பணிகள் என்னவாகும்? அனைத்து திட்டங்களையும் மோடி மட்டுமே செயல்படுத்துவார் என்றால் பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் முறைகள் எல்லாம் எதற்கு?!
- மார்ச் 31ம் தேதி ஒரு அவசர சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி PM-CARESக்கு நன்கொடை அளிக்கும்

தனிநபர்களுக்கு 80ஜி பிரிவின் கீழ் ஜூன் 30, 2020 வருமான வரி விலக்கு அளிக்கப்படும்.

இதனையடுத்து, டாடா ரூ.1500 கோடி , அசிம் பிரேம்ஜி ரூ.1000 கோடி , அதானி ரூ.100 கோடி, வேதாந்தா அனில் அகர்வால் ரூ.100 கோடி என பல பெரும் பணக்காரர்கள் மோடிக்கு தங்கள் ஆதரவை காண்பித்து தாங்கள் வழங்கிய நிதிக்கு வரிசலுகையையும் பெற்றுக்கொண்டனர்.

| Year | View Receipt and Payment Accounts | Total Income (Fresh contributions, Interest Income, Refunds) (Rs. in crore) | Total Expenditure (Relief for Riots, Flood, Drought, Earthquakes, Cyclone, Tsunami, Medical etc.) (Rs. in crore) | Balance (Rs. in crore) |
|---|---|---|---|---|
| 2009-10 (A) | | 185.06 | 143.90 | 1652.78 |
| 2010-11 (A) | | 155.19 | 182.33 | 1625.64 |
| 2011-12 (A) | | 200.79 | 128.43 | 1698.00 |
| 2012-13 (A) | | 211.42 | 181.62 | 1727.80 |
| 2013-14 (A) | | 577.19 | 293.62 | 2011.37 |
| 2014-15 (A) | | 870.93 | 372.29 | 2510.02 |
| 2015-16 (A) | | 751.74 | 624.74 | 2637.03 |
| 2016-17 (A) | | 491.42 | 204.49 | 2923.96 |
| 2017-18 (A) | | 486.65 | 180.85 | 3229.76 |
| 2018-19 (A) | | *783.18* | *212.50* | *3800.44* |

**A** = Audited, **UA** =Unaudited (Last updated as on 16.12.2019)

PMNRF நிதி கணக்கு – மக்கள் பார்வைக்காக இணையத்தில் உள்ளது.

பிரதம மந்திரி பேரிடர் நிதி (PMNRF) வெளிநாடுகளிடம் இருந்து நன்கொடை பெறும் 2018 சட்ட திருத்தம் PM-CARESக்கும் பொருந்தும் என்று அரசு தெரிவித்தது.

இதில், நாம் கவனிக்க வேண்டிய விசயம் PMNRF நிதி கணக்கு பொது தணிக்கை துறையால் தணிக்கை செய்யப்படுகிறது. 2019 திச.16 அன்று PMNRF கணக்கில் ரூ.3,800 கோடி உள்ளது. ஆனால், PM-CARES பொது தணிக்கை துறையின் (CAG) கீழ் வராது. அப்படியென்றால், தங்களுக்கு பிடித்த தணிக்கையாளர்களை நியமித்து நிதி கையாடல்களை மறைக்க திட்டமிட்டுள்ளார்களா?

PMNRF நிதி கணக்கு – மக்கள் பார்வைக்காக இணையத்தில் உள்ளது.

பிரதம மந்திரியின் அக்கறையால் “வசூலிக்கப்படும்” நிதியின் மூல ஆதாரங்களும் அவை இந்தியாவில் எப்படி பயன்படுத்தப்படுகின்றன என்பவையே நமக்கு எழும் முதன்மையான கேள்விகள்.

ஒரு பேரிடரை அடித்தளமாக வைத்து மக்களிடம் நிதி திரட்டுவதாக அறிவித்துவிட்டு மார்ச் 30ம் தேதி அன்று இந்தியாவின் அனைத்து தூதரகங்களுடன் காணொளி சந்திப்பு நடத்தி “இந்த அறக்கட்டளையை வெளிநாடுகளில் விளம்பரம் செய்து அனைத்து தரப்பினரிடம் இருந்தும் நன்கொடை பெறுமாறு” பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். இதனையடுத்து, வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் மட்டுமல்லாது, அந்நிய நாட்டு குடிமகன்களும் நிறுவனங்களும் நிதி பங்களிப்பு செலுத்தலாம் என்று செய்திகள் வெளியாகின.

இதனை தொடர்ந்து, ஏப்ரல் 15ம் தேதி ரஷ்ய அரசின் ஆயுத ஏற்றுமதி நிறுவனமான ரொசோபோரோன் எக்ஸ்போர்ட் (Rosoboronexport) ரூ.15.3 கோடி நிதியை PM-CARESக்கு வழங்கியது. இந்திய வரலாற்றில் முதன்முறையாக வெளிநாட்டு நிறுவனத்திடம், அதுவும் போர் ஆயுதம் தயாரிக்கும் நிறுவனம், இருந்து அரசு நிவாரண நிதி பெற்றுள்ளது. இது போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள், தனி நபர்கள் என அனைவரிடம் இருந்தும் PM-CARESக்கு நன்கொடை வரும் வாய்ப்புகள் உள்ளன. அவற்றை, கண்காணிக்க இந்திய குடிமகன்களுக்கு தான் வாய்ப்பில்லை!

எந்த வெளிநாட்டு நன்கொடையாளர் PMCARESக்கு எவ்வளவு நன்கொடை வழங்கினார் என்று மக்களுக்கு தெரிவிக்கப்படாது. அவர் ஏதாவது உள்நோக்கத்துடன் வழங்கினாரா என்பதும் வெளியில் வராது. அந்த நிதிக்கு கைமாறாக இந்திய அரசு என்ன செய்யவிருக்கிறது என்பதும் தெரியாது. இப்படியாக, மக்களின் பெயரால் திரைமறைவில் வசூலிக்கப்படும் பல ஆயிரம் கோடிகள் எதற்காக செலவு செய்யப்படுகிறது என்பதும் அறியப்படாமலே போகும்.

தேர்தல் பத்திரங்கள் (Electoral Bonds) என்ற பெரும் ஊழல் முறையின் மூலம் பாஜக கார்போரேட்களிடம் இருந்து கட்சி நிதியை குவித்து வருவது ஒரு முன்னுதாரணம். பத்திரங்களை வழங்கும் நிறுவனங்களும் அந்த நிதியை தங்கள் செலவு கணக்கில் காட்டவேண்டியதில்லை என்கிற அயோக்கிய தனத்தை சட்டதிருத்தமாக கொண்டுவந்த பெருமைக்குரியவர் தான் பிரதமர் மோடி. விளைவு, இன்று உலகின் பெரும்பணக்கார அரசியல் கட்சியாக பாஜக உள்ளது.

இதற்கிடையே, கொரோனா நோய் தொற்று தடுப்பு மருந்து ஆரய்ச்சிகள் மற்றும் வேறு மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் PM-CARES நிதி பயன்படுத்தக்கூடும். மேலும், இந்தியாவில் மருத்துவ சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தி துறைகளின் உள்கட்டமைப்பு பணிகளுக்கும் பயன்படுத்த வாய்ப்புள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன. அப்படியென்றால், ஒன்றிய அரசு நிதியறிக்கையில் மருத்துவ சுகாதார துறைக்கு ஒதுக்கப்படும் நிதி என்னவாயிற்று?

பல நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் நடந்து இருதயம் வெடித்து இறப்பவர்கள், பட்டினியால் இறப்பவர்கள், பசிக்கொடுமை தாளாமல் குடும்பமாக தற்கொலை செய்துகொள்வோர், விளைச்சலை விற்கமுடியாமல் பரிதவித்து வரும் விவசாயிகள், ஜிஎஸ்டியுடன் கூடிய கொரோனா பரிசோதனை கட்டணத்தை செலுத்த முடியாத மக்களின் அவலத்தை காட்டி PM-CARES என்ற வசூல் வேட்டையில் இறங்கியுள்ள பிரதமர் மோடியின் அரசு அந்த பணத்தை என்ன தான் செய்யப்போகிறது?

தொடர்ந்து இந்திய ஒன்றிய மக்களுக்கும் அவர்களின் இறையாண்மைக்கும் எதிரான அனைத்து கயமை தனத்தையும் செய்து வரும் தேச விரோதிகளான ஆர்எஸ்எஸ் பாஜக இந்துத்துவவாதிகள் தான் தேசபக்தியை மூச்சு காற்றாக சுவாசிப்பதாக நம்ப சொல்கிறார்கள்! ●



**‘நெறிக்கப்படும் மனித உரிமை’**

# பீமா கொரேகன் கலவரமும், மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கைதும்

பீமா கொரேகனில் திட்டமிட்டு கலவரத்தை உண்டாக்கி, அதனை வைத்து மனித உரிமை செயற்பாட்டாளர்களை நசுக்கும் பாசிச பாஜக அரசு




ஏப்ரல் 14 – உலகம் முழுவதும் டாக்டர். அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடி அவரின் சிந்தனைகளை உயர்த்தி பிடித்துக்கொண்டிருந்த அதேவேளையில் இந்தியாவில் அம்பேத்கரின் பேரனும் (Grandson-in-law) சமூக அரசியல் ஆய்வறிஞருமான திரு.ஆனந்த் டெல்டும்டே பீமா கொரேகன் வழக்கு எனப்படும் பொய் வழக்கின் கீழ் உச்சநீதிமன்றத்தால் பிணை மறுக்கப்பட்டு தேசிய புலனாய்வு முகமையிடம் (National Investigation Agency) சரணடைந்தார். அவர் மட்டுமல்ல அவருடன் சேர்த்து மனித உரிமைப்போராளியான திரு.கௌதம் நவ்லாகா அவர்களும் NIA–விடம் சரணடைந்தார். சமூகத்தின் அடித்தட்டு, விளிம்புநிலை மக்களுக்காக போராடும் அறிவுசீவிகள் கைது செய்யப்பட்ட இந்நிகழ்வு இந்தியாவின் "தேசிய அவமானமாக " ( National Shame) உலக நாடுகளால் பார்க்கப்பட்டது.

ஏற்கனவே இந்த பீமா கொரேகன் வழக்கில் இந்தியாவின் பல்வேறு துறைகளை சேர்ந்த அறிஞர்கள்,சமூக செயல்பாட்டாளர்கள் 9 பேர் கடந்த 2018 ஆம் ஆண்டே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பது குறிப்படத்தக்கதாகும்.

**1 சனவரி 1818 ஆம் ஆண்டு இந்த இடத்தில் தான் வெறும் 800 மகர்கள் மற்றும் பழங்குடியின (MAHAR-DALITS) படை வீரர்களை கொண்ட பிரிட்டிஷ் படையணியானது, 20,000 க்கும் மேற்பட்ட படைவீரர்களை கொண்ட மராட்டிய - பேஷ்வா படையினை எதிர்த்து தீரமிக்க போரினை நடத்தி வெற்றி பெற்றனர்.**

அறிவற்றவர்களின் ஆட்சியில் அறிவுசீவிகள் ஒடுக்கப்படுவதும்; முட்டாள்களின் ஆட்சியில் படித்தவர்கள் நசுக்கப்படுவதும் உலகம் முழுக்க நடக்கிற நிகழ்வாகவே உள்ளது. அதிலும் இந்தியாவில் அறிவற்ற முட்டாள்களின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் வேளையில் நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்.

மோடி அரசு ஆட்சிப்பொறுப்பேற்றதில் இருந்து அரசுக்கு எதிராக சனநாயக வழியில் குரல் எழுப்பி மக்களை ஒன்றுதிரட்டி போராடும் சமூகப்போராளிகளையும்; மக்களுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளையும், திட்டங்களையும் மக்களிடம் அம்பலப்படுத்தி அரசுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் அறிவுசீவிகள் மட்டத்திலான ஆட்களையும் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் வைத்திருக்கவே முயல்கிறது.



அந்த வகையில் இந்தியாவின் முக்கியமான அறிவுசீவிகள் பலரையும் கடந்த 2018 சனவரி 1 அன்று பீமா கொரேகனில் தலித்துகளுக்கு எதிராக நடந்த வன்முறையை அடுத்து பல்வேறு பொய் வழக்குகளின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

"பீமா கொரோகன்" மகாராஷ்டிர மாநிலத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க ஒரு சிறு கிராமம் ஆகும். 1 சனவரி 1818 ஆம் ஆண்டு இந்த இடத்தில் தான் வெறும் 800 மகர்கள் மற்றும் பழங்குடியின (MAHAR-DALITS) படை வீரர்களை கொண்ட பிரிட்டிஷ் படையணியானது, 20,000 க்கும் மேற்பட்ட படைவீரர்களை கொண்ட மராட்டிய – பேஷ்வா படையிணை எதிர்த்து தீரமிக்க போரினை நடத்தி வெற்றி பெற்றனர். இந்த போரில் இறந்த மகர் படைவீரர்களை கௌரவிக்கும் விதமாக பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கு ஒரு நினைவுத்தூணை (VIJAY STAMBH) நிறுவியது. தங்களை ஆண்டாண்டு காலமாக சாதிய அடிப்படையில் அடக்கி ஒடுக்கிய பார்ப்பனிய – பேஷ்வா படையணியை எதிர்த்து "மகர்கள்" பெற்ற இந்த வெற்றியானது பார்ப்பனிய சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான வெற்றியாகவே வரலாற்றில் நினைவுகூறப்பட்டு வருகிறது. 1928 ஆம் ஆண்டு முதன்முதலில் டாக்டர்.அம்பேத்கர் பீமா கொரேகனில் நினைவேந்தல் நிகழ்வினை முன்னெடுத்தார். அதன்பிறகு ஒவ்வொரு ஆண்டும் சனவரி 1 ஆம் தேதி பல்லாயிரக்கணக்கான தலித்துகள், பழங்குடிகள், கிருத்துவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் பீமா கொரோகனில் ஒன்றுகூடி பார்ப்பனிய–பேஷ்வா சாதிய ஒடுக்குமுறையை எதிர்த்து வெற்றி பெற்ற நிகழ்வை நினைவுகூர்ந்தும், அப்போரில் இறந்தவர்ளுக்கு நினைவஞ்சலி செலுத்தியும் வருகின்றனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு இந்நிகழ்வின் 200 ஆவது ஆண்டு விழாவாகும். இதனையொட்டி பீமா கொரோகனில் பல்லாயிரக்கணக்காணோர் கலந்துகொள்ளும் நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் திட்டமிட்டு இந்துத்துவ வெறியர்கள் ஏற்படுத்திய கலவரத்தில் பல நூறு பேர் படுகாயமும் ஒருவர் உயிரிழக்கவும் நேரிட்டது.

இவ்வாறு பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட நிகழ்வில் திட்டமிட்டு வன்முறையை ஏற்படுத்திய இந்துத்துவவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காமல், அன்றைக்கு மகாராஷ்டிரத்தில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த தேவிந்திரபட்னாவிஸ் தலைமையிலான பா.ஜ.க அரசாங்கம் பாதிக்கப்பட்ட தலித் மக்கள் பக்கமே வழக்கு நடவடிக்கையினை திருப்பிவிட்டது. அரசின் கூற்றுப்படி சனவரி 1,2018 அன்று பீமா கொரோகனில் நிகழ்ந்த வன்முறைக்கு காரணம் அதற்கு முந்தய நாள் 31/12/2017 அன்று புனே, ஷானிவர் வடே (shaniwarwade, pune) என்னுமிடத்தில் நடந்த கருத்தரங்கமும் (கருத்தரங்க தலைப்பு – Elgar Parishad) அதில் பேசப்பட்ட வன்முறையை தூண்டும் கருத்துக்களும் தான் என்ற அடிப்படையில் அந்த கருத்தரங்க நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள்; பங்கேற்றவர்கள் சிலரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது (FIR NO: 4/2018). இதில் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் நடத்திய விசாரனை மற்றும் அவர்களின் வீடுகளில் நடத்திய சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் இந்தியாவின் பல்வேற் நகரங்களில் வசிக்கும் முக்கியமான அறிவுசீவிகளான,

- வரவரராவ்–ஹைதராபாத் (VARA VARA RAO - HYDERABAD)
- அருண் பெரிஃரா– தானே (ARUN FERRIERA - THANE)
- வெர்ணன் கான்சல்வ்ஸ்–மும்பை (VERNON GONSALVES-MUMBAI)
- சுதா பரத்வாஜ்–ஃபரிதாபாத் (SUDHA BHARADWAJ - FARIDABAD)
- கவுதம் நவ்லாகா –டெல்லி (GAUTAM NAVLAKHA-DELHI)

ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனை மற்றும் அதில் கைப்பற்றப்பட்ட கணிணிகள், கடிதங்கள், அடிப்படையில் இவர்களுக்கு தடை செய்யப்பட்ட மாவோயிஸ்டு (communist party of india (maoist)) இயக்கத்துடன்

தொடர்பு இருப்பதாகவும் இவர்கள் அனைவரும் சேர்ந்து பிரதமர் மோடியை கொலை செய்ய திட்டமிட்டுருப்பதாக எந்தவித ஆதாரமும் அற்ற ஒரு பொய் குற்றச்சாட்டினை தேவேந்திரபட்னாவிஸ் தலைமையிலான BJP அரசாங்கம் கூறியது. இந்த குற்றச்சாட்டின் மீதான நடவடிக்கையாகவே இன்றைக்கு இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


இவர்கள் அனைவர் மீதும் இந்தியாவின் மோசமான கருப்புசட்டமான உஃபா(unlawful activities(prevention) act) சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இவ்வழக்கானது தேசிய புலனாய்வு முகமையால் (NIA) விசாரிக்கப்பட்டு வருகிறது.

எந்தவித அடிப்படை ஆதாரமும் அற்ற இந்த வழக்கின் விபரங்களை ஆராயும் போது அரசு திட்டமிட்டு இவர்கள் அனைவர் மீதும் பொய் வழக்கு புனைந்திருப்பதும்; மோடி அரசு தனது இந்துத்துவ அரசியலுக்கு எதிரான அரசியல் பார்வை கொண்ட அறிஞர்களையும், சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்காக போராடும் சமூக போராளிகளையும் ஒடுக்கும் விதமாகவும்; அவர்களை அச்சுறுத்தும் விதமாகவும் இந்தவழக்கினை பயன்படுத்தியுள்ளதும் தெரியவரும்.

முதலில் இந்த வழக்கில் பொய்யாக குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட 5 பேரும் இந்தியாவின் முக்கியமான, மனித உரிமை தளத்தில் செயல்படக்கூடிய செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள் ஆவர். முக்கியமாக இவர்கள் அனைவரும் இன்றைக்கு ஆட்சிப்பொறுப்பில் இருக்கிற இந்துத்துவ ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் இந்துத்துவ கருத்தியலுக்கு எதிராக தீவிரமான எதிர்கருத்துக்களை கொண்டிருந்தவர்கள் ஆவார்கள்.

- வரவரராவ் – ஆங்கிலம் மற்றும் தெலுங்கு பேராசியர்; அரசியல் செயல்பாட்டாளர் ; கவிஞர்.
- அருண் பெரிஃரோ – வழக்கறிஞர் ; மனித உரிமை செயல்பாட்டாளர்.
- வெர்ணன் கான்சல்வ்ஸ் – மகராஷ்டிர கல்லூரியின் விரிவுரையாளர்; மும்பை பல்கலைக்கழகத்தில் வணிகவியல் படிப்பில் தங்கப்பதக்கம் பெற்றவர்.
- சுதா பரத்வாஜ் – வழக்கறிஞர்; தேசிய சட்ட பல்கலைக்கழகம் – டெல்லியின் ஆசிரியர் (NATIONAL LAW UNIVERSITY- DELHI)
- கவுதம் நவ்லாகா – மனித உரிமை செயல்பாட்டாளர்; இதழியலாளர்(JOURNALIST); EPW – ன் ஆசிரியர் குழுவில் ஒருவர்.

இரண்டாவதாக பீமா கொரேகனில் சனவரி 1, 2018 அன்று நிகழ்ந்த வன்முறை தொடர்பாக முதன்முதலில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ( FIR NO : 2/2018) அனிதா சவாலே (Anitha R Sawale) என்பவரால் புகார் கொடுக்கப்பட்டு பிம்ஃபிரி (PIMPRI POLICE STATION) காவல்நிலையத்தில் ஜனவரி 2, 2018 அன்று பதிவு செய்யப்பட்டது.இந்த முதல் தகவல் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால் ஜனவரி 1 அன்று தலித்துகள் மீதான வன்முறையை பீமாகொரேகனில் வாள், இரும்புக் கம்பிகள் மற்றும் ஆயுதங்களுடன் வந்த கூட்டம் கட்டவிழ்த்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் அனைவரும் காவி கொடிகளுடன் வந்த கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டதன் விளைவாகவே கலவரம் உருவானதாக தெரிவித்துள்ளனர்.




மேலும் இக்கலவரத்திற்கான சதிசெயல் செய்த குற்றவாளிகள் என இருவரின் பெயர்களை முதல் தகவல் அறிக்கையில்( FIR NO : 2/2018) பதிவு செய்துள்ளனர். அவர்கள்,

- மிலாந்த் எக்போட் – தலைவர், இந்து பொது விழிப்புணர்வு குழு. (ACCUSED NO:1(A1)) MILAND EKBOTE -CHIEF, HINDU JANJAGARAN SAMITI.
- சம்பாஜி ஃபிடே – தலைவர், சிவாஜிநகர் அறக்கட்டளை. (ACCUSED NO:2 (A2)). SAMBHAJI BHIDE - HEAD, SHIVAJINAGAR PRATISHTHAN.

இவ்வாறு திட்டமிட்டு கலவரத்தை ஏற்ப்படுத்திய வலதுசாரி இந்துத்துவவாதிகள் மீது உஃபா (UAPA) சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. இவர்கள் இருவர் மீதும் இந்திய தண்டனைச் சட்டம் (INDIAN PENAL CODE); ஆயுதங்கள் சட்டம் (ARMS ACT); மற்றும்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைச்சட்டம்( SC/ST ATROCITIES ACT) போன்ற சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதில் மிலாந்த் எக்போட் கைது செய்யப்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளாகவே பிணையில் விடுவிக்கப்பட்டார். சம்பாஜி பிஃடே இதுவரை கைது செய்யப்படவே இல்லை.

- இவ்வாறு சனவரி 2, 2018 அன்றே பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் (FIR NO : 2/2018) குற்றம் சாட்டப்பட்ட வலதுசாரி இந்துத்துவவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக , அன்றைய பா.ஜ.க தலைமையிலான மகராஷ்டிர அரசு மற்றொரு பொய் வழக்கினை தயார் செய்யும் பணியில் இறங்கியது. அதன்படி சனவரி 8, 2018 அன்று விசாரம்ஃபா காவல்நிலையத்தில் (VISHARAMBAGH POLICE STATION) திரு. துசார் ரமேஷ் தம்குடே (TUSHAR RAMESH DAMGUDE) அளித்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை எண் 4/2018 (FIR NO: 4/2018) பதிவு செய்யப்பட்டது.

- இந்த துசார் ரமேஷ் தம்குடே என்பவர் பீமா கொரேகன் வழக்கு தொடர்பாக ஏற்கனவே குற்றம்சாட்டப்பட்டுள்ள திரு. சம்பாஜி ஃபிடே (A2 IN FIR NO: 2/2018) என்பவரை பின்பற்றுபவரும் அவருடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருப்பவரும் ஆவார். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர் கொடுத்த புகாரின் அடிப்படையிலேயே இந்த FIR NO : 4/2018 பதிவு செய்யப்பட்டது என்பது குறிப்படத்தக்கது ஆகும்.

இந்த துசார் ரமேஷ் தம்குடே கொடுத்த புகார் என்னவென்றால் 1 சனவரி 2018 அன்று பீமா கொரேகனில் நடந்த வன்முறைக்கு காரணம் அதற்கு முந்தைய நாள் அதாவது 31 டிசம்பர் 2017 அன்று புனேயில் சானிவர் வாடே ( Shaniwar Wade, Pune) என்னுமிடத்தில் எல்கர் பரிசாட் (ELGAR PARISHAD) என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கம் என்றும், அக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களின் வன்முறையை தூண்டும் விதமான விஷம பேச்சுக்களை வன்முறைக்கு காரணம் என்றும் கூறப்பட்டது.மேலும் இந்த கருத்தரங்கு இந்தியாவின் ஜனநாயக கட்டமைப்பை சிதைக்கும் நோக்கத்துடன் மாவோயிஸ்டுகளின் ஆதரவுடனும் அவர்களின் நிதி பங்களிப்புடன் நடத்தப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

இந்த இடத்தில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த 31 டிசம்பர் 2017 அன்று புனேயில் நிகழ்ந்த” ELGAR PARISHAD” கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்கள் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி justice P.B. சாவந்த் மற்றும் மும்பை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி Justice B.G . கோல்ஸ் பட்டீல் அவர்களும் ஆவர்.இந்த நிகழ்விற்கான நிதி உதவி வேறு எங்கிருந்தும் பெறப்படவில்லை என்பதை அவர்களே தெளிவுபடுத்தியுள்ளனர். இந்த கருத்தரங்கின் நோக்கம் “இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும் ; இந்தியாவையும் பாதுகாப்பது” என்றும் கூறியுள்ளனர். உண்மை நிலைமை இவ்வாறு இருக்க இந்த ELGAR PARISHAD கருத்தரங்கு இந்தியாவின் ஜனநாயக கட்டமைப்பை சிதைக்கும் நோக்கத்துடனும் மாவோயிஸ்டுகளின் ஆதரவுடனும் அவர்களின் நிதி உதவியுடனும் நடத்தப்பட்டதாக பொய்யான தகவலின் அடிப்படையிலேயே இந்த புகார் ( FIR NO : 4/2018) பதிவு செய்யப்பட்டது.

உண்மையிலேயே இந்தியாவின் சனநாயகக் கட்டமைப்பை சிதைப்பவர்கள் அதற்கு எதிரானவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதியுடன் கலந்து கொண்ட பீமா கொரேகன் நிகழ்வில் ஆயுதங்களுடன் புகுந்து வன்முறையில் ஈடுபட்டு கலவரத்தை தூண்டிய இந்துத்துவ பயங்கரவாதிகளே ஆவர்.

மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தப்புகாருடன் சம்பந்தப்பட்ட (FIR NO : 4/2018) 31 டிசம்பர் 2017 அன்று புனேயில் நடைபெற்ற ELGAR PARISHAD கருத்தரங்கிலோ; 1 சனவரி 2018 அன்று பீமா கொரேகனில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்விலோ மேற்குறிப்பிட்ட 5 நபர்களான வரவரராவ் , அருண் பெரிரா, வெர்னண் கான்சல்வ்ஸ், சுதா பரத்வாஜ் , கவுதம் நவ்லாகா ஆகியோர் யாருமே பங்கேற்கவில்லை என்பது குறிப்படத்தக்கதாகும். மேலும் இந்த FIR NO : 4/2018-ல் இவர்கள் 5 பேர் பெயர்களுமே இல்லை என்பதும் முக்கியமானதாகும்.

இவ்வாறு சம்பந்தப்பட்ட எந்த நிகழ்விலும் பங்கெடுக்காத ; முதல் தகவல் அறிக்கையிலும் பெயர் இல்லாத நபர்களையே அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் ; இந்துத்துவ அரசுக்கு எதிரான தத்துவார்த்த எதிர்கருத்துக்களை ஒடுக்கும் விதமாகவும் இவர்கள் மீது உஃபா சட்டம் போன்ற கருப்பு சட்டங்களை போட்டும் ; தேசிய புலனாய்வு முகமையின் விசாரணையில் ஈடுபடுத்தியும் இந்திய அரசு திட்டமிட்டு ஒடுக்கி வருகிறது.

இந்த வழக்கில் மற்றுமொரு முக்கியமான விசயம் என்னவென்றால், FIR NO: 4/2018 என்ற வழக்கில் கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணை மற்றும் சோதனையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட சமூகப்போராளிகள் 5 பேரும் கைது செய்யப்பட்டு அவர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன. இந்த சோதனையில் கைப்பற்றப்பட்ட கணிணி மற்றும் அதிலுள்ள மின்னனு கடிதங்களின் அடிப்படையிலேயே இவர்கள் அனைவரும் மாவோயிஸ்டுகளுடன் சேர்ந்து பிரதமர் நரேந்திர மோடியை கொலை செய்ய திட்டமிட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக இவர்களின் கணிணியில் இருந்து கைப்பற்றப்பட்டதாக 13 கடிதங்கள் இதுவரை மகாராஷ்டிர போலீசாரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன. மகாராஷ்டிரா அரசின் ADDITIONAL DIRECTOR GENERAL OF POLICE (LAW AND ORDER) பரம்பீர் சிங் ( PARAMBIR SINGH) 1 செப்டம்பர் 2018 அன்று NDTV நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது “இந்த கடிதங்களின் உண்மைத்தன்மையை இனிமேல் தான் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது” என்று கூறியுள்ளார்.

உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படாத கடிதங்களை அடிப்படையாக வைத்தே இவர்கள் அனைவரும் மவோயிஸ்ட்டுகளுடன் சேர்ந்து பிரதமர் மோடியை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும்; இவர்கள் மாவோயிஸ்ட் தொடர்பாளர்கள் எனவும் திட்டமிட்ட பரப்புரை ஊடகங்களின் வழியே மகாராஷ்டிர காவல்துறை உயர்


அதிகாரிகளாலயே பரப்பப்பட்டது; உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படாத கடிதங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டு அரசின் பொய் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டன. மேலும் மின்னணு வடிவில் இருக்கும் எந்தக் கடிதத்திலும் கையொப்பமோ , தலைப்போ, E-Mail முகவரியோ கூட குறிப்பிடப்படவில்லை.

மேலும் ஊடகங்களில் போலீசாரால் வெளியிடப்பட்ட 13 கடிதங்களில் ஏழு கடிதங்கள் காம்ரேட்.பிரகாஷ் (COMRADE PRAKASH ) என்பவராலோ அல்லது அவருக்கோ எழுதப்பட்டுள்ளது. 7 மார்ச் 2017 அன்று மகாராஷ்டிர மாநிலம் கட்சிரோலி அமர்வு நீதிமன்றம் ( GADCHIROLI SEASIONS COURT) செசன்ஸ் வழக்கு எண் 13/2014-ல் வழங்கிய தீர்ப்பில் பேராசிரியர்.ஜி.மி. சாய்பாபா என்பவர்தான் அவர் எழுதிய கடிதங்களில் காம்ரேட். பிரகாஷ் என்ற புனைப் பெயரை பயன்படுத்தியதாக குறிப்பிட்டு அந்த வழக்கில் அவருக்கு தண்டனை வழங்கி சிறையில் அடைத்துள்ளது. அவர் மார்ச்சு 7 2017 முதல் நாக்பூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். எனவே தற்போது 2018ல் மகாராஷ்டிர மாநில போலீசார் வெளியிட்டுள்ள காம்ரேட்.பிரகாஷ் என்பவர் எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்கள் திட்டமிட்டு ஜோடிக்கப்பட்டவையே என்பது இதன் மூலம் தெளிவாகிறது.இந்த விவரங்கள் அனைத்தையும் உச்சநீதிமன்ற நீதிபதி D.Y சந்திரசூட் 2018ஆம் ஆண்டு தான் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

2017இல் சிறை சென்றவர் எப்படி 2018 கடிதங்களை எழுதி இருக்க முடியும்? இதுவே இக்கடிதங்கள் அரசு மற்றும் போலீசாரால் திட்டமிட்டு ஜோடிக்கப்பட்டவை என்பதை காட்டுகின்றன.

இவ்வாறு பொய்யாக புனையப்பட்ட வழக்கின் அடிப்படையிலும் (FIR NO : 4/2018) ஜோடிக்கப்பட்ட மின்கடிதங்களின் அடிப்படையிலுமே இந்த தலைசிறந்த இடதுசாரி அறிவுஜீவிகள் தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இறுதியாக இந்த வழக்கின்(FIR NO: 4/2018) குற்றப்பத்திரிகை நவம்பர் 2018 மற்றும் பிப்ரவரி 2019-ல் புனே போலிசாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த குற்றப்பத்திரிக்கையில் 1.வரவரராவ் 2.அருண் பெரிஃரோ , 3.வெர்னன் கான்சல்வ்ஸ் 4.சுதா பரத்வாஜ் , 5.சுதிர் தவாலே 6.ரோனா வில்சன் 7.சுரேந்திர காட்லிங் 8.மகேஷ் ராவ்ட் 9.சோமா சென் உள்ளிட்ட இடதுசாரி செயல்பாட்டாளர்கள்மீதும் மற்றும் தலைமறைவு மாவோயிஸ்ட் தலைவர்கள் உட்பட 23 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.




இந்த புனே போலிசார் பதிவு செய்த குற்றப்பத்திரிக்கையிலும் கவுதம் நவ்லாகா மற்றும் ஆனந்த் டெல்டும்டே ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் 2019 நவம்பர் தேர்தலுக்கு பிறகு மகராஷ்டிராவில் தேவேந்திர பட்னாவிஸ் தலைமையிலான அரசு பதவி விலகி உத்தவ் தாக்கரே தலைமையிலான (சிவசேனா - தேசியவாத காங்கரஸ் கூட்டணி) அரசு பதவியேற்றது. இந்தப்புதிய அரசு பதவியேற்றவுடன் பீமாகொரேகன் வழக்கு தொடர்பாகவும், அதில் காவல்துறையினரின் புலனாய்வு தொடர்பாகவும் பல்வேறு கேள்விகள் அரசுதரப்பில் இருந்து எழுப்பப்பட்டன. மேலும் இவ்வழக்கில் விசாரணை நடத்தப்பட்ட விதம் குறித்தும் ஆராயப்போவதாக அறிவித்தது.

இதனால் பதறிப்போன மோடி அரசு அவசர அவசரமாக ஜனவரி 24 2020 இல் பீமாகோரேகான் வழக்கினை தேசிய புலனாய்வு முகமை (NIA) எடுத்து நடத்த உத்தரவிட்டது.மத்திய அரசின் இந்த உத்தரவிற்கு முதலில் எதிர்ப்பு தெரிவித்த உத்தவ்தாக்கரே தலைமையிலான மஹாராஷ்டிரா அரசாங்கம் பின்னர் கொடுக்கப்பட்ட அரசியல் அழுத்தத்தின் காரணமாக இதற்கு அனுமதி அளித்தது.

தேசிய புலனாய்வு முகமை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் ஏற்கனவே சிறையில் உள்ள 9 செயல்பாட்டாளர்கள் உட்பட கவுதம் நவ்லாகா மற்றும் ஆனந்த் டெல்டும்டே ஆகியோர்களின் பெயர்களும் சேர்க்கப்பட்டு மொத்தம் 11 பேர் மீது IPC மற்றும் UAPA சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

ஏற்கனவே கைப்பற்றப்பட்ட ஜோடிக்கப்பட்ட கடிதங்களில் காம்ரேட்.ஆனந்த் என்று பெயர் குறிப்பிடப்பட்டு இருப்பதாகவும் அந்த காம்ரேட்.ஆனந்த் என்று குறிப்பிடப்படுபவர் திரு.ஆனந்த் டெல்டும்டே தான் என்றும் குறிப்பிட்டு அவரை தற்போது தேசிய புலனாய்வு

முகமை கைது செய்துள்ளது. நம்பகத்தன்மையே இல்லாத கடிதங்களின் அடிப்படையிலும் வழக்கின் அடிப்படையிலுமே அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்பிறகு 15 பிப்ரவரி 2020 அன்று ஆனந்த் டெல்டும்டே மற்றும் கௌதம் நாவ்லாகா மும்பை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன்ஜாமின் மனு நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் 16/3/2020 அன்று நிராகரிக்கப்பட்டு அவர்கள் தேசிய புலனாய்வு முகமையிடம் 3 வாரத்திற்குள் சரணடைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து கொரோனா நோய்த்தொற்று சமயத்தில் தாங்கள் சரணடைந்து சிறைக்கு செல்வது "தற்கொலைக்குச் சமமாகும்" என்று இவர்கள் தரப்பில் சரணடைய கேட்கப்பட்ட காலநீட்டிப்பும் உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு அவர்கள் இருவரும் ஏப்ரல் 14 அன்று தேசிய புலனாய்வு முகமை இடம் சரணடைந்தனர்.

ஒட்டுமொத்தமாக இந்த வழக்கு நடவடிக்கைகளை ஆராயும்போது ஆனந்த் டெல்டும்டே, கௌதம் நவ்லாகா, வரவர ராவ் உட்பட இந்த 11 ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் மீதான குற்றச்சாட்டு எவ்வித முகாந்திரமும் மற்ற அரசியல் வெறுப்புணர்வு அடிப்படையிலும்; இந்துத்துவ கருத்துக்கு எதிர் கருத்து கொண்டு அடித்தட்டு ஏழை மக்களுக்காக போராடுகிற சமூகப் போராளிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தவுமே திட்டமிட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பது தெரியவரும். இயல்பாகவே பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ் கும்பலுக்கு உள்ள இடதுசாரிகள் வெறுப்பு மனநிலை மற்றும் எதிர்க்கருத்து கொண்டோரை ஒடுக்கும் பாசிச மனநிலை ஆகியவை இவ்வழக்கு நடவடிக்கையில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

இத்தகைய ஓர் அரசியல் ஒடுக்குமுறையை நிகழ்த்துவதற்கு ஆர்.எஸ்.எஸ் பி.ஜே.பி தேர்ந்தெடுத்த நிகழ்வான பீமா கொரேகன் ஒன்றுகூடல் நிகழ்வு சங்பரிவாரத்தின் பார்ப்பனிய-சாதிய மனநிலையை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பீமா கொரேகன் பார்ப்பனர்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான குறியீடு ஆகும்.இன்றைக்கு அதிகாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க கூடிய மராட்டிய சித்பவன் பார்ப்பனர்களின் இலட்சியமே மனுதர்ம அடிப்படையிலான மராட்டிய பேஷ்வா ஆட்சியை மீள் கட்டமைப்பு செய்வதேயாகும். இத்தகைய மனுதர்ம ஆட்சிக்கு எதிரான குறியீடான பீமா கோரேகான் நிகழ்வினை அரசியல் ஒடுக்குமுறைகள் தேர்ந்தெடுத்திருப்பது பிஜேபி ஆர்.எஸ்.எஸ் கும்பலின் மனுதர்ம மனோநிலையை எடுத்துக்காட்டுகிறது. இப்படி தான் பாபர் மசூதியை இடிப்பதற்காக அம்பேத்கரின் நினைவு நாளான டிசம்பர் 6 ஆம் தேதி தேர்ந்தெடுக்கபட்டது.

ஒரு பக்கம் அம்பேத்கரின் படத்தை தூக்கி பிடித்துக்கொண்டு தலித்துகளின் ஓட்டுகளை கவர முயற்சிப்பதும் மறுபக்கம் அவர்கள் பங்குபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் சாதிய மனநிலையுடன் கலவரம் செய்து, அதில் பொய் வழக்கும் போட்டு அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதும் பிஜேபி ஆர்எஸ்எஸ் கும்பலின் பாரம்பரிய இரட்டை நிலைப்பாட்டின் வெளிப்பாடாக உள்ளது.

**ஒரு பக்கம் அம்பேத்கரின் படத்தை தூக்கி பிடித்துக்கொண்டு தலித்துகளின் ஓட்டுகளை கவர முயற்சிப்பதும் மறுபக்கம் அவர்கள் பங்குபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் சாதிய மனநிலையுடன் கலவரம் செய்து, அதில் பொய் வழக்கும் போட்டு அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதும் பிஜேபி ஆர்எஸ்எஸ் கும்பலின் பாரம்பரிய இரட்டை நிலைப்பாட்டின் வெளிப்பாடாக உள்ளது.**

இந்த ஒட்டுமொத்த நடவடிக்கையிலும் நீதித்துறையின் செயல்பாடு தான் மிகவும் வருத்தம் தரத்தக்க ஒன்றாக உள்ளது. அரசின் நடவடிக்கைகளுக்கு காவல்துறை ஒத்துழைப்பதும் தனக்கு எதிர் கருத்துக்களை கொண்டிருப்பவர்கள் மீது அரசு திட்டமிட்ட ஒடுக்குமுறையை நிகழ்த்துவதும் இந்தியாவில் தினந்தோறும் நடைபெறும் நிகழ்வாகவே உள்ளது. ஆனால் இத்தகைய நிர்வாக சீர் கேடுகளை களைய வேண்டிய பெரிய பொறுப்பு நீதித்துறைக்கு தான் இருக்கிறது. இந்திய சனநாயகத்தின் உயரிய பண்பாக சுதந்திரமான நீதித்துறையே இன்றளவும் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் இவ்வழக்கில் நீதித்துறை தனது சுயத்தை இழந்து அரசின் நோக்கங்களுக்கு எல்லாம் ஏற்ப செயல்படுவதாகவே செயல்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு இந்த வழக்கில் பொய்யான புகாரின் அடிப்படையில் செயல்பாட்டாளர்கள் வரவரராவ் , கவுதம் நவ்லாகா உட்பட 5 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட உடனேயே இந்தியாவின் தலைசிறந்த வரலாற்று ஆசிரியரான ரொமிலா தாப்பர் தலைமையில் பல்வேறு துறை சார்ந்த வல்லுனர்கள் 5 பேர்கள் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். ஆனால் அன்றைக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு அந்த மனுவினை தள்ளுபடி செய்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிட்டது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கல்வித்தகுதியும் அவர்களும் மனித உரிமை சார்ந்த செயல்பாடுகளும் நீதிமன்றத்திற்கு தெரியாமல் இல்லை.

அருண் பெரிரா மீது ஏற்கனவே போடப்பட்ட 11 வழக்குகளிலுமே இவர் குற்றமற்றவர் என்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார், வரவரராவ் மீதான 20 வழக்குகளிலுமே இவர் நீதிமன்றத்தால் விடுதலையே செய்யப்பட்டுள்ளார், வெர்ணன் கான்சல்வ்ஸ் மீதான 19 வழக்குகளில் 11 வழக்குகளில் அவர் நிரபராதி என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார், மீதமுள்ள இரு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இவ்வாறு இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 3 நபர்கள் ஏற்கனவே இந்தியதண்டனைச்சட்டம், உஃபா சட்டம் போன்ற சட்டங்களின் அடிப்படையில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டு இருப்பது நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துசெல்லப்பட்டும் அதனை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

அரசுக்கும் அரசின் அங்கமான நீதித்துறைக்கும் ஒரு மெல்லிய கோடு அளவிலான இடைவெளியே எப்போதும் இருக்கும் தற்போது அது முற்றிலும் மறைந்து அரசின் ஆளும் வர்க்கத்தின் அங்கமாகவே நீதித்துறை செயல்பட்டுவருகிறது. இந்தியாவில் சுதந்திரமான நீதித்துறை

என்ற முறை முடிவுக்கு வந்துவிட்டதையே இது போன்ற வழக்குகள் நமக்கு தொளிவாக காட்டுகின்றன.

கடந்த மார்ச் மாதம் ஆனந்த் டெல்டும்டே மற்றும் கவுதம் நவ்லாகா ஆகியோரின் முன்ஜாமின் மனுவை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம் இவர்களில் இருவர் மீதான வழக்கு நடவடிக்கைக்கும் போதுமான அடிப்படை இருக்கிறது (PRIMA FACIA) என்று கூறி இவர்களின் முன்ஜாமீன் மனுவை தள்ளபடி செய்தது. ஆனால் ஜாமின் என்பது போதுமான முகாந்திரம் இருக்கிறதா? இல்லையா? என்பதை பார்த்து வழங்கப்படுவது அல்ல. இவர் வெளியில் இருந்தால் வழக்கின் நடிவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பார், சாட்சிகளை கலைப்பார் அல்லது தலைமறைவாகி விடுவார்; போன்ற முகாந்திரங்களின் அடிப்படையில் வழங்கப்படுவது ஆகும். இவர்கள் இரண்டு ஆண்டுகள் வழக்கு நடைபெறும் போது எங்கேயும் தலைமறைவாகி விடவில்லை மேலும் இவர்களுக்கு எதிரான சாட்சியம் என்பது கணிணியில் கைப்பற்றப்பட்ட மின்னனு கடிதங்களே எனும் போது அவற்றை கலைப்பதற்க்கும் வாய்ப்பில்லை இவ்வளவு சாதகமான முகாந்திரங்கள் இருந்தும் உச்சநீதிமன்றம் இவர்களின் முன்ஜாமீன் மனுவை நிராகரித்தது.

இவ்வாறு குற்றமற்றவர்களுக்கு ஜாமின் மறுத்த இதே உச்சநீதிமன்றம் தான் கடந்த 28.01.2020 அன்று குஜராத்தில் சர்தார்புரா படுகொலை என்ற இரத்தத்தை சில்லிட வைக்கும் முறையில் கொடூரமாக மின்சாரம் பாய்ச்சியும் , அமிலத்தை வீசியும் ஒரு வீட்டில் அடைக்கலம் புகுந்த 31 இஸ்லாமியரில் 29 பேர்களை படு கொலை செய்து விசாரணை நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் தண்டனை உறுதி செய்யப்பட்ட 17 குற்றவாளிகளுக்கு பிணை வழங்கி அவர்களை மத்திய பிரதேசத்தில் சமூக சேவை செய்யச் சொல்லியது.அவ்வாறே ஒடே என்ற கிராமத்தில் 26 இஸ்லாமியர் எரித்து கொல்லப்பட்ட வழக்கிலும் 14 குற்றவாளிகளுக்கு பிணை வழங்கியது.

கீழமை நீதிமன்றங்களில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்ட இவர்களுக்கு பிணை வழங்கிய உச்சநீதிமன்றம் தான் குற்றமற்ற அறிவாளிகளுக்கு பிணை வழங்க மறுத்துள்ளது.

இவ்வாறு நீதித்துறை முழுவதும் ஆளும் அரசின் அங்கமாக செயல்படுவதும் அவர்களுக்கு வேண்டிய தீர்புகளை வேண்டிய முறையில் அளிப்பதும் இயல்பகாவே சனநாயக நடைமுறையின் அடித்தளத்தையே தகர்ப்பதாகும். BJP, RSS கும்பல் ஆட்சிபொறுப்பேற்ற நாளில் இருந்து தங்களது இந்துத்துவ சித்தாந்தத்தில் மூழ்கியவர்களையே அரசின் எல்லா உயர்பதவிகளிலும் நிரப்பி வருகிறது. அதிலும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள் பலரும் இந்துத்துவ மனநிலையில் இருந்து கொண்டு அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு சேவை செய்யும் ஆட்களாக மாறியுள்ளதையே இது போன்ற நீதிமன்ற நடவடிக்கைகள் காட்டுகின்றன. இந்தியாவில் சுதந்திரமான நீதித்துறை என்ற நடைமுறை முடிவுக்கு வந்துவிட்டதை இந்நிகழ்வுகள் வெளிச்சம் போட்டு உலகிற்கு நிரூபிக்கின்றன.

●

# புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினத்தைப் போற்றுவோம்!



- இந்துத்துவ பயங்கரவாதத்திலிருந்து மக்களை மீட்டிட, சாதிவெறி மக்களை பிளவுபடுத்துவதை எதிர்த்து வென்றிட அண்ணல் புரட்சியாளர் அம்பேத்கர் வழியில் அறிவாயுதம் ஏந்துவோம்.
- மனுதர்மம்–பார்ப்பனியம்– இந்துத்துவவேதவெறியை வீழ்த்திட, சமத்துவம் சகோதரத்துவம் ஓங்கிட ஒன்றுபடுவோம்.
- சாதிவெறியிலிருந்து மீளாமல் மனிதகுல வெற்றி சாத்தியமில்லை என்பதை உணரவைக்க உறுதி ஏற்போம்.
- புரட்சியாளர் வகுத்தளித்த அரசியல் சாசனத்தில் நம் மக்களை பாதுகாக்கும் அம்சங்களை கிழித்து வீசும் கொடிய பாசிச வெறியர்களை தீரத்துடன் எதிர்கொள்வோம்.


**மே பதினேழு இயக்கம்**
14 ஏப்ரல் 2020

## தமிழீழ மக்களை இந்திய அமைதிப்படை கொல்வதை தடுக்க வலியுறுத்தி உண்ணாநோன்பு இருந்து உயிரை கொடையாகக் கொடுத்த

## அன்னை பூபதியின் 32ம் ஆண்டு

# வீரவணக்கம்

1987 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களுக்கு உரிய தீர்வை பெற்று தருகிறோம் என்கிற பெயரில் தமிழர்களிடம் கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவும் இலங்கையும் இணைந்து ‘இந்திய இலங்கை ஒப்பந்தத்தை’ போட்டார்கள். இந்த ஒப்பந்தத்தை மீறி தமிழர்களின் இராணுவமான விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களை பெற்று துரோக குழுக்களுக்கு அந்த ஆயுதங்களை இந்திய அரசு வழங்கியது. இந்தியாவின் இந்த துரோகத்தனத்தை உலக நாடுகளுக்கு அம்பலப்படுத்தத்தான் ஒரு சொட்டு நீர் அருந்தாமல் திலீபன் உண்ணா நோன்பிருந்து தனது உயிரைக் கொடுத்தார்.



இதன்பிறகும் திருந்தாத இந்திய அரசு தமிழீழ மக்களை கொலை செய்வதும், தமிழீழப் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்வதையும் தொடர்ச்சியாக செய்தது. தன் கண்முன்னே தனது தமிழீழ மக்கள் கொல்லப்படுவதை பார்த்த அன்னை பூபதி அவர்கள் 19.03.1988இல் தான் பிறந்த மட்டக்களப்பில் உண்ணா நோன்பை தொடங்கினார். அவர் வைத்த கோரிக்கைகள் இரண்டே இரண்டு தான்.

- இந்திய அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்தும் இனப்படுகொலை போரை கைவிட வேண்டும்.
- தமிழர்களின் பிரதிநிதியான விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இந்த கோரிக்கையை இந்திய அரசு புறந்தள்ளியதோடு அன்னை பூபதியின் பட்டினிப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி அதை தடுத்து நிறுத்த பல முயற்சிகளை செய்தது. ஆனால் இந்தியாவின் துரோகத்தை உணர்ந்த தமிழீழ மக்கள் ஆயிரமாயிரமாய் அன்னை பூபதியின் உண்ணாவிரத பந்தலுக்கு அணிவகுத்தனர். 30 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதமிருந்த அன்னை பூபதி அவர்கள் இறுதியில் 19.04.1988 அன்று தன் உயிரை கொடையாக கொடுத்தார். இதன் பின்னர்தான் இந்திய அமைதிப்படையின் உண்மையான மூகம் சர்வதேச சமூகத்திற்கு தெரிந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆசியாவின் மிகப்பெரிய ராணுவத்தை எதிர்த்து தமிழர்கள் போரிட்டு வென்றார்கள் என்றால் அதற்கு மிக முக்கிய காரணம் அன்னை பூபதியின் இந்த ஈகம் தான்.உலக வரலாற்றிலேயே உண்ணாநோன்பிருந்து இறந்து போன முதல் பெண் அன்னை பூபதி ஆவார்.இன்று அவருடைய 32ஆம் ஆண்டு நினைவு நாள்.

அவர் தனது இறப்புக்கு முன் பேசிய இறுதி உரையில் ‘தமிழீழ மக்களின் அடுத்த தலைமுறையாவது நிம்மதியாக வாழ வேண்டும் என்றார். தமிழீழ மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் ‘தமிழீழம்‘ என்பதே ஒரே வழி. அதை நிறைவேற்றுவதே அன்னை பூபதி அவர்களுக்கு நாம் செலுத்தும் வீரவணக்கம் ஆகும்.

**’தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்’**

## மே பதினேழு இயக்கம்

**18 ஏப்ரல் 2020**


**மே17 இயக்கக் குரல்**

**தமிழின புவிசார் அரசியல் செய்தி இதழ்**

**தமிழ்நாட்டுக்கான ஆண்டு சந்தா ரூ.400**

**வெளிமாநிலத்திற்கு ரூ.600**

**மாதாந்திர இதழினைப் பெற தொடர்பு கொள்ளவும்: 9884072010**

மின்னஞ்சல்: may17voice@gmail.com



### தேசிய இனங்களின் மீதான தாக்குதல்!

# நெருக்கடிகாலத்திலும் வரிச்சுரண்டலை கைவிடாத இந்திய அரசு

### இந்திய அரசே! சுங்கச்சாவடி திறக்கும் முடிவை கைவிடு

நாடு முழுவதும் மே 3ஆம் தேதி வரை ஊரடங்கு அறிவித்திருக்கும் நிலையில் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவித்து வருகிறார்கள். ஏழை மக்களுக்கு தேவையான அடிப்படை உதவிகளை கூட செய்யாமல் கை தட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள் என்று ஆரிய மூடநம்பிக்கையை மக்கள் மத்தியில் புகுத்துவதிலேயே மத்தியில் ஆளுகிற பிஜேபியின் மோடி அரசு இருக்கிறது.

ஏழைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுங்கள் என்று நாம் கேட்டால் மோடி அரசு நள்ளிரவில் இருந்து சுங்கச்சாவடி திறப்போம் என்று ஒரு முடிவை அறிவித்து இருக்கிறது. ஏற்கனவே வேலையில்லாமல் உணவு வாங்க கையிப் பணமில்லாமல் கோடிக்கணக்கானவர்கள் தவித்துக் கொண்டிருக்கும் பொழுது சுங்கச்சாவடி திறப்பு என்பது மேலும் விலைவாசியை அதிகரிக்கும் நடவடிக்கை எடுக்கும். இதனால் ஏழைகள் தான் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவே கொரோனா என்ற தொற்றுநோயால் 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிற நிலையில் இனி பட்டினியால் மக்கள் சாகும் அவலநிலை ஏற்படும்.





இதைப்பற்றி எல்லாம் மோடி அரசு கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. ஏனென்றால் சுங்கச்சாவடியையே திறக்காதீர்கள் என்று நாம் கேட்டுக் கொண்டிருந்தால் இன்றிலிருந்து 6லிருந்து 12 சதவீதம் வரை சுங்க கட்டணம் அதிகரிக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிடுகிறது மோடி அரசு. ஆக, இவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதை நாம் கேள்வி கேட்க வேண்டி இருக்கிறது.

ஊரடங்கு காலத்திலும் முதலாளிகளின் நலனுக்காகவே சிந்திப்பதை நிறுத்தி விட்டு, சுங்கச்சாவடி திறக்கும் முடிவை உடனடியாக கைவிட வேண்டும் என்று மே 17 இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

**மே பதினேழு இயக்கம்**
18 ஏப்ரல் 2020

## புரட்சியாளர் மாமேதை லெனின் அவர்களின் பிறந்த நாள்



முதலாளித்துவம் தோல்வியடைந்த ஒன்று என்பது கொரானாவை எதிர்கொள்வதில் அம்பலமாகியிருக்கிறது.

பொது சுகாதாரத்தை கைவிட்ட அமெரிக்கா, கொரோனாவுக்கு மக்களை பலியிட்டுக் கொண்டிருக்கிறது.

பொது சுகாதாரத்தை பலப்படுத்திய நாடுகளே கொரோனாவை விரட்ட போராடிக் கொண்டிருக்கின்றன.

மருத்துவமும், கல்வியும் மக்களுக்கானதே!
தனி உடமையை வீழ்த்துவோம்!

**வீழட்டும் முதலாளித்துவம்! ஒழியட்டும் தனியார்மயம்!**
**வெல்லட்டும் பொதுவுடமை புரட்சி!**

**மே பதினேழு இயக்கம்**
14 ஏப்ரல் 2020

# கோவையில் நடக்கும் அநீதிகளை வெளிக்கொண்டு வந்த 'சிம்பிளிசிட்டி' பத்திரிக்கையின் உரிமையாளரை கைது செய்திருப்பது ஜனநாயக விரோதமானது. உடனடியாக அவரை விடுதலை செய்!

## தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல்!

**24 ஏப்ரல் 2020**

கோவையில் நடக்கும் பல்வேறு அநீதிகளையும் அக்கிரமங்களையும், அரசின் ஊழல்களையும் மக்களுக்கு ஆதாரத்துடன் வெளிப்படுத்தி வந்த 'சிம்பிளிசிட்டி' பத்திரிகையை முடக்குவதற்காக தமிழக அரசு திட்டமிட்டு அதன் உரிமையாளரை கைது சிறையில் அடைத்தும், அதன் ஒளிப்பதிவாளரை கைது செய்து சுமார் 10மணிநேரம் அலைகழித்து பின்னர் விடுவித்திருக்கிறது.

சமீபத்தில் கோவையில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் இருக்கும் மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் தமிழக அரசு எந்த ஒரு அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை என்பதை வெளிக்கொண்டு வந்ததும், நிவாரணப் பொருள்களை வினியோகிக்கின்றோம் என்கிற பெயரில் நியாயவிலை கடைகளில் நடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்தியது என தொடர்ச்சியாக கோயமுத்தூரில் நடக்கும் பல்வேறு ஊழல்களை வெளிக்கொண்டு வந்த பத்திரிகைதான் சிம்பிளிசிட்டி.

இந்த பத்திரிக்கையை முடக்கும் விதமாக தற்போது அதன் உரிமையாளர் திரு.ஆண்ட்ரூ சாம் ராஜா பாண்டியன் என்பவரை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. அதுபோக பத்திரிக்கையில் வேலை செய்யும் பத்திரிக்கையாளர்கள் இரண்டு பேரை 10 மணி நேரத்திற்கும் மேலாக எங்கு வைத்திருக்கிறோம் என்று யாருக்கும் தகவல் சொல்லாமல் கோவை காவல்துறை அலைக்கழித்து பின் விடுவித்திருக்கிறார்கள். அரசின் தவறுகளை சுட்டிக்காட்டும் பத்திரிக்கையாளர்களை மிரட்டும் போக்கு என்பது பத்திரிகை



சுதந்திரத்திற்கு எதிரானது ஜனநாயக விரோதமானதும் கூட.. ஆகவே இதனை மே 17 இயக்கம் மிக வன்மையாக கண்டிக்கின்றது.

பொய் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிற 'சிம்ப்ளிசிட்டி' பத்திரிக்கையின் உரிமையாளர் திரு. ஆண்ட்ரூ சாம் ராஜா பாண்டியன் அவர்களை உடனடியாக விடுதலை செய்க.


புரட்சிக் கவிஞர்
**பாரதிதாசன்**
பிறந்த நாளைப் போற்றுவோம்!
29 ஏப்ரல் 2020



தறுக்கினார் பிற தேசத்தார்
தமிழன்பால் என்நாட் டான்பால்
வெறுப்புறுங் குற்றஞ் செய்தா
ராதலால் விரைந் தன்னாரை
நொறுக்கினார் முது கெலும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்தசொல் கேட்டின் பத்திற்
குதிக்கும்நாள் எந்த நாளோ?

தமிழர்க்கு உணர்வூட்டிய
பொதுவுடைமைப் போராளியை
தமிழ்த்தேசியக் கவியாய் ஏந்துவோம்.

மே பதினேழு இயக்கம்
9884072010

**மே பதினேழு இயக்கத்தோடு இணைந்து பணியாற்ற வாருங்கள்**
நாம் ஒன்றிணைந்தால் வரலாற்றைப் புரட்டிப் போடலாம்!

+91 98840 72010
contact.may17@gmail.com
www.may17iyakkam.com
facebook.com/mayseventeenmovement





# காவிரி உரிமைப் பறிப்பும், தமிழினத்தை சூழும் வஞ்சகமும்!

## கொரோனா ஊரடங்கில் தமிழ்நாட்டின் காவிரி உரிமையை நிரந்தரமாக பறிக்கும் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**காவிரி நதி நீரின் மீதான தமிழ்நாட்டின்** நதிநீர் உரிமையை இந்திய ஒன்றிய அரசு பறித்துக் கொள்ளும் வகையில் ஒரு திருத்தம் அரசிதழில் ஏப்ரல் 24, 2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது. காவிரி நதிநீர் என்பது தமிழர்களின் பாரம்பரிய இயற்கை வழி பண்பாட்டு உரிமையாகும். இந்த உரிமையினை மீட்பதற்கான நீண்ட காலமாய் தமிழினம் போராடி வருகிறது.

ஒவ்வொரு முறையும் போராடி போராடித் தான் தமிழினம் காவிரி நீரில் தன் உரிமையை பெற்றுக் கொண்டிருக்கிறது. காவிரி உரிமைக்காக தமிழர்கள் வீதிகளில் இறங்கி அரசினை கேள்வி கேட்க எந்த நேரத்திலும் தயாராக இருப்பார்கள் என்பதால் கொரோனா பேரிடர் காலத்தின் ஊரடங்கினைப் பயன்படுத்தி இந்த திருத்தத்தினை மோடியின் ஒன்றிய அரசு சூழ்ச்சியாக கொண்டு வந்திருக்கிறது.

காவிரி மேலாண்மை வாரியத்தினை உச்சநீதிமன்றம் அமைக்க சொன்ன பிறகும் மோடி அரசு அமைக்காததால் கடந்த 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு போர்க்களமாக வீதியில் திரண்டு போராடியது. மோடி தமிழ்நாட்டிற்கு வந்த போது ”GoBackModi” என்ற முழக்கத்தினை உலகெங்கும் ஒலிக்கச் செய்தது. இத்தனை போராட்டத்திற்குப் பிறகும், ஒரு நீர்த்துப் போன ஆணையத்தினையே ஒன்றிய அரசு உருவாக்கியது. தற்போது அந்த காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தினையும் (Cauvery Water Management Authority) ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சகத்தின் கீழ் (Ministry of Jalsakthi - A department of water resources, River Devolopement and Ganga Rejuvenation) மாற்றியுள்ளது. நதிகளின் மீதான மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் மிக மோசமான திருத்தமாக இது உள்ளது.

Govt of India (Allocation of Business) Rules, 1961-ல் பிரிவு 7ன் கீழ் 7கி என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நதிகளை தூய்மைப்படுத்துவது, மேம்பாடு செய்வது மற்றும் மேலாண்மை என்ற பெயரில் நதிகளின் மீதான மாநிலங்களின் உரிமையை இந்திய ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகம் எடுத்துக் கொள்கிறது. கங்கையை தூய்மையாக்கல் என்ற பெயரில் அதன் அதிகாரத்தைப் பெற்றதைப் போல் தற்போது காவிரி உள்ளிட்ட அனைத்து நதிகளையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் இணைத்துக் கொண்டுள்ளது.

பிரிவு 33-ன் கீழ் 33ணி என்ற பகுதியினை சேர்த்து காவிரி மேலாண்மை ஆணையத்தினை இணைத்துக் கொண்டிருக்கிறது. மாநில உரிமைகளைப் பறித்து தனது ஒற்றை சர்வாதிகரத்தை நிறுவிக் கொள்வதோடல்லாமல், நதிகளை தனியார்மயப்படுத்தி கார்ப்பரேட்டுகளுக்கு விற்று தண்ணீரை காசாக்கும் சதியின் துவக்கமாகவும் இந்த நடவடிக்கை இருக்கிறது. இயற்கை என்பதே எளிய மக்களுக்கானது, அனைத்து உயிர்களுக்குமானது. அதனை ஒற்றை மத்திய அதிகாரத்தின் குடைக்கு கீழ் நுழைப்பது பன்னாட்டு ஏகபோகத்திற்காகவே.

மாநில அரசின் உரிமைகளை மீட்பதற்காக பேச வேண்டிய மாநில அரசோ எதையும் பேசாமல் மவுனம் காத்துதான் வருகிறது. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான தமிழக அரசு, தொடர்ச்சியாக தமிழர்களின் உரிமைகளை இந்திய ஒன்றிய அரசிடம் பறிகொடுத்து வேடிக்கை பார்த்து வருகிறது. வரலாற்று ரீதியாக மாநில உரிமையின் மீது தமிழகம் கொண்டிருந்த போர்க்குணத்தினை முற்றிலுமாக இழக்கச் செய்து விட்டு, தொடர்ச்சியாக ஒன்றிய அரசிடம் பணிந்து போகும் நடைமுறையினையே எடப்பாடி அரசு மேற்கொண்டு வருகிறது.

நீட், ஜி.எஸ்.டி வரிசையில் இப்போது காவிரி நதிநீர் உரிமையும் ஒன்றிய அரசினால் பறிக்கப்பட உள்ளது. ஜி.எஸ்.டி-யினால் வரிப்பணத்தினை இழந்து விட்டு கொரோனா பேரிடர் நேரத்தில் ஒன்றிய அரசிடம் கையேந்தி நிற்பதைப் போல, காவிரி நீருக்கும் ஒவ்வொரு முறையும் கையேந்தி நிற்க வேண்டும்.

காவிரி நதி தமிழ்நாட்டின் உரிமை. தமிழர்களின் உரிமை என்று உரக்க முழங்குவோம். தமிழ்நாட்டிற்கு சரியான பங்கினை பிரித்தளிக்கும் முழுமையான அதிகாரம் கொண்ட சுதந்திர அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

காவிரி மேலாண்மை ஆணையத்தினை ஒன்றிய நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் இணைக்கும் திருத்தம் உடனடியாக அரசிதழில் இருந்து நீக்கப்பட வேண்டும். இல்லையேல் மோடியின் அரசு தமிழர்களின் எதிர்ப்பினை சந்திக்க நேரிடும் என மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது.

மோடி அரசே! துரோகம் செய்யாதே! உடனடியாகக் கைவிடு!

**மே பதினேழு இயக்கம்**

**30ஏப்ரல் 2020**

# சிங்கள பவுத்த பேரினவாதிகளால் கொலைசெய்யப்பட்ட 'மாமனிதர்' தராகி சிவராம் அவர்களின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்



ஈழத்தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமையை பறிக்கும் சிங்கள பவுத்த பேரினவாதிகளை அவர்களது கோட்டையில் இருந்துகொண்டே தனது எழுத்தின் மூலம் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்தியவர். ஈழத்தமிழர்களின் விடுதலை போராட்டத்தின் நியாயங்களையும், அதன் வரலாற்று தேவையையும் பூகோள அரசியல் பார்வையுடன் எந்தவித சார்பும் இல்லாமல் நெஞ்சுறுதியுடன் தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்தவர் திரு.தர்மரட்ணம் சிவராம் (எ) தராகி சிவராம். அவரின் எழுத்து சிங்கள பேரினவாதிகளை மட்டுமில்லாமல், இலங்கையில் காலூன்றுவதன் மூலம் தனது அதிகாரத்தை ஆசியாவில் நிலைநிறுத்த நினைத்த ஏகாதிபத்திய நாடுகளையும் நடுங்கச் செய்தது. அதன் விளைவாகவே 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 28அன்று அதிஉயர் பாதுகாப்பு பகுதியான இலங்கை பாராளுமன்ற கட்டிடத்துக்கு பின்புறம் கோழைத்தனமாக கொலைசெய்யப்பட்டார். இன்றுவரை கொலையாளிகளை இலங்கைஅரசு கண்டுபிடிக்கவில்லை.

ஈழத்தமிழர்களின் உரிமைகுரலாய் ஓங்கிஒலித்த திரு.தராகி சிவராம் அவர்களுக்கு விடுதலை புலிகளின் தலைவர் தமிழீழத்தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ''மாமனிதர்'' என்ற அதியுயர் தேசிய விருதை வழங்கி கவுரப்படுத்தினார். அவரின் 15ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அவருக்கு வீரவணக்கத்தை செலுத்துவதோடு, அவர் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த தனித்தமிழீழம் என்ற லட்சியத்தை வென்றெடுக்க உறுதியேற்போம்.

**மே பதினேழு இயக்கம்**

**28 ஏப்ரல் 2020**

# மகாராஷ்டிராவில் சிக்கி தவிக்கும் தமிழக தொழிலாளர்கள் 50 பேரை உடனடியாக மீட்டிடு

**தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல்! – 30 ஏப்ரல் 2020**



தமிழகத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் மகாராஷ்டிராவில் பல்வேறு பகுதிகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். தற்போதைய ஊரடங்கு சூழ்நிலையில் சொந்த ஊருக்குத் திரும்புவதற்காக அவர்கள் நடந்து வருவதற்காக கிளம்பியிருக்கிறார்கள். இந்த நிலையில் கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதி அவர்களை கைது செய்த மகாராஷ்டிர மாநில காவல்துறை காராட் நாரயண்வாடி (karad narayawadi) என்ற இடத்தில் நாங்களே உங்களை சொந்த ஊருக்கு அனுப்புகிறோம் என்று சொல்லி அடைத்து வைத்திருக்கிறது.


நாட்கள் செல்லச்செல்ல அவர்களுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே தரப்படுகிறதாம். மேலும் நல்ல குடிதண்ணீர் கூட தரப்படவில்லையாம். இதனால் இவர்கள் தங்களை சொந்த ஊருக்கே அனுப்புங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து பதில் எந்தவித பதிலும் தராத மகாராஷ்டிரா அரசு. இப்போது திடீரென்று இரண்டு நாட்களுக்கு முன்னால் நீங்கள் ஏற்கனவே வேலை செய்த இடத்திற்கு சென்று விடுங்கள் என்று வலியுறுத்துகிறதாம்.

மகாராஷ்டிராவில் கடந்த சில வாரங்களாக கொரோனா எண்ணிக்கை மிகப்பெரிய அளவில் பரவி வருகிறது. இந்த சூழ்நிலையில் சொந்த ஊருக்கு அனுப்பாமல் அவர்களை மீண்டும் மகாராஷ்டிராவிற்கு பாதுகாப்பு இல்லாத இடத்திற்கே செல்லுங்கள் என்று வலியுறுத்துவது மனித நேயமற்ற செயல் .

ஆகவே தமிழக அரசு இந்த பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு மகாராஷ்டிர அரசிடம் பேசி 50 தமிழகத் தமிழர்களையும் சிறப்பு ஏற்பாட்டில் தமிழகம் அழைத்து வந்து அவர்களின் குடும்பத்தோடு சேர்த்திட வேண்டும்.

# ஓவியத்தின் வழியே எதிர்ப்புக் குரல்

**தங்களது கோட்டோவியங்களின் மூலம் மக்களின் உரிமை போராட்டங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் கலைஞர்களின் படைப்புகளை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.**







எழுத்தாளர், ஓவியர்

**மெகர் மண்டா மற்றும் மாயுக் (Meher Manda and Mayukh)**


இருவரும் இணைந்து தில்லியில் 2020 பிப்ரவரியில் நடந்த இசுலாமியர் இனப்படுகொலை மற்றும் அதன் பின்னரான கொரொனோ பேரிடரில் ஏழைகள் நெருக்கடி, மேலும் சனநாயக ஆற்றல்களின் மீது பாயும் அடக்குமுறை உபா சட்டம் குறித்து தொடர் கோட்டோவியம் மூலம் இந்தியாவின் இருண்ட ஆட்சியினை வெளிப்படுத்தினார்கள். பாலஸ்தீனத்தின் காசாவின் அடக்குமுறையை தனது கோட்டோவியத்தின் மூலம் வெளிப்படுத்திய ஓவியர் ஜோ சாக்கோவின் வழியில் இந்த அடக்குமுறையை 'ஜாமுன் க பெட்' (Jamun Ka Ped) எனும் ட்விட்டர் பெயரில் வெளிப்படுத்தினார்கள்.




## ஓவியர்.ஜோசுவா லூனா

தென்வியத்நாம் வெற்றிகொள்ளப்பட்ட நாளாக ஏப்ரல்30ஐ வியத்நாமியர்கள் கொண்டாடுகிறார்கள். இது வியத்காங் போராளிகளால், தோழர். ஹோ சி மின் தலைமையில் செய்கோன் நகரம் வெற்றிகொள்ளப்பட்ட தினம். இந்த தினத்தை தேச ஒற்றுமையாக அவர்கள் கொண்டாடுகிறார்கள். இந்நாளில் வியத்நாம் போரில் அமெரிக்க அரசு செய்த குற்றங்களைப் பற்றிய ஆவணங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்பதை வெளிப்படுத்தும் ‘போராட்ட ஓவியத்தினை’ ஓவியர் ஜோசுவா லூனா வெளிப்படுத்தியதை பதிவு செய்கிறது மே17இயக்கக்குரல்.

https://twitter.com/Joshua_Luna



## ஓவியர் ஜெரார்டு ஹெடரர்

ஆஸ்திரியாவின் கார்ட்டூனிஸ்ட் ஜெரார்ட்டு ஹெடரர் சமூகம், அரசியல் சார்ந்த கார்ட்டூன்கள், ஓவியங்களை தீட்டுபவர். வணிக ஓவியங்களைச் செய்துவந்த ஜெரார்டு, ஒரு சமயத்தில் புற்றுநோயிலிருந்து மீண்ட பின்னர் சமூகம் சார்ந்து பல ஓவியப்படைப்புகளை வெளியிட்டுவருகிறார். இவரது  இயேசு குறித்து வரைந்த ஓவியம் கிருத்துவ மதத்திற்கு எதிரானது என்று நீதிமன்றத்தில் க்ரீஸ் நாட்டில் வழக்கு தொடரப்பட்டு தண்டனைக்குள்ளானார்.

‘மே 17 இயக்கக் குரல்’ இதழை தரவிறக்கம் செய்ய

# www.may17kural.com

# www.may17iyakkam.com

தொடர்பு எண் (பேச / வாட்சாப்)

## +91 98840 72010

கருத்துகள் தெரிவிக்க மின்னஞ்சல்

# may17voice@gmail.com

குரல் வளர்ச்சிக்கு நன்கொடை செலுத்த

## +91 98840 72010



## நிமிர் பதிப்பகத்தின் வெளியீடுகள்

நிமிர் பதிப்பகம்

நிமிர் பதிப்பகத்தின் புத்தகங்களை இணையத்தில் பெற

**www.nimirbooks.com**


98414 85116 | nimirbooks@gmail.com




விலை ரூ.400




விலை ரூ.60




விலை ரூ.55




விலை ரூ.50